# தலைவிதியைப் பறி கொடுத்தோர்

- யோ. பெனடிக்ற் பாலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலை விதியைப் பறி கொடுத்தோர்

பொது நூலகம்
பதிவு இல:
02- 10- 1998
058

பெனடிக்ற் பாலன்

எஸ். எம். எம் றாபீக்
சமாதான நீதிவான்
824, அலியார் வீதி
கல்முனை- 06

குறிஞ்சி வெளியீடு

129/25, ஜெம்பட்டா வீதி,

கொழும்பு – 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title | : | Thalai Vithiyai Pari Koduthor |
| Author | : | Benedic Balan |
| Language | : | Tamil |
| Edition | : | May - 1996 |
| Copyright | : | Author |
| Size | : | Crown |
| Printing Points | : | 10 |
| Pages | : | 160 |
| Copies | : | 1000 |
| Subject | : | Short Stories |
| Type Setters | : | Parkar Computers<br>Phone : 82 666 37. |
| Wrapper Design | : | V. Karunanithy |
| Printers | : | Kannappa Art Printers |
| Price | : | Rs. 35 |

தயாரிப்பு : வே. கருணாநிதி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்!

என்னை

நானாக்கி

நான் தேடிய

தெய்வமாக

என்னை வாழ வைக்கின்ற

என் மனைவி

கிறேஸ் சந்திர மலருக்கு

இந்நூல் சமர்ப்பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

ஈழத்துச் சிறுகதைச் சுவைஞர்களுக்கு திரு. யோ. பெனடிக்ற் பாலன் அவர்களை அறிமுகப்படுத்தத் தேவையில்லை என்றே கூற வேண்டும். சிறுகதைத் துறையில் சாதனை படைத்தவர்களில் இவரும் ஒருவர். "தலை விதியைப் பறிகொடுத்தோர்" என்ற இவருடைய இந்தத் தொகுதியைப் படித்தாலே விளங்கும்.

கதையமைப்பு - முரண்பாடு - போராடும் எதிரும் புதிருமான சக்திகள் - கதை மாந்தர்கள் - செயலை நடத்திச் செல்லும் பாத்திரங்கள் - கோட்பாடு அதாவது கதாசிரியர் காட்ட விரும்பும் வாழ்க்கை பற்றிய பொதுவான உண்மை - கதை நிகழ்ச்சியில் காலமும் இடமும் - இவை யாவும் மிகச் சிறப்பாக இவருடைய கதைகளில் அமைந்துள்ளன. படிப்பவரின் சிந்தனையைத் தூண்டும் வகையில் இவை அமைந்துள்ளன.

மனிதனுக்கு எதிராக மனிதன், தனக்கு எதிராகவே முரண்படும் மனிதன், இயற்கையிடம் முரண்படும் மனிதன், சமூதாயத்திடம் முரண்படும் மனிதன் இவர்களையெல்லாம் இவருடைய கதைகளில் காணமுடிகிறது.

யோ. பெனடிக்ற் பாலன் அவர்களின் இந்த முதல் சிறுகதைத் தொகுதியை "குறிஞ்சி வெளியீடாக" வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம். இந்நூலை வெளியிட உதவிய " இளவழகன் பதிப்பகம்" மற்றும் "பார்கர் கம்யூட்டர்ஸ்" தம்பி வே கருணாநிதி அவர்களுக்கு எமது நன்றி.

129/25, ஜெம்பட்டா வீதி
கொழும்பு — 13

மாத்தளை கார்த்திகேசு
குறிஞ்சி வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர்*

*எஸ். தில்லைநாதன் அவர்களின்*

# அணிந்துரை

அண்மையில் யோ. பெனடிக்ற் பாலன் எழுதிய "முகவரி தேடுவோர்" என்ற கதையைப் படித்தபோது, நீண்ட காலத்துக்குப் பின் நல்லதொரு சிறுகதையைப் படித்த உணர்வு எனக்கு ஏற்பட்டது. சமீபத்தில் வடக்கில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் விளைவான சீரழிவுகள் புலப்பெயர்வுகளையும், கொழும்பிலும் வெளிநாடு களிலும் சிதறுண்ட குடும்பங்களும் மனிதர்களும் தம் நம்பிக்கை களையும் ஒழுக்க விழுமியங்களையும் தொலைத்துவிட்டுப் படுகின்ற அவலங்களையும் மனதை உறுத்தும் வகையில் பெனடிக்ற் பாலன் சித்தரித்திருக்கிறார்.

பிரச்சினைகளை மறந்து நழுவ வகை செய்யும் வடிகாலாக அன்றி, பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க உதவும் ஊடகமாக இலக்கியத்தைக் கருதும் எழுத்தாளர்களுள் ஒருவர் பெனடிக்ற் பாலன். மனித வாழ்வினைப் பிரதிபலிப்பதாகவும் அவ்வாழ்வினைப் புரிந்து கொள்ள உதவுவதாகவும் இலக்கியம் வேண்டுமென்பதில் கரிசனையுடையவரும் இலங்கைத் தமிழ் இலக்கிய உலகில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டவருமான பெனடிக்ற் பாலனின் சிறுகதைகள் நூலுருப் பெறவில்லையென்ற குறை இத்தொகுதி மூலம் நிவர்த்தி செய்யப்படுகிறது.

1960களில் ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் பிரவேசித்த இளந்தலைமுறை எழுத்தாளர்களுள் முக்கியமான ஒருவர் பெனடிக்ற் பாலன். மார்க்சிய அரசியல் சித்தாந்தத்தால் ஊட்டம் பெற்ற அவர், அன்று ஈழத்திலக்கிய உலகில் உறுதி மிகுந்ததாக விளங்கியதும் ஈழத்திலக்கியத்தின்பால் பிறர் கவனத்தை ஈர்த்தது மான முற்போக்கு அணியுடன் இணைந்து கொண்டார்.

முற்போக்குக் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்ல இலக் கியத்தைப் பயன்படுத்துவதோடு அவர் நின்று விடவில்லை. மக்களை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக, "தாழ்வுற்று வறுமை மிஞ்சி சுதந்திரம் தவறிக் கெட்ட"வர்களை நேசித்தவரும் போராட்டக் குணம் மிக்கவருமான பெனடிக்ற் பாலன், முற்போக்கு இயக்கத்தை வளர்க்கும் பல்வேறு பணிகளிலும் பங்கெடுத்தார். தமிழிலக்கியத்தை உயர்ந்தோர் பிடியிலிருந்து மீட்டு, மக்கள் சொத்தாக்க வேண்டியும் தேசிய இலக்கிய உருவாக்கம் கருதியும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கான அவரது பங்களிப்புக் கணிசமானதாகும்.

பெனடிக்ற் பாலன் "குட்டி", "பாலஸ்தீனம் என்னை அழைக்கிறது" ஆகிய குறுநாவல்களையும் "தனிச்சொத்து" என்ற தலைப்பிலான குட்டிக் கதைகளின் தொகுதியொன்றையும் வெளியிட்டுள்ளார். அவருக்குப் புகழ் தேடித் தந்த படைப்பென்று, "சொந்தக்காரன்" என்ற நாவலைக் குறிப்பிட வேண்டும். 1968இல் பாரி நிலைய வெளியீடாகத் தமிழ்நாட்டில் வெளிவந்த, மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட அந்த நாவலுக்குப் பெனடிக்ற் பாலன் ஏலவே எழுதிய "ஒரே லயக் காம்பராவில்" என்ற சிறுகதையே கருவாக அமைந்தது. அந் நாவல் மலையக மக்களின் அவல வாழ்வின் யதார்த்தத்தைச் சித்தரிப்பதாக மட்டுமன்றி, தோட்டத் தொழிலாளர் தங்கள் நிலத்துக்குத் தாங்களே சொந்தக்காரர்களாக வேண்டுமென்ற வேட்கையையும் வலியுறுத்துவதாக அமைந்தது.

அத்தகைய புரட்சிகர, மனிதாபிமான இலட்சியங்களை உடையவரான பெனடிக்ற் பாலன், இலக்கியத்தில் கருத்துக்கு முதன்மை தந்ததோடு அமையாது, கருத்துக்களையும் நிகழ்வுகளையும் மட்டுமன்றி உள்ளத்து உணர்வுகளையும் தத்ரூபமாக வெளிக்காட்டக் கூடிய வகையில் பேச்சு வழக்கு, இலக்கிய வழக்கு, இரண்டையும் கையாளப் பிரக்ஞை பூர்வமாக எடுத்துக் கொண்ட ஆர்வமும் குறிப்பிடத் தக்கதாகும்.

அரசியல், இலக்கிய சிருஷ்டி, இலக்கிய விமர்சனம், முதலான துறைகளில் அக்கறை மிகுந்தவரான பெனடிக்ற் பாலன் பயன் முனைப்புடன் வாசகர்களை எட்டும் ஆற்றல் உடையவர் என்று நம்புகின்றோம்.

சி. தில்லைநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இடதுசாரி அரசியற் சித்தாந்தத்தினாலும், முற்போக்கு இலக்கிய இயக்கத்தாலும் கவரப்பட்ட நான் 1960ம் ஆண்டில் இருந்து சிறுகதை, நாவல், கவிதை, விமர்சனம் ஆகிய படைப் பிலக்கியப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றேன். ஆரம்பத்திலே நான் சிறுகதை எழுதுவதிலேயே பெரிதும் ஈடுபாடு கொண்டிருந் தேன். யாழ். இளம் எழுத்தாளர் சங்கமும் சரவணபவன் சிற்பியின் "கலைச் செல்வி"யும் என்னைப் போன்ற இளம் எழுத்தாளர்களுக்கு உந்து சக்திகளாக விளங்கின. யாழ்.-இளம் எழுத்தாளர் சங்கம் அகில இலங்கை ரீதியாக நடத்திய சிறுகதைப் போட்டியிலும், கலைச்செல்வி நடத்திய அகில இலங்கை சிறுகதைப் போட்டியிலும் "ரசிகர் குழு", "இளம்பிறை" இலக்கிய சஞ்சிகையின் அனுசரணை யுடன் நடத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியிலும் நான் பரிசில்கள் பெற்றேன்.

அவை தந்த உத்வேகத்துடன் கலைச்செல்வி, தமிழ் முரசு, வசந்தம், தாயகம், அல்லி, குமரன், களனி, பூரணி, தேனருவி, அஞ்சலி, மலர், அக்னி முதலிய ஈழத்து இலக்கிய சஞ்சிகை களிலும், சரஸ்வதி, தாமரை, சிகரம், செம்மலர், கண்ணதாசன், சமரன் முதலிய இந்திய சஞ்சிகைகளிலும் வீரகேசரி, தினகரன், ஈழநாடு, ஈழமுரசு, முரசொலி, சிந்தாமணி, தீப்பொறி, தேசாபி மானி, தொழிலாளி, யுவசக்தி முதலிய இலங்கை வார இதழ்களிலும் நான் சிறுகதைகள் எழுதி வந்துள்ளேன். இன்றுவரை 125 சிறு கதைகளுக்கு மேல் எழுதியிருப்பேன்.

எனது இருபத்து மூன்றாம் வயதில் "குட்டி" என்ற குறு நாவலை எழுதினேன். எனது இருபத்தெட்டாவது வயதில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வைச் சித்தரிக் கின்ற "சொந்தக்காரன்" என்ற நாவலை எழுதினேன். அது பாரி நிலைய வெளியீடாக வெளிவந்தது. எனது 34வது வயதில் "தனிச் சொத்து" என்ற குட்டிக் கதைத் தொகுதியை வெளியிட்டேன். எனது 43வது வயதிலே "பலஸ்தீனம் என்னை அழைக்கிறது" என்ற குறுநாவலை வெளியிட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது சிறுகதைத் தொகுதி ஒன்றை வெளியிட வேண்டுமென்ற ஆசை உள்மனதை வாட்டிக் கொண்டிருந்த போதும் பண நிலைமை காரணமாக இன்றுவரை அந்த ஆசை நிறைவேற முடியாமல் போயிற்று. 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தின்போது நான் கொழும்பில் முகத்துவாரத்தில் வசித்தேன். நான் 1960ஆம் ஆண்டு முதல் சேகரித்து வைத்த அருமையான நூல்களையும், நான் பேணிப் பாதுகாத்து வைத்த எனது படைப்புகளையும், சிங்களக் காடையர்கள் தீமூட்டி எரித்து விட்டனர்.

இன்று எனது சிறுகதைத் தொகுதியொன்றை வெளியிடும் நோக்குடன் எனது படைப்புக்களைப் பெறுவதற்காகப் பல இலக்கிய நண்பர்களை நாடினேன். எனது இனிய இலக்கிய நண்பர்களான மாத்தளை கார்த்திகேசு, தெளிவத்தை யோசப், கவிஞர் சில்லையூர் செல்வராசன் ஆகியோர் தாம் சேகரித்து வந்த எனது கதைகள் பலவற்றைத் தந்து உதவினர். அவர்களுக்கு நான் என்றென்றும் கடப்பாடுடையேன். வீரகேசரியில் வெளி வந்த எனது சிறுகதைகளை இலங்கைச் சுவடிகள் திணைக் களத்தில் தேடிப் பெற்றேன். நான் எல்லா இன மக்களின் வாழ்வுப் பிரச்சினைகள் பற்றியும் இலங்கையில் அடக்கியொடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டும் சிறுகதைகள் எழுதி உள்ளேன். கலை இலக்கியம் மக்களுக் காகவே. கலை இலக்கியம் மக்களை விழிப்புணர்ச்சியடையச் செய்ய வேண்டுமென்ற கோட்பாட்டில் நான் அசையாத நம்பிக்கை உடையவன். எனது இச்சிறுகதைத் தொகுதிக்கு "தலை விதியைப் பறி கொடுத்தோர்" என்று தலைப்பிட்டுள்ளேன். தமது வாழ்வைத் தாமே தீர்மானிக்க முடியாத மக்களின் வாழ்க்கை அவலங்களே எனது சிறுகதைகளின் உள்ளடக்கங்களாகும். இச் சிறுகதைத் தொகுதியைப் படித்து முடிக்கும் வாசகர்கள் அதை நிச்சயம் உணர்வார்கள்.

இலங்கையின் சகல மக்களினதும் வாழ்க்கைப் பிரச்சினைகளை உள்ளடக்கிய எனது சிறுகதைகளை இத்தொகுதியில் என்னால் சேர்க்க முடியவில்லையே என்பது எனது பெரிய கவலை. கிடைத்த சிறுகதைகளையே இத்தொகுதியில் தொகுத்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துத் தமிழ் மக்களுக்குரிய தனித்துவமான தேசிய கலை இலக்கியம் உருவாக்கப்பட வேண்டுமென்பதற்காக எழுத்து மூலமும், முற்போக்கு எழுத்தாளர் சங்க இயக்க நடவடிக்கைகள் மூலமும் போராடினோம். அந்த உயரிய நோக்கத்துக்காக எழுத்தைப் பயன்படுத்துவதிலும், இயக்கப் போராட்டங்களில் ஈடுபடுவதிலும் எனது பங்களிப்பைச் செய்துள்ளேன் என்பதில் எனக்கு ஆத்ம திருப்தி.

இத்தொகுதியில் அடங்கியுள்ள கதைகள் கற்பனைகள் அல்ல. நான் இலங்கை மக்களின் சமூகத்தில் உறவாடி, மக்களுடன் வாழ்ந்து பெற்ற அனுபவங்களின் உண்மையான, உணர்வு பூர்வமான நிகழ்வுகளினதும், உணர்வுகளினதும் சத்தியமான வெளிப்பாடுகளே இக்கதைகள்.

இந்த உண்மையை வாசகர்களுக்கு நான் வலியுறுத்திச் சொல்ல வேண்டியுள்ளது. ஏனெனில் மக்களிடம் கற்று, மக்களுக்கு அளிப்பதே உண்மையான இலக்கியங்களாக இருக்க முடியும்.

எனது சிறுகதைகளை மனமுவந்து வெளியிட்ட எனது இனிய நண்பர் வீரகேசரி வாரமஞ்சரி ஆசிரியர் இராஜகோபாலன் அவர்களுக்கும், தினகரன் ஆசிரியர் ஆர். சிவகுருநாதன் அவர்களுக்கும் ஏனைய சஞ்சிகை ஆசிரியர்களுக்கும் எனது நன்றிகள்.

எனது இச்சிறுகதைத் தொகுதிக்கு அணிந்துரை வழங்கிய பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். தில்லைநாதன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

இத்தொகுதியை வெளியிட சகல வகைகளிலும் ஊக்கமும் உதவியும் அளித்த மாத்தளை கார்த்திகேசு அவர்களுக்கும் சிறந்த முறையில் பதிப்பித்தளித்த வே. கருணாநிதி அவர்களுக்கும் எனது விசேட நன்றி உரித்தாகுக!

யோ. பெனடிக்ற் பாலன்
134, எலிஹவுஸ் வீதி,
கொழும்பு - 15.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்..

யாழ்ப்பாணக் கிழவி

நமது சகோதரிகள்

இங்கெவர் வாழவோ

காதலித்தவருக்கு ஒரு கடிதம்

ஒரு சின்னஞ் சிறு பூச்சி

போரும் முடிவும்

அது உள்ளேதான் இருக்கிறது

கௌரவமான கோழைகளே!

முடிவு

தாம்பத்யம்

மன்னிக்கப்பட முடியாதவர்கள்

முகவரி தேடுவோர்

ஆண்டவனின் பிள்ளைகளில்....

மனிதனும் மனிதனும்

தலை விதியைப் பறி கொடுத்தோர்

அடைக்கலங் குருவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்துக் கிழவி

பொன்னாச்சி அக்கா சற்று முன்னதாகத் தன் வாடிக்கைக்காரர்களையும், அன்றாடம் சில்லறைக்கு வாங்குபவர்களையும், அனுப்பி விட்டாள். மிஞ்சியிருந்த மாவை இடியாப்பமாக்கிச் சுளகில் வைத்து இடியப்ப உரலை மாக்குழைத்த சட்டியில் வைத்து விட்டு, முகத்தில் கசிந்த வியர்வையை நெற்றியில் வட்டமாய்த் தேய்த்த திருநீறு அழியாமல் மாறாடிச் சீலையால் இழுத்துத் துடைத்துக்கொண்டு அடுக்களையை விட்டு வெளியே வந்தாள்.

"இனிச் சீட்டுக் காசுக்குப் போக வேணும்."

அவள் சொல்லி முடிக்கவில்லை. வளையில் எங்கோ ஒரு மூலையில் இருந்த பல்லி "இச்...இச்..." கொட்டிற்று, "இம்... அறுந்த பல்லியும் சொல்லுது. இண்டைக்கும் காசு தரமாட்டாளவையாக்கும், கொஞ்சம் ஆறிப்போவம்."

முழங்கால்களின் இடையில் இரு கைகளாலும் சீலையை சிரைத்துக் கொண்டு திண்ணையோடு சாய்ந்திருந்து தலையில் ஈர் உருவத் தொடங்கினாள். ஒரு இடியப்பம் பிழியும் நேரமாகவில்லை. ஏதோ யோசனையில் 'ச்சே' என உதடுகள் பிதுங்க எழுந்தாள். கையூன்றி எழும்பும்போது சுருங்கிய மூலைகள் ஆடிக் கொண்டன.

"இதிலை இருந்தா ஓரலுவலும் நடக்காது"

சிறிது கூனி நின்று வலது முழங்காற் சீலையைத் தூக்கிச் சிரைத்த கோலமாய் யோசித்தாள். அவள் கண்ணில் தென்னோலைத் தட்டியில் செருகியிருந்த வெள்ளைச் சீலைத் துண்டு பட்டுவிட்டது. அது புகையிலைக் காம்பருகில் செருகப்பட்டு இருந்தது.

"என்னடி இது." அதை இழுத்து எடுத்தாள்.

"ஆ, பாத்தியே வள்ளி மாடு சுகமாய்க் கண்டு போட்டால் தேங்காய் அடிப்பன் எண்டு வைரவருக்கு நேந்து கட்டின கால் ரூபாயும் துண்டுமடி. கண்டுபோட்டு நாலு மாசமாச்சு நான் போனன். அதுவும் நாகு கண்டெல்லை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய மகள் பாக்கியம் பானையில் சாணி கரைத்து காலுக்கு அருகில் வைத்து, கையால் வழித்து வீடு மெழுகிக் கொண்டு இருந்தாள். மெழுகும்போது ஐந்து விரல்களின் இழு வையும் நிலத்தில் விசிறியாய்ப் பதிந்தன.

"ஓமணை நானும் மறந்திட்டன்!"

"நீ ஏனடி அவனை நெடுகலும் வெய்யிலுக்கை கிடத்தி இருக்கிறை. எங்கடை குஞ்சுப் பொடியன்... இஞ்சால ஆச்சியை ஒருக்கால் பார் குஞ்சு."

பாக்கியம் தனது ஆறு மாத ஆண்குழந்தையை உடல் முழுவதும் எண்ணை பிரட்டி, உடல் பிடித்து விட்டு, திண்ணையில் வெயில் படுமிடத்தில் தடுக்கில் வளர்த்தி இருந்தாள். தன் ஆச்சியைப் பார்த்துக் குழந்தை கை கால்களை அடித்தது.

"போடா பறையா! இப்ப உன்னோட விளையாட நேரமில்லை," அடுக்களையை விட்டு வீட்டு வாசலுக்கு வந்து நின்றாள்.

"எடி புள்ளை எழும்பி இடியப்பத் தட்டு, குண்டான் பானையைக் கழுவி வை. இடியப்ப உரலை வடிவாய்க் கழுவு. புழுங்கலை எடுத்து வெய்யிலிலை போடு, பழமுளகாயை ஈக்கிலை குத்தி அதிலை நட்டுவிடு. இல்லாட்டி கோதாரியிலை போன காகங்கள் புழுங்கலைத் திண்டிடும். மாடுகளுக்குத் தவுடு புண்ணாக்கைக் குழைத்து வை. ஆடுகளை அவிட்டு விட்டுடாதை. ஆற்றையும் வளவுக்கை போயிடும். பேந்து தங்கடை சாமானை திண்டுட்டு தெண்டு ஓடி வருவாளவை. நான் சீட்டுக் காசுக்கு போட்டு வாரன். இவள் பெட்டை எங்கே? புழுக் கொடியலையும் எடுத்து வெய்யிலில போடு."

அவள் கண்கள் அவளுடைய பேத்தியைத் தேடின. அவளு டைய பேத்தி சரோஜா வீட்டு விராந்தையின் முன் மூலையில் கால் நீட்டியிருந்து பனை ஓலைப் பெட்டி இழைத்துக் கொண்டிருந்தாள்.

"எடி பெட்டை வீட்டுக்கை பொட்டகத்தைத் திறந்து அடுக்குப் பெட்டிக்கை காசு கிடக்கு எடுத்துக் கொண்டு வா! ஒழும்பு நேரம் போச்சு." நாரியிலை கையை வைத்துத் தடவித் தான் செருகி விட்ட முடிச்சைப் பார்த்தாள்.

"அவள் வீட்டுக்குத் தூரம் தொட மாட்டாள். வீட்டுக்கை போகச் சொல்றாய் நீ!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியம் மெழுகிக்கொண்டு சொன்னாள்.

"ஓமடி நானும் மறந்திட்டன். கிடக்கட்டும் பேந்து வாறன்" வீட்டுப் படியை விட்டு முற்றத்திற்கு இறங்கி நடந்து கொண்டிருந்தாள்.

"கக்கூஸெடுக்க பறையன் வந்தவனாடி?"

"ஓ!"

பதிலுக்கு நில்லாமல் தெருப்படலையை நோக்கி, 'சொடுக்' 'சொடுக்' என நடந்தாள். எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் இடதுகால் பெருவிரலில் 'டக்' 'டக்' என்று நெட்டி முறியும்.

அவள் அறுபது வயது தாண்டிய கிழவி. ஆனால் நல்லூரில் அவளுக்கு அறிமுகமான இளையவர்களும் மூத்தவர்களும் அவளைப் 'பொன்னாச்சி அக்கா' என்றுதான் அழைப்பார்கள். பத்து வருடங்களுக்கு முன்பே மேல் றவிக்கையைக் கழட்டி எறிந்து விட்டு வெறும் மார்பில் மாறாடி போட்டதாலும் அவளிடம் ஆச்சித் தன்மையை மீறி அக்காத் தன்மை நின்றது. வயது மீறிய ஒரு உஷார் தான். பொன்னாச்சியக்கா நடந்து சென்று வாசல் படலையைத் திறந்து விட்டாள்.

புருஷன் இறந்த காலம் தொட்டு இருபது வருஷங்களாய் குந்தியிருந்து இடியப்பம் அவித்து விற்றதால் முதுகு சிறிது முன் கூனி விட்டது. அதனால் முதுகு முன்னெலும்பு நாரிக்குமேல் மொழி மொழியாய்ப் புறப்பட்டிருப்பது அவள் நடக்கும் போது தெரியும். தெருவில் ஏறி நின்று எறிக்கும் வெய்யிலைப் பார்த்ததும், சேலைத் தலைப்பை எடுத்து தலையில் குவித்துப் போட்டுக் கொண்டாள்.

"இந்த ரோட்டிலை மனுஷர் என்னண்டு உலாவுறது? கால் புண்ணாப் போச்சு. வந்திடுவாங்கள் லெச்சனுக்கு, அது செய்யிறன் இது செய்யிறனெண்டு, நாடியில் புடிச்சு ஓட்டுக் கேக்க. பேந்து பாத்தா எல்லாம் அப்பிடித்தான் கெடக்கு. வேசை மக்கள் ஏனிவை கவுன்சிலுக்கு போறவையெண்டு தெரியேல்ல. ஏதோ வருமானம் வருகுதாக்கும்."

அந்த வீதியைக் கடந்த மூன்று வீதிகள் இணையும் சந்திக்கு வந்து 'லைட்' கட்டையிலை ஒரு கையால் பிடித்துக் கொண்டு உள்ளங் கால்களைத் தடவியவாறு நோட்டம் விட்டாள். அவளுக்கு முன்னால் சந்தியின் நடுவில் குட்டை நாய்கள் இரண்டு படுத்து வெய்யிலில் காய்ந்து கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவின் வடக்குப் பக்கம் கொஞ்சம் தொலைவில் பாசையூர்க் கடற்கரையில் மீன் வாங்கும் மீன்காரியள் கடகச் சுமையோடு இலகுவாக நடப்பதற்காக சேலையை முழங்காலுக்கு மேல் இழுத்து ஒதுக்கிப் பிடித்துக் கொண்டு, நிரை கட்டி உடலை நெளித்து, நெளித்து நடந்து சென்றார்கள். அவர்கள் மார்பு மறையும் அளவில் குறுக்குக் கட்டி, அந்த குறுக்கு மார்பின் நடுவில் ஓலை மடிப் பெட்டியும் செருகி இருந்தார்கள்.

"இவன் சின்னானோடை இளையவியிடை இளைய பொட்டை படுத்துப் புள்ளை வேண்டியதை மறந்துட்டாளவை போல இருக்குது."

"அந்தப் படுத்த கதையை எனக்கேனடி சொல்லுறாய்?"

"உவளைப் பற்றிக் கதைச்சாலே நாத்தம் விடுங்கோடி."

"ஏன், கண்ணியாத்தை அவனோடை படுக்கேல்லையே. அவர்கள் உள்ளதைத்தானே சொன்னவள்." இடைவெளி விட்டு ஒருவர் பின் ஒருவராக நடந்தோடிச் சென்று கொண்டிருந்தனர்.

"சின்னத்தம்பியிடை பெண்சாதி நாலு பிள்ளைக்காரி. சின்னான் முருகேசனோடை தொடுப்பெண்டு தெரிஞ்சுதானே சின்னத்தம்பி முருகனை வெட்டிப்போட்டு மறியலுக்குப் போனவன். இன்னும் தானே வரேல்லை, மறியலாலை."

"ஓமடி! ஓ! கோவிய பாலுவோடை போனவளையும் தெரியுமடி."

கல்வியறிவில்லாத சூழலின் பாதிப்பே அவர்கள் பேச்சுகளில் வெளியுண்டது. அவர்கள் கதைத்துக் கொண்டு போவது அவளுக்குக் கேட்கவில்லை. அவர்களைக் கண்டும் காணாதவள் போல தலையைத் திருப்பிக் கொண்டாள். காரணம் அன்று வெள்ளிக்கிழமை. அவள் வீட்டில் மச்சம் சமைப்பதில்லை. அன்றைக் கென புறம்பான கறிச் சட்டிகளும் அகப்பைகளும்.

"உந்த நளத்தியளுக்கு இருக்கிற கெறுக்கு. எப்பன் மீனுக்கு விலைக் குறைச்சி கேட்டாப் போச்சு கோவப்பூளல் வந்திடும். தூஷணத்தாலை யெல்லே பேசுறாளவை."

தனக்குத்தானே சொல்லியவாறு வலது முழுங்காற் சேலையை இழுத்துப் பிடித்த பிடியில் இடுப்பை அசைத்து, அசைத்து நடந்தாள். குண்டிப்பாகம் ஆடுவதற்கு இசைய முதுகுப்பக்கம் அரையில் தூங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்ட சேலைக் கொய்யகம் அசைந்தாடி மேய்ந்து கொண்டு அசைவதை அவள் காணவில்லை.

வெய்யில் சிறிது தாக்கியதும் தெருவை விட்டு வேலிக்கரை யோரமாய் நடந்தாள். வேலியில் ஏகமாய் அடுக்கி நிற்கும் பூவரச மர நிழல்கள் வெய்யில் வேட்கையை ஓரளவு தணித்தது. அந்தக் கரையில் பனையோலையால் வேலி அடைத்த வளவு யாருடையது? தென்னங்கிடுகால் வேலியடைத்த வளவு யாருடையது? எந்த மகளுக்குச் சீதனம் கொடுக்கப்பட்டது? சுற்று மதில் கட்டியிருக்கும் வளவை யார் குத்தகைக்கு எடுத்து இருக்கிறார்? என்பதெல்லாம் அவள் மனதில் தும்பாடி மறைந்தன.

"நான் கண்டறியாத சீட்டுப் போடுறதும் போதும். இவள வையிட்டை அலையிறதும் போதும். எனக்கென் வாயிலை வருகுது."

"என்னனை பொன்னாசசியக்கா தன் பாட்டிலை புறுபுறுத்துக் கொண்டு போறாய்."

"ஆய்"

வேலி நீட்டுக்குப் பட்ட தடிகள் இருக்கும் இடத்தைத் தேடி கண்விட்டுச் சென்றவள் நின்று தெருவைப் பார்த்தாள். சேலையைச் சிரைத்தபிடி விடவில்லை. தெருவில், உடுத்த வேட்டியை மேலி முத்துச் சண்டிக் கட்டுக்கட்டி தோளில் போடும் துவாய்த் துண்டால் தலையைச் சுற்றிக் காது மறையத் தலைப்பாகை கட்டிய கோலமாய் ஒருவன் நடந்தான். அவனுக்கு மீசை மயிர் நரைத்து விட்டது.

"சின்னத்தம்பியே எங்கயடா போறாய்?"

அவன் வெற்றிலைக் குதப்பலை சுட்டு விரலுடன் நடு விரலையும் சேர்த்துச் சொண்டில் வைத்து விரல்களின் இடுக்கால் பொழிச்சென்று தெருவில் துப்பினான்.

"உதிலை ஒருதன் வீடு மேஞ்ச காசு தரவேணுமனை அதுதான் போறன். இண்டைக்கொரு வேலையும் அம்புடேல்லை."

"ஆரவன் காசு தரவேணும். சிவியா தெரு முத்துவோ."

"சீச்சீ, இவனணை வண்டில் மாடு வச்சிருக்கிறான் ஒரு பள்ளன். உந்த நாலாஞ் சந்தியிலை. நல்ல ஒரு பேர் அவனுக்கு. மனதுக்க இருக்குது வருகுதில்லை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவன் வண்டிலிலை கொண்டு திரிஞ்சு பானை விக்கிற நாக முத்துவோ?"

"ஓ...ஓ...! அவனிட்டான்!"

"அது கிடக்கட்டு, இஞ்ச எங்கடை கிணறு ஒருக்கால் இறைக்க வேணும். ஞாயிற்றுக்கிழமை உன்ரை ஆக்களையும் கூட்டிக் கொண்டு பட்டையையும் கொண்டு வாவன். எப்பன் போயிலை இருந்தாத் தாவன்."

"பொறணை, பாப்பம், கிடக்கோண்டு."

அவன் அவளோடு கானுக்கு வந்து மடியை அவிட்டுச் சீமேந்துக் கடுதாசிக்குள் சுருட்டி வைத்திருந்த வெற்றிலைப் பார்சலை விரித்துப் புகையிலையை எடுத்துக் கொடுத்தான்.

அப்போது அவனுக்கு எதிர்முகமாக ஒருவர் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். அவர் நெற்றியில் இட்ட திருநீறும் சந்தணப் பொட்டும் முகத்தைப் பிரகாசமாக்கின. இவன் அவரைக் கண்டதும் வாய் கிழியச் சிரித்தான்.

"சாத்திரியார்!"

"ஓம் வாறன்!"

"எங்கை அவசரமாய்?"

"டாக்குத்தர்ரை புள்ளையிட சாதகக் குறிப்பொருக்கா."

"ஆ..... ஆ.....! போங்கோ, போங்கோ -நல்லா அக்குரட்டா பாப்பானணை சாதகம்."

"உவனை சிவசாமி! சரி, சரி போ... கோதாரி வெய்யிலடா மோனை, கார் வருகுது, கானாலை போ!"

அவன் முதுகில் நல்லூர் கந்தசாமி கோவில் தேர்த்திருவிழா வுக்கு வருஷா வருஷம் செடில் குத்திய வடுக்கள் தெளிவாய்த் தெரிந்தன. அவள் புகையிலையைப் பல்லில்லாத கொடுப்புக்குள் அடக்கிக் கொண்டு, விழுந்த சேலையை மீண்டும் எடுத்துக் கையில் போட்டவாறு அடியெடுத்தாள்.

"இவன் காவடியாடினாலும் ஒரு ஆட்டந்தான்."

வேலிக் கரையாக அங்குமிங்கும் வழி வழியே சிதறிக் கிடக்கும் கிளுவங்கள்ளி, மாஞ்சுள்ளி, பன்னாடை எல்லாவற்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுக்கி கைநிறைய வந்துவிட்டது. ஒரு வேலியோரத்தில் மறைத்து வைத்து விட்டு, தொடர்ந்து பொறுக்கத் தொடங்கினாள். சில குடிகாரர் அளவுக்கு மீறிப் பனங்கள்ளுக் குடித்துவிட்டுச் செல்லும்போது இடையில் வயிற்றைக் கலக்கியதும், தெருக்கரையில் மலங்கழித்து விடுவார்கள். அவள் அதை நினைவில் வைத்து கவனமாகப் பார்த்து நடந்தாள்.

"எணோய், ஆச்சி - நீ விறகுச் சுதியிலை போறாய்"

நடந்தவள் கண்களைக் கூசிக் கொண்டு நிமிர்ந்தாள்.

"ஆய்"

மார்புச் சேலையின் விளிம்பை இழுத்து தூங்கும் முலைகளை மறைத்து விட்டாள். கோண்டாவில் கிராமத்தில் இருந்து வீடு வீடாய் எரு வாங்குவதற்கு வண்டி கட்டி வந்த ஒருவன் வண்டியில் கச்சையைக் கட்டிக் கொண்டு நின்றான். இன்னொருவன் மாட்டைப் பிரப்பந்தடியால் அடித்துக் கலைத்து வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தான். அவனுக்கு முன்னமே பொன்னாச்சியைத் தெரியும்.

"வீட்டை எருக்கிடக்கோணை."

"நீயே! ஓ... வீட்டை போ - என்ரை மேள் இருக்காள்."

அவள் கால்கள் வேலை செய்யத் தொடங்கின. குடியில்லாத ஒரு வளவு வேலியில் ஒரு பெரியபட்ட தடியைக் கண்டதும் அவளுக்கு அப்பால் செல்ல மனம் இல்லை. தெருவை அங்கும் இங்கும் பார்த்து விட்டு அதன் நுனியில் பிடித்து இழுத்து முறித்தாள். அதுவும் படாரென முறிந்து கையோடு வந்தது.

ஆனால் கையில் காவிச் செல்ல முடியாது. கொஞ்சம் நீளமான தடி. உடனே குந்தயிருந்து தடியை வேலிக்கீழ் நீக்கலால் உள் ஓட்டி, நுனி வெளியில் தெரிய வைத்து விட்டு எழுந்து முழங்காற் சேலையை இழுத்துச் சிரைத்துக் கொண்டாள்.

"சுடக்" "டக்" "டச்".

"உந்த வளவுக்கை இருந்த பால்க்கார மாரிமுத்தை சொல்லாமல் கொள்ளாமல் பனையோலை வெட்டி மாட்டுக்குப் போட்டுட்டான் எண்டு 'டாக்குத்தன்', வெட்டின இரண்டாம் நாத்தே ஒழுப்பிக் கலைச்சவன். போலீஸும் அவங்களோடைதான். அவைக்கும் வேணும்தான் அவருக்கொரு குட்டிக்கெறுக்கு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் நினைவு அவளுக்குள்ளேயே இருந்து விட்டது. அதற்குள் அத்தெருவால் தலைச் சுமையாகக் கடகத்தில் சுமந்து தேங்காய் விற்கும் பெண்களும் நாலைந்து பேர் சென்று விட்டார்கள். அதை அவள் கவனிக்கவில்லை.

"ஊ; ஊ"

தெருக்கரையில் கிடந்த கல்லொன்று இடது காலில் பெரு விரலில், நகத்தின் கரையில் பட்டுத் தோலை உரைஞ்சி இரத்தம் கசிந்தது. நின்று குனிந்து அவ்விரலைப் பிடித்துப் பார்த்தாள்.

"சீட்டுப் போடுறதும் போதும். வேசையளிட்டை அலைஞ்சு நான் படுகிற கஸ்டமும் போதும். எனக்கேன் வாயில வருகுது பூனா மக்கள்."

கைச் சுட்டு விரலில் எச்சிலைப் பிரட்டி அதை மண்புழுதியில் தொட்டு இரத்தம் கசிந்த இடத்தில் தடவினாள். அப்பொழுது அவ்விரலில் அணிந்திருக்கும் வெள்ளி வளையல் கண்ணில் பட்டது.

"என்ரை அவர் ஒருக்கா, செத்த பொடியன் வயித்தலை, ஒரு சித்திரை வருஷப் பிறப்பன்று தேங்காயப் போரடிச்சு வெற்றியெண்டு இதைப் போட்டு விட்டவர். அந்தாளும் செத்து தெய்வமாய்ப் போச்சு... உம்!"

விழுந்த சேலையைத் தலையில் குவித்துப் போட்டதும் இடது கை துளாவிக் கொண்டிருந்தது.

"ச்சீ... அந்த மனுஷன் சாகிறதுக்கு மூண்டு நாளைக்கு முதல் நடுச்சாமம், வெறியிலை வந்து ஆசையிலை கரைச்சல் கொடுத்துது. நான் விசரி பார் அண்டைக்கெண்டு மாட்டன் எண்டு பிடிவாதமா நிண்டிட்டன். அதுதான் எனக்கு நினைக்கேக்கை நெஞ்சுக்கை குத்துது, துலா அடித்த கிணற்றுக்கை விழும் எண்டு ஆர் கண்டது. ச்சே."

"பொன்னாச்சியக்கா"

"ஆய்"

பொன்னாச்சியின் தெருவுக்கு அடுத்த வீதியில் மூன்றாம் ஒழுங்கையில் சாராயத்தில் மிளகுத் தண்ணீர் கலந்து பெருக்கி, களவாக விற்கும் சரஸ்வதி, கந்தசாமி கோயிலுக்குச் சென்று நெற்றியிலும் கைகளிலும் திருநீறு அணிந்து, தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை அடங்கிய பித்தளைத் தாம்பாளத்தைக் கையிலேந்தியபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒய்யாரமாய் வந்தாள். அவளும் பொன்னாச்சியுடன் சீட்டுப் பிடிப்பவள் தான்.

"எங்கை சரசு. கோயிலாலேயே?"

"ஓமக்க, இண்டைக்கு வெள்ளிக்கிழமை!"

"நான் பேந்துதான், சொன்னாப் போலை. செத்த செல்லை யற்றை எட்டுச் சிலவெப்ப?"

"நாளைக்கணை! படைக்கிறதுக்குச் சாமான் வேண்ட ஓடித் திரியினை. அந்த மனுஷன் சாப்பிட்ட சாப்பாடெல்லாம் படைக்க வேணுமாம்."

"பின்னே நான் வாரன். உண்ரை பொடியன்ரை சிலாவனை காணேல்லை?"

"அது உத்தியோகம் தேடி அஞ்சு வருஷமாய் அலைஞ்சிட்டு, மச்சானாரோடை கமத்திலை போய் நிக்கிது. உந்த அரசாங்கம் என்ன செய்யிதெண்டு தெரியேல்லையணை."

"என்ரை பேரப்பொடியனும் நாலு வருசமாய்ப் படிச்சிட்டு சும்மா திரியறான். துரும்பன், அம்பட்டன், நளவன், எல்லாரையும் சமமாய் நடத்தித் திரியுறான். சொன்னாலும் கேக்கிறானில்லை."

"இப்ப எல்லாம் கலவனாய்த்தான் திரியுதுகள். அவங்கள் உது ஒண்டுமில்லையண்டெல்லோ நிக்கிறாங்கள். உங்கை கோயிலிலும் துறந்து விட்டாச்சு கீழ்ச்சாதியனுக்கு. கந்தசாமி கோயிலிலை இப்ப பாக்கேலுமே."

"தெய்வஞ் சாமியும் உதுக்கு ஓமாமே! நிக்க நேரமில்லை நான் பேந்து வாரன். வீட்டை பிலாவிலை கொஞ்சம் பொறுக்கி வையடி. ஆடுகள் கிடந்து கட்டோடை சாகுது!"

"நீ வாவனனை அக்க!"

பழைய வேகத்துடன் சீலையைச் சிரைத்துப் பிடித்தாள்.

"டக்... சொடுக்... டக்...சொடுக்."

அவள் நடந்து வரும் வேலியோரம் ஒரு பட்ட இலுப்பைக் கொப்பும், காவோலையும் விழுந்து கிடந்தன. பொன்னாச்சிக்கு நல்ல சந்தோஷம். அக்கம் பக்கம் பார்த்தாள். தெருவின் மறுபக்கம் அவளுக்கு அறிந்த வீடுதான். இரண்டையும் இழுத்துக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவைத் தாண்டிப் படலையைத் திறந்தாள். அது நல்லூர் ஆயுள்வேத வைத்தியர் சபாபதியின் வீடு. "ஆயுள்வேத வைத்தியர் டாக்டர் சபாபதியின் வீடு" என எழுதியப் பெயர்ப் பலகை வேலியோடு நிறுத்தப்பட்டிருந்தது.

"எடி நாகம்மா!"

"நாகம்மா"

"ஓம்" வைத்தியரின் மனைவி அடுக்களையில் இருந்தாள்.

"ஆணம் அடுப்பிலை. அக்கா வாறேன்!"

"நீ வராதை. இதிலை காவோலையும் பட்ட தடியும் போட்டிருக்கு நான் பேந்து வாறன்!"

"ஓமக்கா"

அவள் சொன்னதைக் கேட்க பொன்னாச்சி அங்கில்லை. அவள் மறுகரைக்கு வந்து நடந்து கொண்டிருந்தாள். நாளைக்கு விறகு வாங்கத் தேவையில்லை என்ற உணர்வு உதட்டையும் அசைத்தது. பள்ளிக் கூடத்துக்கு பிள்ளைகளைக் கொண்டு போய் இறக்கி விட்டு முகச் சோர்வுடன் ரிக்க்ஷாவை இழுத்துக் கொண்டு நடந்தான் சாவல். அவனை அவள் கவனிக்கவில்லை.

"எடி பூரணம் உன்ரை பொட்டைக்கும் கலியாணம் முடிஞ்சுதே."

"இல்லையக்கா! அதுதான் சீதனத்திலை கிடந்தலையுது."

"பொடிச்சிக்கும் முப்பது வயதாக்கும்."

"இல்லையணை இருபத்தொன்பது."

"நீயும் நல்லா மெலிஞ்சி போனாயடி."

"என்னணையக்கா! ஒரு குமர் வீட்டிலை இருந்து பெருமூச்சு விடேக்கை என்னத்தையணை தின்னக் குடிக்க மனம் வரும். அதுக்கு ஆசை, பாசம், உணர்ச்சி ஒன்றுமில்லையேணை."

"அதுதானே! சரி! சரி! போ! நேரஞ்செண்டுபோச்சு. சீதனமில்லாமல் எவனடி வந்து முடிக்கப் போறான்."

பொன்னாச்சி மூன்று வீதிகள் சந்திக்கும் சந்தியை அணுகி விட்டாள். அச்சந்திக்குச் சிறிது தூரம் அப்பால் நிற்கும் புளிய மரத்தின் கீழ் சைக்கிளில் பெட்டி கட்டி அதில் மீன் வாங்கிப் போட்டுக் கொண்டு வந்து விற்கும் கிறிஸ்தோப்பு மீன் பெட்டியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கையைப் பிடித்த படி நின்றான். அந்தச் சூழலில் உள்ள பெண்கள் அவனைச் சூழ்ந்து நின்று, விலை கேட்டு கறி வாங்கிக் கொண்டு நின்றார்கள். அவர்களில் ஒருத்தி, பொன்னாச்சியைக் கண்டதும் மனுஷி வட்டிக் காசைக் கேட்டுப் புழுத்த பாட்டாய்ப் பேசப்போகுது என்று சொல்லிக்கொண்டு அந்தப் பெண்களுக்குள் ஒளிந்து நின்றாள். பொன்னாச்சி அந்தப்பக்கம் பார்க்கவே யில்லை. சந்தி நடுவில் மூன்று நாய்கள் கால்களை நீட்டி ஓரமாய்க் கிடந்தன.

சந்தி மூலையில் ஒரு கூப்பன் கடை. அந்தக் கடைக்காரனும் அவளுடன் சீட்டுப் பிடிக்கிறான். அக்கடையின் திண்ணையின் மூலையில் செல்லர்க் கிழவன் காலுக்குமேல் கால்மாறிப் போட்ட வாறு சாய்ந்திருந்தான். அவன் வேட்டியைத் தொடைக்கு மேல் மடித்துக் கட்டியிருந்தான். உள்ளே கட்டிய கச்சை சாடையாக வெளியில் தெரிந்தது. அடுத்த மூலைப் பக்கம் சிங்கப்பூர் பெஞ்சனீயர் மருதப்பா அமைதியாகச் சுவரில் சாய்ந்து குந்திக் கொண்டிருந்து பேப்பர் படித்தார்.

செல்லர்க் கிழவன் பொன்னாச்சியைக் கண்டு விட்டான். "டேய் மணியம், பொன்னாச்சி ஆவேசத்திலை வாராளடா" என்று கூறிவிட்டு நையாண்டியாய் நாட்டுக் கூத்துப் பாடலைப் பாடத் துவங்கினான்.

"அவள் வாறாளாம் வாறாளாம்
பட்டணத்து வேசை
அவள் வந்து வந்து போறாளாம்
பட்டணத்து வேசை"

"இவருக்கு என்னோடை உரசாட்டி இருக்கேலாது."

"உன்னைக் காணேக்கை எனக்கு இளமையல்லோ பேருது."

"பனங்கள்ளைக் குடிச்சா உனக்கு பேருந்தானே! எடமணியம்."

"ஓமணை, அந்தாளுக்கும் உன்னோடை தனக ஆசையாக் கிடக்குதாக்கும். இப்பென்ன உங்களுக்கு வயசு பூட்டுதே."

"அப்படிச் சொல்லடா மணியம்."

செல்லர்க் கிழவன் தன் தொடையில் ஓங்கி கையால் அடித்தான். அவன் குடுமி அவிழ்ந்து தோளில் குலைந்தது. பொன்னாச்சிக்குக் கோபம் வந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கென் வாயிலை வருகுது. வெள்ளிக்கிழமையா நாத்து ஏன் தூஷணம் பேசுவான்."

"பொன்னாச்சியக்கா குமரியா இருக்கேக்கை எத்தனை பொடியன்களை ஏச்சிருப்பா."

மணியம் சொன்னதைக் கேட்டு கடையில் சாமான் வாங்க வந்தவர்களும், செல்லரும் கொலு கொலுத்துச் சிரித்தனர். கடைக்கு வந்த டாக்குத்தரின் வேலைக்காரி சிங்களக்குமரி வெட்கப்பட்டுச் சிரித்தாள்.

"செல்லர் நீயேன் சிரிக்கிறாய். என்ரை மனஷனோடை சேர்ந்து வேலி பாஞ்சு அடி வேண்டினது எனக்குத் தெரியாதெண்டு நெனைச் சியோ."

முன்னைய சிரிப்பை இச்சிரிப்பு வென்று விட்டது. பொன்னாச்சிக்கு நிற்க நேரம் இல்லை.

"மணியம்"

"என்னணை"

"என்னணை எண்டுதான் கேப்பாய். சீட்டுக்காசை எடுத்து வையடா.. வாறன். இரண்டு பவுனுக்கு ஒரு ரூபா குறைய."

"சீக்."

உள்ளங்காலில் அப்பிய சாணியை தெருவில் காலைத்தேய்த்து துடைத்த வண்ணம் ஒழுங்கையில் இறங்கினாள். ஒழுங்கையில் அக்கம் பக்கம் குடியிருப்பவர்கள் தம் வளவில் சேரும் குப்பை களையும், அழுக்குகளையும் தம் வளவில் ஒதுக்காமல் அவற்றைக் கூட்டி அள்ளி ஒழுங்கையில் கொட்டியிருந்தார்கள். அது பிட்டியாக இருந்தாலும் காகம், கோழி, நாய் கிளறி சிந்துண்டு கிடந்தது. கரை ஓரமாக வந்த பொன்னாச்சியக்கா அந்தக் குப்பைப் பிடிக்கருகில் கிடந்த பட்ட நாவற் கொப்பை எடுத்துக் கொண்டு நாலாவது படலையைத் திறந்தாள்.

"சின்னத் தங்கம்"

"..................."

"ஏடி சின்னத் தங்கம்"

"ஓய் வாணையக்கா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ நல்ல வாணைதான்"

நாவற்கொப்பை வேலிக்கரையில் போட்டாள். படலையை விட்டு முற்றத்திற்குப் போனதும் முகம் கோபமாக மாறிக் கொண்டது. இடது கையால் இடுப்பில் பிடித்தாள்.

சின்னத்தங்கம் திண்ணையில் கால் நீட்டி அமர்ந்து நீட்டிய கால் மடிக்குள் தன் குமர்ப் பிள்ளையைக் கிடத்தி அவள் தலை மயிரை விரித்து ஈரும் பேனும் எடுத்து, இரு பெருவிரல்களால் அவற்றை நசித்து அவை வெடிக்கும்போது "ஸ்" கொட்டிக் கொண்டிருந்தாள். காலுக்கருகில் ஈர்க்கொல்லி கிடந்தது. அவளுடைய கைக் குழந்தையை, உடுத்தும் சேலை ஒன்றால் வளையில் கட்டிய ஏணைக்குள் கிடத்தி அடிக்கடி அவ் வேணையையும் ஆட்டி விட்டாள்.

சின்னத்தங்கம் ஒன்றும் பேசாமல் சிரித்தாள். அது பொன்னாச்சிக்குப் பிடிக்கவில்லை. "என்ன நினைச்சுக் கொண்டிருக்கிறாய். மெய்யே! உங்களை நான் புழுத்த பாட்டாய்க் கிழியக் கிழியக் கேட்டும் சுணை இல்லையே! வெட்கம், ரோசம் அறுந்து கொட்டிண்டு போச்சே, இன்ன தேதியிலை சீட்டுக் கட்டுறண்டு தெரியும். அதைக் கொண்டு வந்து தந்தா அறுந்து போமே! அவை இருக்கினம் அவைக்கென்ன?"

"அக்கா கோவிக்காதயணை, இங்காலை வாவன். வெத்திலை சப்பணையக்கா. -புள்ளை அந்த வெத்திலைத் தட்டை எடு."

பொன்னாச்சியக்கா முற்றத்தில் நின்றாள். இடுப்பில் பிடித்த கை இன்னும் எடுபடவில்லை.

"இப்ப நான் வெத்திலை தின்ன வரேல்லைக் கண்டியோ!"

"இல்லேக்கா அவருக்கு சுருட்டுக் கொட்டிலிலை இன்னும் சம்பளம் கொடுக்கேல்லையாம், அந்த அறுவான் முதலாளி கொழும்புக்கு ஆற்றையோ கலியாணத்துக்கு போட்டானாம். எங்கடை இட்டு முட்டுக்களை அவனுக்கெங்கே தெரியும். இண்டைக்குத்தானாம் சம்பளம். மெய்யாணைக்கா எவ்வளவு கட்டுக்காசு?"

"இரண்டு பவுனுக்கு ஒரு ரூபா குறைய. எனக்கந்த இந்தக் கதை வேணாம். எப்ப காசு கொண்டந்து தருவாய். அதைச் சொல்லு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஞ்சாலை வாவனணையக்கா, இண்டைக்குப் பொழுது படத்தான் கொண்டருவார். இண்டைக்கு வெள்ளிக்கிழமை. விளக்கு வைச்சாப் பிறகு காசு கொடுக்கக் கூடாதெண்டு உனக்குத் தெரியுந் தானே? காலமைக்குக் கொண்டோடியாறேன். பத்தொன்பது ரூபாயென்னணை?"

சின்னத் தங்கத்தின் தலைமயிரில் ஈருருவும் இடது கை விரல்கள் தம்மை மறந்து இயங்கின.

"ஓ.... காலமைக்குக் கொண்டு வராட்டி பேந்து கழிவில்லாமல் தான் கட்டுவாய்."

பொன்னாச்சி கோபச்சூடு தணிந்து வளவை நோட்டம் விட்டாள். வீட்டுக்கருகில் நின்ற முருங்கை மரத்தில் கயிற்றுத் துண்டுபோல் தூங்கிய முருங்கைக் காய்கள் அவள் கண்களை உறுத்தின.

"இஞ்சை உன்ரை முருங்கை நல்லாய்க் காய்ச்சிருக்கு. இரண்டு பிஞ்சு தாவன் காச்சுவம். இண்டைக்கு வெள்ளிக்கிழமை."

"ஓமக்கா. புடுங்கணை"

"புடுங்கி வையடி ஒருக்கா வாறன் உதாலை போட்டு. இஞ்சை அவளொருத்தி பத்துப் பவுன் வைச்சிருக்காளாம். ஆருக்கும் வட்டிக்கு எடுத்துக்குடன்."

"ஆருக்கணை? வட்டிக்குத்தானே பயம். மாசம் ஒரு பவுன். பாப்பம்!"

"நான் வாறன்."

சின்னத்தங்கம் ஏணைக்குள் கிடந்த குழந்தையை இடுப்பில் தூக்கி வைத்துக்கொண்டு வெளியே வந்து மூத்த மகளுக்குத் திருமணம் செய்தபோது கன்னிக் காலாய் நட்ட முள் முருக்கில் சாய்ந்து நின்றாள். பொன்னாச்சி விட்ட முழங்காற் சேலையை இழுத்துச் சிரைத்தாள்.

"காலமைக்குக் காசைக் கொண்டாந்திடு. பேந்தெனக்கு விசரைக் கிளப்பாதை."

அவள் வெளிப் படலையைத் திறந்து தெருவுக்கு வந்து விட்டாள். சின்னத்தங்கம் வீட்டுக்கு மூன்றாவது வீடு யோசேப்பு வாத்தியாருடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத்தியாருடை மூத்த மகளுக்கு சம்பந்தம் பேசி வந்த புரோக்கர் சுவாம்பிள்ளை அவர் வீட்டுப் படலை வேலியில் சாய்ந்து ஒரு காலைத் தூக்கிய வண்ணம் நின்றார். குடை கழுத்தில் கொழுவித் தூங்கியது. அவருடன் துணை வந்த புரோக்கர் சவரி முத்து அவருக்கு அருகில் நிலத்தில் குந்தியிருந்து ஒரு சுள்ளியால் மண்ணில் படம் கீறியபடி இருந்தார். புரோக்கர் சுவாம்பிள்ளை பொன்னாச்சி வருவதைக் கண்டு விட்டார்.

"உதிலை வாற மனுஷியைப் பார் சவுரி, ஊருக்கை காசு வட்டிக்குக் குடுத்து அந்த வட்டிக் காசிலை அடுத்த ஒழுங்கையில் ஐஞ்சு பரப்புக் காணி வாங்கியிருக்கு. தென்னம் புள்ளைக் காணி."

"உந்தக் கிழவியோ!"

"ஓ! அதோடை சீட்டுப் பிடிக்கிறது. ஒவ்வொரு சீட்டிலையும் கூறல் காசெண்டு அஞ்சாறு ரூபா எடுத்திடும். நாங்களும் செய்யுறம் தொழில்"

அவள் அவர்களுக்கு அருகில் வந்து விட்டாள்.

"எங்கையணையக்கா ஆவேசமாய்?"

"ஓய்!"

நேர் பார்வையில் யோசனையோடு வந்தவள் தலையைத் திரும்பிப் பார்த்ததும் தொடர்ந்து நடந்தாள்.

"ஓமடாப்பா கதைக்க நேரமில்லை. வாறன். சீட்டொன்றைப் போடத் தொடங்கி நான் படுகிற கயிட்டம்."

"ஓ! ஓ! இஞ்சை நில்லணை ஒரு அலுவல்."

"என்னது?"

"உனக்கொரு கலியாணம் பேசட்டே."

"எனக்கென்ரா? பத்திக்கொண்டு வருகுது."

அவள் கொஞ்ச தூரம் சென்றதும் சிறிது தூரத்தில் கள்ளுக்கார மாணிக்கம் இரு கைகளிலும் நுரைக்கும் கள்ளு முட்டிகளைத் தூக்கிக் கொண்டு, அவதியாக நடந்து வந்தான்.

"மாணிக்கம் போலையிருக்கு."

தன் கண்களைப் கூசிக் கூர் குறிப்பாய்ப் பார்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பனையில் ஏறும்போது நெஞ்சை உரசாமல் பாதுகாக்க கழுத்தில் மாதோல் கட்டி நெஞ்சில் தொங்கவிட்டு கணுக் கால்களில் தள நார் அண்டாமல் காதோலும் மாட்டியிருந்தான். அவன் நடக்க நடக்க அரையில் கட்டிய இயனக் கூட்டில் வைத்த கத்தி 'சொடக்' எனச் சத்தமிட்டது. மாணிக்கம்தான் என்று நிச்சயப்படுத்தியதும் அவள் வேலிக் கரையில் நின்று கொண்டாள்.

"என்னடா மாணிக்கம்!"

"ஓமணை!"

"இஞ்சை உன்னட்டை வேண்டிக் குடிச்சதற்கு இன்னும்தான் நல்ல கள்ளுக் குடிக்கேல்லை. இவன் மயிலனிட்டை கொஞ்ச நாள் வாங்கினேன். படு புளிச்சல், அவன் தென்னையும் கலக்கிறான். போலை, இஞ்சை நீ காலமையிலே எனக்கரைப் போத்தில் பனம் கள்ளுத் தாவன். நல்ல இனிப்பாய் இருக்க வேணும்."

"அதுக்கென்னக்கா தாறன்."

பொன்னாச்சி முகவியர்வையை முந்தானைச் சேலையால் துடைத்தாள்.

"அப்ப, பேரனை நாளைக்கு வரக் காட்டுறன்."

"ஓ! புதுச் சீட்டொண்டும் சேர்க்கேல்லையாணை? சேத்தா என்னையும் ஒண்டுக்குச் சேரன், மனுசியிடை புள்ளைப்பேறு வருகுது, உதவும்."

"எத்தனை புள்ளையடா உனக்கு?"

"இப்ப ஐஞ்சு, ஐஞ்சும் பொட்டையள்."

"இப்ப வயித்திலை எத்தனை மாதம்?"

"பொட்டையள்" என்று கூறும்போது முகத்தைத் துக்கமாய்ச் சுளித்தாள்.

"நாலக்கா."

மாணிக்கம் சிரித்த சிரிப்பில் விஷய அடக்கம் இருந்தது.

"நீயும் விடாதை புடி எண்டுதான் நிக்கிறாய்? அடுத்த மாச மொண்டு போடுறன். இருபத்தைஞ்சு பேர், மாசம் இரண்டரைப் பவுன், மொத்தம் அம்பது பவுன் சேர்றியோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமக்கா, எப்ப முதல் காசு வாங்குறாய்?"

"அடுத்த மாசம் முதல் தேதி. ஒழுங்காகக் கட்டவேணும். பேந்தெனக்கு விசரைக் கிளப்பாதே."

"அதென்ன உன்ரை குணம் எனக்குத் தெரியாதே."

"இஞ்சை மாணிக்கம். நீ கள்ளுச் சீவிற பனையிலை இரண்டு குருத்து வெட்டித்தாறியே? ஐஞ்சாறு பெட்டி இளைக்க வேணுமடா."

"அதுக்கென்னணை, பேரனை நாளைக்கு அனுப்பி விடு."

"ஒரு விஷயம். ஒருத்தி பத்துப் பவுன் வச்சிருக்காளாம். ஆரும் வட்டிக்குக் கேட்டாச் சொல்லு" சத்தம் வெளிவராது சொன்னாள்.

"ஓமக்கா! ஆரும் கேட்டாச் சொல்லுறன்"

"நம்பிக்கையான ஆளாய் இருக்க வேணும்"

"ஓ... ஓ... அது சரி"

சேலை நுனியைத் தலையில் தூக்கிப் போட்டாள். இடுப்பில் இருந்த கை முழங்காலுக்கு இறங்கிற்று. முழங்கால் சேலையை அது சிரைத்துப் பிடித்துக் கொண்டது.

"சரி, போ. நீயும் பாரத்தோடை நிக்கிறாய். நாளைக்கு அனுப்புறன்."

மாணிக்கம் சென்றுவிட முன்னோக்கி நடந்து இடது கரையில் தென்பட்ட நாகம்மாளின் படலையைத் திறந்தாள். அடுத்த சந்தியில் உள்ள கைலாயப்பிள்ளையார் கோவில் மணியோசை கேட்டது.

"அப்பனே! பிள்ளையாரே!"

உள்ளே எட்டிப் பார்த்தாள். அடி வளவில் பெரிய பாய்களில் பினாட்டுக் காயப் போட்டிருப்பதையும் கவனித்து விட்டாள். அவளுக்குக்காகக் கண் நாலு திக்கும் சுழன்று வரும்.

"எடி நாகம்மா!"

முற்றத்தில் மாவின் கீழிருந்து நாகம்மாவின் மகள் கிடுகு பின்னிக் கொண்டிருந்தாள். அவளுக்கு முப்பது வயதாகிறது. செவ்வாய் தோசக்காரி என்பதால் இன்னும் பொருத்தமான வரன் கிடைக்கவில்லை. அவள் சாதகத்தோடு எந்தச் சாதகமும் பொருந்த வில்லை. பொன்னாச்சிக்கு ஏறி வந்த கோபத்தினிடையிலும் மாவில் தூங்கிய மாங்காய்கள் கண்ணுக்குள் குத்தின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எடி பொட்டை கோத்தை எங்கையடி?” கேட்டவாறு உள்ளே நடந்து சென்றாள்.

“உங்கைதான் திண்ணையிலை கிடக்கிறா” வீட்டுத் தாள் வாரத்தோடு சென்று நின்றாள். இடுப்புக்குக் கைசென்று விட்டது.

“திண்ணையிலை கிடக்கிறாவோ அவ கிடப்பாதானே”

நாகம்மா திண்ணையில் தாவணிச் சேலையை விரித்து அதில் கையை மடக்கித் தலையின் கீழ் வைத்து, கால் மடக்கிக் குறண்டிக் கிடப்பது பார்வையில் விழுந்ததும் ஆத்திரம் சுருங்கிற்று. உள்ளே செல்வதென்றால் குனிந்து போக வேண்டும்.

“நாகம்மா”

“..........”

“எடி நாகம்மா”

கோபம் விளையத் தலையில் குவித்த சேலைத் தலைப்பை எடுத்து முக வியர்வையைத் தேய்த்துத் துடைத்தாள்.

“ஓய் இஞ்சாலை வாணையக்கா”

“வாரது கிடக்கட்டும், காசை எடு; என்னடி உங்களுக்கு எப்பன் எண்டாலும் சூடு சுரணையிருக்கே? தெருவிலை சீலையுடுத்துக் கொண்டு திரியிரியள் தானே”

“ஏனனை கோபிக்கிறாய்?”

பொன்னாச்சி தலையை முன்னுக்கு நீட்டி முகத்தைக் கடுமையாக வைத்தாள்.

“உன்னோடை எனக் கென்னடி கோபம். சீட்டெடுத் திட்டீங்கள். இளைய பொட்டையிடை சாமத்தியச் சடங்கும் வலு டீசன்டாய் கொண்டாடிப் போட்டீயள். இனி ஆரெப்படிப் போனால் என்ன? எனக்கென்ன கள்ளப் புருஷண்டை உழைப்பு வருகுதே. நான் கட்டிப்போட்டு ஆறுதலாக் கேக்க?”

நாகம்மா சிரித்தவாறு எழுந்திருந்தாள். கைத் தாங்கலில் தலையை வைத்துக் குனிந்திருந்தாள். வாய் முனகியது.

“அக்கா உண்ணாணைப் பேசாதையனை, உனக்குப் புண்ணியம் கிடைக்கும். நாளைக்குப் பொடியளிட்டை வரக்காட்டுறன். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லொரி யோடப் போய் பொழுது படத்தான் கொண்டருவார். எனக்குச் சுகமில்லையனை. அதுதான் படுத்திருந்தன். இஞ்சாலை வாவனனை."

பொன்னாச்சி குனிந்து சென்று திண்ணை விளிம்பில் இருந்தாள். அவசரமாக எழுந்து போகும் பாவனை. அவளின் சுகவீன நிலையைக் கண்டதும் கோபம் சற்றுச் சுருங்கிற்று.

"என்னடி சுகமில்லை?"

"என்னணையக்கா வியாழன், வெள்ளியிலை தலையைச் சுத்திக் கொண்டு வருகுது. பொழுதுபட ஆறுமணிக்கு இருந்த இரையிலை சுழட்டியாட்டும். ஒண்டுந் தெரியாமல் வரும். பேந்து ஒரு செம்பு தண்ணீர் குடிச்சிட்டுச் சரிஞ்சா மயக்கமா ஒண்டும் தெரியாது. அது பேந்து, நாலு, மூன்று நாளைக்கு உடம்பெல்லாம் எரியும். எத்தனை முறை வயித்தியரிட்டைக் காட்டியாச்சு."

பொன்னாச்சிக்கு அது உடல் நோயாகத் தெரியவில்லை. சிறிது யோசித்தாள். அவள் உடலை உச்சி முதல் உள்ளங்கால் வரை மிகக் கவனமாக நோக்கினாள்.

"வெள்ளிக்கிழமையிலை கூடுதலாக இருக்குமென்னடி?"

"ஓமனை அண்டைக்குத்தான் தலையாட்டம் கூட."

அவள் நிமிர்ந்தாள். திருநீற்றுக் குட்டான் வளையிற் கட்டித் தொங்கியது.

"இது ஒண்டுமில்லையடி, தெய்வத்திடை குறைபாடு. இவன் நாகமணியைக் கொண்டொருக்கால் பார்வை பார்த்து நூல் கட்டி விடு எல்லாம் சரியாய்ப்போம்."

"நாணும் அதுதான் யோசிச்சனான்."

"தீட்டுச் சீலையோடை கிணத்திலை தண்ணி அள்ளினனியே?"

"இல்லையணை அந்த வேலையும் செய்வனே."

"கோவில் பக்கத்தாலை எப்பவெண்டாலும் போயிருப்பா."

"என்னக்கா உண்ரை கதை மாதவிலக்கு வந்தால் முழுகாமல் ஓரிடமும் வெளிக்கிட மாட்டேனே! படலைக்குக்கூட போக மாட்டேன்." கால்களை நீட்டி அவைகளை இரு கைகளாலும் உருவிக்கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுதானே, இது தெய்வத்திட குறைபாடு தாண்டி."

"நூல் கட்டுறதுக்கு என்னனை வேணும்."

"சென்று போச்சு, மூண்டு வெத்திலை, மூண்டு பாக்கு, மூண்டு வாழைப்பழம், ஒரு நூல் பந்து, மூன்று கட்டி கற்பூரம், கொஞ்சம் மஞ்சள் மா."

"அது ஒருக்கச் செய்துதானனைப் பார்க்க வேணும்."

"என்ரை வீட்டுக்குப் பக்கத்திலை தான் இருக்கிறான் நாகமணி. நாளைக்கு வரக் காட்டி விடுறன். இரண்டு ரூபாக் காசை அவனுக்குக் குடன். அவன் வண்டில் கொண்டு போட்டு எட்டு மணிக்குத்தான் வருவான். இந்த முறை பனங்கொட்டை குவிச்சு வைச்சிருக்கி யய்."

"ஓமக்கா! வெத்திலை சப்பனனை உனக்கு இடிக்க வேணும். அது உவள் பெட்டை பொறுக்கிக் குவிச்சவள். அவள் தானனை எல்லாம் செய்யுறது."

நாகம்மா இருந்தவாறு வெற்றிலை இடிக்கும் உரலையும் உலக்கையையும் கண்ணசைத்துத் தேடினாள்.

"எனக்கு வெத்திலை சப்ப நேரமில்லை. இரண்டு மாங்காய் தாவன் சொதிக்குப் போடுவம். உது போட்டால் சொதி நல்ல குணமாய் இருக்குமடி." பொன்னாச்சி சேலைத்தலைப்பில் பணத்தை முடிந்து நாரிக்குள் செருகி வைத்த முடிச்சை, நாறியைத் தடவுவது போல் தட்டிப் பார்த்தாள்.

"புடுங்கிக் கொண்டு போவனனை, ஒரு விஷயம் கேள்விப் பட்டியே."

நாகம்மா முன் நகர்ந்து தன் வருத்தத்தையும் மறந்து அவளுக்குக் கிட்டவாக வந்தாள். கண்களும் முகமும் ஒரு புதுப்பாவத்தைக் காட்டின. அந்தப் பாவனையின் பொருள் விளங்கி, -எழும்பியவள் இருந்து விட்டாள்.

"கதைச்சாலும் பொல்லாப்பு. எங்கடை துரைச்சாமியற்றை பொட்டை பக்கத்து வீட்டு நளவனோடு தொடர்பாம்!"

அவள் அவதிப்பட்டாள். நாகம்மாவின் முகத்தில் ஏதோ ஒரு விவரிக்க முடியாத மகிழ்ச்சி.

"அந்தப் பள்ளிக்குப் போற பொட்டையோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ! ஓ! இதுக்குத்தானே கவுனும் போட்டுக்கொண்டு போறவை! பின்னை உங்கை படிக்கப் போறவையோ?"

"என்னன்டடி தெரியும்?"

"அண்டு இரா அவனும், அவளும் வேலிக்கை கதைச்சுக் கொண்டு நிக்கேக்கை சீனியம்மா கண்டவளாம். நீ ஆரிட்டையும் சொல்லிப் போடாதை! உங்கை எல்லோருக்கும் பரவி விட்டது."

"உங்கை சிவசம்பண்ணையிட மாஸ்டர் பொடியன் பள்ளியைக் கொண்டு வந்த மாதிரி. இவள்- அவனோடை ஓடிட்டா மானம் போச்சுதடி,"

"அத்தான் அவளுக்குப் போட்டு அடிச்சதாம். அவள் இவனைத் தான் வேணுமெண்டு நிக்கிறாள். கண்டறியாத, புது நாணயமான காதலரைக்கு. எங்கடை காலத்திலை சாமத்தியப் பட்டா வீட்டுப் படலை கண்டிருக்க மாட்டம். அப்பு சொன்ன மாப்பிள்ளை யைத்தான் கலியாணம் முடிக்கிறது. அதுவும் தாலி கட்டுற நாள் மாப்பிள்ளையைப் பார்க்க முடியும். இது இப்ப பிரளயம்!"

பொன்னாச்சி நாடியில் கையை வைத்து கண்களைச் சிறுக்கி அவள் சொல்வதை கேட்ட வண்ணமிருந்தாள்.

"அப்படி ஒண்டு நடந்தால் சிவசம்பு குடும்பத்தைக் கழிச்ச மாதிரி, துரைசாமி குடும்பத்தையும் சபை சந்திக் கெடுக்காமல் கழிச்சு வைக்க வேண்டியதுதான்."

"பின்னை நாங்கள் வெள்ளாளர். அதுவும் சுத்த வெள்ளாளர். கோவியரைக் கூடச் சேர்க்கிறதில்லை. வீட்டிலை புழுங்க விடுறது தான். இதென்ன வாசல் படியிலை ஏறவிடாத, நளம் பள்ளு களோடை சம்பந்தம் வைச்சா!"

"அதுதானெடி புள்ளையைக் கொண்டு மாங்காயைப் புடுங்கிக் கொண்டு வாவன். இன்னும் எத்தனை இடத்தை காசுக்குப் போக வேணும். இஞ்சாய் காசை அனுப்பிப்போடு. பேந்தெனக்கு விசரைச் கிளப்பாதை!"

பொன்னாச்சி முற்றத்தில் வந்து சேலையை தலையில் குவித்து முழங்காற் சேலையையும் பிடித்து விட்டாள்.

"ஓ!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்மா அவிழ்ந்து போன கொண்டையைக் கூட்டிக் கட்டினாள். நடந்து வந்து முற்றத்தின் கரையில் குறுக்காக இட்ட வேலியில் சடைத்து நின்ற முள் முருக்குகளை நிமிர்ந்து தலையைச் சுற்றிப் பார்த்தாள். வீட்டில் கட்டிநிற்கும் ஆடுகள் நினைவில் வந்தன.

"ஒரு நாளைக்கு இந்தக் குழை கேட்கவேணும் அவள் தருவாள்." மனதுக்குள் முடிவெடுத்துக்கொண்டு தெருவுக்கு வந்து நடந்தாள். நல்லூர் கந்தசாமி கோவில் பூசை மணி அடித்தது. மணியைக் கேட்டு சந்தியில் கிடந்த நாய் ஒலி ஓயும் வரை ஊளையிட்டுக் கொண்டிருந்தது. கண்களைப் பக்தியாய் மூடி முணுத்தாள். கால்கள் நடந்து கொண்டிருந்தன. வீடுகளுக்கும் கடைகளுக்கும் விறகு கொத்திக் கொடுக்கும் ஊமையின் மனைவி கடையில் சமையல் சாமான்களை வாங்கி முந்தானைச் சேலைக்குள் போட்டுக் கட்டிக் கையில் தேங்காயும் காவி, தெருக்கரையால் வந்தாள். அவள் நீண்ட நாட்களுக்கு முன் பொன்னாச்சியிடம் இடியப்பம் வாங்கிவிட்டு இன்னும் பணம் கொடுக்கவில்லை. அதனால் பொன்னாச்சியைக் கண்டதும் காணாதவள் போல குனிந்து கொண்டாள். இதை அவள் கவனித்து விட்டாள்.

அவளுக்கு நினைக்க நினைக்கக் கோபம் ஆவேசமாகியது.

"எடியே! உனக்கு இன்னும் அந்தக் காசுதர மனமில்லையோ?"

"தாறனனை போ!"

தட்டிக் கழித்த முறையில் பதில் சொல்லி நிற்காமல் நடந்தாள். பொன்னாச்சி தெருக்கரையில் நின்று கொண்டாள். அவள் பதில் சொன்ன முறை பிடிக்கவில்லை.

"சீலையும் உடுத்துக் கொண்டு வெளிக்கிட்டியடியள், ஏன்டி ஊரைத் தின்னவே இருக்கிறியள், எங்களுக்கென்ன கள்ளப் புருஷன் மாரே தாராங்கள், தந்துபோட்டு கேட்காமல் விட."

"தெருவிலே கத்தாமல் போ தரலாம்!"

"ஓமடி உனக்கு வெட்கமாய்த் தானடி கிடக்கு. அதுவும் உங்களுக்கிருக்கே"......

"ஐயோ உங்களைப் போலே என்டால் ஒரு சிரட்டைத் தண்ணிக்கை விழுந்து செத்துப் போவன்!"

அவள் போய்க் கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொறுக்கிப் பொட்டை."

சற்றுநேரம் அவளைப் பார்த்து விட்டுத் திரும்பி நடந்தாள். அவ்வொழுங்கையில் சனப்புளக்கம் அதிகம். அங்குள்ள எல்லோருக்கும் பொன்னாச்சியக்காவைத் தெரியும். அதனால் அவள் கண்கள் வேலிகளில், பட்ட தடி தேடாமல் நின்றன.

"என்னடி சாமத்தியப்பட்டு இரண்டு மாதமாகயில்லை. அதுக் கிடையில் கிமோறாப் போட்டிட்டா, இப்ப எல்லாரும் உதுதான் மாட்டு இனம்."

தெருப்படலையைச் சற்றுத் திறந்து தலையை நீட்டி ஒழுங்கையில் விடுப்புப் பார்த்துக் கொண்டு நின்ற கட்டிடக் கொன்றாக்டரின் மகள் அவள் கூறியதைக் கேட்டு "போனை" என்று சொல்லி வெட்கப்பட்டு உள்ளே ஓடிவிட்டாள். அவளைப் போல் நாலு மூன்றுபேர் தத்தம் படலைகளுக்குள் நின்று முகத்தை நீட்டினர்.

"மகன் கொழும்பாலே வந்திட்டாரே?"

"இல்லையனையக்கா! அடுத்த மாசந்தான்!"

"சரி! சரி! போ...போ!..."

முழுகி கூந்தல் குலைந்து நெற்றியில் திருநீறும் குங்குமமும் வைத்து ஒருத்தி ஒய்யாரமாக கோயிலுக்குச் சென்ற வண்ண மிருந்தாள்.

பொன்னாச்சி ஒழுங்கை ஓரத்தில் சற்று உள்ளே இருந்த அரச மரத்தின் கீழ் நின்று "அப்பாடா!" என்று பெரிய மூச்சு விட்டு, சேலைத் தலைப்பைப் தூக்கி தலைமேலெறிந்தாள். அந்த அரச மரத்தையண்டை ஒரு ஒடை வெளி. அவ்வெளியின் முடிவில் சிறு வைரவர் கோவில். கோயிலோடு சேர்த்து காணிச் சொந்தக்காரன் வைரவர் கோயிலை தன் பொறுப்பில் வைத்திருக்கிறான். அவள் களைப்பாறி புறப்படும் நேரம். மணியோசை கேட்டது. அப்போது தான் கோவில் அய்யர் நிற்பதைக் கண்டாள். பூசை தொடங்குவதற்கு முன் ஆயத்த மணி அது என்பதை யூகித்துக் கொண்டு கரையில் கோவிலை நோக்கி பய பக்தியுடன் நின்றாள்.

அந்நேரம் அவளுக்கு நன்றாகத் தெரிந்த ஒருத்தி கூப்பன் அரிசியை தலையில் சுமந்து வந்தாள். அவளையும் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டாள். பொன்னாச்சியின் இரு கைகளும் குவிந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச மரத்தின் அருகில் பொழிந்த கல் ஒன்றில் வைக்கப்பட்ட உண்டியல் பெட்டியில் அண்டன் காகம் இருந்து கத்தியது!.

"அப்பனே! வைரவா! நீதான் துணை! -எங்கையடி போட்டு வாறாய்? வெள்ளைமாடு கண்டு போட்டுட்டதே சாமி!"

"இல்லையணை"

"வைரவா! நீதான் எங்களுக்குத் துணை மூத்த பொடியன் வேலையாய்ப் போட்டானே!"

"வைரவா சாமி"

"அவனுக்கு இன்னொரு வருஷப் படிப்பிருக்கக்கா! நான் வாறன்"

பூசை மணி விரைவாகக் கிணுகிணுத்தது. ஐயர் கொடுக்கும் தண்ணீர்ப் புக்கையை வாங்குவதற்கு சூழலில் உள்ள ஏழைப் பிள்ளைகள் கோவிலை நோக்கி ஓடிவந்தனர். "கதைக்க நேரமில்லை. வாறன் போ" "சுவாமி என்ர பேரப்பிள்ளைகளுக்கு நோய் நொடியில்லாமல் காப்பாற்றி விடு. சொர்ணத்திற்றை இடியப்பக் காசைக் கொண்டந்து தரச் சொல்லு ஒருக்கா. மறந்து போகாமல் சொல்லி விடு."

பொன்னாச்சி பூசை கண்டு வணங்கி முடிந்ததும் அரச மரத்தை விட்டு நகர்ந்தாள். வெயில் வெட்கையில் குறுக்கும் கண்களை சுருங்கிய இமைத் தோல்கள் இன்னும் சிறியவையாக்கின. அவர் பார்வையில் சற்றுத் தூரத்தில் ஒழுங்கையில் நீண்டிருந்த மாமரக் கிளை நிழலில் ஐந்தாறு பெண்கள் குந்தியிருந்து எதையோ எதிர்பார்ப்பது தெரிந்தது. ஆனால் அவர்கள் யாரென்பது தெரிய வில்லை வேலிக் கரையோரமாய் செல்லுபவள் நடையில் வேகம் வேகம்தான்.

"எட்ட றத்தினாய்க்கா!"

"ஓவ் என்னாச்சி"

"வட்டிக்காசு கொண்டரேல்லை. பத்தாம் தேதியாகவும் போகுது."

"நாளைக்கு கொண்டு வாறது தானே."

"சரி, சரி, சைக்கிள்ளை ஏறி ஓடு. வெய்யில்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கூடிக் கும்பலாய் இருக்கும் பெண்களுக்கு அண்மையாக வந்தாள். அவர்கள் சைக்கிளில் மீன் கொண்டு வந்து விற்கும் கரையானைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கள்ளுச் சீவுகிற அந்தோனியின் மனைவி - கையில் பன்னாடையைப் பிடித்தபடி இரு கரையும் எட்டிப் பார்த்தாள். அவள் அருகில் சின்னத்தம்பி மாஸ்டரின் தாய்க்கிழவி உமலைக் கால் பக்கமாய் வைத்து, கதையில் ஈடுபட்டு இருந்தாள்.

மேசன் இராசய்யா பெண்சாதி, பழைய புதினப் பத்திரிக் கையைக் கையிலேந்தி குந்தியிருந்து நாடிக்குக் கை கொடுத்துக் கொண்டு கதை கேட்டாள். காண்டம் பார்க்கிற சிவராசா மனைவி, வேலியோடு சாய்ந்திருந்தாள். பிள்ளை பெற்ற தன் மகளுக்கு சரக்குத் தண்ணீர் வைப்பதற்கு மீன் பொடிக்காக அவள் பூவரசம் இலைகளை வட்டமாகக் குத்தி இணைத்து காலோடு போட்டிருந்தாள். கிளாக்கர் மனைவி மரியம்மாள், கிமோனா அணிந்து கொண்டு ஒழுங்கையில் நின்றாள். அவள் குழந்தை நாய்க்குட்டியுடன் விளையாடிக் கொண்டிருந்தது. அவள் கர்ப்பவதியாகையால் வயிறு கிமோனாவை முன் தூக்கி விட்டது. அவள் பதினைந்து பவுன் தாலிக் கொடி கழுத்தில் கிடந்து வட்டமாக மின்னிற்று. அதைக் குனிந்து பார்க்கும் வேளைகளில் அவருக்கு உள்ளூர மகிழ்ச்சி. மனக் குளிர்ச்சி, பெருமை. அவர்கள் ஊர்க் கதைகளில் தம்மை மறந்திருந்தனர்.

"இவள் றோசலி வீடு கட்டிப் போட்டாள். நல்ல பெரிய வீடு" சிவராசா மனைவி சோர்ந்த கைவிரல்களை நாடியில் ஊன்றிக் கொண்டாள்.

"அவளுக்கென்ன, புருஷன் உழைக்கிறான். மூன்று பொடி யன்கள் மேசன் வேலை செய்யுறாங்கள். அவளும் மாடாகுலச்சி பால் கறந்து விக்கிறாள். கட்டுறதுக்கென்ன!" மாஸ்டரின் தாய்க் கிழயின் வாய் அளவுக்கு இசைவாய்க் கோணிற்று.

"இஞ்சை என்ரை அது இருக்கு. மூதேவி உழைக்கிற காசெல்லாம் கள்ளுக்கடைக்கு கொடுத்துட்டு வந்திடும். புள்ளை களை கவனிக்கிறானோ, குட்டிகளை கவனிக்கிறானோ."

பாதத்தில் ஒரு கையை வைத்து, தலையில் ஒரு கையைப் போட்டிருந்தாள் இராசய்யா பெண் சாதி. "இஞ்சை தவமணியிட புருசன் விட்டுட்டுப் போட்டானாம் மெய்தானே." மாஸ்டரின் தாய்க் கிழவி பொதுவில் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்ப அது ஆறுமாசமாச்சே அவன் நல்லவனென்ட படியால் மரியாதையோட போறான்." அந்தோணியின் மனைவி முற்றும் அறிந்தவள் போல் சொன்டை நெளித்துச் சொஞ்னாள். அதில் நகைப்பும் உள் ஓடின.

"அவவுடை ஆட்டத்துக்கு ஆர்தான் பொறுக்கின்றவன். அவவிடை செருப்பும், புது நாணயமான கொண்டையும் ஊர்க் கதைகளை ஏன் எங்களுக்கு."

கிளார்க்கர் மனைவி வாய்சுளித்துச் சொல்லியதில் நையாண்டி தொனித்தது. தன் தங்கை 'டைவோர்ஸ்' பண்ணி வீட்டில் இருக்கும் ரகசியத்தை மறந்து விட்டாள்.

"உந்தக் கடை – வைச்சுக் கொண்டிருந்த கனகம், நாலு புள்ளைகள் அவளுக்கு. மூத்த பொடியனும் இளந்தாரியாகி விட்டான். அவள் இருக்கேலாமல் சுவாம் பிள்ளையோடை ஓடியவள் தானே!"

"ஏன் அவனுக்கும் இரண்டு பெரிய பிள்ளைகள் இருக்கு. அறுவான், அவனுக்கு அவ்வளவு துடிப்பு. ஒண்டு இதாலை தையலுக்குப் போகும், ஒரு கருத்தப் பெட்டை."

கிழவி தொடங்கியதை இராசையா மனைவி முடித்து விட்டாள்.

"உங்கை ரகசியமாய் எத்தினை விஷயம் நடக்கு, அதுகளைக் கதைச்சா வீண் தொந்திரவு." அவ்வேளைதான் மீனுக்குப் பூவரசமிலை பிடுங்கிக் கொண்டு வந்த பேயாட்டி முத்தனின் மனைவி முற்றும் தெரிந்தவளாய்ச் சொன்னாள்.

"இவனை இன்னும் காணவில்லை எப்பை இனிச் சமைச்சு முடிக்கிறது."

கிளார்க்கர் மனைவி சலித்துக் கொண்டு மறுகரைக்குச் சென்று ஒழுங்கை நீளம் மீன்காரனைப் பார்த்தாள். அவள் கூந்தலில் "போணி டெயில்" விட்டிருந்தாள்.

"உங்களுக்கு ஊர்க்கதை இல்லாட்டி இருக்க மாட்டியளே."

பக்கத்தில் சிலையை சிரைத்தவாறு நிற்கும் பொன்னாச்சியை எல்லோரும் நிமிர்ந்து பார்த்தனர்.

"ஓ! ஓ! நீ பெரிய திறந்தான், இரணை."

"உங்களாலாலே தானடி இந்த ஒழுங்கையிலே புருஷன்மார் சண்டை பிடிக்கிறதும் வெட்டுப்படுறதும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது சொன்னியே உண்மை தான்."

கிழவி சொல்லிவிட்டு குலுக்கிச் சிரித்தாள்.

பொன்னாச்சியின் கால்கள் சுடக் கொட்டின.

"எங்கேயணை நிற்காமல் ஓடுகிறாய்."

"உந்த மனுஷிக்கு உதுதானே! விஷயத்தோடான் திரியும்."

"இவள் கள்ளுக்கொட்டில் இராசு வீட்டையும் அன்ன மிட்டையும் போட்டு வாறன்."

அவ்விடத்தில் கூட்டமாய் இருந்த அப்பெண்கள் -போகும் அவளை மௌனமாகச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தனர். அவள் வழியிலுள்ள பொட்டுக் கடையையும் தாண்டி அப்பால் சென்றாள். ஒருவன் குச்சொழுங்கை பிரியும் முடக்கில் வேலியோடு ஒட்டித் தலை குனிந்த வண்ணம், குந்தியிருந்து சலம் கழிப்பதைப் பொன்னாச்சி கண்டதும் காணாதவள் போல நேரே பார்வையை விட்டாள்.

உபதேசியார் வீடும் கிடுகு விற்கிற சிவக்கொழுந்து வீடும், பெயின்டர் செல்லத்துரை வீடும் கடந்து, மெகானிக் வீட்டிற்கு அடுத்தாற்போல் இருப்பது இராசுவின் கள்ளுக் கொட்டில். மெகானிக் வீட்டை அவள் அடைந்து விட்டாள். அவளுக்கு முன்னால் குறுக்காக மெக்கானிக்கின் தாராக்கள் அசைந்து ஓடின. கள்ளுக் கொட்டிலில் சினிமாப் பாட்டும், நாட்டுக் கூத்தும் சிரிப்பும் கை தட்டலும், தூஷண வார்த்தைகளும் கலந்து கேட்டன.

இராசுவின் முன் படலையில் பனையோலையில் கோலிய கள்ளுப் பிளாவும் அத்துடன் 'சிவமயம்' பனை 25 சதம், தென்னை 50 சதம் என்று கரியால் எழுதிய கார்ட்போட் துண்டும் கொழுவித் தொங்கின. தபால்காரனின் சிவப்புச் சைக்கள் வெளிவேலியோடு சாய்ந்து கிடந்தது. பொன்னாச்சி படலையைத் திறந்து உள்ளே சென்றாள்.

"எட இராசு!"

"அக்கா! வாறன்!"

"உங்களிட்டை நான் ஒருக்காத் தூக்கிப் பிடிச்சுக்கொண்டு வரவேணும் என்ன."

"நில்லணை அக்கா! இந்தா தாறன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் புறுபுறுத்தவாறு தலையில் இட்ட சேலைத் தலைப்பை இழுத்து முக வியர்வையைத் துடைத்தபடி, அங்கு நடப்பவற்றை அவதானித்தாள்.

ஒரு சடைத்த கட்டை மாவின் கீழ், காவல் கொட்டில் போல தென்னங் கிடுகால் செய்த கொட்டில், அதற்குள் பெரிய சால்கள் இருந்தன. ஒன்றில் பனை, ஒன்றில் தென்னை. அக் கொட்டிலைச் சுற்றி முட்டிகளும் பானைகளும் சரிந்தும் நிமிர்ந்தும் கிடந்தன. கொட்டிலின் அருகில் இட்ட சிறு மறைப்பு வேலியில் கள்ளு நிரம்பி நுரைதள்ளும் துரனை முட்டிகள் தொங்கின. ஒரு சுரைக்காய் முட்டையும் தொங்கியது. போத்தல்களும் உடைந்த பானை வாய்களும் அதைச் சுற்றிக் காணப்பட்டன. உடைந்த பானை வாய்கள்தான் திருகணைகள். மாமரத்தினடியோடு துண்டாக நறுக்கிய பனைக்குற்றி போடப்பட்டு அதில் நிரைக்கு ஆட்கள் குந்தியிருந்தார்கள். வேட்டி உடுத்தவர்கள் வேட்டியை முழங்கா லோடு சிரைத்திருந்தார்கள். 'லோங்ஸ்' அணிந்திருந்தவர்கள் கால்களை நன்கு அகட்டியிருந்தார்கள். அவர்களின் இரு கால் களுக்கிடையிலும் திருகணையிலும் மூன்று கற்களிலும் உடைந்த பானை வாய்களிலும் கள்ளு நிரம்பிய புளா வைக்கப்பட்டிருந்தன. கள்ளில் கிடக்கும் எறும்புகளை விரலால் எடுத்து எறிந்தபடி இருந்தனர். மூன்று பேர் நிலத்தில் 'சப்பாணி' கட்டி ஆறுதலாக இருந்தனர். அவர்கள் மண்ணைக் குமித்து அதில் புளாவை வைத்திருந்தார்கள்.

ஒருவர், வாங்கி வந்த கறி உமலை அங்கு நின்ற ஒரு சைக்கிளுடன் சாத்திவிட்டு புளாவில் கள்ளை வாங்கிக் குடித்தார். அவருக்கு வீட்டு நினைவேயில்லை. இரு கிழவர்கள் கள்ளைக் குடித்து விட்டு தனியே சென்று வேலியில் பிடித்துக் கொண்டு நின்று, ஏதோ முக்கிய விஷயம் கதைத்தனர். ஒவ்வொரு இழுவைக்கும் எல்லோரும் சுருட்டோ சிகரட்டோ புகைக்கத் தவறவில்லை.

அவர்களில் தமிழரசுக் கட்சி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்கள் தமிழ் மக்களுக்கு உரிமை கிடைப்பது பற்றியும் சாமான்களின் விலைவாசி ஏற்றம் என்பவையிட்டும் கைகாட்டி சத்தமிட்டு விவாதித்துக் கொண்டிருந்தனர். வேறு சிலர் அன்றைய பத்திரிக்கையை ஒருவர் வாசிக்கக் கேட்டுச் செய்திக்குத்தக்க அபிப்பிராயங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிக் கொண்டிருந்தனர். "றோஸ்ற்" விற்கிறவன் தன் பெட்டிக்குப் பக்கத்தில் மௌனமாக இருந்தான்.

இராசு, அளவு சாடியும் பண்ணாடையும் கொண்டு எல்லோருக்கும் கள்ளு வார்த்துக் குடித்து விட்டு காசைக் கொண்டு பொன்னாச்சியிடம் ஓடி வந்தான். அவன் கிட்ட வந்ததும் அங்கிருப்பவர்களைப் பார்ப்பதை விட்டுவிட்டு அவனைக் கோபமாகப் பார்த்தாள். அவன், அவளின் கையைத் தூக்கி சீட்டுப் பணத்தை உள்ளங்கையில் வைத்துப் பொத்தி விட்டான்.

"அக்கா கோவிக்காதையணை. ஆக்களாப் போச்சு"

மரம் ஏறி முடிந்து குளிக்காததால் அவனில் மரச்சிணியும் கள்ளு மணமும் சேர்ந்து மணந்தன.

"எனக்கேன்! பத்திக்கொண்டு வருகுது!"

அவள், அவன் கொடுத்த பணத்தை எடுத்து விரித்து எண்ணிக் கொண்டு நின்றாள்.

"அக்கா வாவனணை என்ரை கணக்கிலை அரைப் போத்தல் தென்னை அடியன்" சுருட்டுச் சுற்றுகிற சுவாம் பிள்ளை கேட்க மற்றவர்கள் சிரித்தார்கள்.

"நீரோ! வாங்கித் தரப்போறீர்?"

"ஏனணை வெட்கமாய்க் கிடக்கே?"

பொன்னாச்சி சேலையைச் சிரைத்துப் பிடித்தாள்.

"அங்கை பெண்டில் காசுக்குக் காத்துக்கொண்டு ஒண்டுமில்லாமல் திரியறாள். நீர் எனக்குக் கள்ளு வாங்கித்தரப் போறீரோ! மயிர்"

அவள் சொன்னதைக் கேட்டு, கையால் வாயைப் பொத்தி தோளை வெட்கமாய்க் குலுக்கினான்.

"மனுஷி எல்லோருக்கும் நக்கீட்டுப் போகுது"

லோங்ஸ் அணிந்திருந்த கிளாக்கர் சொல்லிச் சிரித்தார்.

"எளிய குரங்குகள் காசை வீணாக்குதுகள்" பொன்னாச்சி படலையை விடும் சத்தம் கேட்டது.

"அன்னம்மா....."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் ஒழுங்கையில் நாலு வீடு கடந்து வடக்கில் பிரியும் குச்சொழுங்கை எல்லையில் இருக்கும் வீட்டு முற்றத்தில் சென்று நின்றாள். முற்றத்தின் எல்லையில் நிற்கும் விளாமரத்தின் கீழ் இரண்டு பையன்கள் இருந்து பனங்கொட்டையைச் சூப்பினர். குப்பையில் பனம்பழத்தைப் போட்டு நெருப்புக் கொழுத்திச் சுட்டார்கள். கொட்டையின் தும்புகளைப் பற்களால் கடித்துச் சூப்பும் அவர்களைப் பார்த்துக் கொண்டு இரண்டு பசு மாடுகள் நின்றன.

"ஒய்! வா அக்கா!"

அன்னம்மா வீட்டுமுன் சிறுகுந்தில் அமர்ந்து கப்போடு சாய்ந்தவாறு இரு கைகளாலும் தலைமயிரில் ஈர் உருவிக் கொண்டிருந்தாள்.

அவள் முகத்தில் யோசனை. அவள் பொன்னாச்சியைக் கண்டதும் குந்திலிருந்து இறங்கி நிலத்தில் இருந்தாள். தான் தாழ்ந்த சாதிக்காரி என்பதை அந்த மரியாதையில் ஒத்துக்கொண்டாள்

"வாணை! இதிலை இரக்கா."

அன்னம்மா வீட்டுமுன் குழந்தை கையால் காட்டினாள். பொன்னாச்சி அன்னம்மா சொன்னதைக் காதில் விழுத்தாதவள் போல் சென்று குந்தில் அமர்ந்தாள். அவள் கோபம் வெளிப்பட்டது.

"ஏனடி உங்களுக்கு வெட்கம், மானம் இல்லையே? ரோச நரம்பு அறுந்து போச்சே? நான் கிழியக் கிழியக் கேட்டும் உங்களுக்குச் சுணையில்லையே?"

உள் 'விறாந்தையில்' சுவரோடு சாய்ந்து குறள் பீடியைக் குடித்த வண்ணம் மௌனமாக இருந்து அன்னம்மாவின் மூத்த மகன் நல்லய்யா பொன்னாச்சியைப் பார்த்து விட்டுத் தன் கால்களில் கண்ணை விட்டான். அவன் இ.போ.ச. பஸ் கொண்டக்ரர். அவனின் காக்கி 'சர்ட்' சுவரில் தொங்கியது

"கோவிக்காதையக்கா! மற்ற இரண்டு பொடியன்களும் இரண்டு கிழமையாய் இருக்கிறான்கள். சீமேந்து விலை கூடிப்போச் செண்டு வேலை நிப்பாட்டிக் கிடக்கு. மேசன்மாற்றை சீவியம் இதுதான். மழை எண்டால் வேலையில்லை. சீமேந்து இல்லை யெண்டால் வேலையில்லை. பெரிய இளவக்கா!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம்மா வெற்றிலைத் தட்டத்தை முன்னுக்கு இழுத்து விட்டாள்.

"அதுவுக்கு நான் என்னடி செய்யிறது. எனக்கென்ன கள்ளப் புருஷன்ரை உழைப்பு வருகுதே."

"இவனுமக்கா, என்னவோ வேலை நிறுத்தமிண்டு பதினைஞ்சு நாளா வேலைக்குப் போகலை. இவனோட வேலை செய்யிற முத்தையன் அவன் டைவர் அவன் போறான்!"

முத்தையனின் பெயர் கேட்டதும், நல்லையாவின் முகம் வேகமாய்ச் சினம் கொண்டது.

"அவன் எளிய கருங்காலி! துரோகி! அவனும் ஒரு மனுசனா? எல்லாத் தொழிலாளரும் ஸ்டிரைக் பண்ணுறம். அது போகுது வேலைக்கு நம்பி!"

அவன் கண்கள் நடுங்கின. அவன் துடிப்பில் வெக்க உணர்வு மேலோங்கியது. பொன்னாச்சியும் அன்னம்மாவும் அவனைப் பார்க்கவில்லை.

"முந்தநாள் முத்தையனுக்கு அடிக்கப் போட்டான். நீ போகாட்டி வேலையாலை நிப்பாட்டினா என்னனை செய்யிறது நாங்க. சொல்லணையக்கா பாப்பம்?"

"வேலையாலை தட்டினால் மசிராச்சு. அதுக்கு கருங்காலி வேலையா செய்யிறது எளிய புத்தி."

அவன் கண்கள் முன்னால் வளையில் தொங்கும் லெனின் படத்தில் விழுந்தன.

பொன்னாச்சி ,தன் காரியத்தில் கண்ணாயிருந்தாள்.

"இப்ப எனக்கென்னடி சொல்லுறாய்?"

"அதுதானக்கா போன கிழமை நாப்பது ரூபா சிலவு. உவன்ரை பெண்சாதிக்கு வயித்துக்குள்ளை என்னவோ செய்யுதெண்டு ஆஸ்பத் திரிக்குக் கொண்டுபோய் இரண்டு நாள் வச்சிருந்தது, இது தானணை பெறுமாசம். தற்செயலாய் வயிறு நொந்தாலும் கையில மடியில காசு இல்லை. -ஒரு பத்துப் பவுன் இருந்தா வட்டிக்குத் தாவனணை பேந்து தாறன். தந்தியெண்டால் சீட்டுக் காசு தந்து இடியப்பக் காசும் தந்திடுவன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாச்சியின் இதயம் குளிர்ந்தது. அவள் எதிர்பார்த்து வந்த காரியம் ஓரளவு வெற்றி.

"என்னட்டை எங்காலையடி காசு."

ஆதரவான தொனியில் சொற்கள் வெளிவந்தன. ஆனால் அன்னம்மாவுக்கு அவளின் நிலைமை தெரியும்.

"எப்பிடியென்டாலும் பாரணையக்கா."

அவள் சிறிது யோசித்த பின்பு அன்னம்மாவின் முகத்தை நோக்கினாள். நல்லய்யா பொன்னாச்சியைச் சாதாரணமாகப் பார்த்தான். அவனுக்கும் பொன்னாச்சியைப் பத்தி நன்றாகத் தெரியும்.

"எப்ப திருப்பித் தருவாய்?"

"இரண்டு மாசத்தாலே தாரணையக்கா."

நீண்ட காலத்துக்கு ஒருவரிடம் பணத்தை விட்டால் அது சில வேளை திரும்பி வராது என்ற அனுபவமான பயம் அவளுக்கு.

"அவளொருத்தி வைக்கத் தந்த காசு கிடக்கு. இரண்டு மாசத் தாலே தந்திட வேணும்."

குனிந்திருந்ததால் சுருங்கித் தொங்கும் முலை, மார்புச் சேலையை விலக்கி வெளியில் புறப்பட்டது. உடனே மார்புச் சேலையை இழுத்துக் கக்கத்துக்குள் செருகி மறைத்தாள்.

அவள் நாரியில் சொருகிய முடிச்சை வெளியில் இழுத் தெடுத்து அவிட்டு ஒவ்வொரு தாளாகப் பிடித்துப் பிடித்து எண்ணினாள்.

"அக்கா உனக்கு இடியப்பக்காசு பதினொரு ரூபா தரவேணும், சீட்டுக்காசு இரண்டு பவுனுக்கு ஒரு ரூபா குறைய வெண்டாய். அப்ப எல்லாமா மூண்டு பவுன். இந்த மாச வட்டிக்காசு பத்து ரூபா எல்லாத்தையும் எடுத்துக்கொண்டு தாவன் - ஏனக்கா நூறு ரூபாவுக்கு மாசம் பத்து ரூபாயென்டால் என்ன கொடுமையனை."

அவள் பணம் எண்ணி முடியவில்லை. அன்னம்மாவை சுடுக் என முகத்தைச் சுடுக்கி நிமிர்ந்து பார்த்தாள்.

"என்னடி அதுக்குக் குறைய எடு பாப்பம்! புண்ணுக்கு வலியோ; மருந்துக்கு வலியோ தேவை எண்டா வாங்கத்தான் வேணும்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம்மா வட்டியை மனதுக்குள் பெருக்கி, அதன் பயங்கரத்தில் சற்று மேல் நோக்கி மாயமாய் நின்றாள்.

"என்னனை பொன்னாச்சியக்கா."

அன்னம்மாவின் முற்றத்தைக் கடந்து வேலிப் பொட்டுக் களால் தன் வீட்டுக்குப் போக வந்த மனோன்மணி முற்றத்தில் நின்று பார்த்தாள். பொன்னாச்சி எண்ணிய பணத்தை கைக்குள் பொத்தி இரண்டு முழங்காலிடையில் செருகிய வண்ணம் நிமிர்ந்து பார்த்தாள்.

"என்னடி நல்லா கொட்டுண்டு போனாய்."

"என்னக்கா செய்வம்?"

அவள் பெருமூச்சுடன் சொன்ன வார்த்தைகளில் வாழ்வின் நிம்மதியையும், மகிழ்ச்சியையும் தேடும் ஆசையும் அவை கிடைக்காத புகை மண்டிய நிரந்தர ஏக்கமும் சில்லிட்டன.

"என்னடி உதுக்கை?"

"கோதம்பை மா எங்களை உயிர் காக்குது."

அவள் வயிற்றோடு சேர்த்த முன்கை அணைப்பில் மாப் பெட்டியை வைத்திருந்தாள்.

"உன்ரை பெட்டையிடை சிலாமனையைக் காணேல்லை."

"ஒண்டை சி டர்மாரோடை இளவாலை மடத்திலை கொண்டு போய் விட்டுட்டன். மற்ற இரண்டு குமரும் கொம் பனிக்குப் போகுதுகள்."

"இனிப்புக் கொம்பனிக்கோ?"

பொன்னாச்சியின் தொனியில் அதிசயமும், இளிவும் கலந்திருந்தன.

"ஓ! மதிப்பைப் பார்த்து என்ன செய்யிறது. காணி பூமி கிடக்கோ நகை நட்டு கிடக்கோ, வீட்டிலை வச்சிருக்க. உங்கை கன புள்ளையன் போகுது எல்லாம் குமரிகள். ஒண்டுக்கும் வழியில்லாததுகள் தான். என்னக்கா செய்யிறது!"

அவள் பெட்டியிலுள்ள மாவைப் பார்த்த நிலையில் மாவைக் கிள்ளிக் கிள்ளி விரல்களால் பிசைத்துக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவளும் என்னக்கா செய்வாள். புருஷன் செத்தநாள் துவங்கி வாயைக் கட்டி வயித்தைக் கட்டி உரலிடிச்சு, உலக்கை தூக்கி வளர்த்திட்டாள். இனி என்ன செய்வாள்!"

பொன்னாச்சி நாடியில் கை வைத்திருந்தாள். மனோன் மணியின் நிலையையிட்டு அவள் யோசித்தாள்

"ஏனடி சம்பளம் கொடுக்கிறாங்கள் தானே!"

"என்னக்கா ஆறு மாசமாப் போகுதுகள். ஒரு பொட்டைக்கு ஒரு நாளைக்கு ஒண்டே கால் ரூபா தான் சம்பளம். சம்பளம் கூடக் கேட்டால் இவ்வளவுதான். வேலை செய்ய விரும்பாட்டிப் போ என்று சொல்லுறான்கள். இதையும் விட்டா என்ன செய்யிறது. அதுகள் உழைக்கிறது அதுகளுடை உடுப்புக்கே காணாது."

பொன்னாச்சி முகம் காய்ந்து உடலில் ஈரத் தன்மையற்று வயது மீறி முன் மயிர் நரைத்த தலையுடன் நிற்குமவளைப் பார்த்தாள். காதிலும் கழுத்திலும் ஒன்றுமில்லை.

"ஏனடி ஒண்டை யெண்டான்ன -கரை சேர்த்தா என்ன?"

அவள் பொன்னாச்சியைப் பார்த்துக் கொண்டு சிரித்தாள்.

"உன்ரை கதை என்னக்கா? வெறும் பொம்புளை எடுக்க ஆர் வரப் போறான். அதுகள் கரை சேரும் எண்டு எனக்கு நம்பிக்கையில்லையக்கா. ஏதோ நான் இருக்கு மட்டும் என் கண் முன்னாலை ஏதும் அவப் பேர் கேட்காமல் இருந்திடட்டும் - நான் செத்த பிறகு என்ன செய்யப்....."

அவளால் வார்த்தைகளை முடிக்க முடியவில்லை. கண்கள் கலங்க அழுகை விம்மி ஏறியது. பற்களால் கீழுதட்டைக் கடித்து, சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு நிற்காமல் சென்று விட்டாள்.

அன்னம்மாவைப் பார்த்தாள் பொன்னாச்சி.

"பெரிய பாவம் என்னடி?"

"அதை ஏனக்க பறைவான்."

அன்னம்மா கூறியது நல்லய்யாவின் காதில் விழுந்தாலும் அவன் நிலத்தை நோக்கியிருந்தான். அவன் இடது கை இடது கால் பாதத்தை வருடிக் கொண்டிருந்தது. அவன் கேட்டவை அவனுக்கு பழையவை களாக இருந்தும் மனதைச் சுண்டின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தா! இப்ப இதிலை ஆறு பவுன் இருக்கு. எண்ணிப் பார்!"

அவள் இரு கைகளையும் சேர்த்து மரியாதையுடன் பணத்தை வாங்கினாள். பொன்னாச்சி மிகுதியைச் சேலைத் தலைப்பில் முடிந்து மீண்டும் நாரிக்குள் செருகினாள்.

"என்ன தம்பி வாங்கட்டாடா?"

அவன் திரும்பி இருவரையும் பார்த்துவிட்டு தன் வாக்குக் கண்ணைக் கூசி ஒரு சிரிப்புச் சிரித்தான். பொன்னாச்சிக்கும் அன்னம்மாவுக்கும் அது வெறும் சிரிப்புத்தான்.

"என்ன செய்வம்! வாங்க வேண்டிய நிர்ப்பந்தம்."

அவன் கண்கள் நேரே திரும்பின.

அவன் சிரிப்பு கணத்தில் கருகி, முகம் சிந்தனையின் கீற்றுக் களைப் படர்ந்த கையால் அனிச்சையாய் பாதத்தில் தாளம் போட்ட வண்ணம் லெனின் படத்தை நோக்கினான்.

அவன் கண் பார்வையில் ஏதோ புதிய மாற்றத்தை எதிர் நோக்கும் துடிப்பும், அதை ஏற்படுத்தத் தான் கொள்ளும் உறுதியின் கனவும் சுடரிட்டாலும் மனதில் வாழ்க்கையினதும் சமுதாயத் தினதும் பிரச்சினைகளும் அவற்றின் முடிவும் மாற்றமும் மாறி மாறி மின்னிக் கொண்டன.

"அப்ப நான் வாறனடி, இரண்டு மாதந் தரலை, கொண்டு வந்து தந்திடு. பேந்து அவன் என்னை இருக்க விடான்."

"ஓம்."

பொன்னாச்சி எழுந்து முற்றத்தில் சென்று நின்று குண்டிப் பக்க மண்ணைக் கையால் தட்டிக் கொட்டிய பின் சேலையைத் தலையில் அள்ளிப் போட்டாள்.

அவள் தலை அந்த வளவின் பரப்பைச் சுற்றி ஆடியது.

"அங்கேர் நல்ல கங்குமட்டையள் வைச்சிருக்கிறாய். எனக்கு இரண்டு தாவன்."

"எடுத்துக் கொண்டு போணை."

அவள் சொன்னது தான் தாமதம் அவை கிடைக்கும் இடத்துக்குச் சென்று நான்கு மட்டைகளை எடுத்துக் கக்கத்தில் வைத்துக் கொண்டு அன்னம்மாவைப் பார்த்தாள். காவோலைகள் நிலத்தோடு இழுபட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னைப் பெற்ற ராசா நீ மின்னாமல் போனியே. அப்ப என்ரை மகனே, நான் கண்மூடி விளிக்கையிலே... நீ காணாமல் போனதென்ன... ஓ!... ஓ... உனக்குச் சவக்கிடங்கோ தலையணையோ... ஆ... ஆம்..."

"எங்கையடி ஒப்புச் சொல்லிக் கேக்குது?"

"பறை மேளமும் அடிச்சுக் கேக்குது?"

"அதெனை வண்ணா வீட்டிலை ஒரு பொடியன் காதலிலே தோல்வி யெண்டு கிணத்துக்கை விழுந்து செத்துப் போச்சு."

"கண்டறியாத காதல். உங்கை பொலிடோல் குடிச்சிட்டு பொத்துப் பொத்தெண்டு சாகுதுகள். மோட்டுக் கோதாரிகள். நான் வாறனடி! பன்னிரண்டு மணியாப் போச்சுதடி. இனிப்போய் உலை வைக்க வேணும்."

"ஓமக்கா! நீ போணை!"

"சுடிக்... டக்." "கடிக் கட்"

நடந்து கொண்டிருக்கும் பொன்னாச்சியின் காலில் நெட்டிகள் முறிந்து கொண்டிருந்தன.

*தாமரை – 1967.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது சகோதரிகள்

என் அக்காவின் கடிதம் நேற்று வந்தது. நேற்றிலிருந்து என் மன அமைதி குலைந்திருந்தது. ஒரு நிலைக்கு வர மறுத்தது. காரியாலயத்திலும் வேலை செய்ய முடியவில்லை. வேலை முடிந்து அறைக்கு வந்து கட்டிலில் படுத்துக் கிடந்தேன்.

மனக்கலக்கமும் சோர்வுமாக இருந்தது. படுத்திருக்க முடியவில்லை. அதனால் ஐந்து மணிக்குப் புறப்பட்டுப் போய் வேல்சில் "நிதானய" எனும் சிங்களப் படம் பார்த்து விட்டு கண்டி லேக்கைச் சுற்றிச் செல்லும் வீதியில் நடந்து கொண்டிருந்தேன். இரவு பத்து மணியிருக்கும் லேக் ரவுண்டில் அதிக சன நடமாட்டம் இல்லை.

இடைக்கிடையே பெரிய மரங்களின் நிழலும் மின்சார, வெளிச்சமுமாக உள்ள அந்தப் பாதையில் நடக்க எனக்கு விருப்பம்.

சுற்றியுள்ள மின்சார ஒளிகளைத் தன்னுள்ளே வாங்கி பிரகாசிக்கும் கண்டிக்குளம் மிக ரம்மியமாக, மௌனமாய் அலை பாய்கிறது. அதன் அழகை இரசிக்க கண்கள் முனைந்தாலும் மனம் என் அக்காவையிட்டே கவலை கொண்டிருக்கிறது.

அன்பான தம்பி!

என் நிலைமை உனக்குத் தெரிவும். உன் அத்தான் இறந்து ஒரு வருஷமாச்சு, நானும் என்ரை 3 பெண் பிள்ளைகளும் எப்படிச் சீவிக்கிறது? எனக்கு என்ன வழியிருக்கு? இருக்க ஒரு காணித் துண்டில்லை. காணிக்காரன் எழும்பச் சொல்லுறான். இனி நாங்கள் தெருவில தான் இருக்க வேணும். பிள்ளைகளுக்கு ஆனவாகில சாப்பாடு இல்லை. பட்டினி கிடந்து சாகுதுகள். புஸ்பத்தையும் பள்ளிக்குப் போகாமல் மறிச்சுப் போட்டன். அவளுக்கும் படிக்க ஆசைதான். நான் எங்கை போவன்? இரண்டு குமரை வைத்துக் கொண்டு எனக்கு இராப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகலாய் நித்திரையில்லை. அதுகள் தின்ன உடுக்கிற வயது. அதுகளுக்கு மாறிக் கட்டத் துணியில்லாத நிலைக்கு வந்து விட்டது.

இவ்வளவு நாளும் அங்கிங்கு கடன்பட்டு ஒரு மாதிரிச் சீவிச்சுப் போட்டம். இனி ஏலாது. ஒருதற்றை உதவியும் இல்லாட்டி நானும் பிள்ளைகளும் எங்கினையும் ஆத்திலை குளத்திலை விழுந்துதான் சாகவேணும். இது நிச்சயமாக நடக்கும். பிள்ளை என்ன செய்ய முடியும்? என்ரை பிள்ளைகளை வேசையாடவா விடச் சொல்லுகிறாய். அது நடக்காது.

என் நெஞ்சுக்குள்ளே என் அக்கா கண் கலங்கி நின்று கூறுவது போல் இருக்கிறது. அக்கடிதமும் என் சேட்டுப் பையில்தான் கிடக்கிறது. கடிதத்தைக் கண்டதும் ஒரு நூறு ரூபாய் கடன்பட்டு அனுப்பி வைத்தேன். மனதுக்கு ஒரு திருப்தி. ஆனால் அவர்களின் பிரச்சினை தீர்ந்து விடுமா? அதை என்னால் தீர்த்து விட முடியுமா? நான் எடுக்கிற சம்பளம் எனக்கு தனியாச் சீவிக்கவே போத வில்லை. அதில் அம்மாவுக்கும் அனுப்புகிறேன். என் அக்காவின் நிலைமை என் அக்கா எழுதித்தான் எனக்குத் தெரிய வேண்டும் என்பதில்லை. உதவி செய்ய என்னிடம் பணம் இல்லை. நான் என்ன செய்வேன்? அவர்கள் பிரச்சினையைத் தீர்க்க ஒரு வழியும் இல்லையா?

குமுதாவும், ராஜியும் ஜி.சி.ஈ. பாஸ் பண்ணியிருக்கிறார்கள். அவர்களில் யாருக்காவது வேலை கிடைத்தாலும் அன்றாட சீவியத்தைச் சமாளிக்கலாம். யார் கொடுப்பது? அரசாங்கம் கொடுக்குமா? என்ற யோசனையோடு நான் நடந்து லேக் ரவுண்ட் கடந்து வீதிக்கு வந்தேன். அதிலிருந்து என் வீட்டுக்குச் செல்லும் பாதையில் நேராக நடக்க முனையும் போது தூரத்தில் ஒரு சின்னப் பெண் பிள்ளை அந்த இருளினூடே மெதுவாக நடந்து கொண்டு வந்தாள். அவள் பின்னும் முன்னும் பார்த்து ஏமலாந்திக் கொண் டிருந்தாள். எட்டு வயதுக்கு மேல் இருக்காது. அந்த இரவு நேரத்தில் இருட்டில் யாருமில்லாத நேரத்தில் தனியாக வருகிறாள். எவ்வளவு தைரியம் வேண்டும். எனக்கு ஆச்சரியம். கிட்ட வந்தவளிடம் "நங்கி எங்கே போகிறாய்? " என்று கேட்டேன். அவள் மெலிந்து காய்ந்து போய் இருந்தாள். ம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் பதில் கூறத் தடுமாறினாள்.

"உனக்குப் பயமில்லையா?"

உடனே இல்லையென்று தலையசைத்தாள்.

இது எனக்கு வழக்கமென்பது போல் இருந்தது.

"இப்ப எங்கே போகிறாய்?"

அவள் பதில் கூற முனைந்து வில்லங்கப்பட்டுத் திருப்பிச் சந்தியை எட்டிப் பார்த்துவிட்டு என்னைப் பார்த்துச் சிரித்தாள் சந்தோஷமில்லாத சிரிப்பு.

"மாத்தயா ஐஞ்சு ரூபா கொடுங்க. வீட்டிலே எல்லாரும் பட்டினி. அம்மா, தங்கச்சிமார், தம்பிமார் எல்லோரும் பட்டினி. இன்னைக்கு பூரா ஒன்னுமேயில்லை." என் மனம் கசிந்தது. என் சேட்டுப் பையைத் தடவினேன்.

"இந்தா ஐம்பது சதம் இருக்கு கொண்டு போ"

அவள் வாங்க மறுத்தாள். நான் அவளை அதிசயமாகப் பார்த்தேன். அவள் நன்றாக தமிழ் பேசுகிறாள். ஆனால் அவள் சிங்களப் பிள்ளையென்பது பேச்சில் இருந்து தெரிகிறது.

"இது காணாது மாத்தயா. நீங்க காசு சும்மா குடுக்க வேணாம். அந்த சந்தியில் ஒரு பொம்பிளை நிக்குது. அதை நீங்க கூட்டிக் கிட்டுப் போங்க. ஐஞ்சு ரூபா கொடுங்க."

இவள் என்ன சொல்கிறாள் என்று புரியவில்லை.

"எங்கை" என்றேன் வாய் தடுமாறி.

எனக்குப் பயம் வேறு. "அந்தா அந்தப் பக்கம் இருட்டு ஒருத்தரும் இல்லை. ஆரும் வரமாட்டாங்க மாத்தயா."

"சீ அதற்கு நான் ஆளில்லை. அது யாருது?" "அக்கா! நீங்க பயப்படாதீங்க மாத்தயா" நான் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். நெஞ்சம் திடுக்குற்றது. "ஐயோ நீ உன் அக்காவையே விலை பேசுகின்றாயா? உன்னை அந்நிலைக்குக் கொண்டு வந்து விட்ட சக்திகள் எவை? நீயும் இந்தக் தொழிலுக் காகவா பயிற்சி பெறுகிறாய்?"

"உனக்கு தாத்தா இல்லையா?" வாய் திறந்து கேட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை"

"வீட்டில் உழைப்பதற்கு யாரும் இல்லையா?"

"இல்லை. அக்காதான்."

அவள் முகம் கருகிச் சோகம் கொள்ளக் கைகளைப் பிசைந்தவாறு நிற்கிறாள்.

"உன் பெயர் என்ன?"

"சுமித்திரா"

"நீ ஸ்கூலுக்குப் போறதில்லையா?"

"இல்லை"

"என்ன மாத்தியா யோசிக்கிறீங்க?"

"அக்கா நல்ல அழகானவ"

அவள் என் யோசனையையிட்டுத் தவறாகக் கருதிக் கொண்டாள். சத்தியமா என்னிடம் காசு இல்லை. நான் வேறு எப்படிச் சொல்ல முடியும். நான் மனப்பாரத்தோடு நடந்தேன். அவள் பின்னால் வந்தாள். சந்திக்கு வந்தேன். அவளுடைய அக்கா கைகட்டிக் கொண்டு மதிற் சுவரோடு சாய்ந்து கொண்டு நின்றாள். என்னைக் கண்டதும் ஆயத்தமாக நின்று சிரித்து வரவேற்றாள். உண்மையில் வடிவானவள்தான். பதினெட்டு வயதிருக்கும். கவுண் போட்டிருந்தாள். முகத்தில் ஏக்கமும் விரக்தியும் நிரந்தரமாகி விட்டன. அந்தத் தொழிலில் அவள் புதிதில்லை என்பது அவளு டைய கலங்கித் தளர்ந்து போன உடம்பிலிருந்து தெரிகிறது.

நான் எதுவும் பேசாமல் அவளைக் கடந்து போனேன். கொஞ்சத் தூரம் சென்றிருப்பேன்.

"மாத்தயா"

மிக ஆதரவான தொனி.

அவளுடைய தங்கைதான் என்னை அழைக்கின்றாள். அந்தக் குழந்தை இன்று ஒன்றும் சாப்பிடவில்லைப் போலும். நிச்சயமாக அவள் என்னை வெறுப்பாள். நான் திரும்பிப் பார்க்காமல் நடந்து கொண்டிருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குத் தெரியும். வாழ வழியில்லாத பிரச்சினை. என் அக்கா வுக்கு மட்டும் உள்ள பிரச்சினையில்லை.

சமுதாய அமைப்புப் பிழையாக இருப்பதால்தான் பிரச்சினைகள் ஒ வ்வொருவருக்கும் தோன்றிக் கொண்டிருக்கின்றன. மகிழ்ச்சியைச் சாகடிச்சு நிம்மதியைக் குலைக்கின்றன.

ஒழுக்கம், கற்பு என்றெல்லாம் கட்டுப்பாடுகள் விதிக்கும் இச்சமுதாய அமைப்பே அதற்கு மாறாக வாழும் சூழ்நிலை களையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அறைக்குப் போய் கட்டிலில் சாய்ந்தேன்.

என் அக்காவின் குடும்பக் க டங்கள் என் மனதை உறுத்திக் கொண்டிருந்தன. நான் அனுப்பிய காசு எந்த மூலைக்கு? அதுவும் இன்னும் போய்ச் சேர்ந்திருக்காது. என் சிந்தனையோடு கிடந்த நான் கொஞ்ச நேரத்தில் எழும்பி வீதிக்கு வந்தேன். சுமித்திராவின் அக்கா அந்த மதிற் சுவரோடு சாய்ந்து கொண்டு தனியாகக் குனிந்தவாறு நிற்கின்றாள். அவளைப் ப ார்க்க என் அக்காவின் மூத்த மகள் கண்ணுக்குள்ளே வருகிறாள். என் அக்காவின் பிள்ளைகளும் பட்டினியாகத்தான் கிடப்பார்கள். வறுமை அவர்களை என்ன செய்யத் தூண்டுகிறதோ?...

மீண்டும் சந்தியில் நிற்கும் அவளைப் பார்த்தேன் சுமித் திராவைக் காணவில்லை. அவள் அக்காவுக்கு ஆள் தேடப் போய் விட்டாள். அக்காவும் தங்கையும் பெண்களுக்கே கேவலமான தொழில் செய்யச் சேர்ந்து புறப்பட்டு விட்டார்கள்.

சுமித்திராவின் அக்காதான் போகட்டும். சுமித்திரா அந்தச் சிறிய மொட்டு?...

இவர்களை அனுப்பி வைத்துவிட்டு வீட்டிலே இவர்களின் உழைப்பை எ திர்பார்த்திருக்கும் தாய்க்கு என்ன உள்ளம்? அவள் ஒரு தாயா! அவள் தாய்தான்!

என் வயிறு நிரம்பி இருக்கிறபடியால் அடிக்கடி ஒரு உண்மையை மற ந்து விடுகிறேன்.

ஓ! அவர்களுக்கெல்லாம் பசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கெவர் வாழவோ

காம்பராவின் உள்ளோரத்தில் தான் அணிந்திருக்கும் மிலிற்றிக் கோட்டுக்கு மேலால் மார்பில் கைகளை இறுகக் கட்டிய வாறு இருந்த சரவணம், கால் நீட்டி, கைகளைப் பின்னால் ஊன்றி இருந்து வேதனைப்பட்டு முனகிக் கொள்ளும் தன் மனைவி தங்கம்மாளை அனுதாபத்தோடு நோக்கியவாறு இருந்தான்.

இரு பெண் பிள்ளைகளும் முன்னால் குந்திக் கொண்டிருந்தன. கைக்குழந்தை தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது. மகன் மேகநாதன் எங்கோ போய் விட்டான்.

தங்கம்மாவுக்கு இது பெறுமாதம். பெறுமாதக் கர்ப்பிணியாக இருந்தும் அவள் நேற்றுவரை மலையில் ஏறிக் கொழுந்து எடுத்துக் கொண்டுதான் இருந்தாள். இன்று காலை மலைக்குப் போக எழுந்ததும் அடிவயிறு நோகத் தொடங்கியது. பத்துமணிக்கு மேல் நோவும் உளைவும் அதிகரித்துக் கொண்டது. அவளைத் தோட்டாஸ் பத்திரிக்குக் கொண்டு போக ஸ்டோருக்குச் சென்று டீ மேக்கரிடம் லொறி கேட்டு வந்து அதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் சரவணம். இரண்டு மணியாகியும் லொறி வரவில்லை.

தோட்டாஸ்பத்திரி அரை மைலுக்கு அப்பால் அடுத்த டிவிசனில் இருக்கிறது. கார் பிடிப்பதற்கு அவன் கையில் பணமில்லை. இரவு கடைக்காரனைக் கெஞ்சித்தான் மாவு கடன் வாங்கி வந்தான். இன்றுதான் தோட்டத்தில் சம்பளம். பலவாறு யோசித்துக் கொண்டிருந்த அவன் வேறு வழியில்லாமல் தங்கம்மாளை நடத்திக் கூட்டிக்கொண்டுபோய் ஆஸ்பத்திரியில் விட்டான்.

ஆஸ்பத்திரியில் இருந்து வரும்போது சரவணத்தின் மனம் மிகவும் சோர்வடைந்திருந்தது. இரு கைகளையும் மார்பின் மேல் இறுகக் கட்டிக் கொண்டு மெதுவாக நடந்து கொண்டிருந்தான். அப்பொழுது சகல டிவிசன்களிலும் உள்ள தொழிலாளர்கள் சம்பளத்திற்காக பாக்டரியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம்மாளுக்கு இப்படித் திடீரென்று வயிறு நோகுமென்று அவன் நினைத்திருக்கவில்லை. தங்கம்மாளின் உடலில் நல்லிரத்தம் இல்லையென்பது அவனுக்குத் தெரிந்த உண்மையென்றாலும் தோட்டத்து "டாக்டர்" நல்லிரத்தத்துக்குப் "பிரைவேட்டில் ஊசி போட வேணும் காசு கொண்டு வா" என்று கூறிய பின்பே அதுவும் மனசில் ஆழமாக உறுத்தியது. இந்த நினைவையெல்லாம் அவனுடைய மனம் ஒரு மூலையில் ஒதுக்கி விட்டு, தங்கம்மாள் அந்த நோவிலும் மறந்து போகாமல் கூறிய வார்த்தைகளைத் தன்னோடு அணைத்துக் கொண்டிருந்தது.

"எது எப்படிப் போனாலுமுங்க, மறந்து போவாமெ இந்த மாதம் சம்பளத்தில மவனுக்குப் பொயித்தகத்துக்கு பணங் கொடுத்திடுங்க அவன் நல்லா படிப்பானுங்க; அவன் படிச்சு தொரை மாதிரி வரணுங்க."

தங்கம்மாள் என்ன சொல்வது? அவனுடைய உள்ளத்திலும் அதே எண்ணம்தான். அதிவேகத்துடன் துடித்துக் கொண்டிருந்தது. சரவணம் மகன் வயிற்றில் இருக்கும்போதே அந்த முடிவு எடுத்திருந்தான். அவனுடைய முதல் இரு பெண் பிள்ளைகளான இராசலட்சுமியும், சானகியும் வீட்டில் இருக்கிறார்கள். அவர்களைத் தோட்டப் பாடசாலைக்குத்தானும் ஒழுங்காக அனுப்ப முடியவில்லை. நம்மைப் போல் எழுத்தறிவில்லாதவர்களாக இருப்பதில் சிறிது துக்கந்தான்.

"சரவணம் நில்லு; ஒரு விஷயம்!"

தன் கால் அடிகளையே பார்த்தவாறு வந்த சரவணம் நிமிர்ந்தான். கறுத்த ரோட்டில் தோட்ட வாத்தியார் வந்து கொண்டிருந்தார்.

"சலாமுங்க சேர்."

"சலாம், உன்ரை மகன் மேகநாதனை கவர்மெண்டு ஸ்கூலிலே சேர்த்திட்டியா?"

"ஆமாங்க."

"நல்லது, அவன் நல்ல கெட்டிக்காரன்; நல்ல மூளைசாலி, கஸ்டப்பட்டென்றாலும் படிப்பிச்சுப் போடு என்ன?"

"சரியுங்க."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கே போறாய்?"

"சம்பளத்துக்குங்க."

"சரி, நான் வாறன். தோட்டத்தில எல்லோரும் பிள்ளையைப் படிக்கப் போடனும் எண்டு சொல்லுவாங்க; கடைசியில புல்லு வெட்டத்தான் அனுப்புறாங்க; நீ இவனை நரசமாக்கிடாதே!"

"இல்லைங்க சேர்."

சம்பளத்திற்கு என்று கூறியபோது அவன் மனதில் ஒரு வித பீதி எழுந்தது. அவனும், தங்கம்மாளும் ஒரு மாதமாகக் கொட்டும் குளிரிலும் மழையிலும் கஸ்டப்பட்டு உழைத்த உழைப்புக்கான ஊதியத்தைப் பெறுவதற்கு அவன் மனம் தயங்கிக் கொண்டது. அந்தத் தயக்கம் ஒவ்வொரு மாதமும் ஏற்படுவதென்றாலும் இம் மாதம் அதன் அழுத்தம் அதிகம். இந்த மாதம் மலையில் கொழுந்து வற்றிய காலமென்று கிழமையில் மூன்று, நான்கு நாட்களே வேலை கொடுத்தார்கள். தங்கம்மாள் பதினாலு நாளும், தான் பதினைந்து நாளும் செய்த வேலைக்கு வரும் கூலியில் அரிசி, பருப்பு, மாவுக்குப் பிடித்துக் கொள்ளும் பணம் போக கையில் கிடைக்கப் போவதை இரவு முழுவதும் நன்றாகக் கணக்குப் பார்த்து வைத்திருந்தான். லயத்தில் உள்ள கடன்காரர்களுக்கும் அரிசிக் கடைக்காரர்களுக்கும் பலசரக்குக் கடைக்காரர்களுக்கும் சம்பள நாளைக் கூறிச் சமாளித்தாயிற்று. மாதம் முழுவதும் வாங்கிய கடன் தொகையையும் கிடைக்கப் போகும் கூலியையும் வாழ்க்கைச் சுமைகளையும் பாரப்படுத்திக் கொண்ட மனம் அடிக்கடி அச்சத்துடன் விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தது. அந்த மனமே தோட்ட வாத்தியார் கூறியதையும் விருப்பத்தோடு மீட்டுச் சந்தோஷப்பட்டுக் கொண்டது. மாலை 6 மணி ஆனதும் குப்பி விளக்கில் இருந்து படிக்கத் தொடங்கிவிடும் தன் மகனை தன் கண்களுக்குள் வருவித்துக் கொண்டான்.

சம்பளம் வாங்கிக்கொண்டு வரும் போது சாமான்கள் வாங்கி வருவதற்காக குட்டிச் சாக்குகளைக் கையில் கொண்டு ஆண்களும் பெண்களும் அவனைக் கடந்து போய்க் கொண்டிருந்தார்கள். பெண்கள் வெள்ளைத் துண்டைத் தலையில் கொங்காணியாகப் போட்டிருந்தார்கள்.

"இந்த விடியாமூஞ்சிப் பொழைப்பில மனுசன் எப்படித்தான் வாழ்ந்து தொலைக்கிறது!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கிழவி கத்திப் பேசிக்கொண்டு போனதை அவன் காதில் வாங்கவில்லை! அவனும் அவன் யோசனையும். அவன் பௌத்த பாடசாலைப் பக்கமாக வரும்போது மேகநாதன் எங்கிருந்தோ ஓடிவந்தான். "ஐயா, இந்தப் பயணமும் ஏமாத்திப் போடாதீங்க? எனக்கு பொத்தகம் வாங்கப் பணம் கொடுத்திடனும் நான் ஸ்கூலுக்குப் போகனும் என்ன சொல்றீங்க? இந்தக் கடிதம் நான் பொஸ்டா வருவேன்!"

அவன் தகப்பனின் மிலிற்றறிக் கம்பளிச் சட்டையின் ஒரு மூலையைப் பிடித்தவாறு கேட்டான். சில விநாடிகள் மௌனமாக நடந்த அவன், "சரி போயி, அக்காவோட லயத்தில் இருந்துக்கோ நான் வாறன்" என்று சொன்னான். மேகநாதன் மகிழ்ச்சியடைந்து துள்ளியடித்துக் கொண்டு ஓடினான்.

சரவணன் கடைத் தெருவையும் கடந்து படிகளால் ஏறி பாக்டரிக்கு முன்னால் வந்து விட்டான். அங்கு சின்னத்துரை மேசையிலிருந்து, கிளார்க் "செக்" றோலில் பெயர்களை அழைக்க அழைக்க கூலியை எண்ணிக் கொடுத்துக் கொண்டிருந்தான். தொழிலாளர்கள் நிரையாக மௌனமாக நின்றார்கள். துரைக்கு முன்னால் நிற்கும் தொழிலாளர்களுடன் அவனும் சேர்ந்து நின்றான். தன் பெயர் அழைப்பதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

மழைக் குணமாக இருந்தது. கூதல் காற்று வேகமாக வீசிக் கொண்டிருந்தது. தேயிலமலை முதுகுகளில் கருக்கொண்ட மேகங்கள் கொழுத்த எருமைகளைப் போலப் புரண்டு கொண்டிருந்தன. அந்தக் குளிர் காற்றுக்குத் தன் கைகளைக் குறுக்காகப் போட்டு, தோள்களை இறுகப் பற்றிக் கொண்ட சரவணம், மற்றத் தொழிலாளர்களை ஒவ்வொருவராக நோக்கினான். தன்னைப் போலவே அவர்கள் முகங்களும் பிரச்சினைகளால் முனகும் உள்ளங்களின் பிரதிப் பலிப்பாக மந்தாரமிட்டிருப்பதை அவதானித் தான். தான் மட்டும் அந் நிலையில் இல்லையென்று, அவனால் திருப்திப் பட்டுக் கொள்ள முடியவில்லை.

"சரவணம்!"

அவன் பெயர் அழைக்கப்பட்டதும் மிக அவசரமாக, ஆவலோடு சென்று துரையிடம் கூலிப் பணத்தை வாங்கிக் கொண்டு வந்து திரும்பவும் எண்ணிப் பார்த்தான். அவன் கணக்குப்படி ஐந்து ரூபா குறையக்கண்டு, கோபாவேசத்துடன் திரும்பியபோதுதான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்தில் விறகு வெட்டியதற்குத் தெண்டம் போட்டது ஞாபகம் வர அதிலேயே நின்று கையில் உள்ள பன்னிரண்டு ரூபாவை ஏக்கமும் வேதனையும் மனஎரியும் கலந்த கண்களுடன் பார்த்துக் கொண்டான்.

"இங்கே பாரய்யா, ஒரு மாசமா ஒழைச்சு கையில கெடச்ச சம்பளத்தை இதென்னயா இது?"

பக்கத்தில் நின்ற தொழிலாளியின் தோளைப் பிடித்துத் திருப்பிக் கூறினான்.

"இங்கே பாரண்ணே, எங்கூலியைப் பாரண்ணே ஐம்பது சதோம்!" அவன் தன் கையை விரித்து சரவணத்துக்குக் காட்டினான்.

"டேய் பார்த்தியாடா இது தாண்டா நம்ம ஒழைப்பு, கூலி! முதலாளி வர்க்கம் எம்மை சாகவும் விடாதடா, வாழவும் விடாதடா, நம்ம சங்கத்துக்காரங்க கூறுவது தாண்டா சரி முதலாளி வர்க்கத்தைப் பூண்டோடு அழிக்கனும். ஆமடா அழிக்கனும்டா! வெள்ளக்காரன் இருந்து நம்மையும் இந்த நாட்டு மண்ணையும் கொள்ளையடிச் சுட்டு போறாண்டா!" அவனுடைய கண்கள் சிவந்து கொண்டன.

"ஆமா அவங்களை நாம ஒழிச்சுக் கட்டுறதுக்கு முன்னால, அவங்க நம்மளை பட்டினிபோட்டு, கொண்ணுடுவாங்க போலிருக்கு" மற்றவன் சொல்லிக் கொண்டு நடந்தான்.

"ம்.. இதை என்ன செய்வது?" என்று உள்மனது அங்கலாய்த்துக் கொண்டிருக்க நிமிர்ந்து அங்கும் இங்கும் பார்த்தான்.

"இந்தா சரவணேம்; நாணயமா இந்தக் கடிதம் பணத்தைக் கொடுத்திடப்பா!"

மூண்டன் கணக்கப்பிள்ளை கையை நீட்டிக்கொண்டு முன்னால் வந்து நின்றான். அவனிடம் தீபாவளிக்கு, மூன்று மாதத்திற்கு முன் கடன்பட்டிருந்தான்.

"ஐயா, இதுதான் சம்பளோம்! வட்டிக்காசை எடுத்திடுங்க! அடுத்த மாசம் தந்திடுறேன் சாமி!"

நாலு ரூபாயைக் கணக்கப்பிள்ளையின் கையில் வைத்ததும் அவன் மனம் குளிர்ந்து அப்பால் சென்று விட்டான்.

"பாக்டரி" முன்னால் வழி நெடுக அங்காடி வியாபாரிகள் புடவை, புகையிலை, வெற்றிலை, உணவுப்பண்டங்கள், பழவகை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருட்டு, அரிசி முதலியனவற்றை வைத்துக் கொண்டு கலகலப்பாக விற்றுக்கொண்டிருந்தார்கள். சரவணம் ஒன்றையும் கவனியாதவனாக 'விர்' என்று கடைத்தெருவை நோக்கி நடந்தான்.

"ஏய், சரவணோம்! இந்தா நில்லு, கடனைக் கொடுத்திட்டுப் போயிரு!" வடை முறுக்கு விற்கும் ரெங்கையா கத்தினான். அவன் கத்துவான் என்று சரவணத்துக்குத் தெரியும். கேட்காதவனைப் போல நடந்து வந்து விட்டான்.

"சரவணம்! இங்க வந்திட்டுப் போ!"

தலையைத் திரும்பிப் பார்த்தான். 'ஐயா! தங்கசாமி வேச மோன்.' மனம் அசந்து கொண்டது.

"எங்கிட்டுப் போகப் பார்க்கிறே! இங்கே வா!"

தங்கசாமிப் பிள்ளை கடைக்குள் இருந்து அவனை அழைத்தான. அவன் கடைக்குள் சென்றான்.

"கையில எவ்வளவு இருக்கு?"

சரவணன் பொத்தியிருந்த கையை அவன் பலவந்தமாகப் பிடித்து விரித்தான். தங்கசாமி அதைப் பறித்து எடுத்து எண்ணிப் பார்த்து விட்டு, வேறு எங்கும் ஒளித்து வைத்திருக்கிறானா என்று அவனைப் பரிசோதித்தான். பிறகு அப்பணத்தைப் பெட்டியில் போட்டான்.

"சரி போ! பாக்கி எட்டு ரூபா இருக்கு. மறந்து போகாம அடுத்த சம்பளத்திற்குக் கொடுத்திடும். போ! எவ்வளவு நாளா ஏமாத்திறே."

"ஐயோ! என் மகனுக்குப் பொயித்தகம் வாங்கிட."

"இந்தா...வேறு பேச்சே வாணாம், போ, போ, போ!"

சரவணம் வெறும் கையைப் பினைந்து கொண்டு அவன் முகத்தை ஏறிட்டு நோக்கித் திரும்பவும் ஏதோ கூறி அந்தப் பணத்தைக் கேட்க நினைத்தான். கொஞ்ச நேரம் நின்றுவிட்டு கேட்டாலும் கிடைக்காதென்ற முடிவோடு தெருவுக்கு வந்தவன் திரும்பி ஓடி தங்கசாமி கடைக்குள் ஒளிந்து நின்றான்.

புஞ்சிக்கீரா சந்தியில் நின்றான், அவன் அங்கு நின்ற தொழிலாளர்களிடம் கள்ளுக் குடித்த பணம் அறவிட்டுக் கொண்டிருந்தான். அவனுக்குத் தவணை சொல்ல முடியாது. அடிக்கப் போய் விடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கடைத்தெருவால் தொடர்ந்து செல்ல அவனுக்குத் தயக்கம் ஏற்பட்டது. சாவன்னாவும், சாகுல் ஹமீதும், புகையிலைக் காரனும் கடனுக்குப் பிடித்துக் கொள்வார்கள். அவர்கள் அவன் சம்பளத்துக்கு வரும்போது பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அங்கும் இங்கும் பார்த்துவிட்டு யாருக்கும் தெரியாமல், சிங்கள விவசாயிகளின் வயல்களின் ஊடாக குறுக்குப்பாதை பிடித்து இரகசியமாக நடந்து கடைத்தெருவைக் கடந்து வந்து லயத்திற்குக் கிட்டவுள்ள ரோட்டில் ஏறி நடந்தான், மனம் புழுங்கிக் கொண்டிருந்தது.

மோட்டார் சைக்கிள் சத்தம் தூரத்தில் கேட்டது. அவன் நிமிர்ந்து பார்ப்பதற்கிடையில் மூலையால் திரும்பிவிட்டது. அதில் வட்டிப் பணம் அறவிட பாய் வந்து கொண்டிருந்தான். ஓடிப்பாய்ந்து தோலைப் பற்றைக்குள், தலைமறைவாகியிருந்தான். நல்ல காலம் 'பாய்' காணவில்லை. அவன் அந்த பாய்க்கு இப்படி ஆறு மாதம் டிமிக்கி கொடுத்து விட்டான். பாய் சென்றதும் எழுந்து வயத்துக்கு வந்தான். காம்பரா வாசலில் இரு பெண்பிள்ளைகளும் அவனை எதிர்ப்பார்த்துக் கொண்டேயிருந்தார்கள். அவன் கையில் றொட்டிப் பார்சல் இல்லாததைக் கண்டதும் இருந்த அவர்களுக்கு உற்சாகமெல்லாம் கெட்டுவிட்டது. உள்ளே குப்பி விளக்கில் பழைய புத்தகத்தை விரித்துப் பார்த்துக் கொண்டிருந்த மேகநாதன் வெளியில் ஓடி வந்தான். சரவணம் அவனைக் கவனியாதவன் போல உள்ளே சென்று சுவர் ஓரத்தில் உட்கார்ந்திருந்தான். மேகநாதன் போய் அவனுக்கு முன்னால் நின்றான். நீண்ட நேரமாகியும் அவன் புத்தகத்திற்குப் பணம் கொடுத்தபாடில்லை, முன்னால் அமர்ந்து கொண்டான்.

அவன் முன்னால் வந்து நாய்க்குட்டியைப் போல் முகத்தை ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருப்பதன் காரணத்தைப் புரிந்து கொண்ட சரவணம், அவனைக் கவனியாதவன் போல் வெளியே வெளியே பார்த்துக் கொண்டான்.

"நீ படிச்சது காணும்!"

உள்ளத்தைக் கிழித்துக் கொண்டு அவ் வார்த்தைகள் வந்தன.

தோட்ட வாத்தியார் கூறியவைகள் அடிமனத்திலிருந்து சொந்த உணர்வுகளுடன் ஊறி நெஞ்சை எரித்துக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த எண்ணத்தைத் தள்ளிவிட முனையும்போது, இரவு சாப்பாட்டிற்கு என்ன செய்வது? தங்கம்மாளுக்கு ஊசிபோடப் பணம் வேணும் என்னும் உடனடித் தொல்லைகள் உள்ளத்தின் மையத்தில் இடம் பிடித்துக் கொண்டன. வாட்டத்தில் போட்ட தேயிலைக் கொழுந்தைப் போல் முகம் வதங்கியிருந்தது.

"நா நல்லா படிப்பனய்யா! படிச்சு தொரை மாதிரி இங்கிலீசு பேசுவனய்யா! நீங்கதானே கவர்மெண்டு ஸ்கூலிலே சேர்த்து விட்டீங்க. நீங்களும் அம்மாவும் ஒழைக்க எனக்கு பொத்தகத்துக்குப் பணங்கொடுக்க முடியாதா?"

சரவணம் கண்களை வெட்டி மகனின் முகத்தைப் பார்த்தான். மகனின் கண்கள் கலங்கி இருந்தன. அவனுக்குக் காரணம் புரியாமல் கோபம் எழுந்து கொண்டது. மேகநாதனின் தலையில் ஆத்திரத்துடன் பிடித்து கையால் உதைத்து விட்டான்.

"இவர் பெரிய ஆளு! இவர் படிச்சு நம்மை மகாராசாவாக்கப் போறாரு! சும்மா போடா! இந்தத் தோட்டத்தில் எவன்டா படிச்சிருக்கான்? இவர் படிக்கப் போறாரு! உன்னைப் போலத்தாண்டா நா என் அப்பனைக் கேட்டேன் அவன் என்னைப் படிப்பிச்சுப் போட்டானா? என் அப்பனும் ஆயாவும் இதே தோட்டத்தில் தாண்டா வேலை செய்து, இந்த தேயிலைச் செடிக்கு பசளை ஆயிட்டாங்க? இல்ல கேக்கிறன் என் அப்பன் படிச்சானா அப்பனும் என்னை புல்லு வெட்டத்தான் கலைச்சான் நீயும் நாளைக்கு புல்லுவெட்டப் போயிரு!... இப்ப ஏதாவது பேசினா உதைச்சுகொன்று போடுவன் ஆமா!"

தகப்பனின் ஆவேசமான, தீர்க்கமான குரலில் நலுங்குற்றுப் பயந்துபோன மேகநாதன் மௌனமாக இருந்தான். அழுகையை அடக்கி கீழுதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டான். சரவணத்தின் கண்கள் மகனை எண்ணிக் கலங்கத் தொடங்கிய போது சம்பளம் எடுத்து வரும் நேரத்தில் இன்னொரு தொழிலாளிக்குத் தானே சொன்னவை மனதில் உள்ளிருந்து உணர்வுகளோடு கலந்து மேலெழுந்து வந்தன.

"முதலாளி வர்க்கத்தை ஒழிச்சுக் கட்டணும்."

நீதியான உணர்வுகள் ஆத்திரம் கொண்டு ஆழமாகக் கிளர்ந்து கொள்ள கைவிரல்கள் தாமாகப் பொத்தி இறுகிக் கொள்கின்றன. அந்தப் பொத்தி இறுதிய கை முடிச்சுகளுக்கு எதிரிகள் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்!

தாமரை — 1969 நவம்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலித்தவருக்கு ஒரு கடிதம்

யேசுதாசனுக்கு!

இந்தப் பெயரை இன்றுதான் நான் மொட்டையாக எழுது கிறேன். இந்தப் பெயரைக் கொண்டிருக்கும் மனிதனை இன்றுதான் நான் பெயர் கூறி அழைத்து எழுதுகிறேன். இப்படி நான் அழைத்து எழுதுவதை இன்று நீங்கள் உங்களை ஆக்கிக் கொண்டுள்ள ஒட்டுற வில்லா நிலையிலும் விரும்பாமல் இருக்கலாம். நிச்சயம் நீங்கள் விரும்பமாட்டீர்கள்! என் பிரியமானவரே என்று பிரியத்தோடு எத்தனை முறைகளில் இந்த விரல்கள் எழுதியிருக்கும். இன்று என் பேதலித்த மனம், அதே வார்த்தைகளை, உருவமின்றியிருக்கும் கடவுளைத் தேடி அலைந்து முனகும் பக்தனின் உள்ளம் போல் அடிக்கடி முனகிக் கொண்டாலும், எழுதமறுத்துவிட்டன. ஒரு பெண், தன் மனது நேசித்த ஒருவரை பிரியமானவரே! என்று துணிந்து அழைக்கத் தொடங்கி விட்டால் பின்பு அவள் சாகும்வரை அந்த அழைப்பு, அந்த ஒரே ஆத்மாவுக்குத்தான் என்று எண்ணியிருப்பாள். ஆனால் அந்த உரிமை அவளிடமிருந்து சொல்லாமல் கொள்ளாமல் பலாத்காரமாகப் பறிக்கப்பட்டுள்ளது. ஒரு பெண்ணால் உலகில் நம்பிக்கை வைக்கக் கூடிய பொருளே அவநம்பிக்கைக்குப் பாத்திரமாகி விட்டபிறகு அவளால் எதைத்தான் யோசிக்க முடியும்? உரிமை கொடுத்த உயிர் உரிமையைப் பறித்துக் கொண்டு சென்று விட்டபோது யாருடன் போரிடுவது?

என் பிரிய நேசரே! என்று அழைக்கும்படி இதயபூர்வமாகக் கொடுத்தவர் நீங்களே! அந்த உரிமையை இழந்து பேதலித்து நிற்கும் பெண் உயிர் நானே! இந்தப் பேதைப் பெண் எலிசபேத்தே!

இது என்ன தொல்லை தொடர்கிறது என்று கவலைப் படாதீர்கள். என்னால் தொடர்ந்தும் தொல்லை இருக்காது. என்னால் உண்டாக்கப்படும் தொல்லைகள் உங்களை எதுவும் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடக்கூடிய சக்தியற்றவை; கையாலாகாதவை என்று உங்களுக்கு நன்றாக தெரியும். இவள் என்ன செய்துவிடப் போகிறாள்? என்று யோசித்துப் பாருங்கள். பயமெல்லாம் பறந்துவிடும்! நீங்கள் அதை ஏற்கனவே யோசித்துத்தானே எல்லாம் செய்திருப்பீர்கள்?

எலிசபெத் என்ற பசாசு தொலைந்தது! என்று எண்ணி மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கும் உங்களுக்கு நான் எழுதும் இக்கடிதம் எந்தச் சலனத்தையும் ஏற்படுத்தி விடக் கூடாது என சருவேசுவரனைப் பிரார்த்திக்கிறேன். அப்படியேதும் கடந்தகால நினைவுகளால் தூண்டப்பட்டு இதயத்தின் உள்நாடிகள் துடிக்கவும் செய்யலாம். அப்படி ஏதும் உணர்வுகள் எழுந்து இதயத்தில் சலனத்தை ஏற்படுத்தினால், அச்சலனம் இந்தப் பெண், இரையாகி விட்டு அந்தரப்படும் எலிசபெத்தின் காரணமாகவே இருந்தால் அவற்றின் தாற்பரியங்கள் உங்களுக்குப் புரியாது போகாது. இனிப் புரிந்தாலும் புரியா விட்டாலும் ஒன்றுதான்.

எலிசபெத் என்ற பசாசு இனி உங்களைச் சேதனை செய்யாது. இப்போது நினைப்பதுபோல் தொடர்ந்தும் நினைத்துக் கொண்டு நீங்கள் முடிவெடுத்தபடி நடப்பதற்கு உங்களுக்குப் பூரண சுயாதீனம் உண்டு. அந்தச் சுயாதீனத்தை இலகுபடுத்துவதும் கட்டுப்படுத்து வதும் உங்கள் கைகளில்தானே உண்டு. இல்லாவிட்டால் எப்படி ஐந்து வருடங்களாக உங்கள் இதயத்துள் இருதயமாக கலந்து தன்னை உங்களுக்கே பரித்தியாகம் செய்த என்னை வேதனைச் சேற்றுக்குள் எறிந்துவிட்டுச் செல்லமுடியும்? இல்லையா?

என் இதயத்தின் உள்ளே என் உள்ளத் துடிப்புகளோடு சங்கமமாகி, என் உணர்ச்சிகளோடு நாளும் பொழுதும் உறவாடி இந்த ஏழை எலிசபெத்தின் பிரித்தெடுக்க முடியாத ஆதர்சமாக இருந்த நீங்கள், என்னையறியாமல், என் இதயத்திற்குக் காரணம் ஒன்றும் புரியாமல் அதனுள்ளிருந்து கண்ணீர் சிந்தும் என் இறுகிய இணைப்பையும் உடைத்துவிட்டு வெளியேறி எங்கோ என் கண்களுக்குப் புலப்படாத தூரத்தில் கைக்கு எட்டாத பொருளாக நிற்கிறீர்கள். நான் இருக்கும் பக்கத்திற்குப் புறமுதுகுகாட்டி நிற்கிறீர்கள்! உங்கள் இதயத்துள் என் நினைவு எழுந்து வரும் போது அருவருத்து காறித் துப்பிவிட்டுக் கண்களை மூடிக்கொள்வது போலத் தெரிகிறது. இல்லாவிட்டால் என்னை முற்றுமுழுதாக அறிந்த நீங்கள் என்னிடம் ஓடி வந்திட மாட்டீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை நேசித்து என்னை நேசிக்கச் செய்த மனிதனே! 'நான் உங்களுக்கு என்ன குற்றம் செய்துள்ளேன்! நினையுங்கள்! உலகத்தில் நான் புனிதமென்று எண்ணுகிற சகல பொருட்களையும் கொண்டு சாட்சியாக வைத்து மெய்யாகவே சத்தியம் செய்கின்றேன். யேசுவே! நான் எந்தத் தவறும் செய்யவில்லை! செய்யவேயில்லை!

நான் ஏன் உங்களால் கைவிடப்பட்டுள்ளேன்? நான் ஒரு ஏழை! காலை உணவு இருந்தால் மத்தியானம் உணவு கிடைக்குமோ என்று யோசிக்கும் நிச்சயமான ஏழை! நான் இந்த யாழ்ப்பாணப் பகுதி அமைப்பு முறையில் தாழ்ந்த வகுப்பைச் சேர்நதவள். பள்ளி, ஓம். பள்ளி. எளிய பள்ளி உனக்கு எவ்வளவு துணிவடி! என்று உங்கள் தங்கை டெய்சியாலும், உங்கள் சின்னம்மாவாலும், மாதா கோவிலுக்குப் போய்விட்டு வரும்போது தெருவில் விட்டுக் காறி முகத்தில் உமிழப்பட்டு, அடி வாங்கியவள்! இதுதான் உங்களுக்குப் பழங்கதையாச்சே, உயர்சாதி என்று கூறப்படும் கோவியர் சாதியைச் சேர்ந்தவர். என்னிடம் முற்றுமுழுதான அன்பைத் தவிர பரிசுத்த மான இதயத்தைத் தவிர வேறு சொத்து ஒன்றுமேயில்லை. இந்த நிலைமைகள் உங்களுக்கு முன்னமே நன்கு உணர்த்தப்பட்டவை. நான் நல்லூர் கந்தசாமி கோவில் வீதியால் நெசவு நிலையத்திற்குப் போகும்போது நீங்கள் என்னை அடிக்கடி சுற்றி வந்து, என் இதயத்தைக் கொள்ளை கொள்ளும் முறையில் பார்த்துச் சிரித்து, இறுதியில் தனிமையாகச் சந்தித்தபோது எனது வாழ்க்கை நிலைமைகளை உங்களுக்குக் கூறினேன். என்னை உங்களுக்கு உங்களை அடையும் ஆசையில் ஒளித்து மறைத்தேனா? நம்பிக்கை இருந்தது. நான் ஆரம்பத்தில் உங்கள் கடிதங்களுக்குப் பதில் எழுதும் போதெல்லாம் எங்கள் காதல் சுதந்திரமான மனித உறவுகளின் அடிப்படையில் எழுந்தாலும், இறுதியில் இந்த நிலப் பிரபுத்துவ சமூகக் கட்டுப்பாடுகளுக்குள் அழிந்தேவிடும். என்று எழுதி அதற்கு முதல் நடந்த பல நிகழ்ச்சிகளையும் எடுத்துக் கூறினேனே.

அந்தக் கட்டுப்பாடுகளையும், மரபுகளையும், தமது வாழ்வின் உயர்வாகக் கொண்டிருக்கும் மனிதர்களின் அழுங்குப் பிடியான எதிர்ப்புகளை எதிர்த்து நிற்கும் தைரியம் உங்களுக்கு இருக்குமா? என்று எத்தனை முறை கேட்டிருப்பேன்? அப்போது நீங்கள் எனக்கு என்ன பதில் கூறினீர்கள்? எனது நேச எலிசபெத்! என் அன்புக்குப் பாத்திரமான என் உயிரே! என்னை ஒரு கோழை என்று எண்ணுகிறாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றையெல்லாம் மதிப்பவனாக இருந்தால் உன்னை நான் ஏன் காதலிக்கப்போகிறேன்? நீ யார்? உன் குடும்ப அந்தஸ்து என்ன? உன் சாதி எது என்பதெல்லாம் எனக்குத் தெரியாதா? எங்கள் காதலுக்குக் குறுக்கே எந்தப் பெரிய தடைகள் எழுந்தாலும் அவற்றை என் காலடிக்குள் போட்டு மிதித்து ஒரு இலட்சிய மனிதனாக உன்னைக் கைப்பிடிப்பேன்! என்னில் உனக்கு ஏன் இவ்வளவு சந்தேகம்? உன்னை நான் எனது உயிராக மதிக்கிறேன். இதற்கு மேல் நான் உனக்குச் சொல்வதற்கு ஒன்றுமில்லையென்று எழுதினீர் தானே?

இன்று என்னை உங்கள் காலடிக்குள் போட்டு மிதித்துவிட்டு எழுந் தடைகளுக்கு பயந்து ஒரு கௌரவமான கோழையாகி விட்டீர்கள்! அப்பொழுது நான் நீங்கள் எழுதியவற்றைத் தேவ வாக்கியமாக எடுத்துக் கொண்டேன். அவை ஒரு செபத்தைப் போல் என் மனதில் பதிந்துள்ளன. உங்களை நான் என் உயிராக நேசித்தேன்! அதன் பின்பு நீங்களே என் உயிர்!

என்னிடம் அர்ப்பணிக்கப் பொருள் எதுவுமே இல்லாவிட்டாலும் என் உடல் ஆவி இரண்டையும் உங்களுக்கே தத்தம் செய்து தந்தேன். உங்களால் உரிமையோடு அனுபவிக்கப்பட்ட உடல் அந்தகார வெளியில், அனாதையாகக் கிடக்கிறது. உங்களை ஆதர்சமாகக் கொண்ட ஆவி பாதையொன்றும் தெரியாமல் இருட்டினிலே அந்தரித்துக் கொண்டு, கண்ணீர் கணவாயில் நின்று பிரலாபித்து அழுகிறது. அந்த அழுகைக்குச் செவி சாய்த்து ஆறுதல் கூற ஒரு உயிர் உண்டு; அது நானே!

நீங்களோ உங்கள் அந்தஸ்து, சாதிப் பெருமை, குடும்ப கௌரவம், சமூக மதிப்பு என்பது பற்றியெல்லாம் பயபக்தியோடு கூறி அவற்றிற்கு நியாயம் கற்பிக்கிறீர்கள்! எனது உறவினர்கள், எனது தாய், எனது சகோதரர்கள் எல்லோரையும் தூக்கி எறிந்து, அவர்களை வெறுத்து எப்படி வாழமுடியும் என்று கேட்கிறீர்கள்? அவர்களையெல்லாம் வெறுத்து இந்த சமுதாயக் கட்டுப்பாடுகளையெல்லாம் மதிக்காமல் நாம் இருவரும் ஒரு காலமும் வாழ முடியாது. உன்னை நான் மணந்தால் என் சகோதரிகளை, அண்ணன் தாழ்ந்த சாதிக்காரியை முடித்துவிட்டான் என்று கூறி ஒருவருமே மணமுடிக்க மாட்டார்கள். எனவே நீ என்னை மறந்துவிடுவது தான் வழி என்று கூறி நான் மறந்து விடுவதற்கு முன்பே நீங்கள் மறந்து விட்டீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியத்திற்கு மாறாக எவ்வளவு தைரியத்தோடு என்னை மறந்துவிட்டீர்கள்! உங்களுக்கு அந்தத் தைரியத்தைக் கொடுத்தது என்ன? எப்படி இரண்டு மனிதர்களாக மாறினீர்கள்?

இன்னும் எட்டு நாட்களுக்குள் உங்களுக்குத் திருமணம் நடக்கப் போகிறது. நீங்கள் மணக்கப் போகும் பெண்ணின் பெயர் இந்து ராணி! அவளுடைய தகப்பன் பழைய விதானையார். அவர்கள் எல்லோரும் பெரிய கௌரவமானவர்கள். உங்களுக்குக் கிடைக்கப் போகும் சீதனம் பெரிய கல்வீடு, வளவுகளுடன் இருபத்தையாயிரம் பணமும் இவையெல்லாம் எனக்குத் தெரிந்திருக்கும் என்று உங்களுக்குத் தெரியும்.

நீங்கள் என்னை உங்கள் உயிராகவே கருதினீர்கள். உங்கள் உள்ளம் என்னை உண்மையாகவே நேசித்தது. என்னைக் காதலிக்கும் போது என்னைத் தைரியத்தோடு தான் காதலித்தீர்கள். ஆனால் இன்று உலக நீதிக்கு மாறாக, உங்கள் உண்மையான உள்ளத்துக்கு மாறாக உங்களை மாற்றிவிட்ட காரணத்தை நான் புரிந்து கொண்டுள்ளேன்.

நான் உங்களுக்கு முன்பே சொன்னேன்! சொத்து, உறவு அடிப்படையில் எழுந்த கௌரவம், மதிப்பு, அந்தஸ்து என்பன தான் காதல் உறவையும் தீர்மானித்து விட்டன. சொத்து எதுவுமில்லாத சமுதாயத்தின் கீழ்நிலைக்குத் தாழ்த்தப்பட்டிருக்கும் ஏழையான இந்த எலிசபெத்தை உங்களால் நேசிக்க முடியாதுதான்.

இந்த உண்மை என் உணர்வில் நீண்டகாலம் அருட்டிக் கொண்டிருந்தாலும் நீங்கள், புத்துலக எண்ணங்களால் உருவாக்கப்பட்டு சத்தியத்திற்கு மதிப்புக் கொடுக்கும் முற்போக்கு மனிதன் என்று நம்பியிருந்தேன். ஆனால் அது பொய்! சொத்துறவுக்கு அப்பாற்பட்ட அன்புக் காதல் பாடம் என்பன ஒன்றும் இருக்க முடியாது என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்டேன். வர்க்கம் வர்க்கத்தைத்தான் சாரும். நான் சொத்தில்லாத வர்க்கம் தானே!

இந்த உண்மையை அறிந்து கொண்டேன். ஆனால் எனது வாழ்க்கை பலியாகி விட்டது. நாசமாக்கப்பட்டு விட்டது.

எலிசபெத் ஒரு அனாதைப் பெண்! அவளை நான் வேண்டு மட்டும் அனுபவித்து விட்டேன். அவளுக்காக அவளுடைய நீதியை செவிசாய்த்துப் பரிந்து பேச யாருமில்லை என்ற துணிவுதானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைதான். எனக்காகப் பரிந்து பேச என்னைத் தவிர யாருமே இல்லை என்று தகப்பன் இறந்துவிட, தன் தைரியத்தினால் தலைச் சுமையாக ஊரெல்லாம் தேங்காய் கொண்டு திரிந்து விற்று என்னை வளர்த்து, படிப்பித்து விட்ட என் தாய், இன்று வெளியில் மூக்குக்காட்ட முடியாத அவமானத்தில் வீட்டுக்குள் அழுதழுது கிடக்கிறாள். அவள் என்னை அவ்வாறாக நேசித்தாள். உங்கள் காதலுக்காக அவளை, அவளுடைய புத்திமதிகளை எவ்வளவு கேவலமாக மதித்தேன். "வயிற்றில் பிள்ளை தந்துவிட்டு ஓடிவிடுவான் பார்!" என்று தீர்க்க தரிசனமாகக் கூறிக்கண்டு பிடித்தாள்.

இன்று "உன் எண்ணத்துக்குக் காதலித்தாய்! இப்ப என்னடி? எங்கையெண்டாலும் ஆத்தில குளத்தில விழுந்து செத்துப் போடி." என்று என்னை அடித்து, உதைத்து என்னைக் காறி உமிழ்ந்து துப்பி வெறுக்கும் அவளுக்கு நான் என்னபதில் கூறுவேன்? இன்றைக்கு அவளுக்குக் கூற வேண்டிய பதிலையும் கூறத் தயங்க மாட்டீர்கள் இல்லையா?

என்னைச் சாகும்படிக் கூறும் அவள் என் வாழ்வு பற்றிய யோசனையினாலே நீண்ட காலம் உயிரோடு இருக்கவே மாட்டாள். ஐயோ, எங்கள் காதல் இரகசியமாகவே இருக்கட்டும்! என்று அடித்து அடித்துக் கூறினேன். நீங்கள் சொன்னதென்ன? என்ன எலிசபெத் நீ என்மேல் சந்தேகமா கொள்கின்றாய்? மற்றவர்களைப் பற்றி நீர் ஏன் கவலைப்படுகிறாய். நாங்கள் திருமணம் செய்வது உண்மை. அதையேன் மறைக்கவேணும் என்று கேட்பீர்கள். நீங்கள் கேட்பது நியாயமான கேள்வியாகவே எனக்குப்பட்டது.

என் சிநேகிதிகள் எனக்குப் புத்திமதி சொல்லி, காதலை நம்பி, தம்மை பறிகொடுத்து வயிற்றிலே பிள்ளையை வாங்கிக் கொண்டு வாழ்க்கை முழுவதும் துன்பக் கேணியில் கிடந்து வாழும் பெண்களை எல்லாம் எனக்கு நேராகக் கண்முன்னே காட்டினார்கள்.

காதலை நம்பி, ஏமாந்து, கற்பைப் பறிகொடுத்துக் கடைசியில் அவமானம் தாங்காமல் தற்கொலை செய்து அவலமாக இறந்த எத்தனையோ பெண்களை எனக்குத் தெரியும்தான். ஆனால் நீங்கள் கொடுத்த தைரியத்தில் எல்லாவற்றையும் தூசென மதித்துக் கம்பீரமாக இருந்ததேன். நீங்கள் கூறியது சரிதான் நீங்கள் யாருக்கும் பயப்பட வேண்டாம்? யாருக்குப் பயப்பட்டீர்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் ஒரு கிழமையில் மதிப்பான குடும்பத்தில் சொத்துச் சுதந்திரங்களுடன் சிறந்த பெண்ணைத் திருமணம் செய்து கௌரவ மான மனிதனாக வாழப் போகிறீர்கள் இந்தச் சமுதாயத்திற்கு நீங்கள் கௌவரமான பிரஜையாகவே இருப்பீர்கள். என்னால் தலை குனிந்தும் நடக்க முடியவில்லை. தெருவை எட்டிப் பார்த்து மூச்சு விட எனக்குப் பயமாக இருக்கிறது. நான் எல்லோராலும் வெறுத்து ஒதுக்கப்படும் ஜந்துவாகிவிட்டேன்.

என் வீட்டு அயலில் உள்ள வர்கள் என்னைக் கண்டதும் தங்களுக்குள் பேசிச் சிரித்துக் கொள்கிறார்கள். ஒருமாதிரியாகப் பார்க்கிறார்கள். அது ஒரு நல்ல பொருளைப் பார்க்கும் பார்வையல்ல. அந்தப் பார்வையில் அருவருப்பும் வெறுப்பும் கலந்திருக்கின்றது. ஞாயிற்றுக்கிழமை மாதா கோவிலுக்குக்கூட நான் செல்வதை நிறுத்திவிட்டேன். கோயிலுக்குச் சென்றால், எனது அறிமுகமான பெண்கள் சூழ்ந்து கொண்டு என்னடி "நீ உயிரென்று சொல்லிக் காதலித்தாய்," அடுத்த கிழமை அவனுக்குக் கல்யாணம், நீ என்ன செய்யப்போகிறாய்? இனி உன்னை யார் வந்து முடிக்கப் போகிறான் என்று அனுதாபப் படுகிறார்கள்.

உலகத்தில் வெறுக்கப்படக்கூடிய அனுதாபம் இதுதான். எல்லோரையும் பார்த்தால், உலகத்தில் ஒருவருமே செய்யக்கூடாத ஒரு குற்றத்தைச் செய்தவனாகவே படுகிறேன். மற்றவர்கள் கண்களில் "நான் ஒரு நடத்தைகெட்ட வேசை"யாகி விட்டேன். உண்மையில் நான் செய்த குற்றம் என்ன? நீங்கள் விசுவாசிக்கின்ற யேசுவின் மேல் ஆணையாகக் கேட்கிறேன். நெஞ்சில் கைவைத்துப் பகிரங்கமாகவே சொல்லுங்கள். நான் விட்ட தவறுதான் என்ன? இந்தச் சமூகம் உங்களை விட்டுவிட்டு என்னை யேன் குற்றவாளியாக முடிவெடுத்து விட்டது. நான் இன்று ஒரு அவமானச் சின்னம்.

இந்தச் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவருக்கு நீதி இல்லையா? நம்பி ஏமாந்தவருக்கு ஆதரவில்லையா? குற்றத்தில் சம்பந்தப் பட்ட இருவரையும் விசாரணை செய்து குற்றவாளியைக் கண்டு கொள்ளாமல் ஏன் தாக்கப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்கு கிறது? பெண்ணுக்கு ஒரு ஆணின் உறவு அவசியமானது. ஆண் ஒரு பெண்ணையும், பெண் ஒரு ஆணையும் நம்பித்தானே ஆக வேண்டும். நீங்கள் என்னோடு சந்தேகங்கொள்ளும்படி நடந்தால் அல்லவோ நான் நம்பாமல் விடுவதில் நியாயமுண்டு. நம்பினால் குற்றமுண்டு நான் உங்களை நம்பியது தவறா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஆண்மேல் ஒரு பெண் நம்பிக்கை கொள்ளக்கூடாதா? அப்படியென்றால் உலகத்தில் யாரைத்தான் நம்புவது? உங்களை கள்ளங்கபடமின்றி நம்பினேன். பரிபூரணமாக ஏமாற்றப்பட்டு உள்ளேன். அதனால் தற்கொலை செய்து உயிரை மாய்த்து விட மாட்டேன். நான் நம்பியது குற்றமல்ல. நீங்கள் ஏமாற்றியதுதான் மாபெருங் குற்றம் என்பதை நானறிவேன், நான் வாழவேண்டும் என்பதற்காகத்தான் காதலித்தேன்.

இந்த உலக வாழ்க்கையை நானா நம்புகிறேன். இனி நான் தெருவில் உதைத்து வீசப்பட்ட ஒரு குட்டை நாய்க்குச் சமமாக மதிக்கப்படுவேன் என்றுந் தெரியும். என்றாலும் வாழ்க்கையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. உங்களை நம்பியது போலவே என்னை அறிந்து விரும்பும் இன்னொருவனையும் நம்பத் தயாராக இருக்கிறேன், என்னை ஒரு நடத்தை கெட்டவள் என்று கலியாணம் செய்து கொள்ள எவரும் விரும்பி முன்வரா விட்டாலும் நான் வாழ்ந்து கொண்டிருப்பேன்.

எனது இதயம் பரிசுத்தமானது. என் உணர்வுகள் புனித மானவை. என் வயிற்றிலே வளரும் சிசு. அதை நான் உயிரோடு பிறக்கவும் விடமாட்டேன். தகப்பன் பேர் தெரியாத பிள்ளை என்று பலர் கூறும்படி அது வாழ்ந்து எனக்கும் அதற்கும் அவமானம் ஏற்படுத்த நான் விரும்பவில்லை. அதை அழிக்க இரகசியமாக மருந்து சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறேன். நான் மட்டும்தான் இந்நிலைக்கு உள்ளாகி இந்த வாழ்க்கை வாழ நேரிடவில்லை. என்னைப்போல எத்தனையோ புனித உள்ளங்கள் கறைபட்டுக் கிடக்கின்றன.

அதைத் சிந்திக்கும்போது உங்களில் எனக்கு அவ்வளவாக ஆத்திரம் வரவில்லை. உங்களைப் போன்ற பிரகிருதிகளைக் காலம் காலமாகப் பிறப்பித்துக் கொண்டிருக்கிறதே இந்தக் காலத்திற்கு ஒவ்வாத சமுதாய அமைப்பு அதில்தான் வெறுப்பு கூடிக் கொண்டிருக்கிறது. இந்த அசிங்கமான ஒரவஞ்சகமான சமுதாயம் அழிந்து உங்களைப் போல ஆண்களும், என்னைப் போன்ற பெண்களுக்கேற்படும் நிலையும் உருவாக முடியாத சமுதாயம் தோன்ற வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

அப்படியான ஒரு சமுதாயத்தைத் தோற்றுவிக்க யார் எழுந்தாலும் அவர்களுக்குப் பக்கபலமாக நின்று என் உயிரையும் கொடுக்க நான் அஞ்சேன், ஏனென்றால் எனக்கேற்பட்ட இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன அவஸ்தைக்கிரமான வாழ்வு இனித் தோன்றப் போகும் பெண்களுக்கும் ஏற்படவே கூடாது! ஆனால் உங்களைப் போல ஆண்கள் தோன்றுவதும் இப்படி அப்பாவிப் பெண்களை ஏமாற்றி விடுவதும் ஒரு நியதி என்று நான் கூறவில்லை.

யேசுதரிசன்! நீங்கள் இந்தப் பிற்போக்குச் சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்குப் பயந்த ஒரு கோழை.

உங்கள் வாழ்வு நிம்மதியாக இருக்கக்கூடாது என்று நான் விரும்புகிறேன். பயப்படாதீர்கள்!

எனது விருப்பம் நிறைவேறாது; நிறைவேறுமானால் அந்த விருப்பம், அந்த விருப்பம், நீங்கள் இந்த உலகத்திலேயே இருக்கக் கூடாது என்பதாகத்தான் இருக்கும்!

ஆ! நீ ஒரு மனிதப் பிறவியா?

தீராத வேதனையால் அவஸ்தைப்பட்ட என் மனம் இதை உங்களுக்கு எழுதும்படி தூண்டியது. இந்தக் கடிதத்தில் உங்கள் உள்ளம் திருந்தி விடும் என்று நான் நினைத்தேன் என்று நீங்கள் நினைத்தால் நீங்கள் ஒரு புத்தியீனன்! இதை நீங்கள் படித்ததும் கிழித்து எறிந்து விடுவீர்கள்! இல்லை? உங்களால் வேறு என்ன செய்ய முடியும்? சுட்டுச் சாம்பலாக்குவது இன்னும் நல்லது!

இப்படிக்கு,
உன்னை நேசித்த
எலிசபெத்.

தாமரை — 1969.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சின்னஞ்சிறு பூச்சி

நான் என் வீட்டு விறாந்தையில் பாய்விரித்து, படுத்தவாறு அன்றைய பத்திரிகைகளை வாசித்துக்கொண்டிருந்தேன். எனக்குப் பக்கத்தில் எனது ஐந்து வயது மகன் விளையாடிக்கொண்டிருந்தான். மாலை நாலு மணியிருக்கும். பத்திரிகைகளை வாசித்து முடித்த எனக்கு நித்திரை கண்களை இழுத்தது. நான் நித்திரையை முறிப்பதற்காக பத்திரிகைகளை பக்கத்தில் மடித்துப் போட்டுவிட்டு, மகன் விளையாடுவதைப் பார்த்துக் கெண்டிருந்தேன். மகனுக்குக் காலையில் அம்பு வில்லு செய்து கொடுத்திருந்தேன். அவன் அம்புத் தடியை ஒரு கையில் வைத்திருந்தான். அது ஒரு அடி நீளம் இருக்கும். அவனுடைய மறுகையில் சோக் துண்டு இருந்தது. அதனால் அவன் நிலத்தில் கிறுக்கிக் கொண்டிருந்தான். அப்போது அவனை நோக்கி ஒரு பூச்சி சுறுசுறுப்பாக ஊர்ந்து வந்துகொண்டிருந்தது. அதைச் சற்று நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அவன், ஒரு யோசனையுடன் கையில் இருந்த சோக்கால் தனக்குப் பக்கத்தில் ஒரு வட்டம் போட்டான். பின்பு, அம்புத்தடியால் அந்தப்பூச்சியை அந்த வட்டத்தின் மத்தியில் தட்டிக்கொண்டுவந்து விட்டு, அதையே அவதானித்துக் கொண்டிருந்தான். நானும் அந்தப் பூச்சியைப் பார்த்தேன். பப்பாளி விதையளவு உடம்பு, அவ்வுடம்பு மட்டும் சிவப்பு நிறம். மற்ற உறுப்புக்கள் கறுப்புநிறம். குண்டூசியின் குண்டுப் பருமன் தலையும், கண்டக்கண் இமை மயிர் ஒத்த சின்னட்டிக் கால்களும். நான் இதற்கு முன் அப்பூச்சியைக் கண்டதில்லை. அது அவன் விட்ட இடத்தில் நிற்கவில்லை. அது ஊர்ந்து வந்த வேகத்திலும் அதிக வேகத்தில் வெளியில் வந்தது. அவன் அதை விடவில்லை. அம்புத்தடியால் தட்டித்தட்டி விடும்போதெல்லாம், அது புரண்டு நெளிந்து திரும்பவும் திரும்பவும் வெளியில் வரவே முயற்சித்துக் கொண்டிருந்தது.

"என்ன தம்பி செய்கிறாய்" என்று மகனிடம் கேட்டேன்.

"இந்தப் பூச்சியை பிடிச்சு வைக்கிறன் அப்பா, அது ஓடி ஓடி வெளியில் வருகுது" என்று கூறிவிட்டு, அதை தன் வட்டத்துள்ளே தள்ளித்தள்ளி விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஞ்சை பாருங்கப்பா, இது என்ரை அம்பைக் கடிக்குது" என்றான். பார்த்தேன். அப்பூச்சி அம்பின் கூர் முனையைக் கால்களால் கட்டிப் பிடித்து தன் சிறிய வாயால் கடித்துக் கொண்டுதான் இருந்தது. பின்பு திரும்பி வெளியில் ஊர்ந்தது. எனக்கு அப் பூச்சியைப்பார்க்க ஆச்சரியமாக இருந்தது.

எனது மகன் அப்பூச்சியை விட ஆயிரம் மடங்கு பெரிய உருவம். அவனுடைய அம்பு அதைவிட நூறுமடங்கு பெரியதாக இருக்கும். அப்பூச்சிக்கு கண்கள் இருக்கின்றன. மகனின் பூதாகர உருவத்தையும் அம்பின் பாரிய தேமற்றத்தையும் அது நிச்சயம் கண்டிருக்கும். ஆனால் அது சற்றும் பயம் கொண்டதாகத் தெரியவில்லை. அதன் ஒரே இலட்சியம் என் மகன் இட்ட சிறை வட்டத்துள் இருந்து வெளியேறித் தன் வழியே செல்வதுதான். அது சளைக்கவில்லை. ஓயவில்லை. மகன் தட்டித்தட்டி விடவிட அது இன்னும் இன்னும் வேகம் கொண்டு இயங்கியது. என்மகன் களைத்துப்போய்விட்டான். தன் நோக்கம் சரிப் போகவில்லை என்று அவன் உணர்ந்ததும் அப்பூச்சியின் மேல் அவனுக்கு பெரும் ஆத்திரம். அவன் முகத்தில் அது தெரிந்தது. அவன் தன் இறுதி முயற்சியாக அப்பூச்சியை வட்டத்துக்குள், அம்பினால் இழுத்து விட்டான்.

"இதில கெட. இல்லாட்டி உன்னை கொண்டுபோடுவன்" என்று அதைப் பயமுறுத்திவிட்டு, இயமன்போல் அதைப்பார்த்துக் கொண்டேயிருந்தான்.

அப்பூச்சி வெளியேதான் போய்க்கொண்டிருந்தது.

"சனியன்" என்று திட்டிய அவன், இதைத் தன் அம்பினால் தட்டி இழுத்து வட்டத்தின் நடுவில் விட்டு, அதை நசித்துவிட்டான். அதன் வயிறு பிய்ந்து, சதை நிலத்தோடு ஒட்டிக்கொண்டது. அது சாகவில்லை. அரை உயிரோடும் வெளிநோக்கித் தன்கால்களை எட்டி வலித்து ஊர முனைந்து கொண்டிருந்தது.

நான் அந்தப்பூச்சியை மனத்துடிப்போடு உற்று நோக்கினேன். அந்த அற்ப உயிருக்குள் எவ்வளவு தீட்சன்யமான வைரம் கொண்ட நெஞ்சு. என் மகன் அதன் எதிரி; எதிரியின் பாரிய உருவத்திலும் இயக்கத்திலும், வெருண்டு கொள்ளாத தைரியம் அதன் உதிரத்திலும், தசையிலும் அடிமை கொள்ள முடியாத வீரார்ந்த உணர்வுதான் எங்கிருந்து வந்ததோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது குறை உயிரோடும் வெளிஊர்ந்து செல்ல முனைவதைக் காண என் மகனுக்கு தாங்கமுடியவில்லை.

"செத்துப்போ!" என்று கூறி அம்பினால் நசித்து அதைக் கொன்றுவிட்டான்.

"ஏன் தம்பி அதைக்கொன்றனீ?"

"அது நான் வைச்ச வட்டத்துக்குள்ளே நிற்குதில்லை அப்பா! பொல்லாத பூச்சி." என்று கூறிய அவன் தொனியில் திருப்தி இல்லாதது வெளிப்பட்டது.

"யாருக்கு வெற்றி உனக்கா? பூச்சிக்கா!" என்று கேட்டேன்.

"எனக்குத்தான்!" என்றான் எரிச்சலோடு.

அவன் கூறியதைக் கேட்டு நான் சிரித்தேன்.

"ஏன் அப்பா சிரிக்கிறீங்க?" என்று என்னைக் கோபத்தோடு நிமிர்ந்து பார்த்தான்.

"உனக்கு எப்படி வெற்றி?"

"நான் அதைக் கொண்டு விட்டனே?"

"இல்லை மகனே; உன்னால் அதனோடு போராட முடியாத தினால் தான் அதைக் கொன்றாய். இந்தப் பூச்சிக்கு மீண்டும் உயிர் வந்தால் என்ன செய்யும்?"

"வெளியில்தான் அப்பா அந்தச் சனியன் போகும்!"

"அதுதான் சொன்னேன். உனக்குத்தான் தோல்வி!"

"இல்லை அப்பா!" என்று மனஞ்சலித்தான்.

"இல்லை மகனே!" உன்னால் அதை வெல்லமுடியாது!

என்று அடித்துக் கூறினேன். அவன் மௌனமாக, இறந்து கிடக்கும் அதைப்பார்த்துக் கொண்டிருந்தான். நானும் மௌனமாக அதை பார்த்துக் கொண்டிருந்தேன். என் நெஞ்சுக்குள் அந்தச் சின்னஞ் சிறிய பூச்சி உயிரோடு ஊரத் தொடங்கியது; ஊர்ந்து கொண்டே இருக்கிறது.

நதி – 1975.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரும் முடிவும்

ஆணின் அணைப்புள் வார்த்தை இழந்து, புறத்தில் மோன மாகிவிடும் புதுப்பெண்ணைப் போன்று, இருளின் கவசப் போர்வையுள் பிரபஞ்சம் ஊமைத்தனம் அடைந்து கிடக்கிறது. நிலததில் குவித்துப் பொத்திய கையின் உருவில் சிரு டியான அந்தக் குடிசையின் கரையோரம் நெடுத்து நிற்கும் தென்னைகள் தலை விரித்தாட அவற்றின் நிழல்கள் வருந்தும் மனம்போல நிலத்தில் நெளிவு காட்டிக் கொள்கின்றன. பத்து மணிக்கு மேலாகி விட்டது. வேலனுக்கு நித்திரை வரவில்லை. குடிசைத் திண்ணையின் தெற்குப் பக்கமாக, தான் வழமையாகப் படுக்கிற இடம் வந்து, மண்குந்தில் முதுகைச் சார்த்தி கால்களை முறுக்கி, நீட்டியவாறு இருக்கிறான்.

றக்கா வீதியில் இருக்கும், யாழ்ப்பாணத்தில் பிரபலமான சுருட்டு வியாபாரி சுவாம்பிள்ளை வீட்டில், சுருட்டுபவர்கள், புகைத்து விட்டு எறியும் 'ஒட்டன்' சுருட்டுகளைத் தன் மூத்த மகனை அனுப்பி, பொறுக்கிவித்து, ஒரு பேணியில் சேர்த்து வைத்திருந்தான். அவற்றுள், நீளமான ஒன்றைத் தெரிந்தெடுத்து, எச்சில்பட்ட முனையைக் கடுதாசியால் சுற்றி வாயில் வைத்துப் புகை விட்டுக் கொள்கிறான். வளைந்து நெளிந்து வானத்தை நாடிச் செல்லும், அதன் புகைச் சுருளோடு போட்டியிட்டு, அவன் மனமும் அன்று விறகு கொத்திக் கொடுத்த ஓவாசியர் பிலிப்பையா வீட்டை நோக்கித் தவழ்கிறது.

அவை என்ன சுகமா வாள்கினம்....! எனக்கு இப்ப முப்பது வயசு நடக்குது; என்னிலும் பார்க்க ஓவசியருக்கு ஆறேழு வயசு கூடயிருக்கும். ஆறு புள்ளையளையும் பெத்து விட்டினம். அப்பவும் அந்த ஆசை.. குறையல்லை ... என்ன எனக்கில்லாததே... இண்டைக்கு ஓவசியருக்குக் கொஞ்சம் சுப்பா. பாடிக்கொண்டு குசனிப் பக்கத்தாலை வந்தவர், குசினிக்கையிருந்து வெளியிலை விற கெடுக்க வந்த பொஞ்சாதியிடை கையை எட்டிப்புடிச்சு விரலைக் கொஞ்சினார். நெஞ்சோடை சேத்து அமர்த்தினார். பேந்து மூஞ்சியை நீட்டிக்கொண்டு கொஞ்சப் போனார். அவ 'சும்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுங்க, ராத்திரி கொஞ்சின காணாதே' எண்டு சொல்லிப் போட்டுக் கையைப் பறிச்சுக் கொண்டு போயிட்டா..! அப்ப ஓவசியர் இப்பவும்...' நரம்பு மயிர்களில் சம்போகத்தாகவுணர்வு உரசுகிறது. புது மாப்பிள்ளை - பொம்பள மாதிரி எவ்வளவு சுதந்திரமா விளையாடினம்' நானும் இருக்கிறனே மாடு மாதிரி; விடிஞ்சாக் கோடாவியைத் தூக்கிக் கொண்டு போறது. பொழுதுபட்டா வாறது. அம்புடுறதைத் திங்கிறது; படுக்கிறது?....

'நானுஞ் சடங்கு முடிச்ச நாளிலை தெய்வானை யோடை இப்படித்தானே இருந்தன். இப்ப நாலைப் பெத்து விட்டன். வந்தது வில்லங்கம். ஓவசியர் பெத்தா பாக்க மேய்க்க பணமிருக்கு... என்னட்டை என்ன கிடக்கு? 'ஒரு பிள்ளைப்பேறு வெண்டால் நான் படுற கயிட்டம் கதிரமலையானுக்குத்தான் தெரியும்... கடைசிப் பொடியன் வைத்திலை. தெய்வானை வயிறு நோகுதெண்டு அனுங்கினாள். கையளை முழங்காலிலை ஊண்டிக்கொண்டு குனிஞ்சு நிண்டு நெளிஞ்சாள். அப்ப என்ரை கையிலை மடியிலை ஒண்டுமில்லை. அவளிடை காதிலை மின்னினாலும்... அதுவுமில்லை. ஒரு காரைப்பிடிச்சு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவமெண்டு ஒரு ஐஞ்சு ரூபாய்க்கி நாலு பக்கமும் ஓடினன். மனுவல் உபதேசியாரிட்டைக் கேட்டன். எங்கடை மருதடி ஒழுங்கேக்கை வைரவ கோயில் கட்டியிருக்கிற இரத்தினத்தாரிட்டைக் கேட்டன். அவனிட்டைக் கேட்டன். இவனிட்டைக் கேட்டன். ஒரு பொறுக்கியுந் தர மாட்டெண்டிட்டாங்கள். கடைசியா வேலப்பாடை வண்டில்தான் உதவிச்சுது. பன்ரெண்டு மணி வெய்யில், தெய்வானையை வண்டியிலை ஏத்தித் தள்ளிக் கொண்டு போனன். ஆஸ்பத்திரிக்குக் கிட்டப் போகல்லை, தெய்வானைக்கு பன்னீர்க்குடம் உடைஞ்சு போச்சு. அவள் வெய்யிலிலை வாடிக் களைச்சிருந்தாள். சோடா வாங்கிக் குடுக்கவுங் காசில்லை.'

மனம் கனத்துக் கொதிக்கிறது.

'இதுதான் போகட்டும். என்ரை நடுவிலான் 'அப்பு நானுஞ் சட்டை போடப் போறணனை' எண்டு, ஆரோ போட்டிருந்ததைக் கண்டுட்டு ஆசையிலை வந்து கேட்டான். வாங்கிக் குடுத்தனா? ஆறு மாசமாச்சு, அவனும் மறந்து போனான். ஓவசியற்ரை புள்ளையள் காலமை எழும்பி சட்டைப் போட்டு, வெளுக்கிட்டு புத்தகங் களையுங் கையிலை தூக்கிக் கொண்டு முன்னாலை போய் 'அப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டு வாறம்' எண்டு சொல்லேக்கை எவ்வளவு சந்தோஷ மாயிருக்கும்.... அதுக்குத்தான் குடுத்து வைக்கல்லை.'

சம்போக உணர்வு மீண்டும் நரம்புகளுள் அசைகிறது.

'என்ரை பொஞ்சாதி யோடை கொஞ்சநேரம்... அதுக்கு என்ரை உழைப்புக் காணாதாம். நானுந்தான் நாள் முழுதும் உடம்பை வருத்தி உழைக்கிறன். தாற கூலியை மூண்டு ரூபாய்க்கு மேலை ஒரு பொறுக்கியுந் தாறானில்லை. இந்த உலகத்திலை எல்லாங் காசுக் காறனுக்குத்தான்...'

வாயில் இருந்து எடுத்துக் கை விரல் இடைக்குள் வைத்திருந்த சுருட்டு எரிந்து கையையும் சுட்டுவிடுகிறது. அதைத் தூர எறிந்து விட்டு காறித் துப்புகிறான். அவன் மனது கேட்கவில்லை. மனதுள் உறவுச் சபலத்தின் ஆட்டங்கள். வலக்கையை மடக்கித் தலையணை யாக்கி, கால்களை முன்னிழுத்து மடக்கிச் சரிந்து படுக்கிறான். உடற் பரப்பில் உணர்ச்சியின் குருகுருப்பு உடலை நெளித்து அசைத்து மறுபக்கம் திரும்பிச் சரிகிறான். பக்கத்து வேலிப் பூவரச மரக்குடியுள் புகுந்து சிலிர்சிலித்து வந்த மென்காற்று, அவனின் உடல் முறிவுகளில் 'கீச்சிமாச்சி' விளையாடி கிலுகிலுப்பை ஊட்டுகின்றன. நிலவின் வெள்ளிக் கதிர்கள், கூரை அலம்பல் கீற்றின் வழி வந்து மார்புக்கு ஒளி தடவுகின்றன. உடலும் உணர்வும் போருக்கு வீறுகொள்கின்றன.

ஆசை அலைகள் வேலனின் மனக்கரையில் வந்து வந்து மோதிக் கொள்கின்றன. 'ரண்டு வருஷமா தெய்வானைக்குக் கிட்டவும் போக வில்லை.... இண்டைக்குப் போனா .... என்ன?' அலைகளின் புருவத்தில் பிறந்திடும் நுரைக்கூட்டம் இவ்வாறு முனகுகிறது.

'கொழுத்துச் சிவந்த கன்னங்கள். அவற்றுடன் நீரான இதழ் பதித்து, கன்னம் இணைத்து நயத்துவிட்ட இச்சின் சுவை... பின் கால்களில் எழுந்து நிற்கும் இரு தேர்ப்பரிகளாக முனைகுத்திப் பிரிந்தன. மந்த கலச மொக்குகள், அந்த மொக்குகளின் அழைவில் உள்ளாந்திடும் சுக....' இவை கரைநோக்கி ஓடிவரும் அலை நிரைகள் நுரை போர்த்துக்கொண்டு வந்து கரை அணைத்துவிட்ட உருவமற்ற உருவங்கள். வீரியத்துடிப்பு, அவனின் நரம்பு மயிர்த்துளைகளினூடே குதிகுதிக்கிறது. 'என்ன வந்தாலும் இண்டைக்குத் தெய்வானையிட்டைப் போறதுதான்.' அவனின் முடிவான முடிவில் நிலைமையின் கூர்கள் முட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஐயோ! பட்ட கஸ்டத்தை மறந்துட்டேனே! என்ரை பேய்த் தனத்துக்கு இடங்கொடுத்தா, நாளைக்கு ஐஞ்சாப் போயிடும். உழைச்சுப் போட முடியாதே... ச்சே, படைக்கிறவன் எப்படியும் படியளப்பான்....'

தன் நிலை சாய்ந்து மனம் சமாதானம் கொள்கிறது.

'இப்படிச் சொல்லி என்னை நானே ஏமாத்தினா... நாளைக்கு விறகு கொத்தப் போகாட்டி எல்லாரும் பட்டினி!'

மேவி எழுந்த அனுபவ அறிவு சமாதானத்தை முறிக்கிறது.

'அதுக்காக என்ரை உணர்ச்சியை அடக்கிறதா, வாறது வரட்டும்... என்னத்தைக் கண்டது? இதொண்டு தானே? இதையும் ஒறுத்தா ஏன் சீவிப்பான்....? அப்புடியெண்டா மூச்சு விடுற பிணந்தானே நான்?'

நிலைமை அறிவை அடித்தொதுக்கி, ஆசையுணர்வு தான் கையுயர்த் தி நிற்கிறது.

"மியோ... வ்" ஒரு மழலைப்பிள்ளையின் அழுகைக்குரல் போல அவன் காதில் ஒலிக்கிறது. செவிப்பறையை விரித்து வைக்கிறான்.

"மி.....யோ....வ்"

குடிலின் கோடிப்பக்கம், பெட்டையின் இசைவைப் பெறும் முயற்சியில், அதன் அருகில் குந்தி இருந்து, கடுவன் பூனை இசைத் திடும் உடற்தாப இரங்கல்.

'இந்தப்பூனைக்கு இருக்கிற சுதந்திரம் எனக்கில்லையா?' அணுவாகி, கருவாகி, உருவாகி, உடலாகி நின்ற ஆசையும் உணர்வும் உயிராகி எழுந்து துடிக்கிறது. அவன் உணர்வின் சரிவில் தன்னையும் விழுத்திக் கொண்டான். படுத்துக்கிடந்தவன் மெல்ல எழுந்து இருக்கிறான்.

இனிமேல் தெய்வானைக்குக் கிட்டவும் போக மாட்டேன் என்று கொண்ட உறுதிகள்; 'இந்த முறையுடன் வரமாட்டேன்' எனத் தெய்வானைக்குக் கொடுத்த சத்தியங்கள்; நான்காவது பிள்ளைக்கு மருதடி ஒழுங்கையில் உள்ள வைரவகோயிலின் முன் நின்று, கற்பூரம் கொழுத்தி, 'அப்பனே வைரவா! நீதான் காப்பாத்தவேணும், புள்ளை சனிக்காமல் செய்து விடு அப்பனே!' என்று மன்றாடிய நிகழ்ச்சி ஒன்றும் அவன் நினைவில் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கு அணைந்திருந்தது. குடிசை எங்கும் இருள். தட்டித் தடவித் தவழ்ந்து தெய்வானை அருகில் சென்று விட்டான்.

சதைக் கன்னங்கள் மழை ஒழுக்கு விழுந்த பள்ளமாகி, முனை குத்திய மொக்குகள், வாய் சுருக்கிப் போட்ட சாக்குப் போல தொய்ந்து, மென்மையின் கூடு, அடுக்காக ஈன்றதில் ஒடிந்து, மென்மை இழந்து கிடப்பது அவனுக்குத் தெரியவில்லை.

பக்கத்தில் கிடந்து, "தெய்வானை!" பூனையைப்போல அழைத்தான்.

'......'

"தெய்வானை!" தோளில் தடவி உலுப்பினான்.

"இம்" அவளுக்குக் குறைத்தூக்கம்.

"இந்தப் பக்கம் திரும்பன்"

"எனாம்?" தெரியாதவள் போல.

"என்ன செய்யத் தெய்வானை?"

"என்ன செய்வதெண்டு பாத்துத்தான் நாலும் வந்துட்டுது? இரண்டாம் புள்ளைக்குப் பிறகு எத்தினை சத்தியஞ் செய்தீங்கள். கட்டுப்பட்டீங்களா?...."

"நான் என்ன செய்ய?" - தாகத்தின் பெருமூச்சு.

"இப்படித்தான் எல்லாத்துக்கும் ஏமாத்திட்டீங்கள். இனி முடியா: யோசிச்சுப் பாருங்க; மூண்டு ரூபா உழைப்பிலை ஆறு சீவன் புட்டும் பட்டினியுமாக் கிடக்கிறம்.... இப்ப எங்க ஆசை தீந்துபோம்... நாளைக்குக் க டப்படக்கைதான்...."

"மெல்லமாச் சொல்லு தெய்வானை புள்ளையள் எழும்பிடும்."

"வேனுமானா...." அவள் கூறிமுடிக்கவில்லை.

"அம்மா! அம்மா! அமோவ்...."

"என்னடா?"

"கொஞ்சந் தண்ணி தாம்மா! புட்டுக்கானா பசிக்குது". வேலனின் மூத்த மகன் எழுந்திருந்து கண்களைக் கசக்கினான்.

"இம் கேளுங்கோ" என்று கூறிக்கொண்டே எழுந்து விள்க்கைக் கொழுத்துகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களைக் கசக்கிக் கொண்டு இருந்தவன் விளக்கொளியில் தகப்பனைக் காணுகின்றான். "ஏனப்பு வந்தனி?"

"நான்.... நான்.... தண்ணி குடிக்கத்தான்" அவன் திக்குமுக்காடி விடுகிறான். விளக்கின் பரந்த ஒளியில் சுருண்டு கிடக்கும் நான்கு குழந்தைகளும் அவன் கண்களுக்கு நன்றாகத் தெரிகின்றன. ஒன்று வீங்கி முட்டி வெம்பல், மற்றவை எலும்புந்தோலும் கூட்டுச் சேர்ந்ததில் அமைந்த நயங்கள். மூத்ததின் அரையில் ஒரு கால் சட்டை; மீதி 'பிறந்து' கிடக்கின்றன. ஒவ்வொன்றின் உடலிலும் எலும்பும் தோலும் ஏற்படுத்தும் மேடு பள்ளங்களில் அவன் கண்கள் ஏறி இறங்குகின்றன.

புதிய விழிப்பும் உணர்வும்.

'இதுகள் என்ரை படைப்புகள்! நான் பெறுற சொற்ப நேரச் சுகத்துக்காக, சீவிய காலம் முழுக்க க டப்பட்ப்போகிற உசிர்கள்.... இதுகளுடன் என்னொண்டைச் சேக்கிற பாவத்தைச் செய்யவா? ... ஐயோ! கொடுமையே!'

தெய்வானை தண்ணீரைப் பேணியில் வார்த்து, மகனிடம் கொடுத்து விட்டு, அவன் குடிப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். வேலன் அவளைப் புதுமையாகப் பார்க்கிறான்.

'இவள் எனக்காக ஒமெண்டிடுவாள். ஆனா இவள் புள்ளைப் பெத்துக் கிடக்கேக்கை ஆன சர்ப்பாடு குடுத்தனா? புண் வயத்தோடு எத்தினை நாள் பட்டினி கிடந்திருப்பாள்? இந்த உடலோடையா என்னட்டை வந்தாள்?'

"இந்தாப்பு தண்ணி!"

தான் குடித்து, மீதியைத் தகப்பனிடம் நீட்டினான். வேலன் எண்ணம் கலைந்து, படக்கென இரு கைகளாலும் வாங்கி 'மடமட' வெனக் குடிக்கிறான். உடலில் வீரித்துப்பரந்த உணர்ச்சி, குளிர்ந்து விறைக்கின்றது. வேலன் ஞானியின் நிலைக்கு இறங்குகிறான். இதயத்தின் கவசம் குறாவி மூடுகிறது.

"இனிமேல் நான் இந்தப்பக்கம் வரமாட்டன்." உதடுகள் அசைந்து, கண்களில் பனித்திரை படர்கிறது. உயிராகி நின்ற ஆசை நோய்ப்பட்டு அமுங்குகிறது.

'கடவுளே எத்தினை இட்டுமுட்டுக்கள்?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயம் முனகி அடங்கி விடுகிறது. அவனின் உணர்வாகி அவனையே பார்த்துக் கொண்டு, ஏங்கி இருந்த தெய்வானை, நெஞ்சம் அலைமோதி கண்களில் இருந்து வழிந்த நீரைச் சேலைத்தலைப்பால் துடைத்துக் கொண்டு, விழுந்து குறண்டிக் கொள்கிறாள்.

அவள் கண்களும் மனமும் வேலனையே அனுதாபத்துடன் நோக்குகின்றன. வேலன் திண்ணையின் தெற்கு மூலைக்கு வந்து, முன்வளைந்து, முழங்கால்களை மடக்கி இழுத்துக் கொண்டு கிடக்கிறான்.

தெய்வானைக்கு அவன் மேல் இரக்கமும், அனுதாபமும் அரும்பி வளர்கிறது. அவனையே பார்த்துக் கொண்டு, அவனின் கோலத்தில் கிடக்கிறாள். மூண்டாஞ் சாமக் கோழி கூவி ஓய்கின்றது. இருளின் கனம் குறையவில்லை. அப்போது தான் வேலனுக்குக் கண்கள் அயர்ந்து போகின்றன.

கீழ்வானம் கன்னியின் கன்னச்சிவப்பைத் தன் வதனத்தில் பூசிக் கொள்கின்றது. தெய்வானை தன் இடத்தில் இல்லை. 'றிகேஷா' பெட்டி போல வளைந்து சோர்ந்து கிடக்கும் வேலனின் முதுகுக்கு, முதுகுகாட்டி வளைந்து கிடக்கிறாள். கூந்தல் கலைந்து பரவிக் கிடக்கிறது.

இருவருக்கும் விடிந்து விட்டது தெளிவாகத் தெரிகிறது. எழுந்திருக்க முடியாமல் இருவரும் குற்ற உணர்வில் தம்மை முழுதும் உட்படுத்திக் கிடக்கிறார்கள்.

**ரசிகர் குழு – போட்டிக் கதைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அது உள்ளேதான் இருக்கிறது

நாய்களும், கண்ணுறங்கி அமைதிக் கொள்ளும் அகல இரவு வேளையில் செல்லப்பா தன் வீட்டுக்குள்ளே பாயில் நீட்டி நிமிர்ந்து முகட்டை பார்த்தவாறு கண் விழித்து கிடக்கிறான். தலைப் பக்கமாய் அரிக்கேன் லாம்பு மங்கலாய் எரிந்துக் கொண்டிருக்கிறது. அவனது மனைவி சரஸ்வதி களைப்பில் கண்கள் வலிந்து மூடி விழித்தாலும் கணவனின் நினைவோடு அவனையே நோக்கியவாறு இருக்கிறாள். அவர்களுடைய இரு பெண் பிள்ளைகளும் நீண்ட நேரமாக தகப்பனுக்கு அருகில் இருந்துவிட்டு சற்று தூரத்தில் சென்று படுத்துத் தூங்கிவிட்டார்கள். வெளியில் காற்று மரங்களை முறித்துக் கொள்ளும் சத்தம் மட்டும் கேட்கிறது.

செல்லப்பா இன்று என்றும் இல்லாதவாறு தனக்குள்ளே ஊமைத் தனமான மரண அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறான். அந்த அவஸ்தையை அவனே தனக்குள் நிறுத்திக்கொள்ள முடியாது தொடர்ந்து எழும் சிந்தனையால் எழும் உணர்வுகளுக்குள் நிதர் சனமாகிப்படும் துன்பங்களை எவராலும் புரிந்துகொள்ள முடியாது.

அவன் விடும் மூச்சுகள் இரவின் அமைதியால் சற்று பெரிதாகக் கேட்கின்றன. சரஸ்வதிக்கு கணவனைப் பார்க்கப்பார்க்க அவன் சிறைக்குப் போனது முதல் இன்று வரை அவனுக்காகப்படும் கஷ்டங்களையும் இன்று தனியாக நின்று குடும்பத்தின் பாரத்தையும் அவனையுமே தாங்கிக் கொண்டு நிற்கதியாக நிற்கும் நிலையையும் எண்ண, எண்ண நெஞ்சம் புகைந்து கண்கள் கலங்கிக்கொள்கின்றன.

எவ்வளவு தான் க டங்கள் பட்டும், தன் கணவன் ஒன்றுக்கும் உதவாத ஒரு உயிராக பூமிக்கே ஒரு பாரமாக ஆகிவிட்டானே என்று மனம் பேதலித்துக் கொள்கிறாள்.

செல்லப்பா சிறையில் நான்கு வருடங்கள் இருந்து விடுதலை யாகி வீட்டுக்கு வந்து மூன்று வருடங்களாகின்றன. இந்த மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருட காலத்தில், அவன் எந்த வேலையும் செய்யவில்லை. சிறையில் இருந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தவன் வீட்டைவிட்டு தெருவுக்கே போகத் தயங்கினான். வீட்டு முற்றத்திலும், வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள பிள்ளையார் கோவில் வாசலிலும், வீட்டு வாசலிலும், வீட்டு வளவில் நிற்கும் மாமரங்களின் கீழும் குந்திக் குந்தி இருந்து, கை விரல்களால் நிலத்தில் ஏதாவது கிறுக்கியவாறு யோசித்து யோசித்து உடல் மெலிந்ததைத் தவிர வேறேதும் நடக்கவில்லை.

அவன் யோசிப்பது ஏதைப்பற்றியுமல்ல, தான் செய்த கொலையைப் பற்றித்தான். அவன் செய்த அந்தக் குற்றத்தையிட்டு அவன் உணர்ந்து கொண்டிருப்பதைப் போல், அவன் மனைவியோ, உறவினரோ அயலவர்களோ உணர்ந்ததாகத் தெரியவில்லை.

"இவன் ஏன் சதா யோசித்துக் கொண்டிருக்கிறான்? மனிதன் தவறு செய்வதில்லையா? குடும்பத்தையே கவனியாமல் இருக்கிறான். அவள் சரஸ்வதி தனியக் கிடந்து குடும்பத்தையே ஓட்டமுடியாமல் கடப்படுகிறாள்." என்று தான் எல்லோரும் கூறிக்கொள்கிறார்கள். சரஸ்வதி, தான் சொல்லி நடக்காமல், தன் உறவினரைக் கொண்டும் அவனுக்குப் புத்தி சொல்லிப் பார்த்தாள். ஆனால் செல்லப்பாவின்தால் யோசித்துக் கொண்டிருப்பதை நிறுத்தமுடியவில்லை.

அவளுக்கு எதுவும் கவலை இல்லை, ஆனால் எஃகு போல் இறுகி, சந்த சதையாய் இருந்த அவனுடைய உடம்பு, சிறைக்குப் போய்விட்டு வந்தபின், அனவரதமும் யோசித்து யோசித்து ஒழுங்காகச் சாப்பிடாமல் உசகி, எலும்பும் தோலுமாகி விட்டதை நினைக்க அழுகை பீறிட்டுக் கொண்டுவரும்.

அவனுக்குக் கொலைக் குற்றத்துக்காக மரண தண்டனை விதிக்கப்படுமென்று பயந்த அவள், அவனை உயிரோடு மீட்டு எடுக்க தன்காணியை ஈடுவைத்து, நகைகளை விற்று, வழக்காடி மரண தண்டனைக்குப் பதிலாக ஆறு வருட சிறைத் தண்டனை கிடைத்தது.

தாடி வளர்ந்து இருட்டிப் போய்க்கிடக்கும் அவனுடைய முகத்தையே சரஸ்வதி பார்த்துக் கொண்டிருக்கிறாள். இன்று பகல் முழுவதும் அவன் யாருடனும் பேசவேயில்லை. மற்ற நாட்களில் ஏதாவது கேட்டால், நீண்ட நேரத்தின் பின்பதில் சொல்வான். காலை 5 மணிக்கு எழுந்து முகம் கழுவி திருநீறு பூசி வைரவ கோயிலுக்குப் போய் நெடுநேரம் கும்பிட்டுவிட்டு வந்து, வீட்டு முற்றத்தில் நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமரத்தின் கீழ் இருந்தவன், பொழுதுபடும் வரை அங்கேயே இருந்தான். சரஸ்வதி சாப்பாட்டைப் பக்கத்தில் கொண்டு போய்க் கொடுத்தாள். அவன் விரும்பி இரண்டு வாய் தானும் சாப்பிடவில்லை. சிறைக்குப் போய்விட்டு வந்த அவன் தானாகவே மச்சம் சாப்பிடுவதை நிறுத்திக் கொண்டான். காலம் போகப்போக உணவையே விரும்பிச் சாப்பிடுவதில்லை. இப்பெழுது இரண்டொரு வாய்சாப்பிடுவதில் வந்து நிற்கிறது.

ஒன்றுமே பேசாமல் யோசித்தவாறு இருக்கும் அவனையிட்டுப் பயந்த சரஸ்வதி, இன்று அவனிடம் அதிகமாகப் பேச்சுக் கொடுத்தாள். 'ஏன் இப்படி இருக்கிறீங்க' என்று கேட்டாள். பிள்ளைகள் வந்து அருகில் இருந்து பேசினார்கள். அவன் வாய் திறவாது 'ம்' என்னும் மௌன அனுகலுடன், சிந்தனையில் நிழல் படிந்த அவன் கண்கள் அங்குமிங்கும் அசைய கைவிரல்களால் நிலத்தில் ஏதேதோவெல்லாம் கிறுக்கிக் கொண்டிருந்தான்.

"இனி நித்திரை கொள்ளுங்கோ? நடுச்சாமமாகுது!" அவன் யோசிப்பதை நிறுத்தி தூங்கிவிட வேண்டுமென்பதே அவள் ஆசை. அவன் சரியாக நித்திரை கொண்டு ஏறக்குறைய இரண்டு வருடமாகிறது. முன்பெல்லாம் விளக்கை அணைத்துவிட்டு சரஸ்வதிக்கு தான் தூங்குவதாகக் காட்டினாலும், கண்மூடி விழித்தே கிடந்தான். இப்பொழுது அவனால் இருட்டில் கண்மூடியும் இருக்க முடியவில்லை. கண்விழித்தும் இருக்க முடியவில்லை. நடுச்சாம வேளையிலும் பகலில் போல் கண் விழித்துக் கிடக்கும் அவனைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர சரஸ்வதியால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.

"இங்கேருங்கோ! கொஞ்ச நேரமெண்டாலும் நித்திரை கொள்ளுங்கோவன்" அவள் கெஞ்சினாள்.

"ம்"

செல்லப்பாவுக்கு எப்படித் தூக்கம் வரும், அவனுடைய மனம் விழித்துக் கொண்டிருக்கிறது.

"நான் உனக்கு என்ன குற்றம் செய்தேன்? என்னை ஏன் அடித்துக் கொல்லுகிறாய்?"

அவனால் அடித்துக்கொல்லப்பட்ட கந்தையா சாகும் போது எழுப்பிய அந்த ஈனஸ்வரமான ஒலிகள்தான் அவனுக்குள்ளே அசைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்நேரமும் சில வேளைகளில் ஓங்காரமாகவும், சில வேளைகளில் மிக ஊமைத்தனமாகவும் மனதை நெரித்து உயிர் மூச்சு உள்ள அசைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

கந்தையா சாகும்போது இந்தக் கேள்வியைத்தான் கேட்டான் அதன் பின் பேசவேயில்லை. செல்லப்பா அந்தக் கும்மிருட்டில், மரத்தின் பின்னால் ஒளித்துக் கொண்டு நின்று கந்தையா வேலை விட்டு வரும்போது, இரு கைகளாலும் உலக்கையைப்படித்து ஓங்கி அவன் தலையில் அடித்தபோது, அவன் நாயைப் போல் ஊளையிட்டுக் குளறி, பிளந்து இரத்தம் பீறிட்டு ஓடும் தலையை, இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு சுழன்று துடித்து ஓய்ந்தபோது இவற்றைத்தான் கேட்டான். செல்லய்யா இரண்டாம் அடி அடித்த போது அவன் இறந்தே விட்டான்.

ஆனால் கந்தையாவுக்கு தன்னை அடித்தது யாரென்றே தெரியாது. அவன் கேள்வியில் நீதி இருக்கிறது, அவன் நாய்க்கும் கல் எடுத்து எறியாத ஒரு நல்ல மனிதன். அவன் யாருக்கும் எந்தத் துரோகமும் செய்யவில்லை. கந்தையாவின் மனைவியை ஆசை நாயகியாக வைத்திருந்த செல்லப்பா, அவள் ஏற்றிய வெறியில், அவளின் துணிவான தூண்டுதலில் கொலை செய்து விட்டான். ஆனால் அவன் சிறை சென்ற பின், அவள் வேறு ஒருவனைக் கூட்டிக் கொண்டு போய் விட்டாள்.

செல்லப்பா சிறையில் இருந்து வரும்போது அவளை நினைத்து வரவில்லை. அவன் சிறையிலிருந்த காலத்தில், தனியாக இருந்து தான் செய்த குற்றத்தையிட்டு சிந்திக்கத் தொடங்கியபோதுதான் தான் ஒரு மகா பாவி என்பதை உணர்ந்தான். அந்தக் குற்றத்தின் பயங்கரம் அவனுடைய நீதி கேட்கும் மனதில் ஊர்ந்து ஊர்ந்து பரப்பையே பற்றிக் கொள்ள ஆரம்பித்துக் கொண்டது.

கந்தையா எழுப்பிய கேள்விகள் ஆரம்பத்தில் அவன் உள்ளத்தின் உள்ளே மிகமிகத் தூரத்தில் தான் கேட்டன. ஆனால் நாளும் நெருங்கிநெருங்கி வந்து உள்ளத்துக்குள்ளே, நடுவுக்குள்ளே இரைந்து கேட்கிறது. இப்பொழுதோ எந்நேரமும் கந்தையாவின் அந்தக் கரகரப்பான கேள்விகள் கடவுளையும், நீதிமான்களையும் சேர்த்துக் கொண்டு தைரியத்துடன் அவன் சாப்பிடத் தொடங்கும் போதும், சிரிக்க தொடங்கும் போதும், தூங்குவதற்குக் கண்களை மூடும் போதும், கடவுளைக் கையெடுத்துக் கும்பிடத் தொடங்கும் போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கிறது. அப்படி அந்த ஒலி அறைவுகள் நெஞ்சுக்குள்ளே முனகும் போது, அந்த இரவில் கந்தையா இரத்த வெள்ளத்தில் சுருண்டு துடித்ததும், தலையில் இருகைகளையும் பொத்திக் கொண்டு அனாதரவாக ஓலமிட்டதும் செல்லப்பாவின் கண்களுக்குள்ளே உயிர்த்துடிப்போடு தெரிகிறது. கந்தையாவின் தலையிலிருந்து தெறித்து உதட்டில் படிந்த இரத்தத்துளி அவனுக்கு இப்பவும் கரிக்கிறது. அவனால் அந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லவும் இயலவில்லை. ஆறுதல் கூறவும் தெரியவில்லை, தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொள்ளவும் முடியவில்லை.

களைப்பினால் கண்களை மூடி விழித்த அவனுக்கு, நெஞ்சு நடுங்குகின்றது. நீண்ட பெருமூச்சு ஒன்று நெஞ்சிலிருந்து எழுந்து காற்றை நிறைத்துக் கொண்டது. நான் மனித சட்டத்துக்குத் தப்பி விட்டேன். ஆனால், நான் தான் கொன்றேன். ஒரு குற்றமும் செய்யாத ஒருவனைக் கொன்றுவிட்டேன். கடவுள் என்னை மன்னிப்பாரா? கடவுளென்ன, என்னாலேயே என்னை மன்னிக்கமுடியவில்லையே? அவன் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். நெடுநேரம் கண்களை மூடிக்கொண்டு கிடந்தான்.

"ஐயோ!"

"என்னங்கோ?"

சரஸ்வதி விளக்கைத் தூக்கிப் பிடித்து அவன் முகததைப் பார்த்தாள்,

"என்ன செய்யுது?"

"ம்"

அவன் பலமுறை இப்படி மெதுவாகக் கத்தியிருக்கிறான்.

"நித்திரைக்கொள்ளுங்கோ எந்த நேரமும் யோசித்துக் கொண்டிருந்தால் இதுக்கொரு முடிவில்லையா?" அவள் சற்றுக் கோபத்துடன் கூறினாள்.

"ம்"

"விளக்கை அணைக்கிறன். கொஞ்ச நேரம் நித்திரை கொள்ளுங்கோ!"

அவனிடமிருந்து பதிலில்லை. சரஸ்வதி கிட்ட நெருங்கி அவனுடைய முகத்தைக் கூர்ந்து நோக்கினாள். அது அவனுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேயறைந்த முகம்போல் தெரிந்தது. கொலைகாரனின் முகம் இப்படித் தான் இருக்குமோவென்று அவளுக்குள் சந்தேகம் எழுந்தது. அந்த நல்ல மனிதனைக் கொன்ற பழி உன்னைச் சும்மா விடாது! என்று ஊரில் பேசுவது அவள் காதிற்கும் வந்திருக்கிறது. அதை நினைக்க அவளுக்குத் நெஞ்சிடியைக் கொடுத்தது

"கொஞ்ச நேரம் நித்திரை கொள்ளுங்கோவன்!"

"ம்"

"ஐயோ! உங்களைக் கும்பிட்டுக் கேட்கிறன்! கண்களை மூடிக் கொண்டு நித்திரை கொள்ளுங்கோ யோசிச்சு, யோசிச்சு என்னத்தைக் கண்டிங்க?"

"எனக்கு நித்திரை வராது!"

செல்லப்பா வாய்திறந்து பேசினான், அவன் பேசுவது சரஸ் வதிக்கு ஒருவகையில் மகிழ்ச்சியாக இருந்தது.

"அது வரும். நீங்கள் ஒண்டையும் யோசிக்காதையுங்கோ! படுங்கோ!"

"அதுதான் என்னால் முடியவில்லையே!"

"ஏன் இப்படிச் சொல்றீங்கள்?"

அவன் மீண்டும் மௌனமானான், அவள் கேட்டுக் கொண் டிருந்தாள். சற்று நேரத்தின் பின்,

"ம்.... ஏதோ ஒன்று என்ரை நெஞ்சுக்குள்ளே முனகிக் கொண்டு நெஞ்சை அறுத்துக் கொண்டிருக்கு!"

சரஸ்வதிக்கு என்ன தான் சொல்லுவதென்று தெரியவில்லை. மனம் தவித்தது.

"எல்லாம் உங்கள் மனம்தான்" என்றாள்.

"அது கந்தையாவின் குரல் தான்!"

அதை அவன் கூறும்போது உள்ளமெல்லாம் நடுங்கிற்று எப்பொழுதும் தன் மனதோடு பேசிப்பேசி அந்த மனதின் ஆளுகைக்கு உட்பட்டு, இப்போது அந்த மனம் அனுங்கினாலும் பயந்து கொள்கிறான்.

"உங்களுக்கென்ன விசரா? நீங்கள் அதையே நெடுகிலும் யோசித்துக் கொண்டிருப்பதால்தான் அப்படித்தெரியுது. குற்றஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தவன் வாழ்றதில்லையா? உங்களுக்காக மனப்பயம்தான். வேறொன்றுமில்லை."

அவன் தலையைச் சிறிது அசைத்து சரஸ்வதியை யோசனையோடு பார்த்தான்.

"நான் செய்த குற்றம் எனக்குத்தானே தெரியும்!"

மிகவும் தாழ்ந்த தொனியில் கூறினான். கண்களிலிருந்து கண்ணீர் மெதுவாக உருண்டு கொண்டிருந்தது. சரஸ்வதி தானும் அழுதுகொண்டு சேலைத் தலைப்பால் அவனுடைய முகத்தைத் துடைத்து விட்டாள்.

"ஊரிலே என்னைக் கொலைகாரன் எண்டுதானே சொல்கிறார்கள்? நீ கொலைகாரன் மனைவிதானே? இந்தப் பிள்ளைகள் கொலைகாரன் பிள்ளைகள் என்று தானே..." சரஸ்வதி இடைமறித்தாள்.

"ஐயோ என்ன நீங்கள்? நீங்கள் தான் அப்படி நினைக்கிறீர்கள். அவர்கள் அதை எப்பவோ மறந்துவிட்டார்கள்! நீங்கள் பேசாமல் படுங்கோ!" என்று கூறிவிட்டு அவனைப் பார்த்தாள்.

"இல்லை பொய்! கடவுளும் என்னைக் கொலைகாரனென்று நினைக்கிறார்" இதற்கு சரஸ்வதி என்ன கூறுவதென்று புரியாமல் விழித்தாள். அனுதாபத்தோடு செல்லப்பாவை அவதானித்துக் கொண்டிருந்தாள்.

"நீங்கள் உருகுவதைக் கண்டு கடவுள் எப்பவோ உங்களை மன்னித்திருப்பார். நீங்கள் தான் வீணாக நினைத்து நினைத்துச் சாகிறீர்கள்." கைகளை மார்போடு இறுக்க கட்டிக்கொண்டு அவன் நீட்டி நிமிர்ந்து கிடக்கும் சிலைபோலக் கிடந்தான். ஆனால் அவனுடைய இதயம் கல்லுக்குள் சில்லு அமைந்து அவனுக்கு மட்டும் கேட்கும் ஒலிகளுடன் இயங்கும் இயந்திரமாகி விட்டது. அந்த இயந்திரத்தின் நெரிசல்களுக்குள் கந்தையாவின் குரலும் தனியாகத் திரிகிறது.

'குற்றம் செய்தவனை மன்னிப்பவன்தான் மனிதன். அவனைத்தான் கடவுள் நேசிப்பார், நான் ஒரு குற்றமும் செய்யவில்லை! அவனைக் கொலைசெய்து விட்டேனே?'

அவள் தனக்குள்தானே முனகிக் கொண்டான். நெஞ்சு உயர்ந்து தாழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ!"

அவன் நெஞ்சைக் கைகளால் அழுத்திக் கொண்டுவாய் திறந்து கத்தினான். சரஸ்வதி துடித்துப் போனாள்.

"என்னது? என்ன செய்யுதுங்கோ?"

"ம்"

"நெஞ்சுக்குள்ளே என்ன செய்யுதுங்கோ?"

"ஒண்டுமில்லை, நெஞ்சு ஒரு மாதிரி"

"ஐயோ கடவுளே: நான் என்ன செய்வேன்? யோசிக்காதை யுங்கோ! யோசிக்காதையுங்கோ எண்டு எத்தனை முறை சொல்கிறது" சரஸ்வதி கோபத்தோடு லாம்பை அணைத்து விட்டு இருட்டுக் குள்ளே இருந்து அழுது கொண்டிருந்தாள்.

அவன் எதுவும் கூறவில்லை. கொஞ்சநேரம் அவனுடைய மூச்சுக்கள் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தன.

எங்கும் ஒரே இருள்.

"ஐயோ! சரசு! சரசு!"

"விளக்கைக் கொளுத்து"

அவள் அவசரஅவசரமாக விளக்கை ஏற்றினாள். அவனு டைய முகத்தைக்கிட்ட நெருங்கி நோக்கினான்.

"என் மூச்சே நான்விடுறமூச்சே கந்தையா மூச்சு விடுற மாதிரி இருக்கு! இருட்டிலே என் பக்கத்தில் படுத்திருக்கிற மாதிரி இருக்கு"

அவனுடைய முகம் வேர்த்து நெஞ்சு நடுங்கிக் கொண்டிருந்தது கைகளும் உள்ளே நடுங்கின.

"முருகா! முருகா!"

அவன் வணங்குவதை சரஸ்வதி பார்த்தாள். அவனைக்கட்டி அணைத்துக் கொண்டு குளறி அழவேண்டும் போல் அவளுக்கு இருந்தது.

"ஐயோ இதெல்லாம் உங்க நினைப்பு நீங்கள் ஒணடையும் யோசிக்க வேண்டாம். உங்களைக் கும்பிட்டுக் கேட்கிறேன்"

"கொஞ்சு நேரம் நித்திரை கொள்ளுங்கோ, கொள்ள மாட்டீங்களா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பா சரஸ்வதியை தன் குழிவிழுந்த கண்களால் பார்த்தான். அவனது கைகளை ஒருகையால் பிடித்தான். அவனுக்கு கண்கள் கலங்குகின்றன. அவன் அவளை ஆசையோடு பார்க்கும் போது சரஸ்வதிக்குப் பயமாகவே இருந்தது!

"என்னங்க?"

"எனக்கு நித்திரை கொள்ள ஆசையாஇருக்கு. ஆனா நித்திரை கொள்ள முடியுதில்லையே!"

தன் ஒரு கையால் நெஞ்சைப் பலமாக அழுத்தித் தடவிக் கொண்டான். சரஸ்வதி நெஞ்சுமுட்டிய துக்கத்தால் தேம்பி அழத் தொடங்கி விட்டாள்.

"நீ அழதே சரசு! நான் நித்திரை கொள்றன். நீ விளக்கை நூர்த்து விட்டுப் படு"

அவன் தன் உடம்பைத் திரும்பி, நெஞ்சை இருகைகளாலும் அழுத்தியவாறு குப்புறப் படுத்துக் கொண்டான்

சரஸ்வதி விளக்கணைத்தாள்.

அவனால் அப்படியும் படுத்துக் கொள்ள முடியவில்லை கனத்துக் கொள்ளும் தலையை தலையணைக்குள் புதைத்தான். கொஞ்ச நேரத்தில் நிமிர்ந்து முகட்டைப் பார்த்தவாறு கிடந்தான்.

சரஸ்வதிக்கு அவன்விடும் மூச்சு மட்டும்தான் கேட்கிறது. அவனுக்கோ அவனின் மனசுக்குள்ளேயே வேதனை?"

நான் என்ன குற்றம் செய்தேன்?

என்னை ஏன் அடித்துக் கொல்லுகிறாய்?

மனத்தின் உள்ளே அதன் பரப்பு எங்கும், நெஞ்சுக் கட்டுக் குள்ளே எதிரொலித்துக் கொண்டு அவனால் தூங்க முடியாத அந்த ஒலிகள் எழுகின்றன. மூளையை யாரோ விரல்களால் பிசைந்து நசுக்கி பாரமான கல்லால் அழுத்துவது போல இருக்கிறது. இதயம் கொதித்து நடுங்கிக் கொள்கிறது.

மனதுக்குள்ளே அவன் கொள்ளும் உணர்வுகள்; நச்சுப்புகை நிறைந்த இருட்டறையிலே அகப்பட்டு உயிர் போகாமல் அங்கு மிங்கும் ஓடிச் சுவர்களில் முட்டி அந்தரிக்கும் ஒரு யாணையைப் போலத் தவிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கண்களுக்குள்ளே கந்தையா இரத்த வெள்ளத்தில் துடித்துக் கொள்வதும் குளறிக்கொள்வதும் தன்னைப் பார்த்து சிரிப்பது போலவும் பிரமைகள்.

அவனால் தாங்க முடியவில்லை... இருகைகளாலும் தன் தலைமுடியை பலமாகப்பிடித்துக் கொள்கிறான்.

"ஐயோ! நான் என்ன செய்வேன்! ஐயோ"

அவன் வாய்விட்டு யாரையோ கூப்பிடுவது போல பெல வீனமாகக் கத்தினான்.

"விளக்கைக் கொளுத்து விளக்கைக் கொளுத்து!" சரஸ்வதி எழுந்து பதற்றத்துடன் விளக்கை ஏற்றினாள். "என்னங்க, ஏன்ன செய்யுது?"

செல்லப்பா எழுந்து குந்தியிருநதான். கைகள் இரண்டும் நெஞ்சைத் தடவியவாறு இருந்தன.

"ஐயோ! என்னால் வாழ முடியாது. என்னால் வாழ முடியாது. என்னைக் கொன்று விடுங்கோ. என்னைக் கொன்று விடுங்கோ."

பிள்ளைகளும் எழுந்து பயத்துடன் அழுது கொண்டிருந்தன. அவன் கத்திய சத்தத்தை கேட்டுப் பக்கத்து வீடுகளில் உள்ளவர்களும் வந்து அவனைச் சூழ்ந்து நின்றனர். அவர்களுடைய முகங்களை ஆறுதலாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றான்.

"ஐயோ! செல்லப்பா உனக்கு என்னப்பா செய்யுது? சொல்லு என்னப்பா செய்யுது?" அவனுக்கு அவர்கள் முகங்களைத் தெரிய வில்லை. அவன் நெஞ்சோடு இரு கைகளையும் கோர்த்துக் கும்பிட்டு மடித்தவாறு,

"என்னைக் கொன்று விடுங்கோ! என்னைக் கொன்று விடுங்கோ! என்னால் வாழ முடியவில்லை. என்னைக் கொன்று விடுங்கோ!" என்று இறுகிய அழுகையுடன் கத்திக் கொண்டிருந்தான் அங்கு நின்ற எவருக்கும் காரணம் எதுவும் நன்றாகப் புரியவில்லை.

அது அவனுக்குத்தான் தெரியும்.

நீதி உறங்குவதில்லை. அது உள்ளேதான் இருக்கிறதோ!

வீரகேசரி – 1972.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவமான கோழைகளே!

அன்று சிவகுருவுக்கு ஒரு வெறி மயக்கம் போல. இதற்கு முன்பும் அப்படி அவனுக்கு ஏற்படுவதுண்டு. ஆனால் அன்று அந்த இளம் பகலில் வெறி மயக்க உணர்வில் உடலில் கொதிப்பேறிக் கொள்வதால் அவனை அவனால் அடக்கிக்கொள்ள முடியாதோ என அஞ்சினான். அவனுக்குக் காய்ச்சல்; அதனால் லீவு போட்டு விட்டு பங்களாவில் இருந்தான். பங்களாவில் யாருமில்லை. அவன் தான் தனியாக. கட்டிலில் நீட்டி நிமிர்ந்து கிடந்து பத்திரிகை வாசித்துக் கொண்டிருக்கும் அவன் மனம் சுதந்திரமாக இருந்தது. அது நினைக்காத நினைப்பெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தது. ஏதோ வெறுத்து ஒதுக்கிவிடுவது போல் கெட்ட நினைவுகள் என்று கூறுவோமே அவை நினைத்து நினைத்து எவ்வளவு நேரம் மட்டும் நினைவுகள் பசி கொண்டுவிட்டன. அவற்றின் தூண்டுதலால் உடலில் திமிர் ஏறிக்கொண்டது.

இரத்தத் துடிப்பு எதையும் செய்யத் தூண்டுமென்பார்கள். அவனுக்கு அப்போது அது சரி. அவனால் அப்போது ஓரிடத்தில் படுத்திருக்க முடியவில்லை. காய்ச்சலாலும் அவன் உடம்பு சுடுகிறது. சிவகுரு தன் மெல்லிய உடம்பைத் தூக்கிக் கொண்டு எழுந்தான். எண்ணங்கள் அவனை ஆட்படுத்திக் கொண்டது, அவனுடைய முகம் இருக்கின்ற கோணத் தில் தெரிகின்றது. சும்மா அங்குமிங்கும் நடந்து வந்தான், சன்னல் ஊடாக கடைத்தெருவில் வந்துபோகும் மனிதர்களுள், கண்கள் பெண்களைப் பார்க்கும் ஆசையோடு அலைந்து வந்தன.

அந்தக் கடைத்தெருவில் நாட்டிலுள்ள சிங்களப் பெண்களும் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் பெண்களும் வந்து போவார்கள். ஒவ்வொரு பெண்ணையும் பார்த்துக்கொண்டிருந்தான். அப்படியே அவனுள்ளம் எந்தப் பெண்ணையும் சத்தமிட்டு அழைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே வரும்படி கூறிக்கொள்ளத் துணிந்து கொண்டிருந்தது. இந்த நேரத்தில் மனம் கடவுளையும் துணைக்கழைத்துக் கொண்டது.

சிவகுரு இதற்குமுன் பெண்களைப் பற்றி நன்றாக அறிந்து உள்ளான். எந்தநேரத்தில் எப்படியெல்லாம் நடந்து கொள்வார்கள் என்று அவனுக்குத் தெரியத்தான் வேண்டும். ஆனால் ஒரு பெண் ணையும் இந்தக் கெட்ட எண்ணத்துடன் தொடவில்லை. இதுவும் பொய்யா? தொட்டிருப்பானா? உண்மையாக இல்லை, அவன் ஒரு நல்லவன். முப்பத்தி மூன்று வயசாகி விட்டது. தலையில் முன் தலை மயிர்கள் சில கூட்டமாக நரைத்தும் விட்டன. இன்னும் கலியாண மாகவில்லை. அதற்குக் காரணம் குடும்பப் பொறுப்பு. இதுவரை அவன் தன் ஆசைகளைப் பூர்த்தி செய்திருக்கலாம். சந்தர்ப்பங்களும் அவனுக்குக்கிடைக்காமலில்லை.

அவன் சின்ன வயசிலிருந்து ஊரிலும், வீட்டிலும் ஒரு நல்ல பொடியன். ஒரு சோலி சுரட்டுக்கும் போகமாட்டானென்று பெயர். அந்தப் பெயரை அவன் கெடுத்துக் கொள்ள விரும்பவில்லை. அதனால் அவன் குனிந்த தலை நிமிராமல் வாழ்ந்து வந்தான். அப்படியேதும் பிழையாக நடந்து விட்டு கெட்ட பெயர் எடுத்து விட்டால் நல்ல சீதனத்ததுடன் பெண் எடுக்க முடியாது. தன் தங்கைமாரைத் திருமணம் செய்ய ஒருவரும் வர மாட்டார்களெனப் பயப்பட்டுக் கொண்டிருந்தான். அந்தப் பயம் தான் அவன் நிலைக்கு அடிப்படையானது என்று கூறவும் முடியாது.

இப்போது சிவகுருவுக்கு மதிப்புள்ள வேலை. தேயிலைத் தோட்டத்தில் 'கிளார்க்'. தொழிலாளர்கள் 'சேர்' போட்டு நல்ல மதிப்பாக மரியாதையாக நடத்துகிறார்கள். இந்த மதிப்பு யாழ்ப் பாணத்தில் இல்லை. அதனால் இந்த மதிப்பையும், இந்த வேலை யையும் இழக்க விரும்பவில்லை.

அவன் உணர்ச்சிமயமான உள்ளத்தோடு மேல் உடம்பைத் துவாலையால் போர்த்துக்கொண்டு முன் ஹாலில் உள்ள ஈஸிச் சேரில் வந்து சாய்ந்து கிடந்தான். அவனுக்கு அவ்வளவு கடுமையான காய்ச்சல் இல்லைதான். நெஞ்சம் கூட இடித்துக் கொண்டிருந்தது. கால் இடுக்குகளில் கையைச் சொருகிக் கொண்டான். சுவரில் உள்ள கூட்டில் சிட்டுக்குருவிகள் சோடியாக இருந்து 'கீச்' போட்டுக் கத்திப் பறந்துபறந்து விளையாடுகின்றன. அவனுடைய மனநிலை அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குத் தெரியாதுபோலும். அதைப் பார்த்துக் கொண்டிருந்த அவனது அடி மனத்தில் ஏக்கமும், விரக்தியும் ஈரழித்துக் கொண்டு வந்தது. அப்படியே கொஞ்ச நேரம் உள்ளம் அசைந்தது. யாராவது அவனைத் தேடி வந்தாலும் இந்த நினைவுகள் மறந்து வேறு ஏதாவது பேசிக் கொள்ளலாம். ஜன்னல் வழியாகத் தேயிலை மலைத் தேரிகளில் கொழுந்து கிள்ளும் பெண்கள் நின்று கொழுந்து கிள்ளுவது தெரிந்தது.

கங்கரணி, கணக்கப்பிள்ளைமார், துரையுங்கூட தெண்டம் போடுவதை வைத்துக் கொண்டு எப்படியெல்லாம் பெண்களை வெருட்டிக் காரியம் சாதித்து விடுகிறார்கள். ஒரு கணக்கப் பிள்ளையாகப் போயிருந்தாலும் தேவலையென்று அவன் மணம் எரிந்து கொண்டிருந்தது. அவனோடு சிரித்துப் பேசிய பெண்களை யெல்லாம் ஏதோ கேட்கும்படி நினைவு அவனுக்கு எழுந்து கொண்டது. இப்போது யாராக இருந்தாலும் மற்றவர்கள் அறியா திருந்தால் அவனுக்குச் சரிதான். சிறிது நேரத்தில் அவனந்த நினைவுகளுடன் கிடக்க, இனிய ஒரு பாட்டின் ஒலி அவனுடைய காதில் மெலிதாக விழுந்தது.

அது, அவனின் இருதயத்திற்கு மங்களமாக இருந்தது. கடைத் தெருவின் ஓரத்தில் இருந்து அந்த இளம் பெண் குரல் காற்றைக் கிழித்து வந்து கொண்டிருந்தது. அவன் இருக்கும் பங்களாவுக்குச் சமீபமாக. அவிழ்ந்திருந்த சாரத்தைக் கட்டிக் கொண்டு ஈஸிச் சேரில் இருந்து எழுந்து நின்று எட்டி ஜன்னலூடாகப் பார்த்தான். தன் முகத்தை இருகைகளாலும் சேர்த்துத் துடைத்து விட்டு பார்த்துக் கொண்டே நின்றான்.

அழகான இளம் பெண்ணொருத்தி கடை கடையாக ஏறி இறங்கி, பாடிப்பாடிப் பணம் கேட்கிறாள். எலுமிச்சம் பழத்தின் நிறமிருக்கலாம். இளமைப் பருவம், அவள் உடலில் வாளிப்பைப் கொட்டித்தேய்த்துள்ளது. காலோடு அரையும் பாவாடை கட்டி, தாவணியும் அணிந்துள்ளாள். அவள் தன்னுடைய பங்களாவுக்கு நிச்சயம் வருவாளென்று எண்ணியதும் அவன் நெஞ்சு பெரு மூச்சோடு ஏறி, இறங்கிற்று. மனதுக்குச் சிறு நம்பிக்கை. இருதயம் உள்ளூர நடுங்கியவாறிருந்தது அவன் வாசல் பக்கம் வந்து வெளியில் ஆக்களைப் பார்த்துவிட்டு கதவைச் சிறிது திறந்துவிட்டு மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயத்தோடு வெளியில் பார்த்துக் கொண்டான். அந்த வீதியில் யாருமில்லை. அது ஒரு பக்கம் தேயிலைத் தோட்டமும் மறுபக்கம் நெல் வயலும் அமைந்துள்ள ஒரு சிறு கிராமம். இருந்திருந்துதான் கடைத்தெருவுக்கு யாரும் வருவார்கள்.

மெதுவாக வந்து காய்ச்சல்காரனைப்போல் ஈஸிச்சேரில் படுத்துக் கொண்டான். உணர்வில் துள்ளிக் கொள்ளும் அவனுடைய உள்ளம் அவன் பின்னாலேயே சுற்றுகின்றது. கொஞ்ச நேரத்தில் அவனே எதிர்பாராதபோது கதவருகில் அதே குரலில் பாட்டு, "ஏழை முகம் பாருங்கள்... இந்தப் பாழும் நாட்டில் ஏழைகள் வாழ வழியே இல்லையா?" அவள் தன் க டநிலைக்குப் பொருத்தமான பாட்டை தேடிப் பாடிக் கொண்டிருந்தாள். அதைச் சிவகுரு கவனிக்க வில்லை. அவனுக்கு விளங்கின மாதிரியில்லை. அவள் ஜன்னலால் கண்களைச் செருகி உள்ளே பார்த்தாள்.

"உள்ளவா; வந்து நின்றுபடி!" கரகரத்த குரலில் கூறிய அவன் அவள் வருகின்றளோ என்று கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டான். கதவைத் தள்ளியவாறு எதுவித கூச்சமோ அச்சமோ இன்றி உள்ளே வந்து கையிலுள்ள தகரப் பேணியைத் தட்டிய வண்ணம் அவனுக்கு முன்னால் கண்களை மூடிக் கொண்டு உச்சஸ்தாயில் குரலெடுத்து பாடிக்கொண்டிருந்தாள். அவளைப் பார்த்து உள்ளே, கொள்ளும் துடிப்பு அது அவனுக்குத்தான் தெரியும். தான் தனியாக நிற்கும் துணிவில் இதுவரை இல்லாத மாதிரி அவள் உடலில் தன் கண்களை மெதுவாக நகர்த்திக் கொண்டிருந்தாள். எழுந்து அணைத்துக் கொள்வோமா என ஏக்கம். "என்ன பருவத் திமிருடன் வாளித்து நிற்கிறாள்; கசங்காத மொட்டு சந்தேகமில்லை" என்று எண்ணிக் கொண்டான்.

சிவகுரு ஆவேசத்தில் மொரட்டுத்தனமாக எதையும் செய்து விடமாட்டான். அவனுக்கு முன்யோசனையும், நிதானமுமுண்டு. சும்மா பார்ப்பது போல் வெளிக் கதவைப் பார்த்தான். அவளே நன்றாக இழுத்து மூடிவிட்டு வந்திருக்கின்றாள். வெளியிலும் சன நடமாட்டமில்லை. நல்ல வெயில் அவன் பாட வேண்டாமென்று கையால் காட்டியதால் பாடுவதை நிறுத்திவிட்டு நின்றாள். அவனது கிறங்கிய கண்கள் அவளையே விழுங்குகின்றன, பார்த்துப் பார்த்து நெஞ்சம் நினைத்துக் கொள்வதை அவனால் நினைத்துக் கூற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. நெஞ்சுக்குள் அடைப்பு. செருமிவிட்டு கொஞ்சம் நிமிர்ந்து நின்று கொண்டான். அவள் கண்களில் ஓடும் பருவ நரம்புகளும் மேனித்துடிப்பும் குலுக்கமும் அவளைத் தன் எண்ணத்திற்கு இசையவைக்கும் என்று சிவகுரு நினைத்துக் கொண்டான். ஆனால் அவளுடைய சம்மதமில்லாமல் எதைத்தான் செய்ய முடியும் என்ற தெளிவுமுண்டு, அவளிடம் அனுதாபம் கொண்டவனைப் போல் விசாரிக்கத் தொடங்குகிறான். பயத்தில் தெருப் பக்கத்தையும் பார்த்துக் கொண்டான்.

"உனக்குப் பேர் என்ன?"

"மங்களமுங்க"

"நல்ல பேர், நீயேன் இப்படி பாடிக் கொண்டு அலைஞ்சு திரிகிறாய்?"

"இதென்ன கேள்வியுங்க; சும்மா இருந்தா சோறு கிடைக்குமா?"

"ஏன் உனக்குத் தோட்டத்தில் வேல இல்லையா?"

"வேலதான் செய்துக்கிட்டிருந்தேங்கையா; தொரை என்னோட முறை தவறி நடந்திட்டாரு; நான் கூடயால அவரை அடிச்சது குத்தமெனு நிரூபிச்சு; பற்றுச் சீட்டுக் கொடுத்து விரட்டிப் புட்டானுக."

"ஏன் உனக்கு ஐயா அம்மா எங்கே? இல்லையா?"

"இல்லையா, ஆயா என்னப் பெத்துப்புட்டு செத்துப் போச்சுதுங்க. ஐயா, மலையில் வேல செய்துக் கிட்டிருக்கையில் சறுக்கி விழுந்து செத்துப்போச்சி! பாட்டியும் நானுந்தா இருக்கிறமுங்க! பாட்டிக்கி கொழுந்தெடுக்க முடியாதுங்க, கை நடுக்கோம். லயத்தில இருக்கு. அதுவுஞ் செத்துப் போனா எனக்கு இந்த ஒலகத்தில ஒன்னுமே இல்லையுங்க, நானேதான்!"

சிவகுருவுக்கு அவள் சொல்வதைக் கேட்கச் சலிப்பாக இருந்தது. அவன் தோட்டத்தில் 'கிளார்க்' அவனுக்கு ஒவ்வொரு நாளும் இதைப் போலக் கேசுகள் வரும். ஆனால் அவள் இதைக் கூறும் போது எதுவித பதட்டமுமின்றிக் கூறினாள். இப்படி எத்தனை பேருக்குக் கூறியிருப்பாள், அவள் துரைக்கு அடித்ததை விவரமாகக் கேட்கவும் விரும்பவில்லை. துரை அவளின் அழகில் மயங்கி, கணக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையின் துணையுடன் சேட்டை விட்டிருப்பான். அதை அவளிட மிருந்து அறிய அவனுக்கு உள்ளூரப் பயம். தன் காரியம் கெட்டு விடுமெனக் கருதினான்.

"எத்தனை வருசமாய் நீ இப்படித் திரிகிறாய்?"

"சுமார் இரண்ணு வருஷமுங்க!"

இப்பொழுது அவள் துரைக்கு அடித்த மனநிலையோடு இருக்க மாட்டாள். அவளுக்கும் பல பருவத் தொல்லைகள் இருக்கத் தானே செய்யும் என எண்ணினான்.

"உனக்கு எத்தனை வயசு?"

"உனக்கேய்யா அதெல்லாம்?"

அவள் பதில் சிவகுருவின் முகத்தில் அறைந்தது போலிருந்தது.

"சும்மா கேட்டேன் சொல்ல மாட்டியா?"

அவள் நிமிர்ந்து கிவகுருவின் முகத்தை நோட்டம் விட்டாள்.

"இருபதுங்க!"

அவன் கண்கள் அவள் உருவத்தைவிட்டு நீங்கவில்லை. அவளை நோக்க அவனுடைய அறிவு மயங்கி உணர்வு நிலை ஆதிக்க மடையப் பார்க்கிறது. கைவிரல்களை மடக்கி நீட்டி விட்டு சிறிது வேளை வாய் பேசாது இருந்தான். பின்பு,

"மங்களம் நீ எனக்கு ஒரு உதவி செய்வியா?" என்று மெதுவாகக் கேட்டான்.

"என் உதவிங்கையா?"

சிவகுரு நிமிர்ந்து தன் பள்ளம் விழுந்த கண்களால் மங்களத்தைப் பார்த்தான், கண்களும் கண்களும் சந்திக்க நெஞ்சின் ஏக்கம் கூடியது. பெருமூச்சு விட்டான். அவன் யோசித்து அதை விடவில்லை. அவன் ஈஸிச்சேரை விட்டு எழுந்து நின்றான்.

"மங்களம் என்னைத் தவறாக நினைத்துக்கொள்ளாதே. எனக்கு இப்ப வயது முப்பத்து மூன்று ஆகுது. இன்னும் கலியாண மாகவில்லை. நான் சொல்வது பொய் இல்லை. உண்மை. இதுவரை சத்தியமாக ஒரு பெண்ணையும் கையால் தொட்டதில்லை. நீண்ட நாட்களாக என்ரை ஆசையையும் பூர்த்தி செய்ய முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு எண்டுமில்லாத மாதிரி ஒருமாதிரியாயிருக்குது. உனக்கு அந்த நிலைமை புரியுமெண்டு நினைக்கிறேன். மனம் ஒரே பித்துப் பிடித்தலையுது. நீயும் இளவயசு, உனக்கும் இந்த நிலை ஏற்பட்டிருக்கும். உன்னைக் கண்டதும்... கட்டிப் பிடித்து..... எப்படிச் சொல்வது. எனது நிலைமை புரியுதா? எவ்வளவு பணமும் தருகிறேன்... மங்களம்.."

சிவகுருவுக்கு மூச்சு பெரிதாக இழுக்க கைகளைப் பிசைந்து கொண்டு அவளையே ஏக்கமாக பார்த்தான்.

"அது முடியாதுங்கையா! அதுக்கு வேற யாரையும் பார்த்துக் குங்க. க்கும்... நா அந்தப் பொறப்பில பொறக்கலிங்க... க்கும்... உங்க சல்லிய குப்பையில வீசுங்க! நா, வாறங்கையா."

மங்களத்தின் முகம்சுருங்கி, கைகள் நடுங்கியது. அவள் போகத் திரும்பினாள். "மங்களம், நில்லு, பயப்படாதே நான் உன் இ டமில்லாம உன்னைத் தொடமாட்டேன்; இதை நம்பு"

சிவகுரு கதவோடு நின்றான். மங்களம் ஒன்றுமே கூறாமல் அவனுடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அவனுடைய முகக் கண்ணியத்தில் அவளுக்கு நம்பிக்கை போலும். சற்று எட்டி நின்று கொண்டாள்.

"மங்களம் எனக்கு இப்ப கலியாணம் நடவாது. நடக்குமென்று நம்பிக்கையுமில்லை. எனக்குப் பின்னால் வயதுவந்த தங்கச்சிமார் இரண்டு பேர் பெருமூச்சு விட்டபடி வீட்டிலிருக்குதுகள். வெளியில் என்னால் எங்கும் போய் எதையும் செய்ய முடியாது. எனக்கு வெளியில் நல்ல மதிப்புண்டு. இந்த விசயத்தில் பிடிபட்டால் அல்லது தெரிந்துவிட்டால் யாரும் என்னை மதிக்க மாட்டார்கள். என்னால் அதற்குப் பிறகு வாழவும் முடியாது. இப்ப நாங்க இரண்டு பேருந்தான் தனியாக இருக்கிறோம். இங்கு இப்ப யாரும் வரமாட்டார்கள்... உன் காலில் விழுந்து கேட்கிறேன்.. ஒரு முறை!"

அவன் எவ்வளவு பெலயீனன் என்பதை மங்களம் அறிந்தாள்.

அவனுடைய கெஞ்சுதலில் அவள் கண்களும் கலங்கிவிட்டதைப்போல் மங்களம் பதட்டமின்றித் தீர்க்கமான யோசனையுடன் அவனையே அசையாது பார்த்துக் கொண்டு நின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மங்களம்!"

"....."

"ஏன் பேசாமல் நிற்கிறாய்?"

அவன் மங்களத்தின் அருகில் செல்ல காலசைத்தான்.

"ஒங்களுக்குக் கலியாணங் கட்டிக்க எத்தனை வருஷமாகுங்க?"

"இன்னும் மூண்டு வருஷங்களாதல் பிடிக்கும்."

"ஒங்களை என்னால் திருப்திப்படுத்த முடியுங்களா?"

அவளுடைய குரல் சரியான நிதானமாயிருந்தது.

"நிச்சயமாக"

"நான் அழகுங்களா?"

"நீ ஒரு ரதியைப்போல இருக்கிறாய்!"

"என்னை உங்களுக்குப் புடிச்சிருக்குங்களா?"

"ஐயோ உன்னை ஆசை கொள்ளாத ஆண்களே இருக்க முடியாது! நிசமா!"

மங்களம் சில வினாடிகள் பேசவில்லை. உதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டாள்.

"நீங்க சொல்றதுக்கு சம்மதிக்கிறேன். ஆனா ஒண்ணு செய்யத் தயாரா நீங்க?"

"என்ன மங்களம் சொல்லு! நான் தயார்!"

அவள் சிவகுருவைக் கூர்மையாக நோக்கிவிட்டுக் கேட்டாள்.

"மூனு வருஷத்திற்கப் புறமெண்ணாலும் என்னக் கலியாணம் கட்டிக்குவிங்களா?"

மங்களத்தின் கண்கள் சிவகுருவை நோக்கியிருந்தன. அவன் திடுக்குற்று இருதயம் இடித்துக் கொள்ள நின்றான். உடம்பு நடுங்கிற்று. அந்த நிலையில் அவன் நெடுநேரம் நிற்கவில்லை. இப்பொழுது சரி என்று அவளை ஏமாற்றிக் காரியத்தை முடித்தாலும் அவள் விடவே மாட்டாள். சந்திக்கிழுத்து விடுவாள். கடைசியில இவளைக் கலியாணம் கட்டவேண்டி வரும் - 'சீ.. இவளையா' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் புரண்டு கொண்டது. அவன் ஊரில் எத்தனை பெண்கள் ஏராளமான சீதனத்துடன் காத்துக்கிடக்கிறார்கள். அவளைத் திரும்பவும் நோக்கும்போது அவள் தெருவிலே அலைந்து திரியும் எளிய பெண் என்பது அவன் கண்ணில் தெரிந்தது.

"நீ அந்தளவு தூரத்திற்கு நினைத்திருக்கக் கூடாது நீ யாரு! நான் ஆரு! உனக்கு அந்த எண்ணம் வந்திருக்கக் கூடாது."

சிவகுரு கடுமையாகக் கூறிவிட்டு நின்றான். அவளுடைய முகத்தில் அவன் எதிர்பார்த்த அளவு மாற்ற மெதுவுமில்லை.

"நா, பாடினதுக்குப் பணம் தாங்கையா; நான் போகணும்!"

அவன் உடனே அறை உள்ளே சென்று மேசையில் கிடந்த கால் ரூபாய் எடுத்துக் கொண்டுவந்து கொடுத்தான் அதை அவள் பார்க்காமலேயே வாங்கிக் கொண்டாள். இரண்டடி எடுத்து வைத்து நடந்தாள். அவளைப் பார்க்கச் சிவகுருவுக்கு அதிசயமாக இருந்தது.

"மங்களம் இப்படித் தனியாக அலையுரியே, யாராவது ஒரு ஆம்பிளை உன்னைப் பலவந்தமாய்ப் பிடித்துக் கொண்டால் என்ன செய்வாய்?"

அவள் திரும்பி நின்று வெறுப்புக் கொண்ட முகத்துடன் மடியில் இருந்து 'டக்'கென்று ஒரு கத்தியை விரித்து காட்டினாள்.

"இதையேன் வைச்சிருக்கேனு தெரியுமா? குத்தி கொன்னு போடுவேன், ஆமா!"

அவள் ஆத்திரமாகக் கூறினாள், அதை அவனுக்கே கூறினாள் என்பதைத் தெரிந்து கொண்டான். நெஞ்சு நடுங்க உணர்ச்சிகள் அடங்கிக் போச்சு. அவள் கத்தியை மடிக்குள் மறைத்துக் கொண்டு கதவின் தாளை இழுத்து விட்டுக் கதவைத் திறந்தவாறு திரும்பி சிவகுருவைப் பார்த்தாள். ஏதோ யோசனையுடன் உள்ளே வந்து அவன்முன் நின்றாள்.

"என்னையேன் ஒனக்குக் கலியாணம் கட்டிக்க முடியாது. எண்ணில என்னா குறையாயிருக்கு? கொஞ்சம் மிந்தியா ஏதேதோ வெல்லாம் பேசினியே?"

சிவகுருவுக்குப் பதில் கூற முடியவில்லை. பயத்தால் உடல் நடுங்கிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ ஒரு நல்ல மனுஷனிலே! தூ! நீ ஒரு கோழைப் பய"

மங்களம் அதைக் கூறிவிட்டு விரக்தியான உணர்ச்சி நரம்புகள் முகத்தில் துடிக்கவிட்டு அசிங்கமாக அவனை நோக்கியவாறு நின்றாள். அவனுக்கு மிக அவமானமாக இருந்தது. இன்னும் ஏதோ கூறப்போவது அவளது உதடுகள் ஆடுவதில் இருந்து தெரிகின்றது. சிவகுருவின் இதயம் இடிக்கிற இடி!

"ஏனோ தெரியல என்மேல ஆசைப்படுகிற எந்த மனுசனும் என்னய ஒரு முறைக்குத்தான் கேக்கிறாங்க!"

மங்களத்தின் வார்த்தைகள் ஒரு தனியான தாழ்ந்த குரலில் வந்தன. கண்களில் நீர்.

அவள் திரும்பிச் சென்று கதவை அடித்து மூடிவிட்டுச் சென்றுவிட்டாள். கதவடிச் சத்தத்தில் அதிர்ச்சிப்பட்டு நிற்கும் சிவகுருவின் நெஞ்சின் நடுக்கம் இன்னும் குறையவில்லை.

*தாமரை – 1968.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவு

அது ஒரு பழைய கட்டில்.

அவன் வேலை முடிந்து வந்து அதில் படுத்துக் கொள்வான்.

சிலவேளை முதுகில் கடிக்கும். சொறிந்துவிட்டுத் தூங்கி விடுவான். முதுகில் கடிக்கும் இடங்கள் அதிகரித்து வந்தன.

அவன் தூக்கத்தில் அவ்விடங்களைச் சொறிந்து விடுவான்.

பல நாட்கள் முதுகுக் கடியினால் நித்திரை முறிந்தது. தன் கட்டிலில் உள்ள மெத்தைத் தும்புகள் தான் குத்துவதாக நினைத்தான். அதன் மேல் ஒரு விரிப்பைப் போட்டுப் படுத்தான். கடி குறையவில்லை.

காலையில் முதுகைத் தடவும்போது தடித்த தழும்புகள் பல இடங்களில் காணப்பட்டன. அவனுக்கு வேலைச்சுமை. அதைப் பற்றி யோசிக்க நேரமில்லை.

ஒரு நாள் அவன் கட்டிலில் இருக்கையில் ஒரு மூட்டைப் பூச்சி அவன் காலில் ஊர்ந்தது. அதை மெதுவாகச் சுண்டிவிட்டான். அவன் ஒரு ஜீவகாருண்யன். அவனுக்கு அந்தக் கடிகள் பழகி விட்டன. கையால் சொறிந்து விட்டுத் தூங்கி விடுவான்.

ஒருநாள் அவனால் தூங்க முடியவில்லை. புரண்டு புரண்டு படுக்க, கட்டிலில் படுமிடமெல்லாம் கடி. கடிக்கும் இடங்களைத் தடவிப் பார்த்தான். இரண்டு மூன்று மூட்டைப் பூச்சிகள் அகப் பட்டன. எழுந்தான். விளக்கை ஏற்றினான். மெத்தையைத் தூக்கி வெளியில் போட்டான். கட்டிலைக் கூர்ந்து பார்த்தான். வெளியில் சென்று ஒரு கூரான இரும்பூசி எடுத்து வந்தான். கட்டில் துவாரங் களுக்குள் குத்தினான். மூட்டைப் பூச்சிகள் கும்பல் கும்பலாக விழுந்து அங்குமிங்கும் ஓடின. அவன் கோபாவேசத்துடன் அவற்றைத் துரத்திக் குத்திக் கொன்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்த மூட்டைப் பூச்சிகள் அவனிடமிருந்து தப்பும் நோக்கத்துடன் ஓடிக் கொண்டிருந்தன. ஒரு மூட்டைப் பூச்சி விழுந்த இடத்திலேயே கிடந்தது. ஓடிய மூட்டைப் பூச்சிகளுக்கு ஆச்சரியம்.

'நீ சாகவா போகிறாய்? அவன் எங்களைத் துரத்திக் கொல்கிறான். நீ ஓடாமல் இருக்கிறாய்?' என்று கேட்டன.

'நீங்கள் இமயமலைக் கோடினாலும் அவன் எங்களைக் கொல்லாமல் விடமாட்டான்! விடவேமாட்டான்.'

அந்த மூட்டைப் பூச்சி உறுதியாகக் கூறியது.

'நீ ஏன் அப்படிச் சொல்கிறாய்?'

ஓடிய மூட்டைப் பூச்சிகள் பயந்து நடுங்கிக் கேட்டன. அந்த மூட்டைப் பூச்சி கண்களை மூடிக் கொண்டு கூறியது,

'நாங்கள் உறிஞ்சிக் குடித்தது அவனுடைய இரத்தம்.'

குமரன் – 1983.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாம்பத்யம்

"எடியே ஞானம்?"

.........

"எடி ஞானம்மா?"

.........

"எழும்படீ? என்ன பேச்சு மூச்சைக் காணல்லை. நித்திரையாடி கொள்றாய்... அவ கிடக்கிற கிடையைப்பார்: போத்து மூடிக் கொண்டு குசாலாக்கிடக்கிறா: அவவுக்கென்ன ராசாத்தி எழும்படீ"

"என்ன?"

"என்னடி சிலுப்புறாய்; எழும்பு"

"என்னத்துக்கு?"

"பேந்தும்பார்; நான் கத்துறன்; அவள் உலுப்பிப் போட்டுக் கிடக்கிறாள்; வேணும் எழும்படி"

"இது பெரிய கரைச்சல்; இப்ப எத்தினி மணி? சாமத்திலை குடிச்சிட்டு வந்துட்டுது, கரைச்சல் தர; இனி அக்கம் பக்கத்திலை சனங்களிருக்க வழியில்லை"

"க்கார்த் துப்,...... என்னடி சொல்றாய்?"

"என்ன சொல்றது; உண்மையைத்தான் சொல்றது, இப்ப எத்தனை மணி?"

"கதையை விட்டுட்டு எழும்படி? சோத்தைத்தா; நீ இன்னும் எழும்பேல்லை?"

"குசினிக்கை போட்டு வைச்சிருக்கு; சட்டியிலை சொதியுங் கிடக்கு, எடுத்துத்தின்போ"

"என்ன எடுத்துத்தின் போவோ? எழும்படி எடுத்தாடி"

"என்னாலை ஏலாது போ; எழும்பேலா; வயிறு முட்டாகிடக்கு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ? அப்படியோ சங்கதி? .... என்னாலை.... என்னடி சொன்னனி என்னாலை .... ஓ? அப்படித்தான் சொல்லும்.... ம்....ம் ....உன்னிலை பிழையில்லை.... ஓமடி..... என்னடி.?"

"அயலாட்டத்திலை சனங்கள் நித்திரையாக் கிடக்கு சனியன் சத்தம் போட வந்துட்டுது."

"என்ன சனியனோ? நான் உனக்குப் புருஷனடி சனியனாடி.... இவ்.... கொண்டு போடுவன், செல்லையனிட்டையா விடுறாய்....ஆ"

தொப், தும், தும்.-

"ஐயோ? நீ அடிச்சுக் கொல்லு; உன்ரை மாட்டுக்கையாலை கொல்லு"

"என்ன நீ யோடி, என்னொருக்காகச் சொல்லடி; உன்ரை வேலைக்காறனாடி நான்; செல்லையன் உனக்கு வேலைக்காறன் ஆ? வேலைக்காறன்"

தொம். துப்.

"என்ரை ஐயோ; அடிச்சுக் கொல்லு. என்ரை ஆச்சி... .தலை மயிரை விடு"

"தலை மயிரை விடுறதா? சொண்டை நிலத்தோடை புடிச்சு உரைஞ்சிப் போடுவன். என்னடி வாயுக்குள்ளை புறுபுறுக்கிறாய்; நானுங் கவனிச்சுக் கொண்டுதான் வாறன்; அவவடை பேச்சும் அவவும்;

"கண் கடை தெரியவில்லை, சனியன், மூதேவி ?.... ஆ!"

"கலியாணம் முடிச்சு ஆறுமாச மாகல்லை. இனித்தலையிலை ஏறியிடுவாள் போலருக்கு"

"ஓ?"

"என்னடி ஓ?.... வாய்க்கு வாய் காட்டாதையடி; எழும்பிக் கால் நீட்டிக் கொண்டல்லே இருக்கிறா; எப்பனென்டாலும் மரியாதை தெரியாத சனியன்"

"உன்னோடை சீவிக்கறது பெரிய தொல்லை; உனக்கும் என்னைக் கட்டி வைச்சாங்களே; உன்னை முடிக்காட்டி நான் ராசாத்தி உரலிடிச்சுச் சீவிச்சிருப்பன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னைப் புடிக்காட்டி ஓடடி கோப்பாய்க்கி; மரியாதை தெரியாத பட்டிக்காடு. அங்கை; இரவிலையும் அவளுக்குத் தலைக்கை கை. பேனேடுக்கிறாளாம் உது தானே வீட்டுக்கு முடுமை"

"எங்களுக்கு மரியாதை தெரியாது; உனக்குத்தான் தெரியும்; பெரிய உத்தியோகஸ்தன்"

"பேந்தும் பேர் உனக்கெண்டு சொல்றாள்; எடடி தலைக்காலை கையை"

தும். தொப். தொம்.

"எழும்படி உனக்கு விட விடத் திமிர்"

"ஐயோ? தனியக் கூட்டியந்து அடிச்சுக் கொல்றான். கேட்க ஆர் இருக்கினம்....ஆ"

"உன்னைக் கொல்றதா? விடவிடத் தலைக்கு மேலை ஏறப் பார்க்கிறாய்; இனி மேல் வாய்க்குவாய் காட்டிப்பார், இந்தப் பாணாங்குளத்திலை என்னை ஆரடி புடுங்கிறவன். இந்தச் செல்லையனிட்டையா தனகிப் பார்க்கிறாய்......"

(வள் ர்ர் வொள் ர்ர் வொள்)

"அடி நாயே? நீயும் இதுக்குள்ளை; ஓடு சனியன்"

"எளிய நாய்..... ஓ? நீயும் பெட்டை நாய் தானே? உனக்கும் அந்தக் குணமிருக்கும்"

(வொள் ர்ர் வள் ர்ர் வொள்)

"நான் குலைச்சும் நீ குலைக்கிறாய்; என்னை உனக்கும் புடிச்சுக் கொள்ளேல்லைப் போலயிருக்கு அடி நாயே?"

சுள்க்!?

"ஐயூஓ?"

"காலாலை ஒண்டு தந்தோண்ணை ஓடுகிறாய்; உவளும் உதா லானே வேண்டினவள்"

க்கார்....கார்றிப்... துப்.

"இண்டைக்கு நினைச்சுத்தாண்ரி வந்தனான். உன்ரை வாய் அடக்கி றன்; ஒண்டில் கொல்றன்.... அழுகிறாள்? அழடி நல்லா அழு;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதா எனக்கென்ன? உன்னாலை நீ அழுறாய் அழு; உனக்கு உது காணா து, பொறு சோறு திண்டுட்டு வாறன்"

ப்பா. ப்ப்பா. துப்.-

"சுருட்டும் நூந்து போச்சு போகட்டும்.... சோத்தைத் தின்னுவம்.. அது சோறா....என்ன செய்யிறது தின்னுவம்.... குசினிக்கையாஞ் சோறு குசினிக்கை.... ம்"

(2)

கர்ர்.. பறாச்.

"குசினிப்படலையும் ஸ்ரைக் பண்ணுது; என்ன செய்வம் காலம்."

"ம்.... சோத்தைப்பார்? கறிச் சட்டிக்கை போட்டு வைச்சிருக் கிறாள், இது சோறா? விஷமத்துக்கெண்டு போட்டு வைச்சிருக் கிறாள். நாய்க்குப் போடுறமாரி எனக்குப் போட்டு வைச்சிருக் கிறாளாம். இவளை என்ன செய்யிறது?"

"பாவம் புள்ளத்தாச்சி! நல்ல அடிச்சுப்போட்டன் போலை? இவளேன் என்னோடை வாய்க்குவாய் காட்டுறவள்?"

"இதை ஆர்தின்பான்....இந்தா உஞ்சு? உஞ்சு? நீயேதின்... அவள் உன்னைப் போலத்தான் என்னையும் பாவிக்கிறாள்.... நான் அவளுக்குப் புருஷனில்லை... புருஷனெண்டு நெச்சாளெண்டால் வந்திருந்து போட்டுத் தந்திருக்க மாட்டாளே?"

"நேத்தெல்லாம் அருகிலை இருந்து போட்டுத்தந்தவள் தானே...." பாவம் நல்லா அடிச்சுப் போட்டன், நான் என்ன செய்யிறது?"

"வாய்க்குவாய் காட்டுறவளுக்குக் குடுக்கத்தான் வேணும். இல்லாட்டித் தலைக்கு மேலை ஏறிடுவாள்."

"உஞ்சு? திண்டிட்டாயல்லோ? தள்ளு.... வழியை விடு போவம்.... இஞ்சை விளக்கும் மங்குது.... விடு"

"தள்ளெண்டால் தள்ளமாட்டாய்; நீயும் என்னோடை தனகிறாய்... அடீ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்ப விலத்திறாய்.... மரியாதைக்கு இடமில்லை.... இப்ப அவளிட்டைப் போனா அவளென்ன அருக்காணி பண்றாளோ?"

## (3)

"ஞானம்?"

........

"ஞானம்மா? நித்திரை போலைருக்கு."

........

"அப்பாடா? கொஞ்சம் தள்ளிப் படு; விளக்கைக் கொஞ்சம் தள்ளி வை..... இல்லை யடியாத்தை நான் எடுத்து வைக்கிறன்.... நீ பேந்து கோவிப்பாய்"

"தள்ளிப்போ? பக்கத்திலை வந்து படுத்திட்டுது?"

"அதுக்கேன் கையாலை தள்ளுறாய்... கொஞ்சம் தள்ளிக்கிட"

"இல்லை நீ வெளியிலை போ.... போ?"

"நான் நல்லா அடிச்சுப் போட்டன் என்ன....என்ன செய்யிறது.... நோகுதா?"

"இல்லை..... நோகல்லை.....நீ தோள்க்கையை எடு"

"என்னடி கோவிக்கிறாய்"

"ஓ? நீ கன்னத்தாலை கையை எடு... எடெண்டுறன்.... விடு போ?"

"நீ வாய் காட்டுறதுக்குத்தானே அடிச்சனான்..... இல்லாட்டி என்ரை பொஞ்சாதிக்கு நான் அடிப்பனே?"

"ஓ? எனக்குத் தெரியும், நீ எனக்குச் சொல்லவேண்டாம்.....நீ தள்ளிப்போ"

"பாத்தியா பேந்தும் நீ என்கிறாய்; இதுக்குத்தானே அடிச்சனான்.... நான் உன்ரை புருஷனல்லலே, நீங்கள் எண்டு தான் கூப்பிடவேணும்"

"எனக்கப்படிச் சொல்லத் தெரியாது, நான் பட்டிக்காடு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் பட்டிக்காடெண்டு கோவத்திலையல்லோ சொன்னனான். உனக்குச் சொல்லத் தெரியும். நீ அப்படிக் கூப்பிட்டாத்தான் எனக்குச் சந்தோஷமாயிருக்கும்..... மற்றவங்களும் என்னை மதிப்பாங்கள்"

"நீர் தோள்க்கையை எடும்!"

"ஏனடி இன்னுங் கோபமா? நான் இனி சிவ சத்தியமா அடிக்க மாட்டன்."

"உன்ரை....உங்கடை பொஞ்சாதியெண்டு நினைச்சா இப்படி அடிப்பியோ? இங்கைபார் முதுகை, கொழுக்கட்டை மாரி வீங்கிப் போச்சு"

"நீ அழாதை, நீ நான் சொல்றபடி நடந்தா ஏன் அடிக்கப் போறன்..... ராசாத்தி மாரியல்லோ...."

"ஓ! தோள்க் கையை எடும்; எனக்கு நீ.... நீங்க தடவவேணாம்."

"ராசாத்தி மாரியல்லோ வைச்சுப் பாப்பன்.... உன்னிலை எனக்கு நல்லா ஆசை உங்கை அம்மாப் புள்ளைக்காவை, சீனியம்மாவைப் பாத்தியா? புருஷன்மாரை எப்படிக் கூப்பிடுகினம்; மரியாதையாப் பாக்கிணம் எண்டு."

"நீ குடிச்சிட்டு வந்து....."

"பேந்தும்பார் நீ என்கிறதை; அடி காணாது போலைருக்கு; எத்தினை நாளடி சொன்னனான், சுணை கெட்டுப்போச்சு."

"நீங்க ஏன் இவ்...."

"அப்படிக் கூப்பிடன் கேட்கவும் ஆசையாருக்கும்"

"நீங்க ஏன் இவ்வளவு நேரம் செல்ல வந்தனீங்க?"

"உன்னாலைதான் .... நீ என்னை மரியாதையா நடத்திறேல்லை; அது எனக்கு மனதுக்கு வில்லங்கமாயிருந்தது. அது தான் இரண்டு போத்தல் பனை அடிச்சிட்டு மிக்கேலப்பாட்டட கொட்டிலிலை இருந்து அலம்பிக் கொண்டிருந்தனான்."

'.....'

"புருஷனைப் "போ" எடுத்துத்தின் எண்டா சொல்றது; எவ்வளவு வேலை செய்த அலுப்பிலை வருவாங்கெண்டு யோசிக்கிறதில்லை!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்க அரைக்கி இருங்கோ"

"இன்னுங் கோவந்தணியல்லை..... அதையெல்லாம் மறந்திடு, இனி அப்பிடி நடக்காதடியாத்தை"

"இஞ்சை விடுங்கோ.... ச்சீ ... .விடுங்கோ.... போ"

கொக்கூறூக்கூ? கொக்கூறூக்....கூ

"இஞ்சை 'கோழியுங்கூவுது. விளக்கை அணைக்கிறன்.... அதுவும் மங்குது"

"ஏன்?"

"ஏனா? ....உம்....சும்மா வேணும்"

...சுக் சுக்சுக்... சுக் சுக்.

"பதினொரு மணி றெயிலுங்கூவுது..... நான் நித்திரை கொள்ளப் போறன்"

"கூவட்டன்.... இண்டைக்கு அதிலை என்ன"

"இல்லை.... நான் வெளியிலை படுக்கப்போறன்....விடு"

"எங்கை எழும்புறாய்...இந்தா நானும் வாறன்.... இதென்னடா தொல்லை ... இஞ்சை சிவ சத்தியமா இனி அடிக்கல்லை."

"நான் தனியப்படுக்கப் போறன்"

"பேந்தும்பார்..... இதிலை காத்தால்லை கிடக்கு"

"காத்தெண்டால் என்ன....அதுதான் நல்லம்"

"இல்லைச் சொல்றன்.... நீ கோவிக்காதை"

"நீங்க முட்டாமல் கிடவுங்கோ"

"அங்கை வானத்தைப் பார்.... நிலவு என்ன வடிவாருக்கு"

"அதுக்கென்ன"

"சும்மா சொன்னன்.... பாரன் வடிவாருக்கு உன்ரை முகத்தைப் போலை"

"நீங்க தள்ளுங்கோ"

"இல்லை எங்கை பாப்பம்"

"எனக்கு நித்திரை வருது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஞானம் இண்டைக்குக் கொள்ளாதை"

"ஏன்?"

"சும்மா வேணும்.... நீயும் பேச்சிமாரி"

"இல்லைப்போழு"

"இல்லைப்போமாட்டான்"

## (4)

கா கா கா, உர்ர்ர். ...ம்பா?..... ஊ.

"இஞ்சேர் எழும்புங்கே? இஞ்சேருங்கோ எழும்புங்கோ விடிஞ்சு போச்சு?"

"இம்....என்ன"

சுக்குச் சுக்குச் சுக்கு கூ

"இஞ்சேருங்கே றெயிலும் வந்துட்டது, வெயிலு மெறிச்சிட்டுது; எழும்புங்கோ"

"ம்...என்ன"

"இந்தாருங்கோ கோப்பி..."

"கோப்பியா.... கொண்டா"

"கவனம்.... ஊத்துண்ணப் போவுது"

"அடி சக்கை முட்டைக்கோப்பி.... சோக்கு... வ் ஓ!"

"கொட்டாவி விட்டாலும் பேய்மாரித்தான்.... கெதியா முகத்தைக் கழுவுங்கோ, அங்கை எலியாசன்னை வேலைக்குக் கூப்பிடப் பே ாறார்."

"அது சரி, உன்ரை முகத்திலை என்ன சிவந்திருக்கு?"

"போங்கோ...உங்களுக்குப் பகிடிதான்."

**தேனருவி – 1964.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிக்கப்பட முடியாதவர்கள்

உள்ளே திருமணக் கொண்டாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பெண்ணும் மாப்பிள்ளையும் மண்டபத்தின் மேடையில் கண்டியன் ஆடைகள் அணிந்து எடுப்பாக வீற்றிருந் தார்கள். தெரிந்தெடுக்கப்பட்ட நூற்றியைம்பதுபேர் திருமணக் கொண்டாட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். சில எம்பிக்கள் உட்பட எல்லோரும் கண்டியிலும், கொழும்பிலும் வாழும், ஊர்ப் பெரிய மனிதர்கள்; கடை முதலாளிகள்; தோட்ட உரிமையாளர்கள், அந்த செஞ்சிலுவை மண்டபத்தின் வெளியே கண்டி லேக்கை சுற்றிப்போகும் தலதா வீதியின் இரு மருங்கும் கார்கள் நிரைகட்டி நிற்கின்றன. இன்னும் நிரையில் வந்து சேர்கின்றன.

முண்டன் அந்த மண்டபத்தின் வாசலில் ஒரு பக்கச் சுவரோடு தன் உடலை மறைத்துப் பயத்தோடு தலையை மட்டும் நீட்டி உள்ளே பார்த்த வண்ணம் நின்றான்.

அழைக்கப்பட்டவர்கள் அமர்வதற்காக, மண்டபம் நிறைய தனித்தனியாக மேசைகளைச் சுற்றி வட்ட வட்டமாகக் கதிரைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. வந்தவர்கள் தாங்கள் விரும்பிய இடங்களில் குடும்ப சமேதராகவும், தனியாகவும் அமர்ந்திருந்தார்கள். ஒவ்வொரு மேசையின் மேலும் பளபளக்கும் வெள்ளிப் பாத்திரங்களில் கேக்கும், சான்விச்சுகளும், பிஸ்கட்டுகளும், வாழைப் பழங்களும், குடிவகைகளும் வைக்கப்பட்டிருந்தன.

கண்டியில் உள்ள ஒரு பெரிய ஹோட்டல்தான் உணவு சப்ளை பண்ணுகிறது.

இன்னும் இன்னும் பிரமுகர்கள் வந்து கொண்டிருந்தார்கள்.

மாப்பிள்ளையின் பெற்றோரும் பெண்ணின் பெற்றோரும் வாசலில் நின்று வருபவர்களைக் கைகூப்பி வரவேற்றுக் கொண்டிருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்கள். ரேடியோ கிராமில் இருந்துவரும் 'பொப்பிசை' மண்டபத்தைக் கலகலப்படையச்செய்து கொண்டிருந்தது.

முண்டனுக்கு அங்கு நடக்கும் எதுவும் கவர்ச்சியாகப் படவுமிலலை; மனதில் சந்தோசத்தை ஏற்படுத்தவும் இல்லை. அவனுடைய கண்கள் அந்தச் சாப்பாட்டுப் பாத்திரங்களில் லயித்திருந்தது. நாவில் எச்சில் ஊறிக்கொண்டிருந்தது.

அவனுக்கு நல்ல பசி; பெருங்குடல் சிறுகுடலைத்தின்று கொண்டிருந்தது. நேற்றுப்பகல் கண்டி டவுனில் ஒரு சைவ ஹோட்டலுக்குப் பின்னால் கிடந்த எச்சில் இலைகளை நக்கிய பின் அவனின் வயிற்றுக்கு எதுவும் கிடைக்கவில்லை. காலையிலே தெருவில் கிடந்த அழுகல் மாம்பழத்தை எடுத்துத் தின்றான்.

அந்தச் சாப்பாடுகளைப் பார்த்தவாறு நின்றவன், எல்லா வற்றையும் மறந்தான். வயிற்றுக்கொடுமை ஒரு துணிவை அளித்தது.

உள்ளே இருப்போர்களையும், உள்ளே போவோர்களையும் மெதுவாக நோட்டம் விட்டபின். உள்ளேபோன ஒரு கனவானின் பின்னால், ஒட்டிக்கொண்டு மெதுவாக உள்ளுக்குப் போய். வெறுமையாய் இருந்த ஒரு கதிரையில் உட்கார்ந்ததும், பேரவா வினால் கண்கள் சாப்பாடுகளில் விழ. எவரையும் பார்க்காது, கையை நீட்டி மேசையில் உள்ள கேக் துண்டை எடுத்து 'அவக்' 'அவக்' கென்று சாப்பிடத் தொடங்கினான்.

அந்த வட்டத்தில் மற்றக் கதிரைகளில் அமர்ந்திருந்த பெண்கள், அவனை அருகே கண்டதும், தங்கள் உணவுக்குள் புழுகடிப்பது போல் அருவருத்து, உடலை ஒடுக்கித்தம் உணர்வைக் காட்டி னார்கள். அந்த நேரம் பெண்ணின் தம்பி அங்கு வர 'உஸ்' என அவனை அழைத்து, கண்ணால் முண்டனைக் காட்டினார்கள்.

அழுக்கேறிய கந்தல் அடைந்த காற்சட்டை சேட்டுடன், பல நாட்கள் குளிப்பு, முழுக்கில்லாது அசிங்கமாகத் தோற்றமளிக்கும் முண்டனைக் கண்டதும் அவன், மலத்தில் மிதித்தவனைப் போல் அருக்குளித்து, தங்களுடைய 'றெஸ்பக்'டைக் கெடுத்து விடப் போகிறானே எனக் கோபாவேசங்கொண்டு, பாய்ந்து அவனருகில் வந்து "டேட்டி றாஸ்கள், கெட் அவுட்" எனக்கத்தி, கத்திய கையோடு அவனுடைய செவியில் பிடித்து இழுத்துக்கொண்டு வாசலை நோக்கிப் போனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முண்டன் எடுத்துக்கடித்த கேக்கின் துண்டுகள் நிலத்தில் விழுந்து உடைந்து கிடந்தது. வாசலுக்குக் கொண்டு வந்தவன், அவனுடைய பிடரியில் ஒரு இடிபோட்டு 'ஓடு நாயே!' எனத் தள்ளி விட்டான்.

முண்டன் கிலி அடைந்து 'தப்பினது பெரிய காரியம்' என எண்ணிக் கொண்டு ஓடி வந்தான்.

அவனுடைய தாய் காமாட்சியும், தங்கை சானகியும், சின்னக் குழந்தைத் தம்பி பழனியும் சற்றுத் தூரத்தில், கண்டிக் குளக்கரைக் கட்டில் மகோக்கனி மரத்தருகில் குந்திக்கொண்டிருந்தார்கள்.

"ஏனப்பா ஓடி வர்றே?" என்று கேட்டாள்.

"அடிச்சுத் துரத்திட்டாங்க!" என்று, மூச்சு இழுக்க இழுக்க கூறிய அவன் நிலத்தில் விழுந்தது போக வாயில் அகப்பட்ட கேக் துண்டைச் சுவைத்து விழுங்கினான்.

"நீ யேன் அங்கு போனேப்பா?" சலிப்போடு கேட்ட காமாட்சி அவள் முலையைச் சூப்பிக்கொண்டு கிடந்த பழனியைத் தூக்கி இடுப்பில் வைத்து, எழுந்து சானகியைக் கையில் பிடித்து இழுத்தவாறு நடக்கத் தொடங்கினாள். பதினொரு மணி வெய்யில் கடுமையாக இருந்தது.

"பசிச்சுது அதான் போனேம்மா"

காமாட்சி மௌனமாக நடந்தாள் இடுப்பில் இருந்த பழனி பால் கேட்டு அழுது கொண்டிருந்தது.

"ஏனம்மா அவுங்க நம்மை சொறி நாயை விரட்றாப்போல துரத்துறாங்க?" என்று கேட்டான் முண்டன்.

"அவுங்கஎல்லாம் அப்படித்தானப்பா. எங்கமேல அன்பு வைக்க மாட்டாங்க"

"ஏனம்மா?"

"அவுங்க குணம் அப்படித்தான்"

"அங்க உள்ளவங்க என்னைக் கேவலமாப் பாத்தாங்க; அதை என்னால சகிக்க முடியல, அவுங்கமேல வெறுப்பு வெறுப் பாத்தான் வந்திச்சு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பெருவிரலை வாயுள் வைத்து உமிழ்ந்தவாறு அவன் தாயின் பின்னே நடந்துகொண்டிருந்தான். காமாட்சி கண்டி டவுனை நோக்கிப் போய்க்கொண்டிருந்தாள்.

கண்டி நகரத்தில் பேமண்ட் கடைகளுக்குப் பின்னால் 'ஜோர்ஜ் டி சில்வா உயன்' என்று கூறப்படும் வெளியின் ஓரத்தில், தெருவை அண்டி நிற்கும் அரச மரத்தின் கீழ்தான் இப்போது அவர்கள் குடியிருக்கிறார்கள். இன்னும் பல பட்டினிக் குடியிருப்புக்கள் அங்கு இருக்கின்றன.

"அவுங்க ஆர்ன்னு ஒனக்குத் தெரியுமா?"

முண்டனிடம் அவள் கேட்டாள்.

"இல்ல; ஆரோ பெரிய பணக்காரங்கதான்!"

அவுங்க நம்ம தோட்ட மொதலாளித் தொரைப்பா! அவுங்க மகவூட்டு கலியாணந்தான் நடக்குது!'

"ஒங்களுக்கு எப்படித் தெரியும்?"

"மொதலாளி வாசல்ல பெரிய வயத்தோட நிண்ணாங்க நா பார்த்தன்!"

"அவுங்கத்தானே நம்மை வேலை கொடுக்காம தோட்டத்திலிருந்து துரத்தினாங்க!"

"ஆமா, அவுங்கதான் நம்ம ரத்தத்தையெல்லாம் உறிஞ்சிச் சிட்டு நம்மை தெருவிலே வீசின வேசை மக்கள். என்று கூறிய காமாட்சி வீதி ஓரத்தில் உட்கார்ந்து விட்டாள். அவளுக்குப் பலயீனமாக இருந்தது.

முண்டன் சொன்னான்,

"அவுங்களயெல்லாம் கொல்லணும்மா"

"ராசுக்கோல்"

குமரன் – 1974.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவரி தேடுவோர்

"டேய் மலக்கியாஸ்!"

"ம்...ம்... ஆரது?"

"டேய் நான் சங்கரியடா! என்ன கண்ணைப் பூஞ்சிப் பாக்கிறாய்?"

"ஓ! டேய் சங்கரி, மச்சான், இந்த மங்கல் வெளிச்சத்திலை முகந்தெரியல்லையடா! உன்னைச் சந்திப்பனெண்டு நினைக்கவே யில்லையடா"

"நானுந் தான்ரா, உன்னைப்போல எத்தனை சிநேகிதங்களடா எங்கெங்கே ஓடிப் போனாங்களோ எங்கை இருக்கிறாங்களோ?"

"சங்கரி நீ எப்படி இருக்கிறாய்? உன்ரை குடும்பமெல்லாம் எப்படியிருக்கு?"

"டேய் மலக்கி, கட்டிப் பிடிக்காதையடா. உன்ரை வயிறு முட்டுது. புள்ளைத்தாச்சி மாதிரி சேட்டுப் பொத்தானைப் பிதுக்குது"

"வயிறுதான்ரா பெருத்திருக்கு, சாராய வண்டி. நீ என்னடா சரியா உருமாறிப் போயிட்டாய், தாடியும் வளர்த்துக் கொண்டு முகமும் கறுத்து"

"நீயும் நல்லா மாறிப போயிட்டாய், நீயும் கனநாளாத் தாடி வழிக்கேல்லைப் போல உன்ரை முகமும் கறுத்துத் தான்ரா கிடக்கு"

"அதைப் பற்றி யாரடா கவலைப்பட்டது. நீ எங்கெ இங்கை கொச்சிக்கடையில"

"அந்தோனியாரைக் கும்பிட வந்தனான். உந்த லொச்சிலை இருக்கிறம். அந்தோனியாரிட்டைப் போய் மெழுகுதிரி கொழுத் திட்டு, தெருவைக் கடந்து வரக்கை நீ சுவீப் டிக்கட் வாங்கிக் கொண்டு நிக்கிறதை, உன்ரை பிடரியிலை இருந்தே கண்டுட்டன் மலக்கி."

"நானும் அந்தோனியாரிட்டை வந்து கும்பிடடுட்டு இதிலை வந்து நிக்கேக்கை ஒரு நப்பாசை, ஒரு சுவீப் எடுததன். நான் உந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெம்பட்டாத் தெருவில ஒரு வாழைத்தோட்டத்துக்கை ஒரு அறை எடுத்து இருக்கிறம் குடும்பத்தோடை"

"குடும்படுத்தோடையோ"

"ஓ! நானும் மனுஷியும் இரண்டு பெண் பிள்ளைகளுந்தானே?"

"வாடா, மலக்கி, உதிலை ஒரு 'கிளப்' பிருக்கு போய் இரண்டு 'ட்றாம்' அடிச்சுக் கொண்டு கதைப்பம். உன்னோடை கதைக்க நிறைய இருக்கடா, உன்னோடை சேர்ந்து குடிச்சும் கனகாலம்"

"எனக்குந்தான்ரா, நான் இரண்டு 'ட்றாம்' ஜெம்பட்டா 'பாரி'ல போட்டிட்டன் கிளப்பு எங்கெயடா சங்கரி?"

"உதிலைதான், உந்தச்சந்தி கடந்தாப்போல. செட்டியார் தெருவிலை இருக்கு வாடா, எனக்குப் பின்னாலை வா!"

"என்னடா, நேரம் போயிடாதே? அதுகள் பயந்து கொண்டிருக்குங்கள்"

"வாடா, நானும் லொச்சுக்குப் போகத்தானே வேணும். அதுகளும் பொலீஸ் பூந்திடுவான் என்ட பயத்திலதான் எட்டி எட்டித் தெருவைப் பார்த்தபடி இருக்குங்கள்"

"என்னடா மலக்கி நொண்டிறாய்?"

"எனக்கு முழங்கால் வாதமடா."

"எனக்கும் மூட்டுகளெல்லாம் உறாயுதுதான். உதைப்பற்றி ஆர் கவலைப்பட்டது? டேய் மலக்கி பப்பிளிக் கக்கூசு மணக்குது மூக்கைப் பிடிச்சுக் கொண்டுவா!"

"புதுமையான அந்தோனியார் கோயிலுக்கு முன்னாலை இப்படி ஒரு மணமாடா, சங்கரி?... சீ!"

"அங்கை பார் அந்தோனியாற்றை வடிவான சுரூபம் வணங்கிக் கொண்டுவா அவரும் பொறுமையாத்தான் இருக்கிறார்."

"ஆரை வணங்கி என்னடா, எங்கடை தமிழ்ச் சனத்துக்கு ஒரு விடிவும் கிடைக்குதில்லையே? தெய்வங்களேன்ரா பொறுமை யாயிருக்கு?"

"அதைவிட்டுட்டு, மலக்கி உந்தச் சந்தியில நிக்கிறாங்க ளோண்டு பார், இதிலை அடிக்கடி நிப்பாங்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு பசாசையும் காணேல்லைப்போல; உதிலதான் சங்கரி எங்கடை சொந்தக்காரப் பொடியன், சுவிசுக்குப்போக வந்து நிண்டவன் பிடிச்சுக் கொண்டு போனார்கள். இன்னும் விடேல்லை."

"உதைப்போல எத்தனை அப்பாவிப் பொடியங்களடா. உன்னட்டை அடையாள அட்டை இருக்கோ, வடக்கில இருந்து வந்த தமிழனெண்டா வயசு போன எங்களையும் புடிப்பாங்கள்."

"அதில்லாமல் நான் வெளிக்கிடுறதில்லை. உவங்கள் புடிக்க நினைச்சா அடையாள அட்டையாலை என்ன செய்ய முடியும் சங்கரி?"

"எங்கடை கதை சீரழிஞ்ச கதை, என்ரை கையைப் பிடி, ஓட்டோக்காரங்கள் கண்மண் தெரியாமல் வருவாங்கள்."

"உன்ரை கை வேர்க்குது சங்கரி, எங்கை கிளப்பு வந்துட்டுதோ? என்னடா, வாற போற முகங்களெல்லாம், எங்கடை சனமாத்தான் கிடக்கு ஏங்கின மூஞ்சைகள்."

"ஓம், ஓம், லொச்சு வழிய உங்கினேக்கதான் கிடக்குதுகள், ஆமை மாதிரி நல்லா மூச்சுவிட றோட்டு வழிய அலைஞ்சு திரியுங்கள். இந்தா வந்திட்டுது கிளப்பு. வலப்பக்கம் றோட்டைக் கடந்து போக வேணும் வா. கவனம்" இதிலை ஒரு கிடங்கடா."

"இதுதான்ரா மலக்கி கிளப்பு. படியிருக்கு கவனம். மெல்ல இறங்கி வா, சோக்கான 'கிளப்பு'"

"என்னடா சங்கரி, இங்கெ ஒரே சனமா இருக்கு."

"எல்லாம் ஆரெண்டு நினைக்கிறாய், எல்லாம் வந்து முடுக்குகளிலும் லொச்சுகளிலும் அங்கயிருந்து இங்க இருந்து கொண்டு வெளி நாட்டிலை இருக்கிற புள்ளயளின்ட காசிலை வாழ்றதுகள் தான்; வந்திருந்து பார் விளங்கும்."

"எங்களைப் போல, புள்ளையளிட்டை ஒட்டுண்ணிகளா மாறிப் போட்டுதுகள்."

"ஓமடா, வேறெ என்ன செய்யிறது? இந்த மூலையிலை இருப்பம், நீ இந்தக் கதிரையில இரு. வசதியான கதிரையள்"

அப்பாடா, நாரி உளையுதடா சங்கரி மூச்சும் இளைக்கிது"

"அந்திம கால வருத்தங்கள்தான். நீ என்ன குடிப்பாய்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ ‘கல்’ தான் நீ என்ன?”

“அதுதான் - மணி! இங்கை வா?”

“ஐயா, என்ன ஓடர் பண்றீங்க”

“மணி அரைப் போத்தல் ‘கல்’லும் ஒரு சோடாவும் மலக்கி நீ சிகரட் குடிப்பாய்தானே?”

“ஓம் மச்சான், சாராயம் குடிக்கேக்கை குடிப்பன், உனக்கு தெரியுந்தானே?”

“சரி, மணி ஆறு ‘பிறிஸ்’டலும் கொண்டு ஓடிவா, நேரம் போச்சு.”

“சரி ஐயா, இந்தா வந்திடுறன்”

“சங்கரி உனக்கு இங்கெ நல்ல பழக்கம் போல”

“நான் இங்கெதான் வாறது. வேறெங்கெயும் போறெல்லை. அது கிடக்கட்டும். நீ எப்ப கொழும்புக்கு வந்தனி?”

“நான் வந்து இரண்டரை இல்லை மூண்டு வருஷத்துக்கு மேலே. அங்கையிங்கை ஓடி அலைஞ்சு அலுசிலும்பல்பட்டு வேறை கதியில்லாமல் இங்கை வந்தம்... ம்.. நீ எப்ப வந்தனி? சங்கரி யாழ்ப்பாணத்திலை எங்களுக்கிப்ப ஒண்டுமேயில்லையடா”

“ம்..”

“என்னடா பெருமூச்சு விடுறாய்?”

“நான் வந்து நாலரை மாசமாகுது - இந்தா மணி வந்திட்டான். இதிலை வை மணி; சோடாவை உடை”

“சரி ஐயா, வேறெ என்ன கடிக்க ஏதாவது?”

“இரண்டு ‘ஓம்லெட்’ போட்டுக் கொண்டா. - மலக்கி ஊத்து இரண்டு கிளாசிலையும் என்னடா கை நடுங்குது?”

“அதுக்கு நானென்ன செய்யிறது. இந்தா சோடாவும விட்டாச்சு எடுத்தடி.”

“நீயும் அடி”

“சாராயம் நெஞ்சை எரிக்கும் சங்கரி”

“சாராயம். வேறென்ன செய்யும் பேயா, இந்தா சிகரட் பத்து.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"......"

"......"

"ஐயா ஓம் லெட்"

"வை மணி - மலக்கி சாப்டுறா"

"'ஓம்லெட்டு', பதமாய்ச் செய்திருக்கிறாங்கள்."

"உன்னைப் பாக்கேக்கை, பள்ளிக்கூட்டத்திலை படிக்கேக்கை, நெடுங்குளத்துக்குப் போய்க் குளிச்சிட்டு பனையிலை ஏறி நொங்கு வெட்டிக்குடிச்சு, வளவுக்காரனிட்டை அடிவாங்கி றெயில் தண்ட வாளத்தாலை ஓடி வந்தது ஞாபகம் வருகுதடா"

"ஓம் மச்சான், அது சந்தோசமான காலமடா, இப்ப எங்கடை வீடுகளிலை இருந்து குண்டு, போட்டுச் செல்லடிச் செல்லே துரத்துறாங்க, நாங்களும் திசை தெரியாது ஓடிக் கொண்டிருக்கிறம்"

"மலக்கி நாங்கள் எப்படா கடைசியாச் சந்திச்சனாங்கள்?"

"அது ஞாபகமில்லையே இந்தியன் ஆமி யாழ்ப்பாணத்துக்கை அறம்புறமாச் செல்லடிச்சுக் கொண்டு வரக்கை 'வானிலை' ஏறி உயிர் தப்பிச்சு சாவகச்சேரிப் பக்கமா ஓடயிக்கை கட்டப்பிராச்சந்தியிலை வைச்சு இந்தியன் ஆமி மறிச்சு 'செக்' பண்ணயிக்கை நீ இன்னொரு வானிலை இருந்து என்னைப் பார்த்து ச் சிரிச்சாய்?"

"அதுவும் ஒரு பயங்கர அனுபவந்தான்ரா, வழிவழிய பிரதேங்களைக் கடந்து கொண்டு ஹெலி மேல வட்டமிட, சுட்டுப் போடு வாங்களெண்டு கும்பிட்டுக்கொண்டு"

"சங்கரி நீ எங்கை போய் நீண்டனி? அப்ப?"

"நான் சரசாலையிலை பாய்க்கடை மணியம் வீட்டிலை"

"ஊத்தும். மலக்கி எடடா."

"சரியா வெறிக்கப்போகுதுபோல அவளவயிட்டை இண்டைக்கி சம்பல் பேச்சுத்தான்"

"......"

"என்ன சங்கரி நெத்தியிலை கைவெச்சிட்டு யோசிக்கிறாய்?"

"என்டனா சொல்றது?"

"உன்ரை கண்களும் கலங்கிப் போச்சு என்னடா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மலக்கி நான் படுற வேதனையை எப்படிச் சொல்றது? " உனக்குத் தெரியுந்தானே, என்ரை புடவைக்கடை, இரண்டு வீடுகள் எல்லாம் குண்டு வீச்சுகளாலை நிர்மூலமாச்சு. அது பெரிய கவலையில்லை. அந்த அழிவுகள் எங்கள் எல்லோருக்கும்தான். உனக்குந் தெரியுந்தானே எனக்கு ஐஞ்சு ஆம்புளைப்புள்ளையளும் ஒரு பெண் குஞ்சுமெண்டு. ஏதோ நல்ல காலத்துக்கு நாலுபேர வெளிநாட்டுக்கு அனுப்பினன்."

"மூத்தவன் சுவிசில அல்லோ?"

"ஓம். இரண்டு பிரான்சிலை ஒண்டு கனடாவிலை"

"என்ரை மூண்டிலை முத்தவன் பிரான்சிலை, இளையவன் கனடாவிலை, கடைசிச் சலியன் டென்மார்க்கிலை. உதுகளை அனுப்பப்பட்ட கஷ்டம் எங்கடை புனித சந்தியோமையார் தான் அறிவார்" அவற்றை கோயிலையும் குண்டு வீசி அழிச்சுப் போட்டாங்கள்"

"டேய் மலக்கி, உன்ரை குடும்ப விஷயம் எனக்குத் தெரியாதெண்டு நினைக்கிறியா - எல்லாம் எனக்குத் தெரியுமடா. என்ரை கவலையை நீ கேக்கோணும். என்ரை கவலைகளை மனம் விட்டுப் பேச ஒருதரும் இல்லாமல் மனதுக்குள்ளை புழுங்கிக் கொண்டிருந்தனானடா. மலக்கி குடியடா, போத்தலுக்கைக் கிடக்கிறதைக் குடியடா! மலக்கி என்ரை கவலை சொல்லி மாளா தடா நாலு பிள்ளைகளை இரத்தம் சிந்தி அனுப்பினனான். இப்ப சுவிசிலை இருக்கிற மூத்தவன்தான் எங்களை உயிரோடு இருக்க வைச்சிருக் கிறான். பிரான்சுக்கு அனுப்பின தறுதலைகள் இரண்டும் பிரான்சுக் காறியளைக் கட்டியிட்டாங்கள். அவங்கள் போகக்கை தறுதலைகள் இல்லை. கனடாவுக்கு நானும் மனைவியும் கொஞ்சிக் கொஞ்சித் திராவியம் தேட அனுப்பினது; போதைவஸ்துக்கு அடிமையாகி நாசமாப்போச்சடா. இருபத்தி மூண்டு வயசு; வெளிநாடு போனவங்களின்ட கனகதையள் கேள்விப்பட்டிருக்கிறன். என்ரை புள்ளைகளெண்டா விதிவிலக்கா இதெல்லாம் நடக்கு மெண்டு எதிர்பார்த்துப் பயந்து கொண்டிருந்தன்டா; நடந்து போச்சு. அதுகளிடை கவலையாலை நாங்கள் இங்கை சாராயத்துக்கு அடிமையாயிட்டம். இல்லையாடா?"

"ஓம் மாச்சான் நீ சொல்வது முத்திலும் உண்மை. உண்மையடா".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ இப்ப கிடக்கிறதை ஊத்து. நீயும் குடி உனக்குச் சொல்றதுக்கு இன்னும் கவலையிருக்கு குடிச்சாத்தான்ரா சொல்லுவன். அப்பதான் நெஞ்சடிப்புக் குறையும்"

"இந்தா எனக்குப் பாதி உனக்குப்பாதி, குடி சங்கரி"

"சரி மச்சான் இஞ்சை கொண்டா. எனக்கென்ன எவ்வளவும் குடிப்பன். ஆனா அசையமாட்டன். நான் சங்கரியடா"

"டேய் மச்சான் சங்கரி எனக்குக் கவலையில்லையெண்டு நினைச்சியாடா. பிள்ளைகள் வெளிநாட்ல எண்டு பெருமைப்பட்டுக் கொண்டாடா நான் இருக்கிறன். கடற்கரையிலை கருவாட்டோடை கருவாடாக்காஞ்சு உதுகளை வளர்த்து அனுப்பினண்டா. பிரான்சிலை இருக்கிற மூதேசி நான் அன்பைச் சொரிந்து வளர்த்த மூத்தது மலேசியாக்காரி ஒருத்தியைக் கட்டி அவளின்ரை காலில விழுந்து கிடக்கிறான். டென்மார்க்கிலை இருக்கிறது நாய்க்குப் பிறந்த நாய். போதைவஸ்துக் கடத்திச் சிறையிலை கிடக்கு. கனடாவிலை இருக்கிறவன்தான் எங்களைக் காப்பாத்துறான். நானும் மனுஷியும் இரண்டு குமர்ப் புள்ளைகளும் இங்கை வந்து நாய்க்கூட்டுக்குள்ளை வாழறமடா நாய்க்கூட்டுக்குளை."

"......"

"சங்கரி ஏன்டா அழுறாய்? நாங்க அழுதா அதுக்கு முடி வில்லையடா!"

"மலக்கி உனக்கும் கண்கலங்குது. உனக்கென்ன வெறியா? துக்கத்திலைதானே அழுறாய். மலக்கி என்ரை மனசைக் குடைந்து கொண்டிருக்கிற துக்கம் அதை என்னென்டடா சொல்றது? ம்... ம்... ம்... நெஞ்சு நோகுது சாகப்போறனோ?"

"என்ன சங்கரி சொல்லடா. எனக்கு நீ சொல்ல என்னவோ மாதிரி இருக்கு பயமாயிருக்கு."

"என்ரை ஒரே பொம்புளைக் குஞ்சு என்ரை மனுஷியிடை உயிர்; சிறிதேவி உனக்குத் தெரியுந்தானே?"

"என்னடா நான் எத்தனை முறை தூக்கிக் கொஞ்சியிருப்பன் அதை"

"சிவநாதன் மாஷ்டர் எவ்வளவு நல்லவர். அவற்றை மகன் பிரான்சில இருக்கிறான். அந்த மாஷ்டர் வளர்த்த பிள்ளை நல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருப்பாரெண்டு கலியாணங்கட்டி வைச்சு மூண்டு லச்சம் செலவழித்து ஆறு மாசத்துக்கு முன்னை என்ரை குஞ்சை அவனிட்டை அனுப்பி வைச்சன்"

"பிறகு பிறகு"

"பிறகா நெஞ்சுவலிக்குதடா, அவன் போதை வஸ்துக்கு அடிமையானவனாம். பிரான்சுக் காரியையும் வைச்சிருக்கிறானாம். என்ன நடந்ததோ என்ரை புள்ளை அங்கை தற்கொலை செய்து போட்டாள்டா. அவள் கடைசியா எழுதின கடிதத்தைப் பாப்பியா?"

"சங்கரி, அழாதையடா, இதென்ன கொடுமை!"

"என்ரை குஞ்சை அங்கையே புதைச்சிட்டாங்களடா"

"மடுவு மாதாவே இதையென்ன கறுமமடா, உன்ரை மனுஷிக்குத் தெரியுமோ"

"என்னண்டடா அவளுக்கு அறிவிப்பன்? அவள் உடனை செத்துப் போவாள். ஓ! செத்துப் போவாள் என்ரை மூத்தவனுக்கு பொம்புளையும் கொண்டு கடைசி மகளையும் சுவிசுக்கு அனுப்ப வெண்டு கூட்டியந்தன். மூத்தவன் தான் கூட்டியரச் சொன்னான்" மகனோடை கதைச்சிட்டு வாறன் எண்டுதானடா அவளுக்குச் சொல்லிப்போட்டு வந்தன்."

"சங்கரி உன்ரை கதையைக் கேட்க நெஞ்சை என்னவோ செய்யுதடா"

"இந்தச் செய்தியை அறிஞ்சதும் மகன் கலியாணம் வேண்டா மெண்டிட்டான். அவனுக்குச் சொல்ல முடியாத கவலை. என்ரை கடைக்குட்டியும் வெளிநாடு பேகவேமாட்டனெண்டு சொல்லிப் போட்டான். நான் என்ன செய்வதெண்டு தெரியாம கொழும்பிலை கிடந்து அந்தரிக்கிறனடா"

"உனக்கு என்னண்டு மச்சான் ஆறுதல் சொல்றது? எனக்கு வெறியும் முறிஞ்சு போச்சு"

"துன்பத்தைச் சொல்லி அழுதென்ன பிரயோசனம் மலக்கி, உன்னோடு பேசினது கொஞ்சம் ஆறுதல் எனக்கும். வெறி போயிட்டுது. இன்னொரு கால் அடிச்சிட்டுப் போவம்."

"நான் எடுக்கிறன் கால் சங்கரி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ சும்மா இரடா; மணி இன்னொரு கால் கொண்டோடியா"

"இந்தா வந்திட்டன் ஐயா"

"என்ன சங்கரி இங்கெ ஒரே சத்தமாக் கிடக்கு" எங்களைப் போல குடிச்சிட்டு ஒருத்தனுக்கொருத்த தன் சோகக்கதை, சொல்றான்; சிலர் அழுவாங்கள்; சிலர் மேசையாலை கையாலை குத்துவாங்கள். சிலர் கிளாசுகளை உடைப்பாங்கள். எல்லாம் எங்களைப் போல கேசுகள்தான்; ஆறுதலா இருந்து கேட்டுப் பார்த்தாத் தெரியும் பாவப்பட்ட சனங்களடா?"

"சங்கரி அன்னை வரட்டடா, வாறன் என்ன"

"சிவா வா, நீ போ நான் வாறன்டா- மலக்கி இவன் இரண்டு புள்ளையளை அனுப்ப எட்டு லச்சம் ஏஜென்சிக்குக் கட்டி இரண்டு வருஷம். ஏஜென்சிக்காரனிடம் நாயா அலையிறான்."

"அப்பிடி எத்தனை கேசுகள் மச்சான்; எனக்கும் தெரியும் கறுமங்கள்."

"ஐயா, கால்"

"சரி, மணி இந்தா இரு நூறு ரூபா இருக்கு; மிச்சத்தை வைச்சிரு நாளக்கி வாறன். கணக்கை எழுதி வை"

"சரி ஐயா!"

"மலக்கி இரண்டு கிளாசிலையும் விடு. சோடாவும் முடிஞ்சுது; பரவாயில்லை, சும்மா குடிப்பம்."

"சரி எடு சங்கரி"

"ஆ..-யாம்ப்புச்"

"ஆ-ச்சுப் நெஞ்சை எரிக்குதடா"

"சங்கரி நாளைக்கி இந்த நேரம் இஞ்சைவா, நாளைக்கு என்ரை கணக்கு நல்லாக்குடிச்சிட்டு நல்லாக் கதைக்க வேணும். உன்னோடை இருக்கேக்கை எவ்வளவு சந்தோசமாயிருக்கு. சிகரட் ஒன்றுதா"

"இந்தா பத்து உனக்கு ஒண்டு மட்டுஞ் சொல்றன். உன்ரை பொம்புளைப் புள்ளையளை வெளிநாட்டுக்காரங்களுக்குக் கட்டிக் குடுத்திடாதை. பிறகு நரக வேதனைப்படுவாய்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ரை மகன் சொல்லிப் போட்டான் சங்கரி. இங்கே ஆரையும் கூலிக்காரனுக்குக் கட்டிக் குடு. காசு அனுப்புறன். வெளி நாட்டு மாப்புளையள் வேண்டாமெண்டு."

"அவனுக்கு அங்கெ உள்ளவங்களிடை அசிங்கங்கள் தெரியுமடா மலக்கி"

"ஓம் மாச்சான்! எங்கடை புள்ளகளைப் பாக்கேல்லையே?"

"சங்கரி அன்னை! லொச்சுக்கு வரயில்லையே எட்டுமணிக்கு மேலாச்சு. எனக்கு நிக்க முடியல்லை. வாறன்."

"ஆர், சுந்தரமே. நீ போ தம்பி வாறன். - இவனும் எங்கடை லொச்சிலைதான் நிக்கிறான். இவன்ரெ மகனைக் கனடாவுக்கு அனுப்ப ஏஜென்சிக்காரன் அனுப்பினான். அவன் அமெரிக்காவிலை பிடிபட்டுச் சிறையிலிருக்கிறான். வெளியிலை விட பத்து லட்சம் வேணுமாம். ஒரே ஒரு மகன் பிரான்சிலை. அவன்தான் குடும்பத்தையும் பாக்கிறான். அவனிட்டை இப்ப அவ்வளவு காசில்லை குடிச்சுப் போட்டு அழுதுகொண்டு திரிகிறான், பாவம்."

"எத்தனை சோகக் கதையளடா; சங்கரி எங்கடை பிரச்சினைக்கு ஒரு முடிவு வராதோ, நாங்கள் எங்கடை மண்ணிலை போய்க்கிடந்து சாக முடியாதோ?"

"எங்கையடா முடிவு; முடிவு சவக்குழியும், பதுங்கு குழியும் தான்; என்ன சொன்னன் சொல்றா?"

"சவக்குழியும் பதுங்குகுழியும்தான்."

"சரியாய்ச் சொன்னாய் சங்கரி; நேரமாகுதுவா போவம்?"

"மலக்கி, அந்தத் தூணுக்குப் பக்கத்திலை ஒருதன் தனிய இருந்து சாராயம் அடிக்கிறான் பாரடா!"

"ஓ! ஒந்தில் மாதிரி உருவமொண்டு"

"அவன்ரை கதை தெரியுமா. அவன் ஜேர்மனியிலை இருக்கிற மகனுக்கு ஒரு பொம்புளையைக் கொண்டுவந்து இப்ப அவளோடை லொச்சிலை குடும்பம் நடத்திறான் மகன்ரை காசிலை. மகனுக்குப் பொய் சொல்லிக்கொண்டு, பொஞ்சாதி புள்ளையள் யாழ்ப் பாணத்திலை. உடுவிலாம்"

"சனியன் மூஞ்செயிலை இரண்டு குடுக்கட்டாடா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விடு. அவனோடை இருக்கிறவளுக்கு என்ன புத்தி; வா நாங்கள் போவம்"

"எனக்கு நல்லா வெறிக்குதடா சங்கரி"

"தனியாப் போவியோ"

"ஓ நான் போவன்; நீ போவியோ. நாளைக்கு இஞ்சைவா என்ன?"

"நான் போவன். நான் போவன். வா, கையிலை பிடிச்சுக் கொண்டு வா. தெருவிலை கொண்டு போய் விடுறன்."

"விடுறா சங்கரி கையை, நான் ராசா மாதிரிப் போவன்."

"மலக்கி இப்ப றோட்டுக்கு வந்திட்டம்; இப்ப நீ அந்தோனியார் கோயில் பக்கம் போக வேணும். நான் எதிர்ப்பக்கம் லொச்சுப் பக்கம் உன்னை நான் கூட்டிக் கொண்டு விடட்டாடா"

"போடா நீ பேயா, நான் கம்பு மாதிரிப்போவன். நீதான் தடுமாறி விழுப்போறாய் சங்கரி."

"மலக்கி என்னைப்பற்றி என்னடா நினைக்கிறாய். துனபங்களிலை இருந்து புடம்போட்டு நிற்கிறன்டா. போடா நீ. நான் தடுமாறினாலும் விழமாட்டன்ரா."

"சங்கரி நாளைக்கி வாடா"

"ஓமடா போடா, கவனாப்போச் சேர் மடையா!"

"சங்கரி நான் போகக்கை உன்னைக் காப்பாத்தெண்டு அந்தோனியாரிட்டைக் கும்பிட்டுக் கொண்டுதான் போவன்டா. பயப்படாமல் போடா."

"போடா மலக்கி, நாளைக்கி வாடா."

மலக்கியாகும் சங்கரியும் தங்கள் தங்குமிடங்களை நோக்கி விரும்பாத கால்களை இழுத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினர்.

***வீரகேசரி – 1994.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவனின் பிள்ளைகளில்...

துரிதப்பட்டு அங்குமிங்கும், தம் தம் அலுவல்களில் நோக்கமாக ஓடும் மனிதர்களை, அவர்கள் மகோக்கனி மரத்தின் கீழ் அமர்ந்து, தம் சங்கீதக் கச்சேரிக்கு நெஞ்சங் குழைந்து அழைத்தனர்.

மத்தளத்தின் இருபக்கப் பறைகளிலும், மின்னலின் துடிப்பில் சரளமிதிப்படும், அவன் விரல்கள் எழும்பும் மிருதங்க மெல்லின ஓசையும், குருவன்றி அனுபவத்தில் படினப்பட்ட வீணையின் மீட்டலும், தன் சக்தியின் அளவையும் மீறி, தானே வலிந்து குரல் வளை வீங்க இராகமிழுத்துப் பாடும் பெண் பிஞ்சின் கீச்சிடும் குரலும், அவளின் தாயின் கைத்தாளமும், ஒன்றையொன்று புணர்ந்து, இசையும் சங்கீதத்தைக் காதில் விழுத்தியதும், மகோக்கனி மரத்தை நோக்கி மனிதர் கூட்டம் கால்களை வீசிற்று.

யாழ்ப்பாணம் பெரிய கடையின் கொப்புளில் அம்மகோக்கனி கிளைகளில் கைகோர்த்து நிற்கிறது அது அவ்விடத்தின் பொது நிழலி. இதன்கீழ் வந்து தம் இயல்பின் அளவில் தொழில் நடத்தி வயிறு ருப்பிய ஏழை உயிர்களின் கதைக் கொத்து அதன் கையில். அந்த மரம் இச்சமூக அமைப்பில் கொண்ட வெறுப்புக் குமிழும் உள்புரட்சியில் மௌனமாக நிற்கின்றது.

நிமிசங்களில் ஒற்றைக்கை விரல்கள் மடியுமுன், அம் மரத்தின் கீழ் அமர்ந்து நாரி உளையக்கச்சேரி செய்யும் நால்வரையும் ஆழ்ந்து, ஆட்டமும் பாட்டும் ரசிக்கும் கூட்டம் வட்டமாகக் கூடிவிட்டது.

மரத்தின் அடியோடு துரைச்சாமி இருந்தான். அவனை அடுத்து, அவனுடைய சிறிய மகனும், மனைவியுமாக நீள் ஒருங்கில் இருந்தனர். அவன் இடைக்கிடை செஞ்சைச் சுண்டும் இருமலைத் தானாக அடக்கி, தலையைக் கவிட்டு ஒரு பக்கம் சரித்த காட்சியாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலின் கீழ் அணைத்த மிருதங்கத்தில் தன் கைவண்ணம் காட்டிக் கொண்டிருந்தான். பக்கமாய் இருக்கும் அவன் மகன், முன் நின்று சிறுகால் மிதித்து ஆடி வரும் தன் தங்கையை நோக்கியவாறு, வித்வான் பாவனையில் வீணையின் கட்டைகளை அழுத்திக் கொண்டிருந்தான். அவள், மகளின் ஆட்டம் சோர்வு படாமல் இருக்க, மகள் களைத்துத் தன்னைப் பார்க்கும் வேளைகளில், கண்களால் 'ஆடு' எனத்தன் மனமெறியும் உஷார் ஏற்றி கைகளைச் சேர்த்துத் தாளம் இட்டவாறே இருந்தாள். அவள் கண்களில் இயல்பாகவே கண்களுக்குள்ள ஒளி இல்லை. இயந்திரமாய் இருந்தாள்.

அம்மூவரின் முன்னாகவும். தன்னை வளைய நிற்கும் கூட்டத்தின் நடுவிலும், கால்களில் கொத்துக் கொத்தாய் சலங்கைகள் கட்டிக் குலுங்க, நெற்றியில் திலகமிட்டு, முகத்தின் பூச்சம் பூசி, ஒரு கன்னத்தில் அழகுப் புள்ளியிட்டு கவர்ச்சி கொள்ளும் நடன ஆடையில் நின்று, கழுத்து நரம்புகள் வயிறூதக் குரல் எடுத்துப்பாடி, அப்பாட்டுக்கிசைய தன்னால் ஆகுமளவும் ஆடி, உடலையும், கை கால்களையும் வளைத்து, வளைத்து சின்னக் குமரியாய் நடனமிடும் அவள் ஒரு நாட்டியக்காரி. இன்னும் அவளுக்கு எட்டு வயது முடியவில்லை. பருவத்தில் பேதை அவள் பாடும் பாட்டுக்களில் பள்ளியைக் காணாத முதிர்ச்சி. அவள் பாடி ஆடிக் கொண்டே இருந்தாள்.

ஆயர் பாடிக் கண்ணா நீ

ஆடவாராய் என்னோடு

ஏ! பகவானே! ஏ!பகவானே!

சூழநின்று தன்னை ரசிக்கும் மனித முகங்களை ஏறிட்டு, ஏறிட்டு நோக்கி அவர்கள் இதயம் குளிர வேணும் என்ற நினைப்போடு தன் ஆடலிலும், பாடலிலும் சுருதியைக் கூட்டுகிறாள். அவர்களின் மனம் பனித்ததும் தன்னைப் புகழ்வார்கள் என்ற எண்ணமில்லை. ரசிக்கும் ஒவ்வொருவரும், முன்னால் விரித்திருக்கும் சேலைத் துண்டில் சில்லறை எறிய வேண்டுமென்ற ஆவல். தனக்கு வயிறு இருப்பதை அவள் நன்றாக உணர்ந்து விட்டாள்.

துரைச்சாமி நெற்றி வேர்வையை கைவிரலால் வழித்து எறிந்தான். அவன் மகளையே நோக்கியவாறு இருந்தாள். பையன் வீணையின் கட்டைகளில் கண்ணானான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மரத்தின் கீழ் அமர முன், காலை முதல் வேறு நான்கு மரங்களின் கீழ் இருந்து கச்சேரி வைத்ததன் களைப்பும், தொய்வும் நால்வரின் முகக் கருக்கலிலும், செயல்பாட்டின் வேகத்திலும் ஒளியிடுகின்றன. உளையும் நாரியை சரிக்கட்டிக் கொண்டும், உடலை நெளித்துக் கொண்டும் கவனமாக இருக்கின்றனர்.

துரைச்சாமி தொய்வு நோய்க்காரன் என்பதைத்தன் உருவில் காட்டினான். அவள் கறுப்பி; நல்லிரத்தமின்றி வெளுத்த 'மா மூட்டை', நாட்டியக்காரியும், பையனும் இருவரின் பிள்ளைகள் தானே.

அவன் நெற்றியில் சுருக்கக் கீறுகள் நெறிய மகளை நிமிர்ந்து பார்த்தான். அவள் பாடி ஆடிக் கொண்டிருந்தாள்.

துரைச்சாமி முன்பு ஒரு அச்சுக்கூடத்தில் வேலைபார்த்தான். பதினைந்து வருடங்கள் மெஷின் அடிக்கும் வேலை செய்தான். அவனிடம் உள்ள தொய்வு நோய் காலப்போக்கில் முற்றிக்கொள்ள, அவனால் முன்பு செய்த வேலையின் அளவில் தொழிற்பட முடியவில்லை. அதனால் அச்சுக்கூட முதலாளி அவனை நைசாக வேலையிலிருந்து நீக்கி விட்டார். அவன் வேறு அச்சுக் கூடங்களில் வேலை கேட்டான். அவன் மெலிந்த உடலைக்கண்டு ஒருவரும் வேலை கொடுக்க முன்வரவில்லை. அதனால் வேறு வழியின்றி தனக்குத் தெரிந்த வித்தையை நம்பி குடும்பத்துடன் புறப்பட்டு விட்டான். அவர்களுக்கு இப்பொழுது வீட்டுப் பிரச்சினை இல்லை.

குழந்தை வட்டமிட்டுச் சுழன்று வந்தாள். அவள் தகப்பனை நோக்கவில்லை. தன் தொழிலில் மிகக் கவனம்.

மூவரும் தமது சக்திக்கியன்ற தொழிலைச் செய்தாலும் முன்நிற்கும் மனிதர்களை நிமிர்ந்து பார்க்கும் வெட்கத்தில் இருந்தார்கள். அவர்களை ரசிக்கும் மனித மனங்கள், அவர்களைப் பற்றி எண்ணும் தாழ்வுகளை அவர்கள் அறிவார்கள். அவர்கள் அத்தொழிலைத் தங்களின் விருப்பமின்றி நிர்ப்பந்தமாய்ச் செய்யும் உணர்வின் அழுத்தமான தாக்கம் முகங்களில் சுழிக்கின்றது.

சங்கீதத்தைக் கேட்டும், நடனத்தைப் பார்த்தும் இரசிப்பில் முகமலர்த்தும் கூட்டத்தின் மகிழ்ச்சி அதை அளிப்பவர்களுக்கில்லை. நால்வர் தோற்றத்திலும் வாழ்வைத் தேடும் ஏக்கத்தின் உயிர்ப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை, பாடிய பாட்டு முடிந்ததும் ஆட்டத்தை நிறுத்தினாள் நெஞ்சு எழுந்து மூச்சு வாங்க வாய்திறந்த வண்ணம் இளைத்து நிலத்தில் குந்தி இருந்தாள். நெற்றியின் நடுவில் வியர்வை முத்து, அவள் மூக்கடியில் பிறப்போடு அமைந்த கறுத்தக்காயை மூடிக் கண்ணாடி இட்டது. அந்நிலையிலும், அவளின் கண்கள் சூழ நின்றவர்களின் கை அசைவையும், பணப்பை ஒளிந்திருக்கும் இடங்களையும் ஆவலுடன் நோக்கின.

அவள் முன்னால் சதுரமான பூச்சிலைத்துண்டு பணத்துக்காக விரித்துக் கிடந்தது. தாய் தாளத்தைத் தன் மடியில் போட்டுவிட்டு மகளை வாஞ்சையாய் நோக்கினாள்.

"இங்கைவாம்மா!"

தாயின் அழைப்புக் குரல் அவளின் அரைவாசிக் களைப்பை போக்கிற்று. கழுத்துக் கசிவைக் கையால் வழித்துத் துடைத்துக் கொண்டு, தாயை நோக்கிச் சென்றாள். தாய் அவளை அருகில் அணைத்து, பிடியில் வைத்திருந்த சீலைத் துண்டில் வியர்வை வழியும் முகத்தை துடைத்து, தலையைத் தடவி விட்டாள்.

அவள் திரும்பவும் சலங்கைகள் குலுங்க வந்து, நடுவில், ஒற்றைக் காலை மடக்கிக்குந்தி அமர்ந்தாள். நெஞ்ச இழுப்புத் தணியவில்லை. தன் இடது கால் சின்னி விரல் நகத்தைக் கை விரல்களால் நோண்டிக் கொண்டிருந்தாள்.

நான்கைந்து கைகளில் இருந்து சில்லறைகள் பிச்சை இடும் தோரணையில் துண்டில் வந்து விழுந்து உருண்டன. மற்றவர்கள், சிலர் நழுவ அப்படியே நின்றார்கள். அவர்களுக்கு இன்னும் ரசிக்க விருப்பம் முகங்கள் அதற்குக் கொடி அசைத்தன.

முதுகுகூனி, புறப்பாடாய் வளையும் முள்ளந்தண்டெலும்பில் கசிந்த வியர்வை, அணிந்திருந்த நஷனலை நனைக்க. அந்த அரியண்டத்துடன் இருக்கும் துரைச்சாமி எவரையும் நோக்காது, மிருதங்கத்தில் ஒரு கை போட்டு, மறுகையில் நெற்றியைத் தாங்கிக் கொண்டான். தாய், எவரையும், நோக்காது. விழுந்து கிடக்கும் சருகுகளை விரத்தி புணர்ச்சிப்பட்ட கண்களாக பார்த்திருந்தாள்.

"இது உங்கடை புள்ளையா?" கூட்டத்தில் ஒருவரின் குரல்; அவர் கூலிங்கிளாஸ் அணிந்து தலையில் முன் வழுக்கலில் வெய்யில் படாது, புதினப் பத்திரிகையால் மறைத்துக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னொரு பாட்டுப் பாடி ஆடு"

முரசால் சிரிக்கும் ஒரு கூனல் கிழவன் ஆட்டத்தை வெகுவாக இரசித்தான். அதைத் தொடர்ந்து, பலரின் தலை ஆட்டமும், 'ஓம' என்ற தொனியும்.

"எழும்பி ஆடு!"

"எழும்பு புள்ளை! எழும்பு!"

உடல் சோர்வுற்று கைகால்கள் நோவுகொள்ள இருந்த சிறுமி தன் தாயின் முகத்தைச் சட்டெனப் பார்த்தாள். அப்பார்வையில் 'ஆடத்தான் வேணுமாம்மா?' என்ற கேள்வியின் பரிதாப உணர்ச்சி.

"இதென்ன ஒரு பாட்டுப் பாடிப் போட்ட காசா?"

துரைச்சாமி கேட்டவனை அம்புவிசையுடன் பார்த்து விட்டு, அடுத்தபாட்டுக்கு மிருதங்கத்தில் தட்டி நாதம் எழுப்பினான். அவன் முகம் சிரிப்புக் குடியெழும்பிய வீடு. அங்கு மகிழ்வின் விரலாட்டமுமில்லை.

மகள் எழுந்து ஆட்டத்துக்கு ஆயத்தமானாள்.

மகளின் காலடிகளைக் கேட்கும்போது அவன் முகத்தில் நெஞ்சின் அனலாட்டம் நரம்புகளை விசிறியது. குழந்தையின் பாவைக்குத் தாய் என்ன செய்வாள். அவளுக்கு மகளின் மேல் அன்பும் உயிரும். என்றாலும் எல்லோருக்கும் வயிறு இருக்கிறதே?

தாளங்களைக் கையில் எடுத்து மகளை நோக்கிக் கண்களை வெட் டினாள்: 'இம் ஆடு' அவள் வாய்திறந்து சொல்லவில்லை. முகம் சைகை தூக்கிற்று தாளமிடும் அவளின் உயிர்ப் 'பென் லேம்' சத்தமிட்டு இடித்துக் கொண்டது.

குழந்தையின் மூக்கு நுனியில் வியர்வை முத்துக்கள் தூங்கின. கூட்டத்தில் நிற்கும் முகங்கள் ஆவலாய், ஆனந்தமாய் அவளின் வாய் அசைவையும், கால்களின் மிதிப்பையும் கண்ணிட்டன.

அம்மா வுண்டு அப்பா வுண்டு
சும்மா வல்லை, சொத்துக்கு இல்லை
ஆண்டவனின் பிள்ளைகளில்,
நானும் ஒரு புள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும் சினிமாப்பாட்டுத்தான், சிறுமி மலரை வியூகமிட்டு வரும் வண்ணாத்திப் பூச்சியைப் போல் நொய்மையாகும் கால்களை மாறி, மாறி மிதித்து, கைகளை நீட்டி அபிநயமிட்டு, நடனமிடுகின்றாள். தலையையும் ஆட்டுகின்றாள். ஒருவன் இரசிக்கும் மட்டும் இரசித்து விட்டு கூட்டத்தை விட்டு விலகி நடக்கும் போது இன்னொருவன் அவ்விடத்தை நாடி வந்தான்.

"உங்கை ஏன்ன நடக்குது!"

"அது காசு பறிக்கினம்!"

அவன் எதுவித க டமுமின்றிக் கூறிவிட்டுச் சென்றான். அவனுக்கு முன்னால், அவனுக்கு முன்பே கூட்டத்தை விட்டு விலகிய இருகிழவர்கள் நடந்து கொண்டிருந்தனர். ஒருவர் பொல்லைத் துணையாக்கி நடந்தார்.

"குடும்பமாய்க் காசுழைக்க வந்திட்டினம்!"

"பொட்டையைப் பார்த்தியா இப்ப இப்படியெண்டால், வளர்ந்து தெண்டால் எத்தனை புருஷனைப் புடிக்கும்; கெட்ட குமரி யாய்த் தான் வரும்!"

"உ வளவை தோறையள் தானே!"

"ஓம், ஓம், நாடு கெட்டு வருகுது!"

அவர்கள் நால்வரையும் பார்த்த பார்வையில், இவர்களின் அனுபவத்துக்கும், சிந்தனைக்கும் எட்டிய அளவில் கதைத்துக் கொண்டனர்.

எல்லோரும் அவளின் பாட்டிலும், அதற்கிசைந்த ஆட்டத்திலும் மனங்களிந்தனர். சிலர் காலாலும், தலையாலும் தொடைகளில் த ட்டியும், தாளம் போட்டுக் கொண்டனர்.

அவளுக்கு ஆடி, ஆடிப்பாடி நாவரண்டுவிட்டது. ஆட்டத்தை நிறுத்தி தாயிடம் நீர்கேட்க அவளுக்குப் பயம். கூட்டம் கலைந்து விடும், பணம் சேராது கூட்டத்தின் கவனத்தை அவதானித்தவள், ஆடிக் கொண்டு தாயிருக்கும் திசை நோக்கிக் கையின் சைகையால் நீர் எனக் கேட்டாள். அவள் இட்ட நடனத்தில் அதுவும் ஒரு அங்கம். தாய் தாளத்தை நிலத்தில் இட்டு, துரிதமாய் பேணியில் இருந்த நீரைத்துக்கி மகளின் கையில் கொடுத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுமி நீரை வாங்கிக் குடித்தாள். அவதி, அவதியாய் குடிக்கும் வேளையிலும் கால்கள் தாளத்தோடு சலங்கை ஆட்டுவதை நிறுத்த வில்லை; அது அவள் தாளம்.

"பொட்டை ஆடுதுதான் தாளத்துக்கு ஆடுதில்லை!"

"சின்ன வயசு தானே வயசுக்குப் பிழை இல்லை!"

"இதென்ன பேய்க்கதை, இந்த வயசில் உங்கை சினிமாவிலை நல்லா ஆடுதுகள்!"

துரைச்சாமி வேகமாய் நிமிர்ந்து கதைத்தவர்களைப் பார்த்து விட்டுக் குனிந்தான். அவன் முக நரம்புகளில் இரத்தம் கொப்பளித்தது. அவர்களின் வார்த்தைகள் ஆடுபவளின் காதிலும் விழுந்தன; ஆட்டம் மு டிவை எட்டிவிடினும் மிகுதி உள்ள நேரத்தில் தன் திறமை எல்லாம் காட்டி ஆடி, உடலைப் பிரட்டி, வளைத்து ஆட்டம் போட்டு முடித்தாள்.

அவளுக்கு, அவளை மீறிய இளைப்பும், ஆடிய இடத்தில் கால்களை நீட்டி கைகளைப் பின்ஊன்றி இருந்து, மூச்சுவாங் கினாள். நெற்றியின் வியர்வை முகத்தின் பூச்சைக்கழுவி, நாடியால் சொட்டுப் போட்டது. வாய் ஆவென்று திறந்திருந்தது.

துரைச்சாமி இருகைகளையும் மிருதங்கத்தில் ஊன்றி முகத்தைப் பொத்திக் கொண்டு கண்மூடி இருந்தான். அவனுக்கு குழந்தையைவிட இளைப்பு. தாய் தாளத்தைக் கையில் தூக்கியவாறு சில்லறை எறியும் மனிதர்களை விலக்கி எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள். இமைகள் தம்மிச்சையாய் முட்டி விலகிக் கொண்டிருந்தன.

வீணை மீட்டும் பையன்தான் காசு பொறுக்கும் வழக்கம், அவன் மனிதர்களின் கைகளைப் பார்த்தான். வேலைகளையும் மறந்து இரசித்தவர்களில் சிலர், வில்லங்கமாய் காசை எறிந்து விட்டு நடந்தனர்.எல்லோரும் போய் விட்டார்கள்.

மகோக்கனியின் கீழ் நால்வரும் தனியே இருந்தனர். பையன் சீலைத்துண்டுக்கருகில் சென்றான். அங்கு தங்கை களைத் திருப்பதைக் கண்டதும், தான் உடுத்தியிருந்த சாறத் தலைப்பால் அவளின் முக வியர்வையைத் துடைத்து விட்டான். அவள் எழுந்து சென்று தாயின் மடியில் தலை சாய்த்துப் படுத்துக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் கைகள் அவளின் தலையையும் முதுகையும் வருடிக் கொடுத்தன. மகளைப் பார்க்கும் ஆசையில் மனத்தோடு இழுபடும் தலையை கவிழ்த்துக் கொண்டாள்.

பையன், சில்லறைகளைச் சேர்த்து, எடுத்துச் சென்று, தகப்பனின் கண்முன் நீட்டிவிட்டு, தங்கைக்கு 'பணிஸ்' வாங்குவதற்கு கடையை நோக்கி ஓடினான். சற்றுநேரம் மகனின் கையில் உள்ள பணத்தை நோக்கிவிட்டு, கலைந்து செல்லும் மனிதர்களைப் பார்த்தான்.

"எங்களைத் தொண்டர்கள்

எண்டு நினைத்துவிட்டார்கள் போலை?"

வாய் விட்டுச் சொல்லி விட்டு, முகத்தைத் துடைத்து, நெற்றியைக் கை விரல்களில் தாங்கி குனிந்து இருந்தான். பின்பு, நிமிர்ந்து களைத்துப் போய் ஓடிந்து கிடக்கும் மகளைப் பார்த்தான். தகப்பனின் கண்கள் குளங்களாயின.

"மணியம்மா!"

அவன் அழைத்தான். அது அவளுக்குக் கேட்கவில்லை. அவனால் திரும்ப அழைக்க முடியவில்லை.

சிறிது களைப்பு நீங்க, வெய்யிலின் வேட்கை, சுவைத்த துளிராய், சுண்டிக்கப்பிய முகத்துடன், மணியம்மை எழுந்து, முழந்தாழ்ப் படியிட்டு, தாயின் இரு தோள்களிலும் கைகளை வைத்துத் தடவினாள். தாய்க்கு குழந்தையின் சிநேகக் குழைவின் அடிமானம், அவளின் ஆட்டம் முடிந்ததும், சிணைப்பட்டு, அவள் செய்கையின் படிகள் ஏறஏற துன்பமாக உயிர்பெற்று, உள்ளே பிராடிக் கொண்டிருந்தது. மகளைத் தன் மடிக்குள் இழுத்து, முதுகைத் தடவினாள் அவள் அதையும் மீறி எழுந்து மீளவும் முழந்தாள் படியில் இருந்தாள். தாயின் வலது தோளில் வைத்த கையை எடுத்து தாயின் தலைமயிரை வருடி, கன்னங்களைத் தடவி, நாடி முனையைப் பிடித்து, தன்முகத்துக்கு எதிராக நிமிர்த்தினாள். தாயின் முகத்தில் அவள் கண்களின் ஊடுருவல்; தாய்க்கு மகளின் முகத்தை நேரிட்டுப் பார்க்கப் பயம். விசாரணையிடும் நடுவன் முன்னால், ஊமையாக முழிக்கும் குற்றவாளியின் நிலையில் அவள்.

"அம்மா!"

"................"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் நெற்றியில் கசியும் வியர்வையை அவள் துடைத்தாள்.

"அம்மா"

மகள் அம்மாவென அழைக்க அழைக்க, மௌனமான அவளின் மனம் பல எண்ணங்களில் கால் வைத்து ஓடி, முடிவெடுத்து, மீண்டு, முடிவை அழித்து, முடிவெடுத்துக் கொண்டிருந்தது. இவ்வுழைப்பை இன்றுடனே விட்டுத் தொலைத்து, மகளுக்கு விடுதலை கொடுத்து தாமே ஏதும் உழைத்துப் பிழைப்போம் என்ற எண்ணம், துளிராகுமுன்னம் தன்னதும் கணவனதும் உடற் கோலங்கள் ரூபங்காட்டிப் பயமுறுத்தும். அதுவே இப்பொழுதும் முன்னிலும் வேகமாய் அவளுள் சுரண்டியது.

திருப்பிக் கணவனை நோக்கினாள், அவன் கண்களைப் பொத்திய குகைகளுக்குள் முகம்காட்டி இருந்தான். குழந்தை திரும்பவும், தாயின் நாடியைப் பிடித்துத் தன் கண்களுக்கு நேராக நிமிர்த்தினாள். தாய், மகளின் கைவிரல் நடுக்கங்களில் ஆடிய ஆட்டத்தின் கனத்தை அறிந்தாள். அவள் மனதில் இன்னும், இன்னும் தாக்கம். கண்களும் நடுங்கின.

"அம்மா"

குழந்தை செல்லமாக அழைத்தாள்.

"............"

தாய் கண் இமைகள் வெட்டினாள் குழந்தை, சலங்கைக் கட்டிக் காய்ந்து வீங்கிய கணுக்காலில் வளையத்தை கைவிரல் களால் தடவிக் கொண்டு, மறுகையால் தாயின் நாடியைப் பிடித்தாள்.

"இங்கை பாரம்மா!"

தாய், குழந்தையின் தேவையை ஆவலாய்க் கேட்டாள்.

"என்னக் குஞ்சு?"

"என்னைப் பாரம்மா!"

தாய், மெதுவாகக் குனிந்து மகளின் கண்களை நோக்கினாள்.

"நாளைக்கும் ஆடவேணுமாம்மா?"

"......"

"அம்மா! நாளைக்கும் ஆட வேணுமாம்மா?"

"........"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனும் மனிதனும்

சதீசன் வெள்ளவத்தைச் சந்தையில் மரக்கறி வாங்கிக் கொண்டு நிற்கையில் அவனோடு மொறட்டுவைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் இரண்டாம் ஆண்டில் பயிலும் துயந்தனைச் சந்தித்தான்.

சதீசனோடு மொறட்டுவையில் ஒரு சிங்கள வீட்டில் ஒரே அறையில் தங்கியிருக்கும் விமலசிறிக்குச் சுகமில்லை யென்ற செய்தியை துயந்தன் அவனிடம் கூறினான். விடுமுறை விட்டுச் செல்லும் போது விமலசிறி சுகமாகத்தான் வீடு சென்றான்.

சதீசனுக்கு அந்தச் செய்தி மனதைப் பெரிதும் வாட்டிக் கொண்டிருந்தது.

யாழ்ப்பாணம் பிரபல கல்லூரி ஒன்றில் அவனோடு படித்த அவனது மனதுக்கினிய நண்பர்கள் எல்லோரும் லண்டனுக்குச் சென்ற பின்னர் அவன் தனிமைப்பட்டுப் போயிருந்தான்.

மொறட்டுவைப் பல்கலைக்கழத்துக்கு வந்த பின்னர் விமலசிறி அவனுக்குப் பிடித்த நண்பனாய் மாறிவிட்டான். அவன் சதீசனின் சகமாணவன்.

சதீசனுக்குச் சிங்கனம் பேசத் தெரியாது. விமலசிறிக்குத் தமிழ் பேசத் தெரியும். அவன் புளத்சிங்களவில் உள்ள கலஹேன இறப்பர்த் தோட்டத்தில் பிறந்து வளர்ந்தவன். அத்தோட்டத்திலே சிங்களத் தொழிலாளர்களும் தமிழ்த் தொழிலாளார்களும் வேலை செய்து வருகிறார்கள். அந்தத் தோட்டத்து லயங்களிலே அவர்கள் எல்லோரும் அக்கம் பக்கமாய் வாழ்ந்து வருகிறார்கள்.

இனக் கலவரங்கள் நடந்த ஆண்டுகளில் அங்கு எந்தவித அசம்பாவிதங்களும் நடக்கவில்லையென்று விமலசிறி கூறியதைக் கேட்டுச் சதீசன் ஆச்சரியப்பட்டான்.

அவன் யாழ்ப்பாணத்திலிருந்து மொறட்டுவைப் பல்கலைக் கழகத்துக்கு வந்தபோது சிங்களவரைப் பற்றி அவனிடமிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பெண்ணங்கள் விமலசிறியோடும் வேறுபல சிங்கள நண்பர்களோடும் பழகியதனால் பெரிதும் மாறிப் போயிற்று.

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் நல்லவர்கள் சுயநல அரசியல் வாதிகள் தான் அவர்களின் மனங்களைக் கெடுக்கிறார்கள் என்ற கருத்தை சதீசனும் விமலசிறியும் ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

விமலசிறி வடகிழக்கில் வாழும் தமிழ் மக்கள் அர்த்தமற்ற போர்ச் சூழ்நிலையினால் படுந்துன்பங்களையும் அவலங்களையும் அனுதாபத்துடன் கேட்டுத் துயர் கொண்டபோது சதீசனுக்கு அவன் மீது பாசம் உண்டாயிற்று.

இருவரும் ஒரே அறையில் இருந்து உறவாடி வருகையிலே இருவரது குடும்பங்கள் பற்றியும் மனம் விட்டுப் பேசிக் கொண்டனர்.

சதீசன் வங்கி முகாமையாளர் ஒருவரின் மகன். விமலசிறி இறப்பர்த் தோட்டத் தொழிலாளியின் மகன் அவனது தகப்பன் உணவுக்காகப் பலாக்காய் பிடுங்க பலாமரத்திலேறிச் சறுக்கி விழுந்து ஐந்தாண்டுகளுக்கு முன்னர் இறந்து விட்டான். தாயார் தான் இறப்பர்த் தோட்டத்தில் இறப்பர்பால் எடுத்துக் குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறாள். அவனது அக்கா எட்டாம் வகுப்போடு படிப்பை நிறுத்தி விட்டாள்.

விமலசிறி மூன்று வேளை சாப்பிட முடியாத வறுமையிலும் கல்வி கற்க முறையான பாடசாலை இல்லாத நிலையிலும் கடும் முயற்சியினால் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானான்.

விமலசிறிக்குப் பணம் தேவைப்பட்ட போதெல்லாம் சதீசன் மனமுவந்து உதவி செய்து வந்தான். அதிலே அவன் ஒரு சுகத்தையும் அனுபவித்தான். விமலசிறி ஒரு தொய்வு நோயாளி. குளிர் காலத்தில் அவனுக்கு தொய்வு இழுப்பு அதிகரித்து அவஸ்தைப்படும் போது சதீசன் அவனை டாக்டரிடம் அழைத்துச் சென்று மருந்து வாங்கிக் கொடுத்து அவனை இராப்பகலாகப் பராமரித்து வந்துள்ளான்.

ஒருமுறை சதீசனுக்கு கடுமையான காய்ச்சலும் இருமலும், விமலசிறி அவனை டாக்டரிடம் கூட்டிச் சென்று மருந்து வாங்கினான். அவனிடம் பத்து ரூபாய் மாத்திரமே இருந்தது. அவனிடம் பணம் இருக்காதென்று சதீசனுக்கு தெரியும். அவன் விமலசிறியிடம் மருந்துக்கான பணத்தைக் கொடுத்தான். விமலசிறி தன்னிடமிருந்த பத்து ரூபாவையும் மருந்துக்குக் கொடுத்து, மிகுதிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தை சதீசனிடம் கொடுத்தபோது அவன் கண்கள் கசிந்து போயிற்று. சதீசன் சுகமாகி எழும்பும் வரை விமலசிறி நித்திரை கொள்ளாமல் படித்துக் கொண்டிருப்பவனைப் போல் காட்டி அவனைப் பராமரித்து வந்தான்.

சதீசன் வெள்ளவத்தைச் சந்தையிலிருந்து லில்லி அவனியூவில் உள்ள அவனது வாடகை வீட்டுக்கு வந்து மரக்கறிப் பையைத் தாயிடம் கொடுத்து விட்டு முன் ஹோலுக்கு வந்து ஒரு கதிரையில் அமர்ந்து தலை கவிழ்த்து நெத்திப் பொருத்துக்களை வலது கை விரல்களால் அழுத்தியவாறு கவலை கொண்டிருந்தான்.

"சதீஸ்" என்னடா ஏதோ கவலைப்படுகிற மாதிரித் தெரியுது" அங்கு வந்த தாயார் கேட்டார்.

"அம்மா என்ரை அறையில் என்னோடை இருக்கும் விமல சிறிக்கு சுகமில்லையாம். அவன் ஒரு தொய்வு நோயாளி எண்டு உங்களுக்குச் சொன்னான் தானே.

துஷ்யந்தான் சொன்னான் நான் அவனைப் போய்ப் பார்க்க வேணும்"

"நீ போய் பார்க்கத்தானே வேணும் மகனே!"

"அம்மா காசு கொஞ்சம் வேணும்"

"தாறன் எவ்வளவு வேணும்?"

"நூற்றியம்பது ரூபா!"

அவனிடம் எண்பது ரூபாவரை இருந்தது.

"தாறன் போய்ப் பார்த்திட்டு வா! அந்தப் புள்ள புளத் சிங்களவில யெல்லோ இருக்கிறது. தூரமல்லவோ?"

"இப்ப ஒன்பது மணியம்மா இப்ப போனால் அவனைப் பாத்திட்டு பொழுது படுவதற்கு முந்தி வந்திடலாம்"

"அப்ப இப்பவே போயிட்டு வா பாவம் நல்ல புள்ள"

தாயார் அறைக்குச் சென்று அலுமாரியைத் திறந்து பணத்தை எடுத்து வந்தாள்.

"இந்தா இருநூறு ரூபா இருக்கு; போயிட்டு இருட்ட முந்தி வந்திடு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதீசன் பணத்தை வாங்கிக் கொண்டு எழுந்தான்.

"அது சிங்கள ஊர் உன்னைப் பயங்கரவாதியென்று புடிக்க மாட்டாங்களா?"

"இல்லையம்மா நீ பயப்படாதை! நான் சமாளிப்பன்"

"உன்னட்டை ஐடின்ரிக் காட் இருக்குத் தானே?"

"ஓம்"

"தேத்தண்ணி குடிச்சிட்டுப் போவன்!"

" வேண்டாம் அம்மா நேரம் போகுது எப்படியும் இரவு வந்து விடுவனம்மா!"

அவன் காலி றோட்டுக்கு விரைவாக நடந்து வந்து புறக் கோட்டை பஸ் ஒன்றில் இடிபட்டு ஏறி புறக்கோட்டைக்கு வந்த போது ஹொறணை பஸ் புறப்பட ஆயத்தமாக நின்றது. உடனே அதில் போய் ஏறிக் கொண்டான்.

ஹொறணையில் பஸ்ஸிலிருந்து இறங்கியபோது மணி பதினொன்றே கால். விமலசிறி கூறியவாறு புளத்சிங்கள நோக்கிச் செல்லும் பஸ்ஸில் ஏறிக்கொண்டான்.

பஸ் புளத்சிங்களவை நோக்கி ஓடிக் கொண்டிருக்கும் போது தெருவின் இருபக்கங்களிலும் செழித்து வளர்ந்துள்ள மரங்களையும், தண்ணீரில் சுகங்காணும் நெல் வயல்களையும், இராணுவ வீரர்கள் போல் அணிவகுத்து உயர்ந்து நிற்கின்ற இறப்பர் மரங்கள் தம் கிளைகளால் ஒன்றை ஒன்று அணைத்துக் கொண்டிருக்கின்ற அழகையும் பார்த்து இரசித்துக் கொண்டிருக்கையில் அவனது மனத்தின் அடியிலே 'செல்' விச்சாலும் குண்டு பொழிதலாலும் சிதைந்து சீரழிந்து வரண்டு கிடக்கின்ற தனது பிரதேசத்தின் கோரக் காட்சி கவலையுணர்வுகளை எழுப்பின.

அவன் மௌனித்திருந்தான்.

அத்துறவில் வந்திறங்கிய அவன் விமலசிறி கூறிய குறிப்புகளின் படி நடந்து சென்று விமலசிறியின் லயத்தை அடைந்தான். விமலசிறியின் வீடு அந்த லயத்தில் மூன்றாவது.

அந்த லயத்துக்கு முன்னால் நாய்கள் சில சோம்பிப் போய்ச் சுருண்டு தூங்கின. போசாக்கின்மையாக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விமல சிறி"

அன்னியமான இடமாதலால் சிறிது தயக்கத்துடன் மெதுவாகக் கூப்பிட்டான். குரலில் நட்புணர்வு தோய்ந்திருந்தது.

"கௌத?"

கவுன் அணிந்த ஓர் இளம் பெண் அறைவாசலுக்கு வந்தாள். பயந்த சுபாவம் விமலசிறியின் அக்காவாய் இருக்க வேண்டும்.

"மம விமலசிறிக்கே றூம் மேற் சதீசன்"

"ஓ! அத்துளட்ட எண்டக்கோ (உள்ள வாங்க) வந்து உங்காருங்க!" என்று கூறிய அவள், அம்மே என்று உரக்கக் கூப்பிட்டுக் கொண்டு உள்ளே போனாள். சில வினாடிகளில் தாயும் அவளும் முன் பக்கம் வந்தனர். தாயார் றவிக்கை போட்டு அரையில் கம்பாயம் கட்டியிருந்தாள். இருகை விரல்களையும் கோர்த்தபடி சிரித்துக் கொண்டு "உள்ள வாங்க புத்தா!" என்று சதீனை அழைத்தாள்.

அவன் மெதுவாக நடந்து குனிந்து உள்ளே சென்று முன்பக்கச் சிறு விறாந்தையில் போடப்பட்டிருந்த கறுத்துப் போன ஒரு பழைய கதிரையில் உட்கார்ந்தான். கதிரைக் கால்கள் கொட கொடத்து ஆடின.

அவன் நிமிர்ந்து பார்க்கையில் முகத்தை வந்து முட்டுவது போல் தகரத்தால் அமைந்த கூரை, சன்னல்களற்று இருள் சூழ்ந்திருக்கும் ஓர் சிறு அறையும் விறாந்தையும் இதற்குள் இருந்த விமலசிறி பல்கலைக்கழகத்துக்கு வந்தான் என அவன் ஆச்சரியப் பட்டுக் கொண்டிருந்தான்.

"உங்களைப் பத்தி மகன் சென்னாரு அவருக்கக் கொஞ்சம் சொகமில்லை. மருந்து வாங்கப் போயிருக்கார். இப்ப வந்துடுவாரு."

விமலசிறியின் தாயார் தமிழில் பேசியதை அவன் வியந்து இரசித்தான்.

"அவருக்குச் சுகமில்லை எண்டு அறிந்து தான் வந்தன்"

"இப்ப வந்திடுவார். இந்தா வாரார்"

சதீசன் குனிந்து வெளியே பார்த்தான். விமலசிறியைக் கண்டதும் மனம் சந்தோசமானது. விமலசிறி உள்ளே வந்து சதீசனைக் கண்டதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சதீஸ் என்ன மச்சான் என்னைப் பார்க்கவா வந்தாய்?" என்று கூறிக்கொண்டு அவனது தோளை வருடினான்.

"ஓம் மச்சான் சுகமா? எப்படி இருக்கிறாய்? மருந்து வாங்கிக் குடிச்சியா"

"ஆமா மருந்து வாங்கத்தான் போயிட்டு வாறன். அக்கா!..... பொறு மச்சான் வந்திடுறன்."

விமலசிறி உள்ளே போனான். சதீசன் பக்கீஸ் பலகையால் அடைக்க ப்பட்ட சுவரில் பிறேம் போட்டுத்தொங்க விடப் பட்டிருந்த விமலசிறியின் தகப்பன் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். விமலசிறியின் சாயல் அதில் தெரிந்தது. கடின உழைப்பாலும் வறுமையாலும் சுருக்கம் விழுந்த முகம்.

"தம்பி ரீ குடியுங்க!"

அவனது அக்கா தேநீர்க் கோப்பையை நீட்டினாள். அவன் அவளை நிமிர்ந்து பார்த்து புன்னகைத்தபடி தேநீர்க் கோப்பையை இருகைகளாலும் வாங்கினான். வறுமையின் நகக்கீறல்கள் அவள் முகத்தில் தெரிந்தது.

"தாங்ஸ் அக்கா"

அவள் சிறு சிரிப்போடு உள்ளே போனாள்.

அவன் தேநீர் குடித்துக் கொண்டிருக்கையில் உள்ளே உண்டியல் உடைத்து சில்லறைகள் நிலத்தில் விழும் சத்தம் அவனுக்குக் கேட்டது. அதைக் கேட்டு சிறிது யோசித்தான். விமலசிறி அவனருகில் வந்து இன்னொரு பழைய கதிரையை அவனுக் கருகில் இழுத்துப் போட்டு அதில் அமர்ந்து அவனது கைகளைப் பிடித்தான். அந்தக் கதிரைக் கால்களும் ஆடின.

"சதீஸ் நீ பகலைக்கி எங்க வீட்டில சாப்பிட்டுட்டுப் போகவேணும் சரியா?"

"ஏன் மச்சான் உங்களுக்கு கரைச்சல் நான் நேரத்துக்கு வீட்டை போகவேணும்."

"கரைச்சல் ஒன்னுமில்லை. நீ எங்களோடை சாப்பிட்டுத்தான் போகவேணும். நான் விடமாட்டான்."

"சரியா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதீசனால் அதை மறுக்க முடியவில்லை. விமலசிறியின் முகத்தைப் பார்த்துச் சம்மதமான ஒரு சிரிப்புச் சிரித்தான்.

அப்போது அவனது அக்கா கித்துல் ஓலைப்பை யொன்றை வலது கையில் கொழுவியபடி வெளியே அவசரமாகத் தலை குனிந்தவாறு நடந்து போனாள்.

"சதீஸ் எனக்குச் சுகமில்லை பத்தி ஆர் சொன்னது?"

"து யந்தன்"

"அவனுக்கு எம்மடை நண்பர் யாராவது சொல்லியிருக்கலாம்."

"நீ படுக்கையில் கிடந்தியா?"

"ஆமா நாலஞ்சு நாள் சரியான இழுப்பு இப்ப சுகம்"

"மருந்து வாங்கப் போனாய்?"

"மருந்து வாங்கக் காசு வேணுமே. அம்மாவுக்குப் பொய் சொன்னன் அது கிடக்கட்டும். நீ என்னைப் பார்க்க வந்தது பெரிய சந்தோசமாகயிருக்கு மச்சான்"

"உனக்கு சுகமில்லை என்று கேட்ட பின்பு உன்னைப் பார்க்காமலிருக்க முடியவில்லை மாச்சான்"

"எனக்கு இந்தத் தொய்வு வியாதி மாறாது. நான் முற்பிறப்பில் பாவஞ் செய்திருக்க வேணும்"

விமலசிறி கூறி விட்டு சுவரில் தொங்கிக் கொண்டிருநத புத்தரின் படத்தைப் பார்த்தான். பெருமூச்சு வெளிப்போனது.

"அப்படிச் சொல்லாதை மச்சான். அது மாறிப் போயிடும், நம்பிக்கை இழக்காதை! உனக்கு இந்த நோய் நீடிக்கக் கூடாது."

சதீசன் அவனது கைகளை இறுகப் பற்றினான்.

விமலசிறி விடுமுறை விட்டு வீடு சென்ற போது இருந்ததிலும் மெலிந்து வரண்டு போய் இருந்தான். உதடுகள் வறண்டு வெடித்திருந்தன.

இருவரும் தமது படிப்பைப் பற்றியும் நண்பர்களைப் பற்றியும் அரசியல் நிலைமைகள் பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர்.

"சாப்பாடு! சரி சாப்பிட வாங்கோ தம்பி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது தாயார் வந்து அழைத்தாள். முகத்தில் பூரணமலர்ச்சி. விமலசிறி சதீசனின் கையைப்பற்றி இழுத்துக் கொண்டு உள்ளே போனான்.

ஒரு சிறு பக்கீஸ் பலகை மேசையில் சாப்பாடு வைக்கப் பட்டிருந்தது. அந்த மேசையை பொலீத்தீன் பேப்பர் மூடியிருந்தது. விமலசிறியின் அம்மாவும் அக்காவும் 'சாப்பிடுங்க தம்பி' என்று கூறி அன்பாகப் பறிமாறினார்கள். அவன் அந்த அன்புப் பிடியில் திக்கு முக்காடிப் போனான். நெத்தலிக் குளம்பு, பொலஸ்கறி, கத்தரிக் காய் பெரியல், தேங்காய்ச் சம்பல், மாங்காய்ச் சொதி, அவித்த முட்டை.. சதீசன் சுவைத்துச் சாப்பிட்டான். வயிறு முட்டிப் போயிற்று.

"அம்மா சாப்பாடு வோம ஹொந்தாய். நேரமாகுது. நான் போயிட்டு வாறன். அம்மா பார்த்துக் கொண்டிருப்பா. பயந்து கொண்டு"

"நல்லது தம்பி! நீங்க கொழும்புக்குப் போக வேணுந்தானே?"

"ஓம் அம்மா"

அப்போது மணி பிற்பகல் இரண்டு.

தாயாரும் அக்காவும் அவனை நோக்கிக் கும்பிட்டனர்.

அவனும் இருகை கூப்பிக் கும்பிட்டான்.

விமலசிறி அவனோடு நடந்து வந்தான்.

"விமல் மருந்தெடுக்காமல் நோய் சுகமாகுமாடா?"

"ஆமா, நீ சொல்றது சரிதான்."

விமலசிறி நோகாமல் சிரித்தான்.

சதீசனால் சிறிது நேரம் பேச முடியவில்லை.

"உங்க அக்கா ஏன் உண்டியல் உடைச்சா?"

"உனக்குச் சாப்பாடு சமைக்க!"

சதீசன் விமலசிறியின் தோளில் கையைப் போட்டான்.

"அக்கா தையலுக்குத்தானே போறவ?"

"ஆமா ஏதோ கொஞ்சம் சம்பாதிக்கும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் அத்துற பஸ் நிலையத்தை வந்தடைந்தனர். ஹொறணை நோக்கிப் போகின்ற பஸ் தயாராக நின்றது. பஸ் புறப்படும் வரை இருவரும் தெருவில் நின்று பேசிக் கொண்டிருந்தனர்.

"சதீஸ் உனக்கு நான் இருநூற்று ஐம்பது ரூபா கடன் தரவேணும் தருவன் மச்சான்."

"என்னடா நீ உன்னட்டைக் கடன்காசு வேண்டவா வந்தனான்?"

"இல்லை மச்சான் அதைச் சொல்ல வேணும் போல் இருந்திச்சு"

விமலசிறி நிலத்தைப் பார்த்தவாறு நின்றான்.

பஸ் புறப்படத் தயாரானது.

சதீசன் தன் சேட்டுப் பைக்குள் கைவைத்து இறுநூறு ரூபாவை எடுத்து நாலாக மடித்து விமலசிறியின் வலது கையைப் பிடித்து கைவிரல்களுக்குள் அதைத் திணித்து விட்டு பஸ்ஸுக்குள் பாய்ந்து ஏறினான்.

விமலசிறி தன் கைக்குள் திணித்த தாள்களைப் பார்த்தான்.

"டேய் சதீஸ் இதென்னடா?"

"மருந்து வாங்கிக் குடி அடுத்த கிழமை மொறட்டுவையில் சந்திப்பம். வாறன் மச்சான்!"

"சதீஸ்"

சதீஸ் சிரித்தபடி கை காட்டினான் பஸ் புறப்பட்டது. விமலசிறி புகைகக்கிச் செல்லும் பஸ்ஸைப் பார்த்துக் கொண்டு நின்றான். அவன் கண்கள் ஈரமாகின.

**வீரகேசரி – 1994.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலை விதியைப் பறி கொடுத்தோர்

யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றும் போர் தீவிரமாக நடந்து கொண்டிருந்த காலம். யாழ்ப்பாண நகரத்தில் வாழ்கின்ற மக்களுக்குப் பயங்கரமான அனுபவம்.

உழைத்ததெல்லாம் செலவழித்துக் கட்டிய வீடுகள், பெண் பிள்ளைகளுக்குச் சீதனம் கொடுக்கக் கடனில் கட்டிய வீடுகள் எல்லாம் 'செல்' அடியில் விமானக்குண்டுத் தாக்குதல்களில் தரைமட்டமாகிக் கொண்டிருந்தன.

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து இரண்டு மைல்தூரத்திலே இராசாவின் தோட்ட வீதியிலே நாங்கள் வசித்த வீடு அமைந்திருக்கின்றது.

1983 கலவரத்தின்போது கொழும்பில் நாங்கள் இருந்தோம். எங்கள் வீட்டைக் காடையர்கள் தாக்கியபோது, பின் மதிலால் பிள்ளைகளுடன் பாய்ந்து ஓடி வாழைத்தோட்டச் சேற்று நிலத்தில் மூன்று நாட்கள் பட்டினியாகக் கிடந்து இராஜகிரியாவிலுள்ள ஆலயத்திலே தஞ்சம் புகுந்து, வெறுங்கையோடுயாழ்ப்பாணஞ் சென்று எனது மனைவியின் அண்ணனுடைய அந்த வீட்டில் தஞ்சம் புகுந்தோம்.

இந்திய அமைதிகாக்கும் படை யாழ்ப்பாண நகரத்தைக் கைப் பற்றச் செல்லடித்து, வீடுகளையும் உயிர்களையும் பலி கொண்ட போது. உயிர்தப்ப சாவகச்சேரிக்கு ஒரு வானில் ஓடிச் சென்றோம். அங்கு ஒரு மாதம் மானாவளைக் கிராமத்திலே ஒளிந்திருந்து யாழ்ப்பாண நகரத்தை இந்திய அமைதிகாக்கும் படை கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்த பின்னர் சாவகச்சேரியிலிருந்து கோப்பாய்ச் சந்திக்கு வானில் வந்து இந்திய அமைதிகாக்கும் படையின் கெடுபிடிச் சோதனைகளுக்குப் பின் இராஜ விதிவழியாக நாறிக்கிடந்த பிரேதங்களைக் கடந்து மீண்டும் வீடு வந்து சேர்ந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அமைதி காக்கும் படை அகன்ற பின்னர் இனி அமைதி ஏற்பட்டு விடுமென பெமூச்சு விட்டு நெஞ்சு இறங்கவில்லை.

மீண்டும் போர்.

ஒவ்வொரு வீட்டிலும் பதுங்குகுழி வெட்டி போர்ச் சூழ் நிலையில் உயிரைக் காக்கும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாயினர் வடபகுதி மக்கள் யாழ்ப்பாணக்கோட்டை முற்றுகை இடப்பட்டிருந்ததால் 'ஷெல்' அடிகளும், ஹெலி கொப்டர் குண்டு வீசுவதும் அவ்ரோ விமானம் பீப்பாக்குண்டு வீசுவதும் அதிகரித்துக் கொண்டிருந்தன.

ஒவ்வொரு நாளும் எல்லா வீதிகளிலும் அவலச் சாவுகள். நாங்கள் எங்கள் வீட்டு முற்றத்திலே ஐயாயிரம் ரூபா செலவழித்து அமைத்த பதுங்கு குழிக்குள் விமான இரைச்சல் கேட்டதும் இடி இடிக்கும் நெஞ்சைப் பொத்திக் கொண்டு குடும்பமாய் ஓடி ஓடிப் பதுங்குவதும், விமான இரைச்சல் ஒய்ந்ததும் வெளியேறி மூச்சு விடுவதும், நினைக்காத நேரத்தில் குண்டு பொழியும் சத்தம் கேட்டு மீண்டும் பதுங்கு குழிக்குள் முட்டி மோதி விழுந்து கடவுளைக் கும்பிட்டுக் கொண்டிருப்பதும் இதயங்களைப் பலவீனப்படுத் துகின்ற பயங்கொள்ளி வாழ்க்கை.

எந்நேரமும் எவரும் குண்டு வீச்சுக்கு, இரையாகிக் கொல்லப் படலாமென்ற நிச்சயமான நிலை. எங்கள் வீட்டைச் சுற்றி அந்தக் கொலைகள் நிகழ்ந்து கொண்டிருந்தன. எங்கும் அழுகையும் சோகமும் பதறி ஓடலும். எனது நண்பன் ஜீவாவின் மகன் யாழ்ப் பாணப் புகையிரதக் கடவைக் கருகில் உள்ள வீட்டு முற்றத்தில் செல் விழுந்து முகஞ்சிதறிச் செத்துக்கிடந்தான்.

என் வீட்டுக்கு அருகிலுள்ள வீட்டைப் பிய்த்துக் கொண்டு பீப்பாக்குண்டு விழுந்து அங்கிருந்த நால்வரும் அகோரமாய் மாண்டு கிடந்தனர். மருதடி வீதியிலே எனது சகோதரியின் வீட்டில் செல் விழுந்து வீட்டின் குசினிப் பாகம் நொருங்கியதுடன், என் சகோதரியின் குதிக்காலுக் கூடாக செல் வெகுதூரம் சென்று கிடந்தது.

மருதடிப் பிள்ளையார் கோயில் ஐயர், குளத்துக்கு முன்ன ல் உருக்குலைந்து கிடந்தார். எங்கள் விட்டுப் பதுங்கு குழி எங்களு குப் பாதுகாப்பில்லை என்று நாங்கள் எங்கள் ஊர்ப்பாடசால யின் இரண்டு மாடிக் கட்டிடத்தின் கீழ் நானும் மனைவியும் மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளும் செத்தால் எல்லோரும் சாவோம் என்று ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்தவாறு வானத்து இரைச்சல்களைக் காது கொடுத்துக் கேட்டவாறு இதயங்கள் பதறிக் கொண்டு தூக்கமின்றிக் கிடந்தோம்.

ஹெலிக்கொப்டர் உறுமல்களும், காதைக் கிழித்துக் கொண்டு பாய்ந்து செல்லும் 'செல்' களும் நடுச்சாமங்களில் அவ்ரோ விமான நடமாட்டாங்களும். ஐயோ! பயங்கரம்.

விடிந்தால் மரணச் செய்திகளும் வீடுகள் நொருங்கி விழுந்த கணக்குகளும் நெஞ்சுகளை உதறடிக்கும்.

எந்நேரத்திலும் எங்கள் உயிர்களும் பலியாகின்ற பீதி நிறைந்த சூழ்நிலை.

'இனி இங்கே இருக்கேலாது எங்கையெண்டாலும் ஓடித் தப்புவோம்.'

மனைவியும் பிள்ளைகளும் அழுது நடுங்கினர்.

எனக்கும் அந்த யோசனை தான்.

ஒரு நாள் விடியற் காலை; அமைதி நிறைந்த வேளை. நானும் மனைவியும் மூன்று பிள்ளைகளும் மூன்று நான்கு உடுப்புகளைப் பொதிகட்டிச் சைக்கிள்களில் கொழுவிக் கொண்டு, வானத்தைப் பார்த்துப் பார்த்துக் கொண்டு உடுவிலுக்கு ஓடிச் சேர்ந்தோம்.

ஒழுங்காகச் சாப்பிடாததால் சைக்கிள் ஓட்டி எல்லோருக்கும் இளைப்பும் களைப்பும்.

அங்கு கண்ணுச்சாமி என்ற நல்ல மனிதர்; மனைவியின் உறவினர். தங்கள் வீட்டில் எமக்கு அடைக்கலம் தந்தார்.

ஒரு கிழமை வரை ஓரளவு நிம்மதியாக இருந்தோம். அங்கும் விமானக் குண்டு வீச்சுப் பயமுறுத்தலும் பலாலியிலிருந்து 'செல்' அடிச் சத்தங்களும் எம்மைச் சூழ்ந்து நெருங்கிக் கொண்டிருந்தன.

ஒருவருக்கும் தூக்கமேயில்லை.

வீட்டுக்கு மேல் எந்த நேரத்திலும் 'செல்' வந்து விழலாம். ஒரு நாள் மாலை நேரம். தேநீர் அருந்திக் கொண்டிருந்த போது ஒரு மாபெருந் துயரச் செய்தியை என் வீட்டுக்குப் பக்கத்திலிருந்து எங்களைப் போல் உடுவிலிலே தஞ்சமடைந்திருந்த திரேசம்மா ஓடிவந்து என்னிடம் கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நெருங்கிய நண்பர்கள் சிவராசாவும், செல்வ விநாயகமும் யாழ்ப்பாணப் புகையிரத நிலையச் சந்தியில் ஒரு நண்பனுடன் கதைத்துக் கொண்டு சைக்களில் நிறைபோது அவ்ரோ குண்டு வீச்சு விமானம் இரகசியமாக வந்து தள்ளி விட்ட பீப்பாக்குண்டுக்குப் பலியாகி உடல் சிதறி இறந்து போயினர்.

செல்வ விநாயகத்துக்கு மூன்று பெண்பிள்ளைகள் அவனது வீடு யாழ்ப்பாணப் புகையிரதச் சந்தியையொட்டி ஆஸ்பத்திரி வீதியில் அமைந்திருந்தது.

சிவராசாவிற்குக் கைகால் வழங்காத ஒரு பெண் பிள்ளை. அவன் குருநகரிலிருந்து அரியாலைக்கு இடம் பெயர்ந்திருந்தான்.

செல்வ விநாயகம் பயத்தினால் குடும்பத்தை உடுவிலுக்குக் கொண்டு போயிருந்தான்.

நாம் மூவரும் ஒவ்வொரு நாளும் அவனது வீட்டில் அவன் வளர்க்கும் கோழிக் குஞ்சுகளுக்கு தீனி போடுவதற்காக அங்கு செல்வது வழக்கம். அன்று என் வீட்டுக்குப் போய் என்னைத் தேடி விட்டு அவர்கள் இருவரும் சென்றிருக்கிறார்கள். நான் அவர்கள் தேடி வந்தபோது வீட்டில் நின்றிருந்தால் நானும் பலிதான்.

"அப்பாவை இங்கை வைச்சிருக்கேலாது. அப்பா சொல்வழி கேட்காமல் சுற்றித் திரிவாரம்மா. நாங்கள் கொழும்புக்கும் போவம்." என்று எனது மூத்த மகள் சொன்னதை எல்லோரும் ஏற்றுக் கொண்டனர்.

எனக்கு வாழ்க்கையின் அர்த்தங்களும் கடவுள் தத்துவங்களும் புரியாத நிலை.

பேயறைந்தது போல் இருந்தேன்.

யாழ்ப்பாண முஸ்லிம்களை அகற்றிய போது பாஸ் முறை இரத்துச் செய்யப்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாங்கள் கொழும்பு வரத் தயாரானோம்.

எனக்கு யாழ்ப்பாண மண்ணை, நான் பிறந்த பூமியை விட்டு வர மனமில்லைதான். மனைவியும் பிள்ளைகளும் தொல்லை மேல் தொல்லை கொடுத்ததால் யேசுநாதர் கல்வாரி மலைக்குச் சிலுவை சுமந்து போனபோது பட்டதை, நாம் சிலுவை சுமக்காமல் அனுபவித்து கொம்படிப்பாதையூடாக விழுந்தெழும்பிச் சேற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதைந்து மீண்டெழுந்து, ரைக்டர்களில் ஏறிக் கொழும்பு வந்து சேர்ந்தோம். உயிர்தப்பி வந்தோமென்ற மனஆறுதலே இல்லை. 1983 ஜூலை இனக்கலவரத்தின் போது தமிழ் மக்களுக்கு விளைவிக்கப்பட்ட கொடூரங்களை எண்ணி மனம் பரிதவித்தது. நானும் மனைவியும் மூன்று பிள்ளைகளையும் கொழும்புக்குக் காப்பாற்றிக் கொண்டு வந்ததில் திருப்தியடைந்தோம்.

எனது மூத்த மகனும் மகளும் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தம்மைச் சாறு பிழிந்து ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தவேளை.

பரீட்சை எழுத முடியவில்லை. வடபகுதியிலே பரீட்சை நடக்கவில்லை. நாம் கொழும்பு வந்த செய்தி அறிந்து லண்டனில் வாழும் எனது மனைவியின் சகோதரி உடனே பிள்ளைகளை லண்டனுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டாள்.

நிச்சயமற்ற எதிர்காலத்தை எதிர்நோக்கிய எமதுபிள்ளைகளை லண்டனுக்கு அனுப்பத் தீர்மானித்தோம்.

பிள்ளைகளைப் பிரிந்து வாழ வேண்டுமேயென்ற கடூழியத் துன்பங்கள் நெஞ்சைத் தினமும் வாட்டியபோது அவர்களின் எதிர்காலத்தையிட்டு மூன்று இலட்சம் கடன் பெற்று மூன்று மாதங்கள் எஜென்சிக்காரனிடம் அலைந்து ஒருவாறு இரண்டு பிள்ளைகளையும் லண்டனுக்கு அனுப்பி வைத்தோம். அந்தக் குஞ்சுகள் அனாதரவாக லண்டனில் படுந்துயரங்களை நாம் அறிவோம். நாம் தூங்கையிலும் விழித்திருக்கையிலும் பிள்ளைகளை எண்ணிக் கண்களில் கண்ணீர்.

உங்கள் பிள்ளைகளை லண்டனுக்கு அனுப்பி விட்டீர்களே. இனி உங்களுக்கென்ன என்று கூறுபவர்களின் முகத்தில் ஓங்கிக் குத்தவேண்டுமென்ற உணர்வு பிறந்து மடியும்.

எங்கள் தேசிய வேதனை அந்த மரமண்டைகளுக்குப் புரியாது.

'அப்பா எங்கள் சைக்கிள்களை விற்கவேண்டும். நாங்கள் வந்து முன்பு போல யாழ்ப்பாண வீதிகளில் ஓடித்திரியவேண்டும் என்று பிள்ளைகள் எழுதியதில் எத்தனை அர்த்தங்கள்?

எல்லாவற்றையும் பறிகொடுத்த அகதிபோல் நான் கொழும்பு வீதிகளிலே சுற்றி வந்தேன்.

கொழும்புக் கோட்டையைச் சுற்றியுள்ள இடங்களில் புதிது புதிதாகத் தோன்றிய லொட்ஜுகளிலே புறாக்கூண்டு வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்ற தமிழர்களையிட்டுப் பரிதாபப்பட்டேன். அவர்களுக்குத் திரிசங்கு வாழ்வு.

ஒரு நாள் வெள்ளைவத்தை நடைபாதையில் நடந்து சென்று கொண்டிருக்கையில் எங்களோடு கொழும்பு வந்த எனக்குத் தெரிந்த ஓர் ஆசிரியையைச் சந்தித்தேன். அது ஒரு கறுமம். அந்த ஆசிரியை அவ்ரோ குண்டு வீச்சுக்குக் கணவனின் உயிரை மாத்திரமின்றி உடலையும் பறி கொடுத்தவர். அவரது உடல் சுக்கு நூறாகச் சிதறிப் போனது.

தன்னிடம் சொத்தென இருந்த எல்லாவற்றையும் விற்று விட்டு அவள் தன் ஒரே மகனை லண்டனுக்கு அனுப்புவதற்காகக் கொழும்பு வந்திருந்தாள்.

அவளது மகன் பரியோவான் கல்லூரியில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் எட்டு விசேட சித்தி பெற்ற கெட்டிக்காரன்.

என் மகனுக்கு நடந்த கதிதான் அவனுக்கும்.

"உங்கள் பிள்ளைகள் எப்படி சேர்"

"நான் ஒருவாறு மூத்த இரண்டு பேரையும் லண்டனுக்கு அனுப்பி விட்டேன். இளையவள் எங்களோடு இருக்கிறாள்"

"ஐயோ, நல்லது சேர். இங்கை இனிப் படிப்புச் சரிவராது. என்ரை மகனையும் லண்டனுக்கு அனுப்ப இரண்டு இலட்சம் ஏஜென்சிக்குக் கட்டியிருக்கிறேன். நல்ல ஏஜென்சி. இரண்டு கிழமையில் அனுப்பிப் போடுவான்"

"அவங்கள் அப்படித்தான் சொல்லுவாங்கள். அடிக்கடி போய்க் கரைச்சல் கொடுத்து பிள்ளையை அனுப்பப் பாருங்கோ. இப்படி ஏஜென்சிக்காரரை நம்பின எத்தனை பேர் அழுது கொண்டு திரியுதுகள்"

"ஓம் சேர். கடவுள் எனக்கு ஒரு வழி காட்டுவார். எனக்கு ஒரே மகன் தானே? அவரும் அவலச்சாவு நான் பென்ஷனுக்கு எழுதிக் கொடுத்திட்டன். வெள்ளவத்தையில் ஈ.எச். கூறே மாவத்தையில் ஒண்டை விட்ட சகோதரியுடன் தங்கியிருக்கிறம்"

"ஏஜென்சிக்காரனுக்கு விடாது தொல்லை கொடுங்கோ. இல்லாட்டிப் போச்சு. இது என்ரை அனுபவம். நல்லது நான் வாறன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் சேர். நான் கோயிலுக்குப் போறன்" அதன் பின்னர் அந்த ஆசிரியையோ அவளது மகனையோ நான் சந்திக்கவேயில்லை. அவர்களை மறந்தும் போய்விட்டேன்.

ஒரு நாள் செவ்வாய்க்கிழமை நான் கொச்சிக்கடை அந்தோனியார் கோயிலுக்கு முன்னால் பஸ்ஸிலிருந்து இறங்கி செட்டியார் தெரு நோக்கிப் போக நினைத்தேன். கொழும்பிலே யாழ்ப்பாணத்திலிருந்து அறிமுகமனவர்களோடு பேசுவதும் மனதுக்கு ஓர் ஆறுதல், அங்குமிங்கும் அறிந்தவர்களைக் கண்களால் தேடினேன்.

அந்தோனியார் கோயிலுக்குள்ளிருந்து அந்த ஆசிரியையின் மகன் பஸ்தரிப்பு நோக்கிவந்து கொண்டிருந்தான்.

பதுமையான அழகான பையன்.

"தம்பி என்னைத் தெரியுமோ?"

"ஓம் தெரியும். நீங்கள் அமரனின் அப்பாதானே அங்கிள்?"

"ஓம். ஓம்."

"நான் அந்தோனியார் கோயிலுக்கு வந்ததனான் அங்கிள்"

"அது சரி. இன்னும் நீர் லண்டனுக்குப் போக முடியல்லையோ?"

"இல்லை அங்கிள். ஏஜென்சிக்காரன் ஏமாற்றிக்கொண்டே போறான் அங்கிள். ஒரு வருஷத்துக்கு மேலையாச்சு. என்னைப் போல நூற்றுக்கு மேற்பட்ட ஆக்களிடம் காசு வாங்கியிருக்கிறான் அங்கிள்"

"பொறுக்கி நாய்கள். அவங்களுக்கு இருதயமே இல்லை. அதுசரி நீர் சைவம் அல்லோ. அந்தோனி யார் கோயிலுக்கு வந்திருக்கிறீர்?"

"அம்மா சொன்னா அந்தோனியார் புதுமையுள்ளவராம். அவரை ஒவ்வொரு செவ்வாயும் கும்பிட்டால் உதவி செய்வாராம். நான் லண்டன் போய்ப் படிக்க வேண்டுமென்று மன்றாடிக் கொண்டு வாறனங்கிள்."

"அந்த ஏஜென்சி நாய் மகனுக்கு தொடர்ந்து தொல்லை கொடுங்கோ. அப்பதான் ஏதாவது செய்வான்."

"நானும் அம்மாவும் அவன்ரை வீட்டுக்குக் பேகாத நாளில்லை அங்கிள். அவன்ரை வீடு கைகால் வைக்கக் கூசும். அவ்வளவும் எங்கடை காசுதானே அங்கிள்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெக்கங் கெட்ட நாய்கள் அவங்கள்"

"பொறுத்தனீங்கள் பொறுங்கோ. கால நேரம் சரி வரேக்கை அனுப்புறன். இல்லாவிட்டால் உங்களாலை செய்யிறதைச் செய்யுங்கோ என்று வெருட்டுறான் அங்கிள்."

"எளியவங்கள், தோல் மரத்த எருமைகள், பொறுத்தனீங்கள் கொஞ்சம் பொறுத்துப் பாருங்கோ. நான் வாறன் இராசா."

"சரி அங்கிள்"

அந்தப் பிள்ளையோடு பேசிய பின் மனம் கலங்கிப் போச்சு வீட்டுக்கு வந்து மனைவியிடம் கூறிக் கவலைப்பட்டேன்.

அதன் பிறகு ஆறு மாதங்கள் கடந்திருக்கும். அந்தப் பிள்ளையையோ தாயையோ. நான் வழித் தெருவில் காணவில்லை.

நான் சுயமிழந்த மனிதனாய் கொழும்பில் நடமாடிக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் வெள்ளவத்தை வில்லி அவனியூவில் இருக்கின்ற எனது நண்பன் நல்லையாவைக் காண்பதற்காக வெள்ளவத்தைச் சந்தை பஸ்தரிப்பு நிலையத்தில் பஸ்சை விட்டு இறங்கினேன்.

எதிர்ப் பக்கத்திலே ஒரே சனக்கூட்டம். விபத்தேதும் நடந்து விட்டதோ என்று அறிய தெருவைக் கடந்து அந்தப் பக்கம் ஓடினேன்.

பொலீஸ்காரர்கள் ஒரு பையனைக் சேட் கொலரில் பிடித்து ஜீப்புக்குள் ஏற்றினார்கள். அவனைப் பார்த்தேன். அந்த ஆசிரியையின் மகன் கடவுளே நெஞ்சு பதைபதைத்தது.

"அவன் பணங் கொடுத்த ஏஜென்கிக்காரனைக் கத்தியால் அந்தப் பையன் குத்திப் போட்டான். அவனை ஆசுப்பத்திரிக்குக் கொண்டு போட்டார்கள். அவன்ரை கார் அந்தா நிக்குது" என்று அங்கு நின்ற ஒருவன் கூறினான். என் கண்கள் கலங்க ஜீப்பில் இருந்த அப்பையனைப் பார்த்தேன். அவன் முகத்திலே வெறித்த பார்வை, குற்ற உணர்வேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைக்கலங் குருவிகள்

சூரியன் தலை சாய்த்துக் கண் மூடிய வேளை.

ஓலைச் சடைகளோடு நெடுத்த பனை மரங்கள் நிறைந்த அந்தப் பணிக்கர் வளவை இருள் மூடிக் கொண்டது. அந்த வளவுக்குக் கிழக்கே ஒரு மைல் தூரத்தில் உள்ள அடைக்கல மாதா கோவிலில் திருந்தாதி மணி அடித்து ஓய்கையில் தூமிக்கத் தொடங்கிய மழை இப்பொழுது பனை மரங்கள் ஓலமிடச் செய்து கொண்டிருக்கின்றது. அந்தப் பனை வளவின் நடுவில் உள்ள வெளியில் கட்டியிருக்கும் பனை ஓலைக் குடிசையில் ஒரு குப்பி விளக்கு எரிந்து கொண் டிருக்கிறது. அந்தக் குடிசையின் உக்கி இத்துப் போன ஓலை களினூடாக உள்ளே மழைநீர் ஒழுகிக் கொண்டிருக்கிறது. அந்தக் குடிசையிலே தனிமையாக இருக்கும் எட்டுப் பத்து வயதான லூசியாவும் நிர்மலாவும் ஒழுக்கு விழுகின்ற இடங்களில் சட்டிகளையும், பேணிகளையும் எடுத்து வைத்தனர். தாங்கள் படுக்கின்ற பாய்களை சுருட்டி, ஒழுக்கு விழாத மூலையில் சார்த்தி விட்டனர். குடிசைக்குள் கட்டியிருந்த கயிற்றுக் கொடியில் போட்டிருந்த உடுப்புத் துணிகளை மழை ஒழுக்கு விடாதவாறு ஒதுக்கி விட்டனர். தங்கள் பாடசாலைப் புத்தகங்களும், கொப்பிகளும் வைத்திருந்த சவக்காரப் பக்கீஸ் பெட்டியைத் தம்மருகில் கொண்டு வந்து வைத்துக்கொண்டு, ஒருவரை ஒருவர் அணைத்த வண்ணம் அஞ்சிய கண்களால் வெளியிருட்டை ஊடறுத்து நோக்கியவாறு இருந்தனர்.

"அம்மாவை இன்னுங் காணவில்லையே?"

கூரைக்கு வெளியே மழை கொட்டும் கருமேகவானத்தை எட்டி எட்டி அண்ணாந்து பார்த்தவாறு இருந்த அந்த இரு சிறுமிகளின் முகங்களிலும் மெள்ள மெள்ளக் கவிந்த பயமும் தவிப்பும் கனம் கட்டிற்று அவர்களுக்கு முன்னால் எரியும் குப்பி விளக்கின் ஒளிவட்டத்துக் கப்பால் கம்மிருட்டு.

"மாதாவே மழை விடச் செய்யும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லூசியா மெதுவாக வாய்விட்டு மன்றாடிக் கொண்டிருந்தாள். இருவர் முகங்களிலும் பயக்களையும் யோசனையும்.

"அக்கா! அம்மா தைக்கத்தானே போறது?"

நிர்மலா லூசியாவிடம் கேட்டாள்.

"ஓம் உனக்குத் தெரியாதா?"

மௌனமாக இருந்து நிர்மலாவின் விரல்கள் நிலத்தைக் கீறிக்கொண்டிருந்தன.

'ஏன் கேட்டனே?'

"இல்லை அக்கா, அம்மா வேசையாடப் போறதெண்டு கதைக்கினம்!"

'ஆம்.' அப்படித்தான் சொல்லுகினம்.

"அது கெட்ட தொழிலாக்கா?"

"ஓமாக்கும்"

அக்கிராமத்தில் தமது தாயைப் பற்றி ஏளனமாகக் கதைப் பதனால் பாதிப்புற்ற அவர்களது மனங்கள் கவலை கொண்டிருந்தன.

மழை ஓய்ந்து தூறல்கள் விழுந்து கொண்டிருந்தன.

"வா அக்கா படலைக்குப் போய் அம்மாவைப் பாப்பம்."

"ஓம் வா!"

லூசியா எழுந்து வெளியில் வர, நிர்மலா பின்னால் வந்து அக்காவின் கையை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டாள். இருவரும் படலையடியில் வந்து நின்றனர். அவர்களுடைய நாய் 'றோவர்' அவர்களுக்குப் பின்னாற் சென்று முதுகை வளைத்துச் சோம்பல் முறித்துக் கொண்டு நின்றது.

அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் இறுக அணைத்துப் பிடித்தவாறு பீதியால் அசையும் விழிகளால் தெருவிலிருந்து பிரிந்து வளைந்து நீண்டுவரும் அந்தக் 'குச்' சொழுங்கையின் இருளுக்குள்ளே தாயின் காலடி அரவத்தை ஆவலோடு ஊடுருவிப் பார்த்துக்கொண்டு நின்றனர்.

நேரம் போகப் போக, இருவரும் தனிமையில் நிற்கையில் தாயைக் காணவில்லையே என்ற ஏக்கமும், இருள் மூட்டம் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பனை வளவுச் சூழல் ஊட்டும், பயவுணர்வும் அவர்களின் உள்மனதை அழுத்திக் கொண்டிருந்தன. அதனால் குடிசைக்குள் எரிகின்ற விளக்கு முற்றத்தில் பரப்பும் மங்கிய ஒளியை திரும்பித் திரும்பிப் பார்ப்பதும்: ஒழுங்கை இருளில் தாயின் காலடியைத் தேடுவதுமாக நின்றனர்.

"அக்கா எனக்குப் பயமாயிருக்கு அம்மா எங்கே போட்டுது?"

"அம்மா வேலைக்குத்தானே போனது மழை பெஞ்சது தானே இப்ப வந்திடும்"

லூசியா நிர்மலாவுக்கு பதில் கூறிவிட்டு, ஒழுங்கையிலேயே கண்விட்டு நின்றாள்.

மௌனத்தில் கொஞ்ச நேரம் போனது.

"அம்மாவை இன்னும் காணவில்லை. எனக்குப் பயமாயிருக்குது."

"இங்கை பார் கையிலை செபமாலையிருக்கு. மாதாவை வேண்டிக் கொள். அம்மா இப்ப வந்திடும்!"

செபமாலையைக் கைக்குள் பொத்திப் பிடித்துக் கொண்ட லூசியாவுக்கும் பயம் தான். ஒழுங்கை இருளில் ஏதோ அசையும் சரசரப்பு.

"அம்மா" லூசியா கூப்பிட்டுப் பார்த்தாள்.

"அம்மாவா அக்கா?"

"இல்லையடி அது ஒரு கறுப்பு நாய்!"

றோவர் அதைப் பார்த்துக் குரைத்தது. இருவரும் பேசாது பார்த்துக் கொண்டு நின்றனர்.

"எனக்குப் பசிக்குது!"

"பொறு! அம்மா இப்ப வந்துவிடும்."

ஒழுங்கையில் சற்றுத் தூரத்தில் காலடி ஓசையின் அரவங்கள்! லூசியா ஆவலோடு ஒழுங்கையின் இருளைக் கண்களால் ஊடுருவினாள்.

"அம்மா வருகுது! அம்மா வருகுது!"

லூசியா மனம் குளிர்ந்து சொன்னாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா"

நிர்மலா சற்றுப் பலமாகக் கூப்பிட்டாள்.

"நிர்மலாக் குஞ்சு! அம்மா தானம்மா!"

ஞானம்மா தன் குரலைக் காட்டிக் கொண்டு விரைவாக நடந்து வந்தாள். அவள் படலையடியை அண்டியதும், இருவரும் ஓடிப் போய் அவளது கையைப் பிடித்துக் கொண்டனர். ஞானம்மா இருபிள்ளைகளின் தலை முடிகளையும் வருடிவிட்டுக் கொண்டு, கையில் கொண்டுவந்த பார்சலை விரித்து இரு வாழைப்பழங்களையும் வடைகளையும் எடுத்து இருவர் கையிலையும் கொடுத்தாள்.

"எங்களுக்கு சரியான பசி அம்மா."

வடையை வாயில் கவ்விக்கொண்டு லூசியா கூறினாள்.

"வாங்கே இப்ப ஒரு நிமிசத்தில் பிள்ளையளுக்கு சமைச்சுத் தாறன்" என்றவள், வீட்டை நோக்கி நடந்தாள். றோவர் அவளைப் பார்த்துச் சிணுங்கி, வாலையாட்டிக் கொண்டு பின்னால் ஓடியது.

"உனக்கும் பசியா கொஞ்சம் பொறு!"

அந்தக் குடிசைக்குள் முதுகை வளைத்துக் குனிந்து, சென்ற ஞானம்மா பார்சல்களை நிலத்தில் வைத்துவிட்டு உடுத்திருந்த சேலையை உரியத் தொடங்கினாள்.

அவளுக்குப் பின்னால் வந்த லூசியாவும், நிர்மலாவும் விளக்குக்குப் பக்கத்தில் குந்தியிருந்து வடையும் வாழைப்பழத் தையும் புழுக்கத்தோடு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

"என்னம்மா இதுகள்?"

லூசியா தாயிடம் பார்ச்சல்களைப் பார்த்துக் கொண்டு கேட்டாள்.

"அரிசி, மரக்கறி, மீன் எல்லாம் வாங்கி வந்திருக்கிறன் இப்ப என்ரை குஞ்சுகளுக்குச் சமைச்சுத்தாறன்"

சீலையை உரிந்து பாய்ச் சுருளில் மேல் போட்டு விட்டு கயிற்றுக் கொடியில் மடித்துக்கிடந்த பழைய சீலையொன்றை எடுத்து அரையில் சுற்றிக்கொண்டாள்.

"அம்மா! வீடெல்லாம் மழை ஒழுக்கு விழுந்து ஈரமம்மா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் பிள்ளை என்ன செய்றது?"

"நாங்க எங்கெயம்மா படுக்கிற எல்லா இடமும் ஒழுக்கு!"

"எப்படியோ படுக்கத்தானேயம்மா வேணும். சாக்கைப் போட்டு அதுக்கு மேல் பாயை விரித்துப் படுப்பம்" என்றவள் களைத்துக் கசியும் முகத்தை சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு குனிந்து பார்சல்களைத் தூக்கினாள்.

"ஏனம்மா நேரம் செண்டது?"

லூசியா தாயின் முகத்தைப் பார்தவாறு கேட்டாள். அந்தக் கேள்வி ஞானம்மாவின் நெஞ்சை நெருடியது. சட்டென்று மகளைப் பார்த்தாள். சற்று நேரம் அந்தக் கள்ளம் படாத முகத்தைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள் "என்ன செய்யிறது, வேலைதானம்மா. இண்டைக்கு மழையும் வந்திட்டுது." என்றவள் பெருமூச்சு விட்டாள். அவ்வூரிலே தன்னைப் பற்றி எப்படிக் கேவலமாகக் கதைக்கிறார் களென்பதை அவள் அறிவாள்.

"அம்மா, சரியா களைச்சுப் போச்சு!"

சின்னவள் தாயை பார்த்துச் சொன்னாள். ஞானம்மாவின் கண்கள் கசியத் தொடங்கியது. சின்னவளின் நாடியைத் தடவிக் கொண்டே "உடம்பு இளைச்சுத்தானம்மா போகுது!" என்றாள். அந்த உணர்வில் தாக்கமுற விரும்பாத அவள், நீங்கள் இதில இருந்து படிச்சுக் கொண்டிருங்கோ, நான் சமைச்சுதாறன்" என்று கூறிவிட்டு சாமான்களை எடுத்துக்கொண்டு, அந்தக் குடிசைத் தாழ்வாரத்தையொட்டினாற் போல் பனை மட்டைகளால் மூடிக் கட்டிய குசினிக்குள் புகுந்து குப்பி விளக்கை பற்ற வைத்து அடுப்பை மூட்டிச் சமைக்கத் தொடங்கினாள். லூசியாவும், நிர்மலாவும் புத்தகங்களை எடுத்து விரித்து சத்தம் போட்டு வாசித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மனதுக்குள்ளே அம்மா செய்யும் வேலையையிட்ட கவலை நெருடிக் கொண்டிருந்தது.

ஞானம்மா அவதி அவதியாகச் சமைத்துக்கொண்டிருந்தாள். நிர்மலா இடைஇடையே வரிச்சு மட்டை நீக்கலால் அம்மாவை நோக்கினாள்.

"அம்மா!" அவள் தாயைச் கூப்பிட்டாள்.

"என்ன குஞ்சு?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்க தைக்கத்தானே போறனிங்க?"

"ஓம் பிள்ளை ஏன்?"

"இஞ்செயெல்லாரும் நீங்க வேசையாடப் போறதெண்டு கதைக்கினம்!"

ஞானம்மா பெருமூச்சு விட்டு நிமிர்ந்திருந்தாள்.

"ஆரும் கதைக்கிறதை நீங்கள் மனதில் எடுக்காதையுங்கோ! நீங்க உங்கடை பாட்டிலை நல்லாப் படியுங்கோ!" என்றவள் பிறங்கையால் கண்களைத் துடைத்தாள்.

"எங்களோடை ஒரு பிள்ளையும் விளையாட வாறதில்லை யம்மா?"

லூசியா கவலையோடு கூறினாள்.

"விளையாட வராட்டி உங்களுக்கென்ன நீங்க இரண்டு பேரும் விளையாடலாந்தானே?"

"ஓம் நாங்கதான் பனைக்குக் கீழே தனியா இருந்து விளை யாடிற னாங்கள்!"

ஞானம்மாவின் மனம் நொந்து கசிந்தது. அவள் வேசையாட விரும்பியிருந்தால் ஊரிலிருந்தே செய்திருக்கலாம். அவளுடைய கணவன் பிரான்சிஸ் ஒரு லொறி ட்றைவர். 1977ஆம் ஆண்டு நிகழ்ந்த இனக்கலவரத்தின்போது அனுராதபுரத்தில் அவன் ஓட்டிச் சென்ற லொறியையும் அவனையும் சிங்கள இனவெறிக் காடையர்கள் தீ மூட்டி எரித்து விட்டனர். தாய் தந்தையில்லாத அவள், கணவனையும் இழந்தபின் வாழ்க்கையிலே சிறகொடிந்து போனாள். தன் இரு பிள்ளைகளையும் காப்பாற்றுவதற்காக அவ்வூரிலுள்ள பெரிய மனிதர்கள் வீடுகளில் வேலை செய்யத் தொடங்கினாள். அக்காலத்தில் அவளுக்குப் பெருஞ்சோதனைகள் ஏற்பட்டன. பெரிய மனிதர்கள், கனவான்கள் பக்திமான்கள் என்று மதிப்பு வைத்திருந்தவர்கள் அவளைத் தம் உடலிச்சைக்கு இரையாக்க முனைந்தனர் அவள் குடிசையிலே பிள்ளைகளோடு தனிமையில் தூங்கும் போது அவர்களிற் பலர் இருட்டிலே வந்து அவளுக்கு ஆசை வார்த்தைகள் கூறிக் கையைப் பிடித்தனர். அந்தச் சூழ்நிலையில் அந்த வீடுகளில் வேலை செய்தால் தான் ஒரு வெட்கங் கெட்டவளாக மாற வேண்டுமென்று உணர்ந்து, யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டவுனிலே வேலைத் தேடி ஒரு கடையில் தைக்கப்போனாள். அங்கு கூலி குறைவானாலுங் கடுமையாக வேலை செய்து அக்கூலியைக் கொண்டு பிள்ளைகளைக் காப்பாற்றி வருகின்றாள். சமயல் வேலையில் கைகள் அசைய மௌனமாய் இருந்து தன்னைப் பற்றிச் சிந்தித்த அவள் அந்த ஊரவரையிட்டு வெறுப்புக் கொண்டாள். உன்னைப் போல் உன் அயலானையும் நேசி என்று போதித்த யேசுவின் திருமறையைச் சேர்ந்தவர்கள் வாழும் அக்கிராமத்திலே எக்கெட்ட பெயரை அவள் பெற விரும்பவில்லையோ அப்பெயர் சூட்டப் பட்டதையிட்டு மனம் வருந்தினாள். இக் கதையை யாரிடம் கூறி நீதி கேட்பதென்றே அவளுக்குத் தெரியவில்லை.

"குஞ்சுகள்?"

அவள் பிள்ளைகளை அழைத்தாள்.

"என்னம்மா?"

"நான் அந்தக் கெட்ட தொழிலைச் செய்யமாட்டான். என்ரை உயிருள்ளவரை உங்களையும் அந்த நிலைக்கு வரவிடமாட்டன். நீங்கள் ஒண்டையும் பற்றிக் கவலைப்படாதையுங்கோ! நல்லாப் படியுங்கோ என்ன?"

"ஓம் அம்மா!"

தன் கலங்கிய கண்களைப் பிறங்கையால் துடைத்துவிட்டுச் சமையலில் ஈடுபட்டாள்.

"பசிக்குதம்மா!"

"இந்தா என்ரை குஞ்சுகளுக்கு ஒரு நொடியிலை சமைச்சுத் தாறன்."

"சரி அம்மா!"

லூசியாவும் நிர்மலாவும் வாசினைப் புத்தகத்தை எடுத்து உரத்து வாசித்துக்கொண்டிருந்தனர்.

"ஆர் வீட்டிலே"

அதிகாரமான அந்தக் குரலைக்கேட்ட ஞானம்மா, குசினிக்குள் இருந்தவாறு வரிச்சு மட்டை நீக்கலினூடாக முற்றத் தைப் பார்த்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றத்திலே கோவில் முப்பரும் அக்கிராமத்தில் மதிப்பு மிக்க பிரமுகருமான சிமியாம் பிள்ளையும் அவ்வூரிலுள்ள இன்னும் நான்கு பேரும் கூடி நின்றனர்.

"கொம்மா எங்கெ வந்திட்டாளே?"

அவர்களின் ஒருவன் அப்பிள்ளைகளிடம் ஏளனமாகக் கேட்டான். அப்பிள்ளைகள் வெருண்டு பயந்து குசினியை நோக்கினர். ஞானம்மா சமையலை அப்படியே விட்டுவிட்டு வெளியில் வந்தாள். குப்பி விளக்கு வெளிச்சத்தில் அவர்களுடைய முகங்களைப் பார்த்தவாறு மரியாதையாக நின்றாள்.

மூப்பர் அவளை ஏற இறங்கப் பார்த்தார்.

"ஞானம்மா நீ இந்த ஊரில இருப்பது எங்களுக்குப் பிடிக்கல்லை. நீ செய்யிற தொழிலாலை இந்த ஊருக்கே கெட்ட பெயர். அவமானம். நீ ஒருதருக்குந் தெரியாமல் இந்த ஊரை விட்டு ஓடிப் போயிடு விளங்குதா?" ஞானம்மா திகைத்துப் போனாள். அவள் இப்படியொரு இடிவிழுமென்று எதிர் பார்க்கவில்லை.

"நான் செய்யிற தொழிலாலை ஊருக்கென்ன அவமானம்? நான் தைக்கத்தானே போறனானய்யா?" அவளுடைய கண்கள் கலங்கின.

"தைக்கப் போறனியோ?"

மூப்பர் நையாண்டி பண்ண மற்றவர்கள் ஏளனமாகச் சிரித்தனர்.

"நீ செய்யிற வேலை எங்களுக்குத் தெரியும். அதைப் பச்சையாக சொல்ல வேணுமோ?"

அவர்களில் ஒருவன் கேட்டான். அவனை அவள் நிமிர்ந்து பார்த்தாள். நடுச்சாம வேளையில் அந்தக் குடிசைக்கு வந்து அவளின் கையைப் பிடித்து பாவஞ் செய்யப் பலவந்தப் படுத்தியவன்.

ஞானம்மாவுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அவளுக்கு தலை சாய்க்க ஒரு இடங்கிடைத்தால் அவள் அந்த ஊரைவிட்டு ஓடியே போய் விடுவாள்.

"இந்தப் பிள்ளைகளையும் கொண்டு நான் எங்கையய்யா போவேன்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கைகளைப் பிசைந்து இரந்து நின்றாள்.

மூப்பருக்குக் கோபம் பொத்திக்கொண்டு வந்தது.

"எடியே, அது எங்களுக்குத் தெரியாது. உடனடியா நீ இந்த ஊரை விட்டுப் போயிடவேணும் எங்கடை மானம் போகுது!"

ஞானம்மா அவரைப் பார்த்தாள். அவர் ஒருநாள் அவருடைய பின் வளவில் வைத்து அவளைக் கட்டிப் பிடித்தபோது, அவர் கழுத்தில் தொங்கும் சிலுவை அவள் முகத்தில் அடித்தது. அவள் குனிந்த மெளனமாகி நின்றாள்.

"என்ன சொல்றாய்?"

"எனக்கு உடனடியாகப் போக முடியாது?"

அவள் தைரியமாகச் சொன்னாள்.

"அப்ப போக மாட்டியோ?"

இன்னொருவர் கேட்டார் அவரையும் அவள் அறிவாள்.

"எங்கேயும் இருக்க ஒரு இடங்கிடைச்சால் போவன்."

"எப்ப போவாய்?"

"அது எப்படிச் சொல்றது?"

"அப்ப நீ இந்த ஊரைவிட்டுப்போக மாட்டாய். எங்கடை மானத்தைக் கெடுக்கவோ போறாய்?

"வேசையும் ஆடிக் கொண்டு அவளிடை துணிவைப் பாத்திங்களே?"

மூப்பர் மற்றவர்களைப் பார்த்துச் சொன்னார்.

"இதுதான் கீழ்ச்சாதிப் புத்தி! பள்ளி" அந்தோனி முத்து உபாத்தியார் சொன்னார்.

"அப்ப நீ இந்த ஊரை விட்டுப் போமாட்டாய்?"

மூப்பர் அவளிடம் கேட்டார்.

ஞானம்மா, தன்கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு நிற்கும் இருபிள்ளைகளின் தலைகளைத் தடவியபடி பேசாமல் நின்றாள். "உவள் அசையமாட்டாள். உன்னை நாங்கள் எழுப்பிற மாதிரி எழுப்புறம் நீங்க வாங்கோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிய மூப்பர் முன்னே கோபாவேசத்துடன் நடக்க மற்றவர்கள் அவளைப் பற்றி இழிவாகப் பேசிகொண்டு பின்னால் நடந்தனர்.

அவர்கள் போவதை ஞானம்மா பார்த்தவாறு நின்றாள்.

"அம்மா பயமாயிருக்கம்மா!"

"ஓமம்மா."

லூசியவும் நிர்மலாவும் மெதுவாகக் கூறினார்கள்.

"நீங்க பயப்படாமல் அதில இருங்கோ."

"அடைக்கலமாதா எங்களைக் கைவிடமாட்டா!" என்ற ஏதோ ஒரு தைரியத்தோடு குசினிக்குள் புகுந்தாள். குறையில் விட்ட கறியைக் கூட்டி அடுப்பில் வைக்கும்போது முற்றத்திலும் கூரையிலும் கற்கள் வந்து விழுந்தன.

"அம்மா, அம்மா"

"ஆரோ கல்லெறியிறாங்கள் அம்மா!"

"அடைக்கல மாதாவே எங்களைக் காப்பாத்தும்"

"அம்மா பயமாயிருக்கு ஓடியாங்கம்மா!"

பயந்து பேதலித்த லூசியாவும், நிர்மலாவும் கத்திக் கொண்டிருந்தனர். ஞானம்மா குசினியிலிருந்து ஓடிவந்து, இரு பிள்ளைகளையும் தன் மடிக்குள் அணைத்துக்கொண்டு விறாந்தை மூலையில் ஒதுங்கியிருந்தாள்.

மேலும் கற்கள் வந்து 'பொலு பொலு' வென்று விழுந்து கொண்டிருந்தன.

"அம்மா என்னம்மா எங்களைக் கொல்லப் போறாங்கலாம்மா"

"அடைக்கலமாதாவே எங்களைக் காப்பாத்தும்"

ஞானம்மா இருவரையும் தன் நெஞ்சுக்குள் இறுக அணைத்த வாறு மௌனமாக இருந்தாள்.

ஏனம்மா கல்லெறியுறாங்கள் ?

லூசியாவும் நிர்மலாவும் தாயின் நாடியைத் தடவியவாறு அதே கேள்வியைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

***பெண்ணின் குரல் – 1982.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர்

பெனடிக்ற் பாலன்

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியில் ஆரம்பக் கல்வி கற்று, கொழும்புத்துறை கத்தோலிக்க மகா வித்தியாலயத்தில் இடைநிலைக் கல்வி கற்று, கொழும்பகம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று ஆசிரியராக வெளியேறினார். பின்னர் பேராதெனியப் பல்கலைக்கழகத்தில் கலைமாமணிப் பட்டம் (B.A) பெற்று, மேலும் தொடர்ந்து கற்று அரச அறிவியலில் சிறப்புக் கலைமாமணிப் பட்டம் பெற்றார்.

அதன் பின்னர் இலங்கைக் கல்விச் சேவையில் தேர்ந் தெடுக்கப்பட்டு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் சேவை யாற்றிக் கொண்டிருக்கையில் பட்டப்பின் டிப்ளோமா பயிற்சி நெறியைப் பயின்றார். அப்பரீட்சையில் விசேட சித்தி பெற்றுக் கல்வி முதுமாணிப் பயிற்சி நெறியைக் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் பயின்றார். 1983 இனக் கலவரத்தின் போது இவரது ஆய்வுக் கட்டுரையின் ஆவணங்கள் எரிக்கப்பட்டதனால் யாழ். பல்கலைக்கழகத்தில் முதுமாணி பயின்று பட்டம் பெற்றார். இன்று பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணி புரிகிறார். இவர் இலங்கையில் நாடறிந்த எழுத்தாளர். இவரது முதற் சிறுகதைத் தொகுதி இதுவே.

முதல் நியமனந் தொட்டு மலையகத்தின் பல பாகங்களிலும் 15 ஆண்டுக் காலமாக ஆசிரியராகப் பணி புரிந்துள்ளார்.

மாத்தளை கார்த்திகேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org